Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ:

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அருளிய

சிவலீலார்ணவம்



தமிழ்ச்சுருக்கம்

நெம்மேலி R. பாலகிருஷ்ண சாஸ்த்ரீ

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கரமடம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ:

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அருளிய

சிவலீலார்ணவம்

தமிழ்ச்சுருக்கம்

நெம்மேலி R. பாலகிருஷ்ணசாஸ்த்ரீ
ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கரமடம்

1996

விலை ரூ.20/-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

First Edition 1996— 2000 copies

All rights reserved by

Sri R. Balakrishna Sastri
Sri Kanchi Kamakoti Sankara Matt
1, Salai Street,
Kancheepuram.

கிடைக்குமிடம் :

R. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்
ஸ்ரீ சங்கரமடம்
காஞ்சீபுரம் - 631 502

ஸ்ரீ P.M. விஜயராகவ கனபாடிகள்
வேதாந்தபுரொபஸர்
சம்ஸ்க்ருத காலேஜ்
மயிலாப்பூர்
சென்னை - 600 004

ஸ்ரீ S. நீலகண்டதீக்ஷிதர்
ஸ்ரீகாமகோடி
29-31 , அக்ஷயகாலனி
முகப்பேறு
சென்னை - 600 050

ஸ்ரீ கே. ராஜகோபாலன்
46-B, . ரங்காநகர்
திருச்சி - 21

Laser typeset at:
Sri Maruthy Laser Printers,
174, Peters Road, Royapettah, Madras - 600 014.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம: ।

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
காஞ்சீபுரம்

முத்ரை

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் ஸஹோதரருடைய பௌத்ரரும் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசரிடம் மிகுந்த பக்தியுடையவரும் வரகவியுமான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர், ஸ்ரீ ஸுந்தரேசரின் 64 லீலைகளையும் பக்தி ரஸம் ததும்பும்படி, கேட்பவர் தன் மயமாகும்படி அத்புதமாய் வர்ணித்து ஈசனிடம் ஸமர்ப்பித்த ரஸமான மஹாகாவ்யம் சிவலீலார்ணவம். 'வெட்கமின்மை யாகிய தேவியே! உனதருளால்தான் கவிராஜர்கள் செய்ய வேண்டியதான காவ்யரசனையிலும் வேதங்களாலும் அறிய முடியாத சிவனைப் பற்றிச் சொல்வதிலும் சிறிதும் தயக்கமின்றி நான் முனைகிறேன்' என்று அவையடக்கமாக இவர் கூறியிருக்கிற போதிலும் இவரும் சிறந்த கவிராஜர்தான் என்பது படிப்பவருக்கு நன்கு விளங்கும். இன்ன தன்மையன் என்று அறியவொண்ணாதவனாக இருந்தபோதிலும் பக்தி வலையில் கட்டுண்டு, தீனபந்து ஈசன் தானாகவே தன்னை எளிவந்த பிரானாகப் பக்தர்களுக்கு வெளிப்படுத்திக் கொள்கிறான் என்பதற்கும் இந்நூலே ஸாக்ஷி. 'ப்ரஸித்தமான நவரஸங்களும் இக்காவ்யத்தில் இல்லாவிட்டால் போகட்டும்; ஜகன்மாதாவின் கருணாம்ருதரஸம் இதில் துளிர்த்துத் தழைத்தோங்கியுள்ளது' என்று முடிவுரையில் கூறுகிறார். 'நண்பனே! நீ ஹாலாஸ்ய நாதருடைய லீலைகளைக் கேட்க விரும்பினாலும் ஸரி, எல்லா வேதங்களாலும் மூடிமறைத்து ரஹஸ்யமாக்கப்பட்டதான இந்தச் சிவனுடைய தத்த்வத்தை அறிய விரும்பினாலும் ஸரி, காவ்ய ஸம்ப்ரதாயமாகிய ப்ரவாஹங்களின் மறுகரையைக் காண விரும்பினாலும் ஸரி, நீலகண்ட தீக்ஷிதரின் சிவனையே சார்ந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாக்கிற்குச் செவி சாய்ப்பாயாக (எல்லா விருப்பமுமே இதனால் நிறைவேறும்) என்கிறார்.

இத்தகைய சிவலீலார்ணவ காவ்யத்தைப், பிழையின்றி உச்சரிக்க வழி செய்யப்பட்ட சில ச்லோகங்களுடன் தமிழில் சுருக்கி, ஒத்த கருத்துடைய மற்ற கவிகளின் வர்ணனைகளையும் அனுபந்தமாக இணைத்து, இந்நூலில் வந்துள்ள பற்பல வ்ருத்தங்களுடன் வராத சில வ்ருத்தங்களிலும் உள்ள கணபதி - ஸ்கந்தர் - காமாக்ஷிஏகாம்ரநாதர் - த்ரிபுராசந்த்ரமௌளீசர் - மஹாதேவிவரதராஜர் - ராமநாதர் - த்யாகராஜர் - நடராஜர் - கௌரீ - ஸரஸ்வத்யாதி ஸ்துதிகள் அடங்கிய எளிய வ்ருத்தலக்ஷண விளக்கத்தையும் ஸ்ரீ வேங்கடசர் ஓடத்துடன் நிறைவு பெறும் இன்னொரு அனுபந்தமாக இணைத்து, நூல் தொடங்கும் முன்பே அக்ஷர வடிவில் - பார்வதி பரமேச்வரர்களை ரதத்தில் தர்சிக்க வைக்கும் ரதபந்த சித்ரங்கள், வினாயகருக்கும் ஜகன்மாதாவிற்குமான மாலாபந்த சித்ரங்கள், ஜகன்மாதாவிற்குப் பத்மபந்த சித்ரம் இவற்றையும் விளக்கத்துடன் இணைத்து, ஸ்ரீ மடத்திலேயே ரக்ஷிக்கப்பட்டு வரும் R. பாலகிருஷ்ண சாஸ்த்ரிகள் வெளியிடுவதையறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறோம். அன்பர்கள் படித்து ஸர்வேசனின் க்ருபையால் ஸகல மேன்மைகளையும் அடையும்படி ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி :

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முகவுரை

ஜகத்குரு ஸ்ரீ காமகோடி சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின் ஆதரவை பலப்பல வருஷங்களாகப் பெற்று வருவதும், பதினொரு வருஷங்களுக்கு முன் கொடிய மூளைக் கோளாறிலிருந்து ஆந்த்ரதேசத்திலிருந்தபடியே க்ஷணமாத்ர த்யானத்தால் ஸ்ரீ மஹாஸ்வாமிகளால் மீட்கப்பட்டு ஸ்ரீ மடத்துக்கே அழைக்கப்பட்டதும் சாஸ்த்ரங்கள் படிப்பிக்கப் பட்டதும், குருவாரஸதஸ் ட்ரஸ்ட் + அவிட்டஸதஸ் ட்ரஸ்ட் + அனுஷஸதஸ் ட்ரஸ்ட் மூலம் வித்யாபிவ்ருத்தியுடன் ஸம்பாவனையும் பெற்று வருவதும், இப்போதும் ஸ்ரீ மடத்திலேயே ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் இருவர்களாலும் ரக்ஷிக்கப்பட்டு வருவதும் வீணாகாதபடி, வித்வான்களைக் கௌரவிக்கும் ட்ரஸ்டிகளுக்கும் மங்களம் ஏற்படும்படி, என் மூலம் இந்த 'சிவலீலார்ணவ' பக்தி நூலின் சுருக்கம் தமிழில் வெளிவருமாறு ஈசன் அருள் புரிந்தார். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளும் ஸ்ரீமுகம் தந்தருளினார்கள். அன்பர்கள் படித்து மேன்மை பெறும்படியும் அருள ஈசனையே ப்ரார்த்திக்கிறேன்.

சைதன்ய ரூபமாக அநுக்ரஹிக்கும் ஸ்ரீ மஹாஸ்வாமி களுக்கும் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் இருவருக்கும் ஸாஷ்டாங்க வந்தனங்களை ஸமர்ப்பிக்கிறேன்.

ஸெகந்தராபாத் ஸ்ரீ சங்கர பக்தஜன ஸபையின் 1992-ம் வருஷத்திய ஸோவினீரில் ஸ்ரீ மீனாக்ஷியின் விக்ரஹம், அவதாரம், பால லீலை, யாத்ரை முதலிய பற்பல நிலை வர்ணனைகளும் ஸ்ரீ ஸுந்தரேசர் பிரம்படிப்பட்ட லீலையில் ரஸமான ச்லோகங்களும் வெளியிடப்பட்டன. மற்ற இடங்களி லிருந்தும் இது போல் தொகுத்து எழுதத் தோன்றியது. ஸ்ரீ அவதானி ஸ்வாமிகள் அடியிலிருந்து ஆரம்பித்துத் தொடர்ச்சி யாக ஸங்க்ரஹமாக எழுதி வேண்டிய இடத்தில் விஸ்தாரமாக எழுதும்படி உபதேசித்தார். ஈசன் அருளால் அது நிறைவேறியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

64 லீலைகளையும் வர்ணித்து மஹேசனிடம் மனஸை ஈடுபடச் செய்து பக்தியை வளர்ப்பது என்கிற குறிக்கோளில் வேறுபாடு இல்லாத போதிலும் ஹாலாஸ்ய மாஹாத்ம்யம், திருவிளையாடற்புராணம், சிவலீலார்ணவம் இவைகளில் சில்லரை வேறுபாடுகள் உள்ளன. படிப்பவரே தெரிந்து கொள்வார்கள் என்று வேறுபாடுகள் இங்கு குறிப்பிடப்பட வில்லை. ஸம்ஸ்க்ருத எழுத்தறிந்தவரின் உதவியுடன் உச்சாரண விளக்கத்தைப் பார்த்து ஸரியான உச்சரிப்பைப் பெற வேண்டுகிறேன். விநாயக சதுர்த்தியில் விசேஷமாகப் படிக்கத்தக்கதான ஸ்ரீ பாஷ்யகார சாஸ்த்ரி - விநாயக கதா காவ்யத்திலிருந்து விநாயக மாலா பந்தம், சித்ர ரத்னாகரத்திலிருந்து ரதபந்தம், அலங்கார ஸ்தவத்திலிருந்து ரத-பத்ம-மாலா பந்தங்கள் விளக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ வேங்கடதைவஜ்ஞர் அலங்கார சாஸ்த்ரம் முழுவதும் தேவி பரமாக இருக்கும்படி அலங்கார ஸ்தவம் இயற்றியுள்ளார். சிவலீலார்ணவத்தில் போல் ஸ்ரீ சக்ரகவியும் சித்ரரத்னாகரத்தில் அர்த நாரீச்வரரை த்யானிக்கிறார். ✪

இவரது ரதபந்தத்தில் 'ச^{1}ந்த்^{3}ரமௌளி' என்பதை விரிவாகக் கூறியுள்ளார். நடுக்கட்டங்களில் 'சைலராஜஸுதா த^{3}யித:' (=பார்வதீ காந்தன்) என்று அன்னையும் சிவனும் சேர்ந்துள்ளது கூறப்படுகிறது. அலங்கார ஸ்தவத்திலும் 'ச^{1}ந்த்^{3}ர சேக^{2}ர ஸீமந்தினீ' என்று சிவனையும் சேர்த்தே கூறப்படுகிறது.

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்த^{3}ரீரமணச^{1}ந்த்^{3}ரமௌளீசர் அனை வருக்கும் அருள்புரிய வேண்டுகிறேன்.

சிவலீலார்ணவத்திலுள்ளவை போன்ற வேறுசில வழக்கில் அதிகமாயுள்ள இனிமையான வ்ருத்தங்கள், எளிய முறையில் லக்ஷண விளக்கத்துடன் மங்கள ச்லோகங்களுடன் அனுபந்தம்-2 என்று சேர்க்கப்பட்டுள்ளன. ஹரிணப்லுத வ்ருத்தத்தில்

✪ அனுபந்தம் காண்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விக்னேச-குஹ-திருமணக் கோலங்கொண்ட ஏகாம்ரநாத - த்ரிபுராசந்த்ரமௌளீச - ராமநாத - த்யாகராஜ ஸ்துதிகள் மங்களமாயுள்ளன. தூணக வ்ருத்தத்தில் ஒரு ஏகாம்ரநாதர் - ஸ்துதி, பஞ்சசாமர வ்ருத்தத்தில் ஒரு வரதராஜ ஸ்துதி, நகஸ்வரூபிணீ = ப்ரமாணிகா - வ்ருத்தத்தில் ஒரு வரத ராஜஸ்துதி, முடிவில் ஸ்ரீ ஸுப்ரமண்ய தண்டகம் ஒரு பாகம் - ஸ்ரீ வேங்கடேசர் நௌகா = ஓடம் சேர்க்கப்பட்டுள்ளது. நௌகா, புது விஷயம். பைங்காநாடு ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளின் 'ஸ்ரீ ஜகத்குரு நௌகா'வைப் போல் எழுதியது. வ்ருத்தமணி மாலை, உமா ஸஹஸ்ரம், வ்ருத்தரத்னாவளி இவற்றிலிருந்து 5-6-7-8-9-10 என்று ஒருபாதத்தில் எழுத்துகள் கொண்ட அழகிய வ்ருத்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. த்யான ச்லோகங்கள் முறைப்படி சொல்ல வ்ருத்த பரிசயம் உதவும். முறையான முன்னேற்பாடின்மையால் திருத்தல் களைதல் புகுத்தல்கள் நிறைய ஏற்பட்டதை பொறுமையாகக் கவனித்து நல்ல முறையில் அச்சேற்றித் தந்த ஸ்ரீ ஜயேந்த்ரா பிரிண்டர்ஸ் - பதிப்பகத் தாருக்கு ஈசன் அருள் புரிவாராக!

R. பாலக்ருஷ்ண சாஸ்த்ரிகள்
ஸ்ரீ காமகோடி சங்கர மடம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உச்சாரண விளக்கம்

क् - k - க் ஊக்கம்	च् - c (அ) ch ச்^{1} ஸச்சித்	ट् - ṭ (அ) *t* ட் பட்டம் - பிட்டு	त् - t - த் முத்து	प् - p - ப் பருப்பு
ख् - kh - க்^{2}	छ् - ch (அ) chh ச்^{2}	ठ् - ṭh (அ) *th* - ட்^{2}	थ् - th - த்^{2}	फ् - ph - ப்^{2}
முதலெழுத்தின் வகையில் ப்ராணபலம் அதிகமாக்கி அழுத்தமான உச்சரிப்புள்ளவை. மஹாப்ராணன்கள், கேட்டு அறிக.				
ग् - g - க்^{3} மங்களம்	ज् - j - ஜ் ஜ்வாலை, ஜலம்	ड् - ḍ (அ) *d* - ட்^{3} கண்டு - உடை - மடு	द् - d - த்^{3} நந்தி - நதி	ब् - b - ப்^{3} தம்பி அன்பு
घ् - gh - க்^{4}	झ् - jh - ஜ்^{2}	ढ् - ḍh (அ) *dh* - ட்^{4}	ध् - dh - த்^{4}	भ् - bh - ப்^{4}
மூன்றாமெழுத்தின் வகையில் ப்ராணபலம் அதிகமாக்கி அழுத்தமான உச்சரிப்புள்ளவை. மஹாப்ராணன்கள், கேட்டு அறிக.				
ச்^{3} - ச்^{4} என்று போடாமல் தமிழில் வழக்கிலுள்ள 'ஜ்' எழுத்தை எண்ணில்லாமலும் அதன் வகையில் அழுத்தமான உச்சரிப்புள்ளதை ஜ்^{2} என்றும் கொள்வோம். முதல் க், முதல் ட், முதல் த், முதல் ப், முதல் ஜ் இவை, 1வது என்று எண் போடாமலே முதலாவதாகக் கருதத் தக்கன.				
श् - Ś (அ) Sh - (ச்^{5} தேவையான இடத்தில்) பெரும்பாலும் எண் இல்லாமல் - சங்கர, சிவ, சுக்ர, பசி, பசு - சூலம் - செடி - சேவல் - சைவ - பசை - முரசொலி				
ष् - Ṣ (அ) *sh* ஷ் - புஷ்டி, ஷஷ்டி - விஷ - விஷ்ணு - துஷ்டி - இஷ்டம்.				
स् s ஸ் - ரஸ - ப^{4}ாஸ்கர - மாஸ - வாஸ - வஸி - வஸு				
ऋ ṛ (அ) *ri* ரு^{1} - க்ரு^{1}ஷ்ண - 'ரி - ரு' இரண்டுமின்றி நடுத்தரமான உச்சரிப்பு. வ்ரு^{1}ஷப^{4} - ஸ்ரு^{1}ஷ்டி				

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

:க=ஹ்க :க^{2}=ஹ்க^{2} :ப=Fப :ப^{2}=Fப^{2} ஹ்ந = ந்ஹ (ஹ்ன = ன்ஹ) ஹ்ண = ண்ஹ. ஹ்ம=ம்ஹ. ஜ் ஞ = க்ஞ

தமிழ் இயல்புப்படி நேரக்கூடிய மாற்றங்கள் ஸம்ஸ்க்ருதமாக்கும்போது தவிர்க்கத்தக்கன.

1-வது எழுத்து = (க்,ச்^{1},ட்,த்,ப்) உள்ள இடம் எங்கும் அதே உச்சரிப்பு வரவேண்டும், ஹ-ஒலி, 3-வதன் ஒலி கூடாது. ‘2’, ‘4’ எண்ணுள்ள இடங்களிலும் அதனதன் உச்சரிப்பே வரவேண்டும், சிவ-ஒலி 3-வதின் ஒலி கூடாது. ‘5’எண்ணுள்ளதில். ‘5’ போடாமலே 5வதாகக் கொள்ள வேண்டிய வெறும் ‘ச்’ உள்ள இடத்தில் சிவஒலிதான் வரவேண்டும், ச்^{1}-ஒலி (=ஸச்சித்-ஒலி) கூடாது. நமச்^{5}சி^{5}வாய என்பது தான் சரி. நமச்^{1}சி^{1}வாயா என்று உச்சரிப்பது தவறு. ‘ஹ்’ எழுத்துக்குத்தான் ஹ்-ஒலி வரலாம், சுவர்கத்துக்கு ஹ்-ஒலி வரக்கூடாது. ‘3’-எண்ணுள்ளதற்கு மட்டுமே அந்த உச்சரிப்பு வரலாம்./விவரணம் = விலக்கவேண்டியவைக்கு உதாஹரணங் காட்டி விளக்கம்- அகல = அஹல, மகா=மஹா, மகிமை = மஹிமை, அகில=அஹில, மகிஷ=மஹிஷ, ராகு=ராஹு, பாகு=பாஹு, மகேசன்=மஹேசன், மிகை=மிஹை, பகை=பஹை, புகை=புஹை மகோன்னத=மஹோன்னத-இதுபோல் கூடாது. அகி^{2}லாண்டே^{3}ச்வரி என்பது அஹிலாண்டே^{3}ச்வரி என்று மாறக்கூடாது./ச^{1}, சூ^{1}ட^{3}ா, சூ^{1}ளீ, ச^{1}ந்த்ர, ச^{1}கம்பிரே, ச^{1}ம்பக, ச^{1}ா தக, வச^{1}னம், வச^{1}: (= வார்த்தை) முதலியுதில் சிவ-ஒலி கூடாது. (பரவச: = பரவசமான-இங்கு சிவ ஒலி தேவை)/சங்கா, சங்க2 ஸங்கா^{4}த, வஞ்சி^{1}த, பிஞ்சா^{2}, உஞ்ச^{2}, கண்டக, வைகுண்ட^{2}, கண்ட^{2}, டு^{4}ண்டி^{4}, சாந்த, காந்த, கந்த^{2}ா, அந்த^{4}, ஸந்தி^{4}, கம்ப, ஸம்பு^{2}ல்ல, கும்ப^{4} முதலிய இடங்களில் (=ங்,ஞ்,ண்,ந்,ம்- இவற்றிற்குப் பிறகு (1-2-4-வது) எழுத்துவரும் இடங்களில்) 3-வதன் ஒலி கூடாது.

பட, க^{4}ட, நட, புட, விட, தடாதகா, ஜடா, குடில, ஜடில, கு^{4}டிகா படீ, குடீ, படு, வடு, கடு, படை:, ப^{4}டை:, படோ:, வடௌ-மட^{2}, கட^{2}வல்லீ, சட^{2}-நவோட^{4}ா, த்ரு^{1}ட^{4}, பரிவ்ரு^{1}ட^{4}

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

க3ாம4, கூ3ட4, த்3ரு1டீ4க்ரு1த-சதக, பதன, மித, ஞு1த, ரசி1த-கத2ன, மத2ன, அத2, கத2ா, கதி2த, க்வதி2த-சிதி2ல - ஸாத4ன, ஆராத4ன, அத4ர, ஸாதி4த, ஆராதி4த, மது4, மது4ர, விது4ர, ஸம்ரோதே4, அதே4ாக3தி-ஜப, சபல, ஆதப, தபன, விபுல, நூபுர, கே3ாபுர, அபூப, ஜபேன, ஜபை:-கப2, சப2, சப2ரீக்ஷணா/நப4: சுப4, ப்ரப4ாத-விபு4, ப்ரபு4, ப்ரபூ4த, முதலிய இடங்களில் (= ஒரு பதத்தின் முதலெழுத்தல்லாமல் அடுத்த : அதற்கடுத்த எழுத்தாக வருகிற இடங்களில் 1-2-4வது எழுத்துகளுக்கு 3-வதன் ஒலி கூடாது. (பட3ம், நட3ம், புட3ம், ஜடை3 என்று தான் தமிழில் உச்சரிக்கப்படுகிறது. கஞ்ஜத3ளாயதாக்ஷீ ன்பது கஞ்ஜத3ளாயதா3க்ஷீ என்று தமிழ் இயல்புப்படி மாறி விடுகிறது. '3'- எண் குறித்துள்ள இடத்தில் மட்டுமே 3-வதில் ஒலி வரும்படி, மற்ற இடங்களில் வராதபடி ப்ரயத்னம் செய்து ஒழுங்காக உச்சரிக்கவேண்டும். ரங்க3, மங்க3ள, மஞ்ஜீர, அண்ட3, தாண்ட3வ, ஆநந்த3, கம்ப3ள, அம்ப3ர போன்ற இடங்களில் இயல்பான தமிழ் உச்சரிப்பு ஸமஸ்க்ருதத்திலும் பொருந்தும். பண்டி3த என்பதில் 'டி' ஸரியான உச்சரிப்புடனிருக்கும், 'த' எழுத்து த3 என்று தமிழில் மாறிவிடும். மாறுவதற்கு இடமளித்தால், ஸம்ஸ்க்ருதம் ஸரியானபடி உச்சரித்ததாகாது. (ஸம்ஸ்க்ருதத்தில் பயம் நீங்கி, ஆர்வம் வரவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வளவு விவரிக்கப்பட்டது.) ஹ்ரு1த3யே கலயே விமலம் ச1ரணம் ப4வ சங்கர தேசிகமே சரணம் ॥

புலகே3ாத்3க3மைச்5ச1 - வபுச்5சி1தாநந்த3மயம் இது போன்ற இடங்களில் '5'- குறியுள்ளது 'சிவ' ஒலியிலும், '1' - குறியுள்ளது 'ஸச்சித்'-ஒலியிலும் உச்சரிக்கப்படவேண்டும். எண் போடாதது சிவ-ஒலி உள்ளது என்றாலே போதும். இருந்தாலும் இயல்பான மாற்றத்தைத் தவிர்ப்பதற்காக 'நமச்5சி5வாய - முமுஹுச்5 ச1 - போன்ற இடங்களில் '5' என் போடப் பட்டுள்ளது. '1' எண் எங்குந்தேவை.



வந்தே3 ஸ்ரீதே3வதே3வம் ப4ஜத3ஜமஜரம்
ஹீரஹாரஸ்பு2ரந்தம்
ஹேரம்பீ3ம் ரம்யரம்யாஸ்பத3மத3வத3னம்
நாக3பீ3ரக3ப்ரக3ல்ப4ம்।
லீலாஜாலாபி4லாஷிம் ஸாரஸாரஸாரதம்
தீவ்ரம் வந்தீ3ய வந்தீ3யம்
ஸ்ரீபா4ஷ்யா பா4ஷ்ய பா4ஷாஸ்துத தவிததம்
பா4வஸுவர்ண்யவர்ண்யம் ॥

நடுக்கட்ட எழுத்து, உ-வது-4-வது-6-வது ஆகும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



சைத்யலஸத்3த்3விஜராஜ-
த்3யுதிசாலிஜடாச்ச2ப்ரஸ்பு2ரன்மௌளி:।
ஸாரநுதமஹிமா ஜேதா
ஸ்மரஸ்ய கோ மோத3பூ4ச்5ச1 காயிநத:॥

சைலராஜஸுதாத3யித:॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ஹேளி மஹா த்4ரு1த பூ4தி:
கோடமல போ3த4 ப்ரதோ3 த்4யாஜலதி4:|
ரதிபதி மத3க்4ன விசத3-
ஸ்மித பூ4ர் வீராஞ்சி1தோல்லஸத்3 த்4யான:||

ஹேரம்ப பூ4த4ர சரணம:

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ச1ந்த்3ரேந்த்3ர சிரஸி சேக2ர-
பத்3ம ஸக2க்2யாத பாத சோண ஸ்ரீ: ।
ரதிபதி சதப4வ ஸீம-
ஸ்ரீமந்நேத்ரா மஞ்ஜு காந்திக2னி

ச1ந்த்3ரசேக2ர ஸீமந்தினீ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



ராகாந்நிகாசகாந்தி: ஸகலகவிகலாபாகஸாகல்யகந்த்3:
மூகாந்நைகாந்ரிகாமம் ப்ரகடகவிகனச்ச்2ரீகபூ4கல்ப்பக
த்3ருன்।
ஏகா லோகான் ஸகாமான் ஸுகனகங்கரா-
ட்4யௌகஸௌகர்யகலீப்பா-
ஜகார்ஷீ: காளி காலாப்4ரகநிகரகசே
சங் கஜ்ஞ கஸ்து கர்த்தா।

நடுக்கட்ட எழுத்து, 2-வது 4-வது 6-வது ஆகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடுவிலுள்ள 'ப4ா'-வின் க்ரம எண் —
1, 21, 22, 42, 43, 63, 64, 84



ப4ாவாநம்யா க3தி ஜ்ஞாவனமதிரம்ருத-
க்ஷோத3 முக்தாஸமா ப4ா
ப4ாமாலக்தாமுத3 க்ஷோருச்யஸஹஜனிர்
மாணஸஜ்ஞானத3ாப4ா।
ப4ாத3ானஜ்ஞா ஸதர்மாஹ்ரு1தசிவஹ்ரு3த்3யா
த்3யாவநம்யா ரஸாப4ா
ப4ாஸாரம்யாநவத்3யா தி3சது சிவமுமா
ஜ்ஞாதிக3ம்யா நவாப4ா ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ விநாயகர் மாலா பந்தம்

விநாயகர் படம் நடுவில் வரையப்பட்டு அவரைச் சுற்றி மலர்வளயமாக ஸ்ரீ பாஷ்யகார சாஸ்த்ரியின் 'விநாயக கதா' நூலில் 'மாலாபந்தம்' காணப்பட்டது. எழுத்துக்கள் அதே அமைப்பில், பெயர் கண்ட^2 பூ^{4}ஷணம், சங்கிலி வடிவம் ஸஹ்ருதயா இதழில் காணப்பட்டது. அலங்கார ஸ்தவத்தில் 'ஹாரபந்த' மென்று இம்மாதிரி அமைப்பு குறிப்பிடப்பட்டது. (ஸஹ்ருதயாவில் 'ஹாரபந்தம்' வேறு அமைப்புடன் ஒரே தடியான புஷ்பத் தண்டாகக் காட்டப்பட்டிருந்தது) இங்கு வளையம், நீள் சதுரமாக்கப்பட்டுள்ளது.

நான்கு தளங்களுக்கு நடுவிலுள்ள 'கர்ணிகையில்' ஒரு முறை எழுதப்பட்ட எழுத்து, 2-வதாகவும், 4-வதாகவும், 6-வதாகவும் மும்முறை படிக்கப்படும்படி அமைக்கப்பட்டவையான ஏழெழுத்துக் கூறுகள் பன்னிரண்டின் பிணைப்பு, கண்ட பூஷண பந்தமாகும். மெய்யெழுத்து கணக்கில் சேராது. இடது தளத்தில் 1-வது, நடுதளத்தில் 2-வது, மேல் தளத்தில் 3-வது, நடுதளத்தில் 4-வது, கீழ் தளத்தில் 5-வது, நடுதளத்தில் 6-வது, வலது தளத்தில் 7-வது என்று படிக்கவேண்டும்.

இப்படி



பொருள் - சோபையுள்ளவர் - தேவர்களுக்கெல்லாம் தேவர் - ப்ரம்மதேவரால் ஸேவிக்கப்பட்டவர் - மூப்பற்றவர் - வைரஹாரத்தால் ஒளிர்பவர் - மிகவும் ரம்யமானவைக்கெல்லாம் இருப்பிடமானதும் மதஜலம் பெருகுகிறதுமான முகமுடையவர் - ஸர்ப்பங்களை அணிந்த தேஹபாகங்களால் கம்பீரமானவர் - லீலைகள் மிகப் புரிவதில் ருசியுள்ளவர் - தேவர்களுட் சிறந்தவர்க்கும் வரமளிப்பவர் - புத்திதேவியின் வரர் (=பதி) - மிகவும் வணங்கத்தக்கவர் - ஸ்ரீ பாஷ்யகார சாஸ்த்ரியின் நூற்றுக்கணக்கான ஸ்துதிகளில் பரவியிருப்பவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(=போற்றப்படுபவர்) - ஒருமனப்பாட்டோடு மிகவும் புகழத் தக்கவரான ஹேரம்பரை (=கணபதியை) வணங்குகிறேன் (அ) ஸ்துதிக்கிறேன்.

ஸ்ரீ சக்ர கவியின் சித்ர ரத்னாகரத்தில் சிவனைப் பற்றிய இரு ரத பந்தங்கள். 1-3-5-7-9-7-5-3-1' என்று படிப்படியாக ஏறி இறங்கும் (தேர் உருக்கொண்ட) 41 கட்டங்களில் ஆர்யா வ்ருத்த எழுத்துக்கள் நாற்பத்தொன்றும், உச்சிக்கட்டத்தில் 1-வது, அடுத்த 3 கட்டங்களில் 2-3-4-வது என்று இவ்வாறு வரிசையாக எழுதப்படும். அந்த ச்லோகம் முன் பாதியில் 20 எழுத்தும் பின்பாதியில் 21 எழுத்தும் கொண்டதாயிருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். ச்லோகத்தில், கூறப்பட்ட குணங்கள் உள்ளவர் யார் என்ற கேள்வியுமிருக்கும்; அல்லது கேள்வியை எழுப்பிக்கொள்ள வேண்டும். உச்சியிலிருந்து கீழ்வரை உள்ள 9 நடுக்கட்டங்களில் பதில் கிடைக்கும்படி ச்லோக அமைப்பு இருக்கும்.

1வது ரத பந்தம் பொருள் - குளுமையால் விளங்குகிற தான சந்த்ர ஒளிமிகுந்த ஜடைகளால் நன்கு ப்ரகாசிக்கும் சிரஸை உடையவர் - தேவர்கள் புகழும் மஹிமையுடையவர். காமனை - வென்றவர் - ஆனந்தத்திற்கு இருப்பிடமானவர் - உடலெடுத்த வர்களால் வணங்கப்பட்டவர் யார்? 'சைலராஜ ஸுதாத[3]யித:' (=மலையரசன் பெண்ணின் அன்புக்கணவன்) என்று பதில்.

2-வது ரத பந்தம் பொருள் - ஸூர்யனையொத்த தேஜஸ் உள்ளவர் - விபூதி அணிந்தவர் - அப்பழுக்கற்ற ஞானமளிப்பவர் - தயாஸமுத்ரம் - ரதிபதியின் (=மன்மதனின்) கர்வத்தை அழித்த தெளிவான புன்சிரிப்பின் உத்பத்தி ஸ்தானம் - வீராஸனத்தில் பூஜிதமாய் விளங்குகிற த்யானம் செய்பவர் யார்? பதில் - ஹேமபூ[4]த[4]ர சராஸன: = தங்கமலையை (=மேருவை) வில்லாகக் கொண்டவர்.

3வது ரதபந்தம் - ஸ்ரீ வேங்கட தைவஜ்ஞரின் அலங்கார ஸ்தவத்தில். பொருள் நமஸ்கரிக்கின்றவர்களான சந்த்ரன்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த்ரன் இவர்களின் சிரோபூஷணமாக விளங்குகிறதான - தாமரை யொத்த பாதங்களின் - சென்னிறக் காந்தியை உடையவள் - நூறு மன்மதர்களின் பிறப்பிடமான - சோபிக்கும் கண்களுள்ளவள். அழகான காந்தி உத்பத்தியாகும் சுரங்கமாயிருப்பவள் - ('யார்?' என்று கேட்டால்) பதில் ச^{1}ந்த்^{3}ரசேக^{2}ர ஸீமந்தினீ = சந்த்ர சேகரரின் வனிதை = சிவபத்னி = பார்வதிதேவி. (வணங்குவோரின் சிரஸில் ஒளிர்கிற தேவிபாதாரவிந்த சென்னிறக்காந்தி அந்த சிரஸை பூஷணமாக அலங்கரிக்கிறது.)

வேங்கடதைவஜ்ஞரின் பத்மபந்தம்

வ்ருத்தபங்கம் ஏற்படாதபடி (= லகு (= ஒரு மாத்ரை கால அளவுள்ளது) - குரு (=இரு மாத்ரை கால அளவுள்ளது) அதது இருக்க வேண்டிய இடத்தில் இருக்கும்படி - அதில் மாறுதல் வராதபடி) கவனித்துக் கொள்ள வேண்டும். முதலடியின் கடைசி ஏழு எழுத்துக்களை தலைகீழாக்கினால், அவை இரண்டாவதடியின் முதல் ஏழு எழுத்துக்களாக வேண்டும். இரண்டாவது அடியின் கடைசி ஏழு எழுத்துக்களைத் தலைகீழாக்கினால் அவை மூன்றாவதடியின் முதல் ஏழு எழுத்துகளாக வேண்டும். மூன்றாவது அடியின் கடைசி ஏழு எழுத்துகளைத் தலைகீழாக்கினால் அவை நான்காவது அடியின் முதல் ஏழு எழுத்துகளாக வேண்டும். நான்காவது அடியின் கடைசி ஏழு எழுத்துக்களைத் தலைகீழாக்கினால் அவை முதலடியின் முதல் ஏழு எழுத்துக்களாக வேண்டும். இவ்வாறு அமையும்படி 'ஸ்ரக்தரா' வ்ருத்தம் அமைத்தால் அது அஷ்டதள பத்மபந்தமாகும். லகு, குரு, ஸ்ரக்தரா இவற்றின் விளக்கம், வ்ருத்தங்களின் லக்ஷணம் பற்றிய அனுபந்தத்தில் காண்க. சித்ரத்தில் நம்பர் போட்டுள்ளபடி படிக்க வேண்டும். நடு எழுத்து 1-வது, 21-வது, 22-வது, 42-வது, 43-வது, 63-வது, 64-வது, 84-வதாக 8 முறை படிக்கப்படும். 4 திக்கு எழுத்துகள் இருமுறைப் படிக்கப்படும். மூலை திக்கு எழுத்துகள் ஒருமுறை படிக்கப்படும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருள் - 'இவளே ரக்ஷிப்பவள்' என்ற உறுதியான எண்ணத்தோடு வணங்கத்தக்கவள். காப்பாற்றுவோரற்றவர்களை காப்பதில் கருத்துள்ளவள். அம்ருதக்குழம்பு (=அம்ருதஸாரம்), முத்து இவற்றிற்கொப்பான காந்தியுடையவள். ஸ்த்ரீகளிடம் பற்றுடையவள். ஸந்தோஷத்துடன் வலுவான கையில் சக்ரம் ஏந்தியிருக்கும் சக்ரபாணியின் ஸஹோதரி. பக்தர்களின் மனஸுக்கு ஆத்ம ஞானமளிக்கும் காந்தியுள்ளவள். காந்தியளிப்பதறிந்தவள். பரிஹாஸ வாக்யங்களால் சிவனுடைய மனஸை அபஹரிப்பவள். இந்த மனுஷ்ய ஜன்மத்திலேயே வணங்கத்தக்கவள் (=சிறிது வணங்கினாலும் சீக்ரமாகப் பலனளிப்பவள். ச்ருங்கார ரஸமே. காந்தியாக அமையப் பெற்றவள் (=ரஸம் நிறைந்தவள்). அழகிய காந்தியுள்ளவள். (நிலையாமை என்ற) குற்றமற்றவள் (=நித்யமானவள்). வித்வான்களாலேயே மிகவும் அறியத்தக்கவள். புதிதான (=மற்றவரிடம் காண இயலாத) காந்தியுள்ளவள். இப்படிப்பட்ட உமா மங்களமளிக்கட்டும்.

ஸ்ரீ வேங்கடதைவஜ்ஞரின் அலங்காரஸ்தவம் - கண்ட பூஷணபந்தம். அவர் குறிப்பிட்ட பெயர் ஹாரபந்தம். (ஸஹ்ருதயா இதழில் ஹாரபந்தம் வேறுவிதமாய் உள்ளது.) அமைக்கும் முறை விநாயகர் கண்ட பூஷண பந்த விளக்கத்தில் கூறப்பட்டது.

பொருள் - கருமேகம் போன்ற கூந்தல் கொண்டவளே! காளியே (= பார்வதியே!) நீ, பூர்ணிமை இரவு போன்ற காந்தியுள்ளவள். வால்மிகி, வ்யாஸர் முதலிய கவிகளின் ஸகலகலாமுதிர்ச்சியின் நிறைவுக்கு வேர்க்கிழங்கானவள் (= உத்பத்திஸ்தானமானவள்). ஊமையிலிருந்து தொடங்கி ஸாதாரண ஜனங்கள் பலரைப் ப்ரஸித்த கவிகளின் பிரகாசிக்கும் சோபையுடையவர்களாகவும் (= மிகவும் சோபிக்கிற மஹாகவிகளாகவும்) 'பூமியிலுள்ள கல்ப்பதரு' என்று எண்ணத்தக்கவர்களாகவும் செய்தாய். மேலும், வறுமை தொலைந்து ஸௌபாக்யம் பெறவேண்டுமெனப் ப்ரார்த்திப்பவர்களைச் சிறந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தங்கம் நிறைந்து ஸம்ருத்தமாய் ஸௌகர்யம் (= எதையும் எளிதில் செய்து முடிப்பதற்கு வழி) நிறைந்ததான வீட்டையுடையவர்களான இந்த்ரன், குபேரன் முதலியவர் களுக்கு ஸமமானவர்களாய்ச் செய்தாய். உன்னைத் தவிர வேறுயார், எப்போது ஸுகத்தை உண்டுபண்ணுவார்கள்? நீ தான் எப்போதும் ஸகலாபீஷ்டத்தையும் அளிப்பவள். (= விரும்பப்படுபவை அனைத்தையும் அளிப்பவள்.)

ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தில் மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் ஸ்துதி - பதஞ்ஜலி ரிஷி

ஸுவர்ண-பத்^{3}மினீ-தடாந்த-தி^{3}வ்ய-ஹர்ம்ய-வாஸினே
ஸுபர்ண-வாஹனப்ரியாய ஸூர்ய-கோடி-தேஜஸே।
அபர்ணயா விஹாரிணே ப^{2}ணாத^{4}ரேந்த்^{3}ர-த^{4}ாரிணே
ஸத^{3}ா நமச்^{5} சி^{5}வாய தே ஸத^{3}ாசிவாய சம்ப^{4}வே॥

பொற்றாமரைக் குளக்கரை அருகிலுள்ள அழகான விமானத்துள் வஸிப்பவரும் கருடவாஹனருக்குப் ப்ரியமான வரும் கோடி ஸூர்ய தேஜஸ் கொண்டவரும் காய்ந்து உதிர்ந்த இலையையும் உண்ணாமல் கடுந்தவம் புரிந்து அபர்ணா (=பர்ணமற்றவள்=இலையற்றவள்) என்று கொண்டாடப்படும் பார்வதியுடன் விளையாடுபவரும் பாம்புகளைத் தரிப்பவரும், ஸதாசிவனும், சம்புவும் சிவனுமான உமக்கு எப்போதும் நமஸ்காரம்.

ஹாலாஸ்ய நாத^{2}ாய மஹேச்வராய / ஹாலாஹலாலங்க்ரு^{1}த
கந்த^{4}ராய। மீனேக்ஷணாயா: பதயே சிவாய / நமோ நமஸ் -
ஸுந்த^{3}ர-தாண்ட^{3}வாய ॥

ஹாலாஸ்யம் (=ஆலவாய்) எனப்படும் மதுரைக்குத் தலைவரும் மஹேச்வரரும் ஹாலாஹல விஷத்தால் அலங்கரிக்கப்பட்ட கழுத்துடையவரும், மீனாக்ஷிபதியும் அழகான தாண்டவம் புரிபவருமான சிவனுக்கு நமஸ்காரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

	பக்கம்
சித்தத்தை எளிதாக சிவனிடம் நிலைநிறுத்துவோம்	1
அர்தநாரீச்வர ப்ரார்த்தனை	2
ஸ்ரீகீர்வாணயோகீந்த்ரர் த்யானம்	3
அவையடக்கம்	4
ஸ்ரீ மீனாக்ஷியிடம் ப்ரார்த்தனை	4
வால்மீகி-வ்யாஸர் போன்ற கவிகளின் ஸ்துதி	4
பாண்ட்ய தேச மஹிமை	5
அகஸ்த்யர் வாஸம்	8
கதம்பவன மஹிமை	11
ஸ்ரீ ஸுந்தரேசலிங்கம்	14
சூலபுஷ்கரிணீ	18

லீலைகளின் விவரம்

வரிசை எண்		
1.	இந்தரனின் வ்ருத்ரஹத்யா பாபத்தைப் போக்கியது	21
	இந்த்ரன் மற்ற திக்பாலகர்களுடன் மந்த்ராலோசனை	21
	வ்ருத்ராஸுரவதம் - ஹத்யை தொடரல்	22
	தாமரைத்தண்டு நூலில் இந்த்ரன் ஒளிதல்	23
	நஹுஷனின் அநீதி	25
	ஒளிந்திருந்த இந்த்ரனுக்கு குரு ஹிதோபதேசம்	25
	இந்த்ரனின் கதம்பவன வருகை	26
	ஸுந்தரேச தர்சனம்-வந்தனம் -ஆலயநிர்மாணம்	27

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

	மீனாக்ஷி விக்ரஹம்	28
	சூலபுஷ்கரிணி பொற்றாமரையானது	30
	இந்த்ரன் செய்த துதி-மீனாக்ஷிஸுந்தரேசர் அனுக்ரஹம்	30
	இந்த்ரன் விடைபெறுதல்	33
2.	ஐராவதத்தின் சாபம் தீர்த்தல்	33
	துர்வாஸர் சாபம்	34
	மஹேந்திரமலையில் ஐராவதத்தின் பிறப்பு-கதம்பவனமடைதல்	35
	பொற்றாமரையில் மூழ்குதல் -ஸுந்தரேசாராதனை புஷ்கரசப்த ப்ரயோகசாதுர்யம்-	36
	சாபமோக்ஷம்	36
	(த்விஜசப்தப்ரயோக சாதுர்யம்-ஹரி ஹராபேதம். த்விஜ ஒற்றுமையின்மை மூகபஞ்சசதீ சமத்காரம்)	37
3.	மதுரை நிர்மாணம்	39
4.	தேவியைத் தடாதகையாக அவதரிக்கச் செய்தது	43
	மலயத்வஜன் பிறப்பு, வளர்தல், விளையாட்டு, கல்வி, விவாஹம், தந்தையின் உபதேசம். மலயத்வஜன் ஸிம்மாஸன மமர்தல், எப்போதும் தேவி த்யானம்	43
	ஸந்ததிக்காக கவலை-மனைவியிடம் ஆலோசனை	46
	அகஸ்தியர் ரஹஸ்யத்தை வெளியிட்டது, அச்வமேதம் செய்ய ஆக்ஞை.	47
	வஸந்தகால வர்ணனை	49
	அச்வமேத தீக்ஷை	51
	சாஸ்த்ர சர்ச்சை - கவிசாதுர்யம்	52
	அச்வமேதாவப்ருதம்	53
	புத்ரகாமேஷ்டி-அன்னை ஆவிர்பாவம், காஞ்சன மாலையின் மடியை அடைதல்	54

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலயத்வஜன் ஆனந்தித்தல், அகஸ்தியர் ஆனந்தம்	56
உலகமே களித்தது. தாலாட்டு	57
அன்னம் பரிமாறும விளையாட்டு-பந்து விளையாட்டு அக்ஷராப்யாஸம்	58
ஜகன்மாதாவின் பாதாரவிந்தமடைய மலயத்வஜன் விருப்பம்	
மந்த்ரி- தடாதகை சோகம்.	59
அகஸ்த்யர் ப்ரார்த்தனை. மலயத்வஜனுக்கு அனுக்ரஹம்	60
க்ருஷ்ணவிலாஸ ச்லோகம்	60
பரதேவதையின் இருவித எண்ணம்-தந்தைப் பாசம் - பக்தா பயப்ரதானம்	61
தாயுடன் வருந்துதல்-அகஸ்த்யர் ஸமாதானம்	62
தடாதகை பட்டாபிஷேகம், ராஜ்யபரிபாலனம்	62
5. தடாதகை விவாஹம்	63
சரத்ருதுவர்ணனை	63
அன்னை ஸபையில் தர்சனமளித்தல்	64
மந்த்ராலோசனை	65
விஜயயாத்ரை அகஸ்த்யர் உத்ஸாஹமளித்தல்	66
பரஸ்தானம்	67
ஸூர்யாஸ்தமன வர்ணனை	67
பல்லக்கு யாத்ரை க்ராம ஜனங்கள் பேச்சு	68
தேவிமுகத்யானம்	69
காவேரி	70
அரசர்கள் காணிக்கைப் ப்ரார்த்தனை	70
ஸுப்ரபாதம்	72

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கங்கை கீழ்நோக்கியது, மந்த்ரி வர்ணனை
திரும்பும்படி கூறுதல் 74

தேவியின் பதில், ரத்னானி தத்ர' - கவிநயம் 74

வேடர்களும் பரதத்வத்தைக் கண்டனர் 76

மனுஷ்ய மரங்கள், வேடஸ்த்ரீகள் குறி.
கிம்புருஷாதிவர்ஷங்கள் 77

ஸமுத்ரம் கப்பம். பத்ராச்வம், இளாவ்ருதம் 78

ஜம்பூநதி, மேருசிகர நுனியில் இந்த்ராதி ஜயம் 80

அக்னி காணிக்கை முதலியது 81

பரமேச்வர ஸன்னிதி 83

நந்திகேசரின் ப்ரார்த்தனை, ப்ரமத ஸைன்யம் 84

தோழிகளுடன் தேவி, நந்திகேசர் தெளிவு சிவதர்சனம் 85

அதிகமான அங்கம் மறைதல் 86

தடாதகை நிலை கவிசாதுர்யம் 87

சிவன் வாக்கு-தேவி பதில் சாதுர்யம், மதுரை
திரும்புதல் 88

தாயார் மகிழ்ச்சி 89

விவாஹ ஏற்பாடு 90

ஸுந்தரேசர் வருகை 91

பவனி, ஜனங்கள் ஸல்லாபம் 93

லக்ஷ்மியும் ஸரஸ்வதி தடாதகை இருப்பிடமடைதல் 95

தேவி வருகை ஈசன் க்ருஹ ப்ரவேசம் ராஜக்ருஹ
மங்கள காட்சி-கன்யாதானம்

அம்மியேற்றல், ப்ராம்மண தானம்,
அந்தப்புரமடைதல், தேவியுடன் ஸம்லாபம்.
போஜனகால நிவேதனம்.

6. வெள்ளியம் பலத்தில் நடனம் காட்டியது 100

7. அன்னமடு ஸ்ருஷ்டித்தது 103

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. கங்கையை வரவழைத்தது. 105
9. ஏழு ஸமுத்ரங்களை வரவழைத்தது 106
10. மலயத்வஜனின் சாயையை வரவழைத்தது 109
11. ஸ்கந்தனை உக்ரபாண்டியனாக அவதரிக்கச் செய்தது. 110
12. சக்தி-தண்டம்-சக்ரம் அளித்தது. 111
13. ஸமுத்ரம் சுவற சக்தியைப் ப்ரயோகித்தது 111
14. சக்ரத்தால் இந்திரனின் கிரீடத்தைப் பிளந்தது 112
15. மேருவைச் சண்டாயுதத்தால் அடித்தது. 114
16. ரிஷிகளுக்கு வேதப் பொருள் உணர்த்தியது 116
17. ரத்ன வியாபாரியாக வந்து, மகுடம் பண்ண ரத்னமளித்தது. 118
18. வருணன் ஏவிய ஸமுத்ரத்தை உறிஞ்சியது 121
19. ஜடை மேகங்களால் மதுரையைக் காப்பாற்றி நான்மாடக்கூடல் எனப் பெயரிட்டது. 122
20. எல்லாம் வல்ல ஸித்தராக அருள் புரிந்தது 125
21. கல்யானையைக் கரும்பு தின்ன வைத்தது. 126
22. ஆபிசாரிக யானையை நரஸிம்மாஸ்த்ரத்தால் அழித்தது, கவிதைநயம், முப்புலவர்களின், த்ரிபுரஹரஸ்துதி 127
23. கிழவர்-குமரன்-பாலன் ஆனது 131
24. கால் மாறி நடனமாடியது 133
25. குற்றமற்ற வேடன்மீது வீண்பழி சுமத்தாதபடி உண்மை விளக்கியது 134
26. மகாபாதகம் தீர்த்தது 138
27. குருத்ரோஹியை குருஉருவிலேயே வந்து சண்டையிட்டு வீழ்த்தியது 139
28. ஆபிசாரிக பாம்பை மாற்றியது 140
29. ஆபிசாரிகப் பசுவை ரிஷபத்தால் வதைத்தது 140

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

30. பெரும் ஸேனை காட்டியது 143

31. குறைவற்ற நிதி அளித்தது 145

32. வளையல்கள் விற்றது 145

33. யக்ஷிணிகளுக்கு அணிமாதி ஸித்திகளை அருளியது 146

34. தர்சனமளித்து, அவன் சென்றபின் பூட்டி, சோழனுக்குக் கோபுரக் கதவுகளைத் திறந்து ரிஷப முத்ரையிட்டது 146

35. தண்ணீர்பந்தல் வைத்தது 147

36. ரஸவாதம் செய்தது 149

37. சோழனை மடுவில் வீழ்த்தியது 150

38. அக்ஷய தான்யம் அளித்தது 151

39. மாமனாக வந்து வழக்குரைத்தது 152

40. ப்ரம்மஹத்யா தோஷம் விலக்கியது 152

41. விறகு பாரம் சுமந்தது 153

42. பத்ரனை ஸம்மானிக்கும் படி சேரனுக்கு ஓலை அனுப்பியது 154

43. ரத்னப் பலகை அளித்தது 155

44. இசைவாதில் பத்ரனின் மனைவிக்கு வெற்றியளித்தது 156

45. பன்றிக்குட்டிகளுக்கு ஸ்தன்யம் கொடுத்தது. 157

46. பன்றி முகத்தோரை மந்திரிகளாக்கியது 158

47. கரிக்குருவிக்கு மந்த்ரோபதேசம் செய்தது. 159

48. நாரைக்கு முக்தி அளித்தது. 159

49. ஸுந்தரேசர் கோவில் மட்டும் மூழ்காமல் ப்ரளய வெள்ளம், மறுபடியும் ஸ்ருஷ்டி, மதுரை எல்லைகாட்டியது-ஆலவாய் ஆனது. 163

50. சிவநாமம் பொறித்த பாணங்கள் இரைத்தது 164

51. ஸங்க[4]ப்பலகை அளித்தது 165

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

52.	அர்ச்சகன் பொற்கிழி பெறச் செய்தது	166
53.	கீரகவியைக் கரையேற்றியது	168
54.	தமிழ் ஸூத்ரம் போதித்தது	170
55.	உரைகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கச் செய்தது	170
56.	ஸங்க[4]ப்புலவருக்குப் பரிந்தது	171
57.	செம்படவனாக மீன் பிடித்து நந்திசாபம் நீக்கி, செம்படவ கன்னிகையான பார்வதியை மணந்தது	172
58.	வாதபுரீசருக்கு தீக்ஷையளித்தது	173-176
	சோழதேசவர்ணனை	174
59.	நரியைப் பரியாக்கியது	176-182
	வாதபுரீசர் புலம்பல்	177
	குதிரைகள் வர்ணனை	179
	வேதக்குதிரை	180
60.	வைகை வெள்ளம் பெருக்கெடுக்கச்செய்து வாதபுரீசரை சிறைமீட்டது	182
61.	பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டது	183-197
	மீனாக்ஷி ஸுந்தரேசர்ஸ்துதி	186-197
62.	கூன் பாண்டியன் ஜ்வரம் தீர்த்தது	197
63.	ஜைனர்களை வாதில் வென்றது	199
64.	வன்னி-கிணறு-லிங்கம் தோற்றுவித்து ஸாக்ஷிகாட்டியது	202-206
	தேவர்கள் ஸ்துதி	203
	முடிவுரை	206

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவலீலார்ணவம்

❀ சித்தத்தை எளிதாக சிவனிடம் நிலைநிறுத்துவோம் ❀

''மலயத்^{4}வஜ-பாண்ட்^{3}ய-கன்யகா- / ச^{1}ரண-த்^{3}ந்த்^{3}வ-நிவேசி தாத்மனா। சிவயோ: கவினேத^{3}மர்ப்பிதம் / சிவ-லீலார்ணவ-காவ்யமத்^{3}பு^{4}தம் ॥''

'மலயத்வஜபாண்ட்யனின் கன்னிகை ஸ்ரீ மீனாக்ஷியின் இருபாதங்களிலும் மனஸைச் செலுத்தியவரான கவியினாலே அத்புதமான இந்த சிவலீலார்ணவகாவ்யம் பார்வதிபரமேச்வரர் களிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டது' என்று ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதரின் ஸஹோதரருடைய பௌத்ரர் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரால் முத்ரை வைக்கப்பட்ட - பக்திரஸம் ததும்புகிற - மற்ற எல்லாரஸங்களும் பக்திரஸத்துக்கு ஊட்டமளிப்பதாய் அமையப்பெற்ற அத்புதமான மஹா காவ்யம் ஸ்ரீ சிவலீலார்ணவம். திருவிளை யாடற்புராணம் - ஸ்ரீ ஹாலாஸ்யமாஹாத்யம் நூல்களில் ஸ்ரீ மீனாக்ஷி ஸுந்தரேசரின் 64 லீலைகள் வர்ணிக்கப்பட்டுள்ளவை களை தனக்கே உரிய தனிச்சிறப்போடு சிலவற்றை சுருக்கியும் சிலவற்றை விரிவாகவும் அழகாக வர்ணித்து மஹாகாவ்யம் லலிதமாய் அமைத்துள்ளார். பரவசமூட்டும் இவரது பக்தி, ஒப்பற்ற கவிதா நயம் படிக்கும் போதே புலப்படும்.

'அநாயதப்ராணமஸம்யதாக்ஷ - / மப்^{3}ரஹ்ம ச^{1}ர்யாநசனாதி^{3}-கே^{2}த^{3}ம்। சி^{1}த்தம் மஹேசே நிப்^{4}ரு^{1}தம் நித^{4}ாதும் / ஸித்^{3}த^{4}: கவீனாம் கவிதைவ யோக^{3}: ॥'

'மூச்சைக்கட்டுப்படுத்திப் ப்ராணாயாமங்கள் செய்யா மலும் கண், காது முதலிய ஐம்பொறிகளையும் எந்த விஷயத்திலும் செல்லாதபடி வலுக்கட்டாயமாக அடக்காமலும், ப்ரம்மசர்யம், உபவாஸமிருத்தல் முதலிய உடலை வருத்தும் செயல்களில்லாமலும் (=எந்தவித ச்ரமமுமின்றி ஸுகமாக)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனஸை மஹேசனிடத்தில் அசையாது நிலைநிறுத்துவதற்கு 'கவிதை' என்கிற யோகம் கவிகளுக்கு ஸித்தமாயிருக்கிறது.' (மனஸை அடக்க வழி வகுக்கும் யோகசாஸ்த்ரப்படி சென்றால் ப்ராணாயாமம் = மூச்சையடக்கல், ப்ரத்யாஹாரம் = பொறிகளை அடக்குதல் முதலிய ச்ரமங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.) ஈசனை வர்ணிக்கும் கவிகளுக்கோ மனஸை ஈசனிடம் நிலை நிறுத்துதலாகிய யோகாப்யாஸப் பலனை எந்த ச்ரமமுமின்றி அவர்களது கவிதையே அளித்து விடுவதால் அதுவே அவர்களுக்குப் ப்ரஸித்த யோகத்தைக் காட்டிலும் சிறந்த யோகமாகும் என்று அவரே சொல்லியிருக்கிறபடி ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேசரின் ஸுந்தரமான லீலைகளை - மிக ஸுந்தரமான அவரது ரஸம் சொட்டும் மதுரவாக்கு வழியாக அனுபவித்து சித்தத்தைச் சிவனிடத்தில் நிலை நிறுத்தி, கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைப் பயனுள்ளதாக்குவோம். எளிதாக ஈசன் அருள்பெறுவோம். தேச வர்ணனை, நதி வர்ணனை, வஸந்தம் முதலிய ருதுக்களின் வர்ணனை முதலிய வர்ணனைகளில் துளித்துளி மாதிரிக்குப் பார்ப்போம். ஈசன் லீலைகள் எண்ணற்றன. 64 வர்ணிக்கப்பட்டுள்ளன. பலவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம் - கவி சுருக்கியிருக்கிற இடத்தில். பிட்டுக்கு மண்சுமந்து, பிரம்படி பட்டு, வந்திக்கு அருள்புரிந்த - வாதவூரருக்கு அருள்புரிந்த - பாண்டியனுக்கும் - குடிமக்கள் அனைவருக்கும் அருள்புரிந்த லீலையைக் கவி, பக்தி பரவசத்துடன் விரிவாக மிக அழகாக வர்ணித்திருப்பதைக் கண்டு மகிழ்வோம்.

❀ அர்தநாரீச்வர ப்ரார்த்தனை ❀

அசக்யமங்க^3ாந்தரவத்^{3} விப^{4}க்து - / மணுப்ரமாணங் கரணம்
யத^{3}ந்த:। ஸாமான்யபூ^{4}தம் சிவயோஸ் ததே^{3}கம் /
ஸானுக்^{3}ர ஹம் ஏ்: 'ான் மயி க^{3}ர்ப^4 த^3ாஸே ॥

அர்தநாரீசராய் விளங்கும் திருக்கோலத்தில் கை, கால், கண், காது முதலிய இரண்டு இரண்டாக இருக்கும் உறுப்புகளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'இடது கை, இடது கால், இடது கண், இடது காது முதலியன என்னுடையவை' என்று பார்வதியும், 'வலது கை - வலது கால், வலது கண், வலது காது முதலியன என்னுடையவை என்று சிவனும் பிரித்துக் கொள்ள முடியும். ஒன்றாக இருக்கும் வயிறு, மார்பு, கழுத்து, வாய், தலை முதலியவற்றையும் அவை பிரிக்கக் கூடியனவாக இருப்பதால் இடது வயிறு - இடது மார்பு, இடது கழுத்து, இடது வாய் என்னுடையன என்று பார்வதியும், வலது வயிறு, வலது மார்பு, வலது கழுத்து, வலது வாய் என்னுடையன என்று சிவனும் பிரித்துக்கொள்ள முடியும். அந்த:கரண மொன்றை மட்டும் பிரித்துக் கொள்ளமுடியாது. அது அணு. அதைப் பிரிக்க முடியாது. இருவருக்கும் பொதுவானது அது. அப்படிப்பட்ட சிவன்-பார்வதி இருவரையும் சேர்ந்ததான அந்த:கரணம்(=மனஸ்), பிறப்பிலிருந்தே அடிமையான என்னிடம் அனுக்ரஹத்துடன் கூடியதாயிருக்கட்டும். (இருவரும் சேர்ந்து அனுக்ரஹிக்கட்டும்) என்பது அழகாகச் சொல்லப் பட்டது. (மனஸ் அணு. அணுவைப் பிரிக்க முடியாது என்பது தர்க்கம் முதலிய சாஸ்த்ரத்தில் கூறப்பட்டுள்ளது).

கவியின் குரு ஸ்ரீ கீர்வாணயோகீந்த்ரர் – த்யானம்

அர்தே[4] தனோரத்[3]ரி ஸுதாமயோ(அ)ஸ்மீ - / த்யஹம்யுனா
கிம் ப[2]லமாதி[3]யூனா । கீ[3]ர்வாண யோகீ[3]ந்த்[3]ர முபாஸ்மஹே தம் /
ஸர்வாத்மனா சைலஸுதாத்மகோ ய: ॥

'பாதி தேஹத்தில் (=இடப்புற தேஹத்தில்) கிரிஜாமயமாக (=பார்வதி ரூபமாக) இருக்கிறேன்' என்று கர்வப்படுகிற (அ) அஹங்காரப்படுகிற ஆதியுவனால் (= பரமேச்வரனால்) என்ன பலன். நாம் கீர்வாண யோகீந்த்ரரை உபாஸிக்கிறோம். அவரோ இடது பாதி என்று இல்லாமல் முழுவதுமே, சைலகன்யாரூபமா யிருக்கிறார். 'தேவியை உபாஸித்து உபாஸித்து தேவிரூப மாகவே ஆகியிருக்கிறார் கீர்வாண யோகீந்த்ரர்,' என்பதை நயம்பட விளக்கியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ அவையடக்கம் ❀

க்வாஹங் க்வ காவ்யம் கவிராஜஸாத்[4]யம் – / க்வாஹங்
க்வ சம்பு[4]ர் நிக[3]மைரக[3]ம்ய: । நிச்[5]ச[5]ங்கமேவம்வித[3]பி
ப்ரவர்த்தே / நிர்லஜ்ஜதே தே[3]வி தவ ப்ரஸாத[3]ாத் ॥

நான் எங்கே? கவிராஜர்களால் இயற்றப்படத்தக்க காவ்யம் எங்கே? நான் எங்கே? வேதங்களுக்கும் எட்டாத சம்பு எங்கே? கவிச்ரேஷ்டர்கள் செய்ய வேண்டிய காரியத்தை அப்படியல்லாத நான் செய்ய முற்படுவது ஸரியல்ல. ஸர்வஜ்ஞமான வேதத்துக்கும் எட்டாத சிவனை நான் வர்ணிக்க முற்படுவதும் ஸரியல்ல. இதை அறிந்துந்தயங்காமல் காவ்யம் செய்ய முற்படுகிறேன். காவ்யத்தில் சம்புவைப்பற்றி வர்ணிக்கவும் முற்படுகிறேன். ஹே நிர்லஜ்ஜதே! தேவி! = 'வெட்கமின்மை' என்கிற தேவியே உனது ப்ரஸாதத்தால் (= அனுக்ரஹத்தால்) தான் இது ஸாத்யமாகிறது. வெட்கமுள்ளவன் தன்னால் முடியாத செயலில் இறங்கமாட்டான்.

❀ மீனாக்ஷியிடம் ப்ரார்த்தனை ❀

ஹே மீனாக்ஷியே! கிடைத்தற்கரிய நல்வாக்காகிற ரத்ன கோசத்தை (= கவித்வம் என்கிற ரத்னங்களடங்கிய கஜானாவையே) நீ கருணையோடு கொடுத்தாய். அதில் விற்று சாப்பிட்டது, சாப்பிட்டதுதான். மிச்சமுள்ளதை உன் திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன். முன்போல் என்னிடம் தயை புரிவாயாக.

வால்மீகி-வ்யாஸர் போன்ற முந்தைய கவிகளின் ஸ்துதி – சப்தங்கள் 'இந்தக் கவிகளின் முகத்தால் உச்சரிக்கப்பட்டு வெளிவந்தால் தனியான ஒரு மென்மையை அடைவோம். அப்படி வரவேண்டும்' என்று நினைக்கின்றன. சப்தங்களால் தெரிவிக்கப்படும் பொருள்களும் இவர்களுடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புத்தி ப்ரவாஹத்தில் விழுந்தால் (முன்பு அறியப்பட்டவையாகவே இருந்தபோதிலும்) அறியத் தக்கனவாகின்றன. இக் கவிகளின் கீர்த்தி தனக்கும் வரவேண்டும் என்ற ஆசையால் சிவபெருமானே ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் வேதாகமங்களை இயற்றுகிறார். இப்பேர்பட்ட மஹிமை வாய்ந்த கவிதைத்தாத்தா- பதவி வஹிக்கும் ப்ராசீன கவிகளை ஸ்துதிக்கிறோம்.

ஸத்கவிகளின் புகழ்ச்சியும் துஷ்கவிகளின் இகழ்ச்சியும் முதல் ஸர்கத்தில் விரிவாக உள்ளது - எழுதப்படவில்லை.

❀ பாண்ட்ய தேச மஹிமை ❀

ஸமுத்ரக் கரையில், பூமிக்கே அலங்காரமாக பாண்ட்யதேச முள்ளது. அகஸ்த்யர் வஸிக்கும் தக்ஷிணதிக்கில் இருந்தபோதிலும் 'ஸர்வோத்தரம்' என்று உலகில் தெரிய வருகிறது. தெற்கில் உள்ளது எப்படி ஸர்வோத்தரமாக = எல்லாவற்றிற்கும் உத்தரத்தில் = வடக்கில் உள்ளதாக ஆகும் என்று விரோதம் தோன்றுவதை, 'ஸர்வோத்தரம் = எல்லாவற்றையும்விட உயர்ந்தது' என்ற பொருள் கொண்டு பரிஹாரம் செய்யவேண்டும். விரோதாபாஸ-அலங்காரம், விரோதாபாஸம் = உண்மையில் விரோதமின்றியே விரோதம்போல் தோன்றுதல். / உத்தமமான வைராக்யம் (= பற்றின்மை) பூண்டு மூவுலக லக்ஷ்மியையுமே புல்லுக்கு ஸமமாக மதித்த (= தக்ஷிணாமூர்த்தி கோலங்கொண்டிருந்த) சிவ பெருமான் கூட இந்தப் பாண்ட்யதேசத்தை ஆளவேண்டுமென்ற ஆசையால் ஸுந்தரபாண்ட்யனாக வந்தார்.

''இன்னொரு புதுஸ்ருஷ்டி உருவாக்குகிறேன்'' என்று ஆரம்பித்த விச்வாமித்ரர் தேவர்களின் ஸமாதான வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அம்முயற்சியிலிருந்து ஓய்வடையவில்லை. விச்வாமித்ரர் கூட வெறும் ஸமாதான வார்த்தையால் சாந்தமாவாரா என்ன? இந்தப் பாண்ட்ய தேசத்துக்கு ஒப்பான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேசத்தை தன்னால் ஸ்ருஷ்டிக்க இயலாது என்று உணர்ந்து தான் (தேவர்களின் ப்ரார்த்தனையைச் சாக்காக வைத்து) ஸ்ருஷ்டிப்பதைக் கைவிட்டார்.

யுவர்கள், தலையை ஆட்டிக்கொண்டு 'இது மந்தமான காற்று - இது மலயமலைக் காற்று - இது நறுமணக் காற்று' என்று எந்தத் தென்றல் காற்றைக் கொண்டாடுகிறார்களோ, அப்பேர்பட்ட உயர்ந்த காற்றே இந்தப் பாண்ட்ய தேசத்தின் ஒரு மூலையிலிருந்துதான் வீசுகிறது.

இந்தப் பாண்டியதேசத்தில் தேவர்களைக் குறித்து அந்தணர்கள் செய்யும் வேள்விகளில் ஹவிஸ்ஸைப் பெற்றுக் கொள்வதற்காகக் கூப்பிடப்பட்ட தேவர்கள், பாண்டிய தேசத்தின் செழுமையைப் பார்த்துவிட்டு 'எங்கள் லோகத்துக்கு வருவதற்காக எங்களைக் குறித்து நீங்கள் யாகம் செய்யவேண்டாம். நாங்கள் உங்களைக் குறித்து யாகம் செய்கிறோம். உங்களது அருமையான ஸ்தானத்தை (= பாண்டிய தேசத்தை) எங்களுக்குக் கொடுங்கள்' என்கிறார்கள்.

வேறு தபோவனத்தில் தபஸ் செய்பவர் ஸ்வர்கமடைவது பொருத்தம்தான். ஸ்வர்கத்தைவிட உயர்ந்ததான இப்பாண்ட்ய தேசத்தில் தபஸ் செய்பவர்களுக்கோ இங்கேயே நீண்டகாலம் வஸிப்பதுதான் தபஸ்ஸின் பலன், இதைவிடத் தாழ்ந்ததான ஸ்வர்க்கம் செல்வதல்ல.

யாருக்குப் பிதா மண்உருண்டையோ, யாருக்குப் பிதா மஹன் குயவனோ அப்பேர்ப்பட்ட குடமுனி = குடத்தில் தோன்றிய அகஸ்த்யர், இத்தேசத்தின் ஒரு மூலையில் வஸித்துக் கொண்டு ஸூத்ரகாரர் ஆனார். (குடமாக மாறிய மண்ணுருண்டைதான் அகஸ்த்யருக்குத் தந்தை. தந்தையை (= குடத்தை) உண்டுபண்ணின குயவனே பிதாமஹன் = தந்தையின் தந்தை. குயவனின் பேரப்பிள்ளை, குயவனாக இல்லாமல் ஸூத்ரகாரனாக (= நூல் செய்பவனாக) ஆய்விட்டார். என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விரோதம். ஸுந்தரேசர் அருளாணைப்படி நக்கீரருக்குப் போதிப்பதற்காக தமிழ் ஸூத்ரம் பண்ணினார் என்ற உண்மைப் பொருள் கொண்டு விரோதபரிஹாரம். பக் (170) காண்க.

இப்பாண்டிய தேசத்திலுள்ள மிக உயரமான இருவித ரஸாலங்களைப் (= மா, கரும்பு) பார்த்துவிட்டு, அகஸ்த்யரிஷி, விந்த்யபர்வதத்தின் கர்வத்தை (= நான்தான் உயரமானவன் என்ற அஹங்காரத்தை)ப் போக்குவதற்கு இவைகளே போதும் என்றெண்ணி அந்தப் பொறுப்பை அவைகளிடமே அளித்துவிட்டு இங்கேயே ஸுகமாகத் தவம் செய்கிறார்.

ப்ரயத்னம் செய்யாமலே [1]ரதமும், அற்புதமான [2]வில்லுக் காண்டங்களும், எண்ணற்ற [3]அம்புகளும் பாண்டிய தேசத்தில் கிடைப்பதால் உலக வீரன் மன்மதன் அங்கேயே கூடாரமிட்டுவிட்டான். 1= மலயமாருதம் = தென்றல், 2 = கரும்புகள், 3 = புஷ்பங்கள் (= தாமரை, அசோகப்பூ, மாம்பூ, மல்லிகை, நீலோத்பலம்)

தாம்ரபர்ணி - அலைகளால் குளிர்ச்சியான காற்று வீசுகிற இப் பாண்டியதேசத்து மாந்தோப்புகளில் பெரும் ஸேனையுடன் மன்மதன் தங்கியுள்ளான். அவனது புஜபராக்ரமத்தால் காப்பாற்றப்பட்டு தருணர்கள் இங்கு ஸுகமாய் ரமிக்கிறார்கள்.

இத்தேசத்தில் கட்டியாக விழுகிற மழை ஜலமெல்லாம் அப்படியே முத்தாகிறது. கட்டைகளெல்லாம் சந்தனமரத் துண்டுகள் தான். கல்லும் முள்ளும் நிறைந்த மற்ற தேசங்கள் இத்தேசத்துடன் போட்டியிட நினைக்கக்கூட முடியுமா?

மற்ற நதிகள் ஸமுத்ரத்தில் கலக்கும்போது தம்மிடமுள்ள ஜலஜந்துக்களால் ஸமுத்ரத்தை நிரப்புகின்றன. இப்பாண்ட்ய தேசத்திய ரத்னநதி தாம்ரபர்ணியோ தன் பதியான ஸமுத்ரத்தை 'ரத்னாகரம்' (= ரத்னங்களின் இருப்பிடம்) ஆக்குகிறது. (=முத்து முதலிய ரத்னங்களைச் சேர்ப்பித்து - ரத்னம் நிறைந்ததாய்ச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்கிறது. ஸமுத்ரத்துக்கு ரத்னாகரம்' என்ற பெயர். தாம்ரபர்ணி சேர்ப்பித்த ரத்னங்கள் நிரம்பியிருப்பதால்தான் அப்பெயர் ஏற்பட்டது.)

எந்த நதியின் ஸங்கமத்தால் (= ஸ்நானம் - பானம் முதலிய) ஸம்பந்தத்தால் அனைவரும் 'முக்தா': (= ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டவர்) ஆக ஆகிறார்களோ அந்த நதி, 'கங்கை' என்பது அனைவருமறிந்த விஷயம். இந்த தாம்ரபர்ணீ ஸங்கமத்திலிருந்தும் (= தாம்ரபர்ணீ - ஸமுத்ரஸங்க மத்திலிருந்தும்) முக்தா: (= முத்துகள்) உண்டாவதால் இந்த தாம்ரபர்ணியைத் தக்ஷிண கங்கை (= தென்கங்கை) என்கின்றனர். (பந்தம் விடுபட்டவன் முக்தன். முக்தா = முத்து ஸம்ஸ்க்ருதத்தில் முக்த' சப்தமும் 'முக்தா' சப்தமும் பன்மையில் 'முக்தா:' என்று ஒரே ரூபத்துடனிருப்பதால் இப்படிக் கூற முடிந்தது. 'முக்தா:' ஆக என்று ஸம்ஸ்க்ருத பதத்தை அப்படியே போட்டுத்தான் உரைசொல்ல முடியும். இல்லையேல் பொருந்தாது.) இப்படிப்பட்ட தக்ஷிண கங்கை ஓடுவதால் பாண்ட்ய தேசம் மிக உயர்ந்தது.

அகஸ்த்யர் எல்லா ரத்ன கணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட இந்த தாம்ரபர்ணியைத் தன் பெண்ணைப் போல கோத்ர மஹத்தரனான = (பெருமைமிக்க கோத்ரத்தை உடையவனான) ஸரஸ்வானுக்கு (= ஸமுத்ரத்துக்கு) கன்யாதானமாக அளிக்கிறார். கோத்ரங்கள் (= மலைகள்) உள்ளே அமுங்கி இருப்பதால் 'கோத்ரங்களால் மிகப் பெரியவன்' என்று 'கோத்ர மஹத்தர' என்பதற்கு உரியபொருள் - கன்யாதானம் உயர்ந்த கோத்ரக்காரனுக்குச் செய்யப்பட வேண்டுமானதால் பெருமை மிக்க கோத்ரத்தை உடையவன் என்ற பொருளுங் கிடைக்கும்படி கூறினார். 'ஸரஸ்வானுக்கு = அறிஞனுக்கு' என்று இன்னொரு பொருள். மாப்பிள்ளை அறிஞனாக இருக்கவேண்டும். எந்த ஸரஸ்வானிடமிருந்து விஷ்ணுவாலேயே வேதங்கள் க்ரஹிக்கப்பட்டனவோ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவனுக்கு என்றும் கூறியுள்ளார். 'விஷ்ணுவிற்கே வேதம் கற்பித்தவன். எனவே வித்யையில் உயர்ந்தவன்' என்று கிடைக்கிறது. உண்மைப் பொருள் - அஸுரன் அபஹரித்து ஸமுத்ரத்தில் ஒளித்துவைத்திருந்த வேதங்களை ஸமுத்ரத்தி லிருந்து மத்ஸ்ய ரூபியாக விஷ்ணு எடுத்துக்கொண்டு வந்தார் என்பது. பெருமை மிக்க அகஸ்த்ய மஹர்ஷியால், வரனா யிருப்பதற்கு வேண்டிய தகுதி (= உயர்கோத்ரம், வித்யை, அறிவாற்றல்) எல்லாம் பொருந்திய வரனுக்குப், பெண்ணைக் கொடுக்கவேண்டிய முறைப்படி (=ரத்னங்களால் அலங்கரித்து) கொடுக்கப்பட்ட பெண்போல் இருக்கிற தாம்ரபர்ணீ நதி இப்பாண்ட்யதேசத்தில் ஓடுவதால் இதற்குத் தனிப்பெருமை. ஸரஸ்வான் = பெருக்கெடுக்கும் வற்றாத அறிவு நீரோட்டம் உடையவன், 'ஸரஸ்வானுத^{3}தி^{4}ஸ் ஸிந்து^{4}:' என்று அமரம், ஸமுத்ரப் பெயர்களைக் கூறுகிறது. 'ஸரஸ்வான் ரஸிகே பு^{3}தே^{4} என்று வேறொரு நிகண்டு. பு^{3}த^{4}: = அறிவாளி. ஸரஸ்வான் = ரஸிகன், அறிவாளி. இங்கு வேண்டிய பொருள் அறிவாளி என்பதே.

தாம்ரை நதி ஸங்கமிக்குமிடத்தில் ஸமுத்ர அலைகளால் முத்துகள் வாரி இரைக்கப்படுகின்றன. 'அகஸ்த்ய கோத்ரத்தில் பிறந்தவள்' என்று கௌரவத்துடன் ஸமுத்ரராஜன் புஷ்பங்களை வாரி இரைத்து எதிர்கொண்டு இவளை உள்ளே அழைத்துச் செல்வது போலிருக்கிறது இது. அகஸ்த்ய கோத்ரத்தில் = அகஸ்த்யர் வஸிக்கும் மலையில் என்றும் பொருள்.

தேவர்கள், ப்ரவாஹமாக ஓடி ஸமுத்ரத்தில் விழுந்த - இயல்பாகவே மிக இனிமையான இந்த தாம்ரபர்ணீ ஜலத்தைத்தான் ஒரு ஸமயம் ஸமுத்ரத்திலிருந்து தனியாகக் கடைந்து எடுத்து 'அம்ருதம்', 'அம்ருதம்' என்று இப்போதும் அருந்துகிறார்கள்.

ஸமுத்ரத்தினுள்ளே ஒளிந்து கொண்டு துன்புறுத்தும் அஸுரர்களை ஒளிய விடாமற்செய்ய ஸமுத்ரத்தையே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசமனம் செய்து வற்றச் செய்த அகஸ்த்யர், 'அந்த உப்பு ஜலத்தை ருசிபார்த்ததால் ஏற்பட்ட தோஷம், இயல்பிலேயே மதுரமான இந்த தாம்ரபர்ணியின் ஜலத்தை தினமும் அருந்தினால் போய்விடும்' என்று எண்ணித்தான் தாம்ரபர்ணி - உத்பத்திஸ்தானமான மலயமலையைவிட்டு ஒருபோதும் அகலாமலிருக்கிறார் போலிருக்கிறது. (அகஸ்த்யர் மலயமலைப் பகுதி - பொதிய மலையில் தொடர்ந்து வஸிப்பதைக் கவி இப்படி உத்ப்ரேக்ஷிக்கிறார்.) சந்த்ரஸூர்யர்களின் வழியைத் தடைசெய்யுமளவிற்கு வளர்ந்து கொண்டே போன விந்த்ய மலையை அகஸ்த்யர் தனக்கு வழி விடுமாறு உத்தரவிட்டுத் தாழச்செய்தார். திரும்பவும் அது உயர்ந்துவிடாமலிருப்பதற்காக 'வடக்கிலிருந்து தெற்கே செல்லும் நான் திரும்ப வரும்வரை இப்படியே (= தாழ்வாகவே) இரு' என்று சொல்லிவிட்டு வந்தார். திரும்பிச் செல்லவேயில்லை என்பது இந்த உத்ப்ரேக்ஷைக்கு மூலம். உத்ப்ரேக்ஷை = தற்குறிப்பேற்றம் = காரணம் வேறாக இருக்கும்போது இதுதான் காரணமென்று இல்லாத ஒன்றைக் கற்பனையாகக் கூறுதல்.

யாம் ஸர்வரத்னைக^{2}னிம் விஹாய / க^{3}ங்க^3ாமத^4ாத் கேன
கு^{3}ணேன சம்பு^{4}: । கா ப்ரீதி ரர்க்கே ஸதி கைதகே(அ)பி /
ந ஹீச்வரா: பர்யனுயோஜ்யசீலா: ॥

எல்லா ரத்னங்களுக்கும் ஒரே உத்பத்தி ஸ்தானமான இந்த தாம்ரபர்ணியை விட்டுவிட்டு, சிவன் எந்த குணத்தைக்கண்டு கங்கையை தரித்தார்? (இந்த கேள்விக்கு இன்னொரு கேள்வியின் மூலம் விளக்கம்.) (நல்ல மணமுடைய) தாழம்பூவை விட்டுவிட்டு எருக்கம்பூவில் என்ன ப்ரீதி அவருக்கு? ஆகையால் ஈச்வரர்களுடைய நடத்தையை ஏனென்றே கேட்கக் கூடாது. ஒரே = ஒப்பற்ற.

தாம்ரபர்ணியின் உத்பத்திஸ்தானத்தில் வைடூர்யங்கள் விளைகின்றன. ஓடிவரும் நடுதேசத்தில் நீலரத்னங்கள் விளைகின்றன. கடைசி தேசத்தில் = ஸமுத்ரஸங்கமத்தை ஒட்டிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேசத்தில் முத்துகள் விளைகின்றன. இந்தத் தாம்ரபர்ணியே பாண்டிய தேசத்தில் ஒரு ஸாதாரண சிறு நதியைப் போலத்தான். இதனால் பாண்டிய தேசத்தின் மஹிமை அறியப்பெறும்.

※ கதம்பவன மஹிமை ※

விசாலமான அந்தப் பாண்டிய தேசத்தில் வ்ருஷப சைலத்துக்கு ஸமீபத்தில் இளம் பிறை சூடிய ஈசனுக்கு உறைவிடமான - ஜகத்தையே பரிசுத்தமாக்குவதான கதம்பவனம் (= அடப்பங்காடு) உள்ளது. மரங்கள் மிகமிக அடர்த்தியாக வளர்ந்து ஸூர்யகிரணமே நுழையாதபடி இருண்டிருக்கிற அந்த அடப்பங்காட்டின் நிழல் இருட்டை யெல்லாம் (= மனஸில் உள்ள தமஸை = அக்ஞானத்தை யெல்லாம்) அழிப்பதாகும். காற்றினால் கொண்டுவரப்பட்ட - அக்காட்டில் பூத்த பூக்களின் ரஜஸ் (= மகரந்தப்பொடி) தேஹத்தில் பட்டமாத்ரத்தில் ஜனங்களுடைய ரஜஸ்ஸை (= ரஜோகுணத்தை) மிச்சமின்றித் துடைத்தெடுத்து விடுகிறது. இருண்ட நிழலே இருட்டைப் போக்குகிறது. ரஜஸ்ஸே ரஜஸ்ஸைப் போக்குகிறது.

புஷ்பங்களின் உள்பாகத்தில் (கரிய) வண்டுகள் மறைந்திருக்கின்றன. சிறிதளவு புஷ்பங்களில் ரஜஸ் இருக்கிறது. இதைப்பார்த்தால் ஸத்வகுணமானது தமஸ்- ரஜஸ் இரண்டையும் ஜயித்து எங்கும் வ்யாபித்திருப்பதுபோல இருக்கிறது / அந்தக் கதம்பவனத்தில் உள்ள மரங்கள் தேனை ஒழுகச் செய்து, ஐந்து பூதங்கள் - சந்த்ரன் - ஸூர்யன் யஜமானன் ஆகிய எட்டையும் தனது உருவமாகக் கொண்ட அஷ்டமூர்த்தியின் (- ஈசனின்) ஒரு உருவமான பூமிக்கு அபிஷேகம் செய்கின்றன. வண்டுகள் ஸாமகானம் செய்வது போல் காதுக்கு மகிழ்வூட்டும் ஜங்காரம் செய்கின்றன.

(சந்த்ரகலை போல்) வளைந்துள்ள புரசம்பூக்களைப் பார்த்தால் சிவ பெருமான், தன்னை ஸேவித்து முக்தியடையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(= தன் ஸாரூப்யத்தை அடையும் = தன்னைப்போன்ற உருப்பெற்றவராகும்) ஒவ்வொருவருக்கும் தனக்கிருப்பது போல் சந்த்ரகலாபூஷணம் அளிப்பதற்காகச் சேர்த்து வைத்திருக்கும் சந்த்ரகலைகள் போலுள்ளன.

தன் சத்ருவான மஹேசனின் நடவடிக்கைகளை ஒவ்வொரு க்ஷணமும் கண்காணிப்பதற்காக மன்மதனால் ஏவப்பட்ட ஒற்றர்கள் போல வண்டுகள், குயில்களுடன் சேர்ந்து அந்த அடப்பங்காட்டில் ஸஞ்சரிக்கின்றன.

ப்ராக^{3}ம்ப^{3}யாத^{2} ப்ரமத^{2}ாதி^{4} பேனாப் - / யதி^{4}ஷ்டி^{2}தே யத்ர
கத^{3}ம்ப^{3} மூலே । மாகந்த^{3} ஜம்பூ^{3} வடபாத^{3}பானாம் / மந்த^{3}ாக்ஷ
மந்த^{3}ானி குலான்யபூ^{4}வன் ॥

அங்கு கதம்ப மரத்தின் மூலப்ரதேசம், முன்பு அன்னையாலும் பிறகு சிவனாலும் இருப்பிடமாகக் கொள்ளப் பட்டது. இதைக் கண்டு மா-நாக-ஆல மரங்களின் கூட்டங்கள் லஜ்ஜையால் மந்தமாயின.

காஞ்சியில் மாமரத்தடியில் சிவன் மட்டுமிருப்பதால், திருவானைக்காவலிலும் நாக மரத்தடியில் சிவன் மட்டுமிருப் பதால் ஆலமரத்தடியிலும் சிவன் மட்டும் தக்ஷிணாமூர்த்தியா யிருப்பதால் உமாமஹேச்வரர் இருவரும் தனதடியில் வஸிக்கப்பெற்ற கதம்ப மரத்தைவிட நாமெல்லாம் தாழ்ந்தவரே என்று மா-நாக-ஆல மரங்கள் வெட்கப்பட்டன.

சாக^{2}ாஸு சாக^{2}ாஸு ப^{2}லானி யத்ர / ப^{4}ாந்தீவ நாநா
பரமார்த்த^{2}தஸ்து । ஸர்வாக^{3}மானாம் ப^{2}லமேகமே வ /
ஸந்த்^{3}ரு^{1}ச்யதே தச்^{1}ச^{1} கத^{3}ம்ப^{3}மூலே ॥

ஆகமங்களுக்கும் (= வேதங்களுக்கும்) சாகைகள் (கிளைகள் = பல பகுதிகள்) உண்டு. அகமங்களுக்கும் (=நடக்காமல் ஒரே இடத்திலுள்ள) மரங்களுக்கும் கிளைகள் உண்டு. ஸர்வ+ஆகம = ஸர்வாகம; ஸர்வ + அகம = ஸர்வாகம.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதை வைத்து ச்லேஷை, கதம்பவனத்தில் வ்ருக்ஷ சாகைகள் தோறும் வெவ்வேறு பழங்கள் இருப்பனவாய் தோன்றுகின்றன. வேத சாகைகளிலும், பசு, புத்ரன், தனம், தான்யம், ஆயுஸ் முதலிய பல்வேறு பலன்கள் தரும் கர்மாக்கள் கூறப்பட்டுள்ளன. (ருசிகாட்டி, படிப்படியாக வேதங்கள் பரமாத்மாவிடம் அழைத்துச் செல்வதால்) உண்மையில் ஸர்வாகமங்களுக்கும் பலன் ஒன்றே. (பரமாத்மாதான்). அந்தப் பலனும் (கிளையிலில்லை) கதம்ப மரத்து மூலத்திலுள்ளது.

த்ரு^{1}ணீக்ரு^{1}தே யத்ர வஸத்^{3}பி^{4}ரார்யெ: / ச^{1}ராச^{1}ரே(அ) ஸ்மின்
பசவச்^{5} ச^{1}ரந்தி^{1} । வைகுண்ட^{2} வாஸோ(அ)பி த்ரு^{1}ணீக்ரு^{1}தஸ்
தை: / ந சே^{1}த் குதோ(அ)ஸௌ ஹரிணாத்^{3}ரு^{1}த: ஸ்யாத் ॥

கதம்பவன வாஸிகளான மேலோர் சராசரத்தையே (= ஸ்தாவர ஜங்கமமான உலகையே) புல்லாக்கிவிட்டனர். (ஆகையால்) உலகில் பசுக்கள் சரிக்கின்றன (=ஸஞ்சரிக்கின்றன. புற்களை மேய்கின்றன) வைகுண்ட வாஸத்தையும் அவர்கள் புல்லாக்கி விட்டனர். இல்லாவிட்டால் அவ்வைகுண்ட வாஸம் ஹரிணாத்^{3}ரு^{1}தமாக (ஹரிண+ஆத்^{3}ரு^{1}த = ஹரிணாத்^{3}ரு^{1}த= மான்களால் ஆதரிக்கப்பட்டதாக) எப்படி இருக்கமுடியும்? புல்லிருக்குமிடத்தில் தானே மான்களுக்கு ஆதரவிருக்கும்? [உண்மையில் வைகுண்ட வாஸமானது ஹரிணா = (ஹரியால்= விஷ்ணுவினால்) ஆத்^{3}ரு^{1}தமாக ஆதரிக்கப்பட்டதாக இருக்கிறது.] 'உலகஸுகத்தையும் வைகுண்ட ஸுகத்தையும் புல்லுக்கு ஸமமாக மதிக்கிறார்கள். பரம வைராக்யங் கொண்டவர்கள் - ஆத்மானுபவம் ஒன்றையே நாடும் மேலோர்' என்பது ச்லேஷையால் அழகுற வர்ணிக்கப்பட்டது.

அந்தக் கதம்பவனத்தில் ரிஷிகள் விபூதியணிந்து பக்தி பரவசத்தால் மயிர்க் கூச்சலுடனும் ஆனந்தக் கண்ணீருடனும் ஈசனை ஆராதிக்கின்றனர். அவர்களைப் போலவே கதம்ப மரங்களும் இருக்கின்றன. கதம்பமரம் நெருக்கமாக மொட்டுகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கட்டும். அதைப் பார்த்தால் மரத்திற்கும் மயிர்க் கூச்சல் ஏற்பட்டது போல் இருக்கிறது. அம்மரங்கள் புஷ்பரஸத்தை வர்ஷிக்கின்றன. அதைப் பார்த்தால் ஆனந்தக் கண்ணீர் விடுவது போலிருக்கிறது. மேலும் அம்மரங்கள் புஷ்ப தூளிபடிந்து விபூதி பூசிக் கொண்டவைபோல் உள்ளன. முனிவர்களைப் பார்த்துத் தாமும் அம்முனிவர்களைப் போல் இருக்க நினைக்கின்றன.

அந்தக் கதம்பவனத்தில் ஒரு கதம்பமரத்தின் அடிப்ரதேசத்தில் ஜனங்களின் தவப்பயனாக - ஜகன்மங்களமான - தயையே உருவெடுத்து வந்ததான மஹேசலிங்கம் உள்ளது. எந்தப் பரம்பொருள் எல்லாரும் அறியமுடியாதபடி வேதங்களால் மறைக்கப்பட்டதோ - எந்தப் பரம்பொருளைக் காண்பதற்காக முனிவர்கள் முயற்சிக்கிறார்களோ அதே பரம்பொருள் 'ஸுந்தரர்' என்று பெயர் கொண்டு உருவிலும் ஸுந்தரமாகக் கதம்ப மரத்தடியில் ப்ரத்யக்ஷமாகக் காணக் கிடைக்கிறது. பாண்டியன் பிரம்பால் அடித்ததால் ஏற்பட்ட வடு, நேரான நீண்ட ரேகையாக இன்னமும் அந்தலிங்கத்தின் சிரஸ்ஸில் காணப்படுகிறது. ரஹஸ்யமான பல ஆகமங்களால் ஈசன் நாதஸ்வரூபன் என்று அறிந்து கொள்ளவேண்டியதை இந்த ரேகையே காட்டுவது போலிருக்கிறது. எந்த லிங்கத்தினுடைய அடியையும் சிரஸ்ஸையும் காண விஷ்ணுவும் ப்ரம்மனும் முயற்சித்தனரோ, அந்த லிங்கத்தின் அடிபாகம் கதம்பமரத்தின் அடிபாகத்தில் காணக்கிடைக்கிறது; சிரஸ்பாகம் மரத்தின் தலைபாகத்தில் காணக்கிடைக்கிறது.

அந்த ஸ்வயம்பு ஸுந்தரநாத லிங்கம், மரத்திலிருந்து விழும் புஷ்பங்களால் மூடப்பட்டு, மரம் சொரியும் தேனால் (= மகரந்தத்தால்) - அபிஷேகம் செய்யப்பட்டு, மேலே ஏறிச் செல்லும் பாம்புகளால் பூஷிக்கப்பட்டு - இவ்வாறாக ஸ்வயம் பூஜித்மாய் = தானே பூஜை செய்யப்பட்டதாய் = இயற்கை யாகவே பூஜிக்கப்பட்டதாயுள்ளது. அந்த லிங்கம் மேடுபள்ள முள்ளதாயிருக்கிறது - கவி அதற்குக் காரணம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்ப்ரேக்ஷிக்கிறார் - பந்தம் நீங்கப் பெற்ற ஜீவர்கள், 'நான்முந்தி' 'நான்முந்தி' என்று போட்டியிட்டுக் கொண்டு அந்த லிங்கத்தில் ப்ரவேசித்து ஐக்யமடைகிறார்கள். எல்லாருக்கும் போதுமான இடமின்றி நெருக்கடியால் இந்த மேடுபள்ளம் ஏற்பட்டுள்ளது என்று நினைக்கிறேன்.

சி^{1}த்^{3}ரூபமானந்த^{3}மயஞ் ச^{1} வேத^{3}ா: / சைவம் வபு: சாச்வத
மாமனந்தி। த^{3}யாமயந் தே(அ)பி விது^{3}ர் ந ஜாது / த்^{3}ரு^{1}ஷ்டந்
தத^{3}த்ரைவ கத^{3}ம்ப^{3}மூலே ॥

வேதங்கள் சிவனின் தேஹத்தை ஞானஸ்வரூபமாகவும் ஆனந்தஸ்வரூபமாகவும் சொல்கின்றன. தயாமயமான ஸ்வரூபத்தை அவைகள்கூட ஒருபோதுமறியவில்லை. அந்த தயாமயமான ஸ்வரூபம் இங்கேயே கதம்ப மரத்தடியில் லிங்கவடிவில் காணக்கிடைக்கிறது.

'(நடுக்காட்டில் ரஹஸ்யமாக) மறைந்திருக்கிறோம்' என்று வீண் எண்ணந்தான். மேலான ஜ்யோதிஸ்வரூபமாயிருக்கும் லிங்கம் எப்படி மறைந்திருக்க முடியும். சிரஸில் சந்த்ரரேகை வேறு இருக்கிறது. அதனாலேயே அந்த லிங்கம் கதம்ப மரத்தடியில் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகிறது.

சிவலிங்கத்துக்கு 5 கலைகள் என்று ஆகம சாஸ்த்ரத்தில் ப்ரஸித்தம். ஆனாலும் இந்த லிங்கமிருக்கும் பாண்டியதேசத்தில் 64 கலைகளும் விளங்குகின்றன. (ச்லேஷை. பக் (137) காண்க.

ஸுந்தரேச லிங்கத்தை கஸ்தூரியாலும் பச்சைக் கர்ப்பூரத்தாலும் பூசி வழிபடுவது வீரபாண்டியனின் பிள்ளையினால் - மீனாக்ஷியின் கொள்ளுப் பேரனால் - அபிஷேக பாண்டியன் என்று ப்ரஸித்தி பெற்றவனால் அடிக்கடி செய்யப்பட்டது. இப்போதும் ஈசன் அவ்வித ஸேவையையே விரும்புகிறார் என்று நடுவில் வருகிறது. ஆரம்பத்திலேயே ஸுந்தரேச லிங்கத்தைப் பக்தர்கள் இவ்விதம் வழிபடுவதற்குக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காரணம் இதுதான் என்று கவியின் உத்ப்ரேக்ஷை (= தற்குறிப்பேற்றம்) அலங்காரம்

க்ரு[1]ஷ்ணார்ஜுனாப்[4]யாம் பரிபூஜ்ய லிங்க - / மாஸாதி[3]தாஸ் ஸித்[3]த[4]ய இத்யவேத்ய । கஸ்தூரிகாபி[4]ர் க[4]னஸாரகைச்[5]ச[1] / லிம்பந்தி லோகா: க[2]லு லிங்க[3]மேதத்: ॥

('மஹாகவியினால் அற்புதமான வாக்கினால் சிவலீலை வர்ணிக்கப்பட்டது', என்பதில் வர்ணிக்கிற கர்த்தா மஹாகவி, வர்ணிப்பதற்கு ஸாதனம் வாக்கு. கர்த்தா, ஸாதனம் இரண்டையும் குறிக்கிற பதங்கள் இரண்டுமே மூன்றாம் வேற்றுமையுருபுள்ளதாயிருக்கின்றன. இதை மனதில் கொண்டு பார்த்தால் கவியின் சமத்காரம் புரியும்) க்ருஷ்ணபகவானும் லிங்கத்தைப் பூஜித்து ஸித்திகள் பெற்றார். அர்ஜுனனும் லிங்கத்தைப் பூஜித்து ஸித்திகள் பெற்றான்.

க்ருஷ்ண=கருப்பானது, அர்ஜுன=வெளிப்பானது. க்ருஷ்ணார்ஜுனர்களால் (இன்னொரு பொருள் - கருப்பானவையும் வெளுப்பானவையுமான த்ரவ்யங்களால்) லிங்கத்தைப் பூஜித்து ஸித்திகள் அடையப்பட்டன என்பதை அறிந்து ஜனங்கள் தாங்களும் இந்த ஸுந்தரேச லிங்கத்தை (கருப்பான) கஸ்தூரிகளாலும் (வெளுப்பான) பச்சைக் கர்ப்பூரங்களாலும் மெழுகுகின்றனர்.

க்ருஷ்ணார்ஜுனர்களால் - பூஜை செய்தவர்களால் ஸித்திகள் அடையப்பட்டன என்ற, உண்மைப்பொருள் கொண்டால், அது எல்லா ஜனங்களும் கஸ்தூரி பச்சைக் கர்ப்பூரம் மெழுக்கிட்டு பூஜிப்பதற்குக் காரணமாகாது. (முன்னோர்களால்) க்ருஷ்ணார்ஜுனமான (=கருப்பு - வெளுப்பு நிறமுடைய) பூஜாஸாதன த்ரவ்யங்களால் லிங்கத்தைப் பூஜித்து ஸித்திகள் அடையப்பட்டன என்று பொருள் கூறினால் தான் இப்போதைய ஜனங்களும் அப்படிச் செய்வதற்கு காரணம் கிடைக்கும். இருபொருளும் தரும்படி அமைத்துள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லிங்க பூஜை ஸரிவர நடைபெற்றால் லோகங்கள் க்ஷேமமாயிருக்கும். இந்த லிங்கம் ஜ்னங்கள் யாருமில்லாத இடத்தில் இருந்த போதிலும் (= ஜனங்களால் பூஜிக்கப்படாத போதிலும்) தன் சிரஸ்ஸிலேயே உள்ள கங்கையால் எப்போதும் அபிஷேகம் பண்ணப்பட்டதாகவும். தன் சிரஸ்ஸிலேயே உள்ள சந்த்ரனால் பூஜிக்கப்பட்டதாகவும் இருந்துகொண்டு மூவுலகிற்கும் க்ஷேமமுண்டுபண்ணிற்று. அந்த லிங்கரூபமான ஈச்வரன், வனத்திலுள்ள பக்ஷிகளின் கூவல்களிலும் இந்த்ரனின் பாடகர்கள் - கந்தர்வர்கள் பாடுவதிலும் ஸமமாகவே ப்ரீதியடைந்தார். ஸர்வலோக ஜனகரான அவர் பார்வையில் எல்லாம் ஒன்றுதான்.

யோகிகணங்களின் த்யானத்தாலும் வித்யாதரர் - அப்ஸரஸ்களின் கான - நர்த்தனத்தாலும் வினோதம் அடைகிற மஹேசர் இந்த லிங்கத்திலிருந்துகொண்டு வேடர்கள் - ம்ருகங்கள்-பக்ஷிகளுடன் விளையாடினார். லிங்கத்துள் மறைந்திருக்கும் ஈசனை மரங்கள் புஷ்பங்களைச் சொரிந்து ஆராதித்தன, மான்கள் கொம்பு நுனியால் சொறிந்து கொடுத்து ஆராதித்தன, பாம்புகள் பாம்புச் சட்டையைப் போர்த்தி ஆராதித்தன. ஒவ்வொரு ஸந்த்யாகாலத்திலும் கண்ணில் தென்படாத சிவகணங்கள் நன்கு தெரியாதபடி ஹாரத்தி எடுத்திருந்தது, கிழ நரியின் வாயில் கவ்விக்கொள்ளப்பட்ட கொள்ளிக்கட்டை ஜ்வலிக்கும்போது நன்கு தெரியவந்தது. விக்னேச்வரர், காட்டு யானைகளுள் ஒருவராயிருந்தார். ஸ்கந்தன் வேடச் சிறுவர்களுள் ஒருவராயிருந்தார். ஆதி பராசக்தியும் வேடஸ்த்ரீகளில் ஒருவளாயிருந்தாள். இப்படி எல்லாரும் சிவனருகில் விளையாடினர். காலசக்ரம் ஓடிக்கொண்டேயிருக்கும் போது ப்ரபஞ்சம் அழிந்து தோன்றி மறுபடியும் அழிந்து தோன்றி - இப்படி பஹுகாலம் கழிந்தபிறகு தேவர்களுக்குள் சிலர், யோகிகளுக்குள் சிலர் இப்படி ஈசன் கதம்பவனத்தில் களித்திருக்கும் ரஹஸ்யத்தை அறிந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள்நோக்குப் பார்வையாலும், முந்தையப் புண்ய வசத்தாலும், ஆப்தர்களின் உபதேசத்தாலும் அனுமானத்தாலும் கதம்பவனவ்ருத்தாந்தம் மேலுலகில் பரவியது. சிலர் தூரத்திலிருந்தே வணங்கினர். சிலர் அருகில் வந்து கதம்பமரங்களை தர்சித்தனர். சிலர் கதம்பவனத்தில் நுழைந்து தேடினர். தன்யர்களான (= பாக்யவான்களான) சிலர் அந்த லிங்கத்தையும் கண்டனர். அவர்கள், லிங்கத்துக்கு ஆனந்தக் கண்ணீராலேயே அபிஷேகம் செய்தனர். மலர்ந்த கண்களாலேயே அதை அர்ச்சித்தனர் (= கண்கொட்டாமல் பார்த்து ஆனந்தமடைந்தனர்.) ஈசனைக் கண்டதால் உண்டான ஆனந்தமாகிய அம்ருதத்தில் முழுகிய மிகப் பரிசுத்தமான தன்னையே நிவேதனம் செய்தனர். (வெளிவஸ்துக்களை எதிர்பார்க்காமலே பூஜை எளிதில் நடந்தது.) 'நீங்கள் மறைத்து மறைத்து வைத்திருந்தாலும் நாங்கள் இந்த ரஹஸ்யத்தைக் கண்டுவிட்டோம்; பாருங்கள்' என்று சிலர் வேதங்களை ஏசினர், சிலர் ப்ரம்மனை ஏசினர். சிலர் நந்திகேசரை ஏசினர். வாகீச்வரர்கள் (= புலவர்கள்) ஈசனை வாக்கால் பூஜித்தனர் (= ஸ்துதித்தனர்.) த்யான வழியில் செல்வோர், ஈசனை மனஸில் த்யானித்தனர். வாக்காலும் மனத்தாலும் பூஜிக்கத் தெரியாதவர் - பாஹ்யபூஜை (= ஜலத்தால் அபிஷேகம் புஷ்பங்களால் அர்ச்சனை முதலிய காயிகபூஜை) மட்டுஞ் செய்யக் கூடியவர், அதற்கு வேண்டிய ஸாமக்ரீ கிடைக்காததால் வருத்த முற்றனர். தேவர்கள் ஸுந்தரேசலிங்கத்தை ஆகாசகங்கை ஜலத்தால் அபிஷேகம் செய்தனர். அப்படிச் செய்ய இயலாத பூமியிலுள்ள முனிவர்கள் கண்ணீர் ததும்ப ஸ்தம்பித்து நின்றனர். அவர்களுக்குள்ள பூஜை செய்யவேண்டுமென்ற எண்ணம், ஜலமின்மையால் ஏற்பட்ட வருத்தம் இரண்டையும் பார்த்து தீனதயாநிதி ஈசன் அங்கு ஒரு திவ்யமான ஸரஸ் உண்டாக்க நினைத்தார்.

தென் திசையில் அம்பு விழுந் தொலைவில் ஸரஸ் உண்டாக்க எண்ணி லீலையாக கூரான த்ரிசூலமுனையினால் பூமியில் குத்தினார். குத்திவிட்டு உடனேயே தன் பாத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடகத்தைப் பார்த்தார். (அவருடைய கவலையை அறிந்த) அம்பிகை பார்வதீ - 'உமது பக்தனுக்கு ஒருபோதும் தீங்கு வராது. ஆதிசேஷன் ஸுகமாயிருக்கிறான்' என்று சொன்னாள். ('ஆலோசித்துப் பார்க்காமல் திடீரென்று சூலத்தை ப்ரயோகித்துவிட்டோமே; அது பாதாளம் வரை செல்லுமே; அங்கு பூமியைத் தலைகளால் தாங்கி நிற்கும் ஆதிசேஷனுக்குக் காயம் படாமல் இருக்கவேண்டுமே' என்று கவலையுற்று, ஆதிசேஷன் பாதவளயமாகத் தனது காலிலும் இருப்பதால் 'நேரில் பார்த்தே ஏதும் ஊறு விளையாமலிருக்கிறதா' என்று தெரிந்து கொள்ளலாமென்று உடனே பாதவளயத்தைப் பார்த்தார். பார்வதீ அவருக்குத் தைர்யம் சொன்னாள். இவ்வளவும் த்வனிக்கிறது.)

சூலமுனையால் துளைக்கப்பட்ட ஜகதண்டத்தின் அடிப்பாக ஓட்டிற்கு அடியில் அண்டத்தைச் சூழ்ந்துள்ள ஜலம், சூலந் துளைத்த த்வாரம் வழியாக கொப்பளித்துக் கொண்டு அதேக்ஷணத்தில் உயரக் கிளம்பியது, ஸரஸ் ஆயிற்று (அண்டம் = முட்டை). மூவடியால் மூவுலகையும் அளக்கும்போது விஷ்ணு வரவழைத்த ஜலம் அதே⁴ாக³தியை அடைந்தது (= விஷ்ணுபதியாக = கங்கையாகக்) கீழ்நோக்கி வந்தது. அதே ஜலம் இப்போது சிவனின் அஸ்த்ரமான சூலத்தின் ஸம்பந்தத்தால் ஊர்த்⁴வக³தியை அடைந்தது (= மேல் நோக்கி வந்தது)

இந்த மஹாத்புதத்தைப் பார்ப்பதற்காக சிவன் குனிந்தபோது அவர் தலையிலுள்ள கங்கை ஜலமும் விழுந்து ஸரஸ் அலைமோதும்படி நிறைந்தது. இப்படியாக ஈசன் த்ரிசூலத்தால் ஏற்பட்ட ஸரஸ் அவ்வளவு ஆழமாக இருந்தது - மூவுலகையும் அளந்த த்ரிவிக்ரமர் கூட இதில் இறங்கினால் மிதக்கவேண்டியதுதான் - அடித்தளம் காலுக்கு எட்டாது.

ஸமுத்திரத்தில் எப்போதுமிருக்கிற (விஷ்ணுவின் அவதாரமான) மீனும் ஆமையும் இந்த ஸரஸ்ஸைக் கண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆச்வாஸம் (=ஆறுதல்) அடைந்தன. தாம் வஸிக்கும் ஸமுத்ரஜலத்தை வடவாமுகாக்னி குடித்துக்கொண்டேயிருக் கிறது. ராமர் ஸமுத்ரத்தைப் பாணத்தால் அடித்தார். அகஸ்த்யரோ ஸமுத்ரத்தை முழுவதும் குடித்து வற்றவே செய்துவிட்டார். நமது வாஸஸ்தானம் ஸமுத்ரம் இப்படிப் பல ஆபத்துக்குள்ளாகியுள்ளதே. இல்லாமலே போய்விட்டால் நாம் எங்கே வஸிப்பது என்று அவை கவலையுற்றிருந்தன. இப்போதோ இந்த புஷ்கரிணீ தீர்த்தம் உண்டாய்விட்டது. வடவாக்னிபயமும், ராமர்பயமும், அகஸ்த்யர்பயமும் எந்த பயமும் இதற்குக் கிடையாது. ஸமுத்ரத்தையே நம்பியிருக்க வேண்டியதில்லை. ஸமுத்ரம் போனாலும் இந்தத் தீர்த்தத்தில் வஸிக்கலாமென்று விஷ்ணுவின் அம்சமான மீனும் ஆமையும் ஆறுதலடைந்தன.

ஸரஸில் தாமரைக் கொடிகள் உண்டாயின. ஈசனின் ஒரு கண் (= ஸூர்யன்) அதைப் பார்த்து மிக்க ப்ரீதியடைந்தது. உத்பலக் கொடிகள் உண்டாயின. ஈசனின் இன்னொரு கண் (=சந்திரன்) அதைப் பார்த்து மகிழ்ந்தது. 'ஈசனின் த்ரிசூலம் ஸத்வ ரஜஸ் தமோ குணமயமானது. ஜகத்துக்கே அது காரணம்' என்கின்றனர். அதிலிருந்து ஸரஸ் வந்திருப்பதால் தாமரைகளும் உத்பலங்களும் ஸரஸில் தோன்றுவதற்குக் காரணம் உள்ளதா என்று சிந்திக்க வேண்டியதில்லை. ஜகத்துக்கே காரணமான சூலத்திலிருந்து வந்ததல்லவா ஸரஸ். தாமரைக்கும் உத்பலத்துக்கும் அது காரணமாயிருப்பதில் என்ன ஸந்தேஹம்.

சூலத்தைப் போலவே சூலபுஷ்கரிணீயும் முக்குண நிறமுள்ளதாயிருக்கிறது. ஸத்வம் வெளுப்பு, ரஜஸ் சிவப்பு. தமஸ் நீலம் (= கருப்பு). வெளியில் பார்த்தால் பாசிபடிந்து நீலமாகக் (= கருப்பாக) காணப்படுகிறது. உள்ளுக்குள் தாமரை நிறமுள்ளதாக இருக்கிறது. கையில் எடுத்துப் பார்த்தால் ஸ்வச்சமாக வெளுப்பாக இருக்கிறது.

ஸூர்யன் தன் கையில் வைத்திருந்த பழைய தாமரையை விட்டுவிட்டு இந்த ஸரஸ்ஸிலுதித்த தாமரையை எடுத்துக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டார். லக்ஷ்மி இந்த ஸரஸ் தாமரையிலேயே ஸ்திரவாஸம் செய்தாள். (விஷ்ணு நாபிக்கமலத்திலுண்டான) ப்ரம்மா இந்தத் தாமரையிலிருந்து பிறக்க வேண்டுமென விரும்பினார்.

'இந்த ஸரஸ்ஸில் ஆசமனம் செய்யுங்கள். ஸ்நானம் செய்யுங்கள். இந்த ஸரஸ் ஜலத்தால் எனக்கு அபிஷேகம் செய்யுங்கள்' என்று வேதங்களின் தங்கையான வாக்கினால் ஈசன் தேவர்களையும் மஹர்ஷிகளையும் அனுக்ரஹித்தார். (சிவன் முகத்திலிருந்து முன்பு வேதங்கள் வந்தன. இப்போது இந்த வாக்கு வந்தது. எனவே இது வேதங்களின் தங்கை.)

த்ரிசூலத்தின் நுனியால் தோண்டப்பட்டது - சிவசிரஸ் கங்கை விழுந்து பவித்ரமானது-ப்ரத்யக்ஷமான சிவானுக்ரஹத் தாலும் மிகவும் உபயோகிக்கத்தக்கதாக ஆனது - இப்பேர்ப்பட்ட இந்த தீர்த்தம் கிடைத்து விட்டதால் தபஸ்விகள் இதையே உபயோகித்தனர். கங்கையை விட்டுவிட்டனர். தேவர்களும் ஆகாச கங்கை ஜலத்தில் அதிக ஆதரவு காட்டவில்லை.

பாண்ட்யதேச-தாம்ரபர்ணீ-கதம்பவன-ஸுந்தரேசலிங்க-சூல புஷ்கரிணீ மஹிமை. இது வரை வர்ணிக்கப்பட்டது.

❀ 1வது லீலை - இந்த்ரனின் வ்ருத்ரஹத்யா பாபத்தைப் போக்கியது ❀

ஒரு ஸமயம் இந்த்ரன் மற்ற ஏழு திக்பாலர்களுடன் கூட தேவஸபை ஸுதர்மாவில், ஒவ்வொரு க்ஷணமும் வளர்ந்து கொண்டே இருக்கிற - ஜயிக்க முடியாத - சத்ரு வ்ருத்ரா ஸுரனை ஜயிப்பதற்காக மந்த்ராலோசனை செய்தான். "நமது சதுரங்க ஸேனையும் வ்ருத்ரன் அருகில் கூடச் செல்ல முடியாது. நமது கைகளும் தன் வசமின்றியே அஞ்ஜலி பந்தம் செய்வதைத் தான் கற்றுக்கொண்டுள்ளன. நமது கைபலமும் அவனிடம் செல்லாது. அனைத்து தேவர்களையும் அவன் ஜயித்துவிட்டதால் தேவாஸ்த்ரங்கள் அவனை எதுவும் செய்ய முடியாது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆஸுரங்களான அஸ்த்ரங்களோ அதிக பலசாலியான அஸுரகுலத் தலைவனான அவனிடம் சென்று திரும்பிவந்து நம் மேலேயே விழுந்து வதைக்கும். ஆகையால் நேர்வழியில் சண்டையிட்டு அவனை வெல்ல முடியாது. வஞ்சனையாகத்தான் இந்த ஆபத்தைக் கடக்கவேண்டும். 'கபடயுத்தம் செய்தால் தேவர்களாக இருக்க முடியாது. அஸுரர்களாக ஆகிவிடுவோம்' என்று நீங்கள் நினைக்கலாம். இப்படி உதைபட்டு மிகவும் நிந்தனையடைந்து தேவர்களாக இருப்பதைவிட அஸுரர்களாக இருப்பது விரும்பத்தக்கது. இப்போது அவன் ஸமுத்ர நடுவில் ஒரு தீவில் கவலையின்றி ஸமாதிநிலையில் தபஸ்புரிகிறான். உங்களுக்கு இது பிடித்திருந்தால் இப்போது சென்றால் அவனை ஸுகமாக ஜயித்து விடலாம்' என்று சொன்னான்.

இப்படி தேவநாயகன் சொன்னதும் திக்பாலர்கள் ஸந்தோஷத்துடன் அனுக்ஞையளித்தனர். கெட்ட மார்க்கத்தில் செல்வதில் ப்ரஜைகளுக்கு இயல்பாகவே ருசி உண்டு. தலைவனும் அதே மாதிரியானவன் கிடைத்துவிட்டால் கேட்பானேன்? உடனே இந்த்ரன், வ்ருத்ராஸுரன் தபஸ் செய்யுமிடத்துக்குச் சென்று பரம ஸமாதி நிலையிலிருந்த அவனை வஜ்ராயுதத்தால் அடித்து வீழ்த்தினான். பாபத்தைப் பற்றிச் சிறிதும் நினைத்துப் பார்க்காமல், 'செய்ய வேண்டியதைச் செய்தாகி விட்டது' என்று இந்த்ரன் திரும்பிவரும்போது விகாரமான உடலுடன் தலைவிரி கோலமாக வ்ருத்ரஹத்யா பாபம் பின் தொடர்ந்தது. மறுபடியும் தேவஸபைக்கு வந்த இந்த்ரன், ஸ்துதி செய்யும் தேவர்களை அனுப்பிவிட்டு, இந்த்ராணியிடம் செல்ல நினைத்தபோது கூடவே வ்ருத்ர ஹத்யாதோஷமும் நுழைவதைப் பார்த்தான். உடனே வஜ்ராயுதத்தை எரிந்து விட்டு கேசங்களை விரித்துக்கொண்டு, ஆப்தர்களுடன் கலந்து என்ன செய்வது என்று ஆலோசனை செய்யாமலே ஓட ஆரம்பித்தான். யுத்தத்தில் யாரும் எதிர்க்க முடியாமல் ஸாஹஸம் புரியக்கூடியவன், வ்ருத்ரஹத்யைக்குப் பயந்து ஓட வேண்டியிருந்தது. யார் யார் இந்த துர்மார்க்கத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆதரித்தார்களோ, யார் யார் அடியிலிருந்தே சொல்லிக் கொடுத்தார்களோ, அவர்களே இப்போது இந்த்ரனைப் பரிஹாஸம் பண்ணினர். தலைவனிடத்தில் இப்படி நடந்து கொள்வதுதான் ப்ரஜைகளின் இயல்பு.

ஒரு காட்டிலிருந்து இன்னொரு காட்டுக்கு, மலைகளிலிருந்து வேறு மலைகளுக்கு, ஒரு ஸமுத்ரத்திலிருந்து இன்னொரு ஸமுத்ரத்துக்கு, முடிவாக ஒரு லோகத்திலிருந்து இன்னொரு லோகத்துக்கு - இப்படியாக எங்கு ஓடினாலும், ஹத்யா தோஷம் விடவேயில்லை - எவ்வளவு ஜன்மம் எடுத்தாலும் ஜீவனைவிட்டுப் பிரியாமல் புத்தியும் கூடவே வருவதுபோல், தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. இந்த்ரன் ஏதோ ஒரு ஸரஸ்ஸில் ஒரு தாமரையின் தண்டிலிலுள்ள நூலில் ஒளிந்து கொண்டான்.

நூற்றுக்கணக்காக ஸப்ததந்துகள் = யாகங்கள் (இன்னொரு பொருள் - ஏழு நூல்கள்) செய்த இந்த்ரனுக்கு இப்போது ஏதோ ஒரு தந்து (=நூல்) தான் பிடிப்பாக இருந்தது.

இது தான் ஸமயமென்று நஹுஷன் என்ற அரசன் இந்த்ர பதவியை அடைய விரும்பினான். தலைவனின்மை என்கிற துக்கத்தில் மூழ்கியிருந்த தேவர்கள் நஹுஷனை இந்த்ரனாக ஏற்றார்கள். இந்த்ர பதவியை அளிக்கும் அச்வமேதங்களை முறைப்படி செய்யாமல் ஏதோ புண்யத்தால் தேவலோகமடைந்த நஹுஷன் தமோ குணம் மிக்கதான தன் ஸ்வபாவத்தை விடவில்லை. இவன் பூமியை ஆளும்போது இவனுக்கு விரோதியாக இருந்த அரசர்களின் தேசங்களில் 'மழை பொழியாதீர்கள்' என்று மேகங்களுக்கு உத்தரவிட்டான். ''ப்ரஜைகள் வாழ்வதற்காக நான் தான் மழைபொழிகிறேன். என்னைக் குறித்துத்தான் யாகம் செய்யவேண்டும். மனுஷ்யர்களுக்கு இந்த தேவர்களெல்லாம் யார்? (=மனுஷ்யர்களுக்காக இவர்கள் என்ன செய்கிறார்கள்?)'' என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எல்லா தேவர்களும் ஹவிர்பாகம் பெறுவதை ஆக்ஷேபித்தான். அந்த மூடன் ஹவிஸைத் தேவர்களுக்குச் சேர்ப்பிக்கும் அக்னிக்கும் ''யக்ஞத்தில் அளிக்கப்படும் ஹவிஸ் முழுவதையும் என்னிடம் தெரிவி. நான் எடுத்துக் கொண்டது போக மீதியை மட்டும் அந்தந்த தேவர்களுக்குக் கொடு'' என்று உத்தர விட்டான். 'கங்கை ஜலம் விழுந்து நிரம்பிய ஸமுத்ரத்திலிருந்து தான் பல அத்புதமான பொருள்கள் உண்டாயின. கங்கை ஜலத்தில் இன்னும் என்ன அத்புதமான வஸ்துகள் உள்ளன? என்று பார்க்க வேண்டும்' என்று கங்கை ஜலம் முழுவதையும் வாரி இரைத்தான். பழைய தேவர்களை நம்பவில்லை. பூமியிலிருந்து தேவலோகம் வந்த தன் கூட்டத்தாரை - அதிலும் பலமுறை பரீக்ஷித்துப் பார்த்துப்பார்த்து ''தன்னைச் சேர்ந்தவன்'' என்று தீர்மானிக்கப்பட்டவர்களையே மூலபலமாகச் செய்து கொண்டான். ''குதிரைகள், யானைகள் நிறைய வேண்டும். கல்பவ்ருக்ஷங்களைக் கேளுங்கள். தரவில்லையானால் அவற்றை வெட்டி வீழ்த்துங்கள்'' என்று சிறிதும் சங்கையின்றி தோட்டக்காரர்களுக்கு உத்தரவிட்டான். பூமியில் அரசனாக இருந்த போது இவனால் உபாஸிக்கப்பட்டும் பலன் தராதிருந்த தேவர்களை இருமடங்கு மும்மடங்காக தயையற்ற அஸுரர்களைக் கொண்டே தண்டித்தான். தன் வம்சத்து மூல புருஷன் சந்த்ரன், ஒவ்வொருமாஸமும் க்ருஷ்ண பக்ஷத்தில் நாளுக்கொரு கலையாகத் தேவர்களால் உண்ணப்படுவதைக் கண்டு வருந்தி இனி அப்படி நடக்காதபடி - சந்த்ரனைக் காப்பாற்றும்படி சுக்லபக்ஷ முடிவிலேயே வேலைக்காரர்களை ஏவினான். அஸுரர்களுள், இந்த்ரனுக்கு விரோதியாயிருந்த வர்கள் இவனுக்கு நண்பராயினர். இந்த்ரன் பேச்சை எடுப்பவரிடம் கூட கோபத்தால் இவன் அக்னிபோல் ஜ்வலித்தான். அந்த மூர்க்கன், உடல் முழுதும் இமைகொட்டாத ஆயிரங்கண்களை வைத்துக் கொண்டு படுப்பதற்கோ புரள்வதற்கோ பயந்தவனாக ''தேவர்களெல்லாம் என் கண்களைப் பங்கு பிரித்து எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்தரவிட்டான். (கவியின் உத்ப்ரேக்ஷா நயம் ரஸிக்கத்தக்கது) தேவர்கள் அவனை "அச்வ மேதத்தில் உன்னால் கொல்லப்பட்ட ம்ருகங்கள், பக்ஷிகள், பாம்புகள், மனுஷ்யர்கள் எல்லாம் இங்கு வந்தடைந்து உன்னைக் கொல்வதற்காக ஸஞ்சரித்துக் கொண்டுள்ளார்கள்" என்று பயமுறுத்தினர். 'இவள் தான் இந்த்ராணி' என்று யாரோ ஒரு தாஸியைக் காட்டி அம்மூடனை ஏமாற்றினர். ப்ரஜைகளுக்குப் பிடிக்காதவன் தலைவனாக அதிகாரம் செலுத்த முடியுமா?

மஹர்ஷிகளைப் பல்லக்குத் தூக்கச் செய்து அதில் ஏறிச் செல்லும்போது 'ஸர்ப்ப ஸர்ப்ப' (= நட, நட) என்று அகஸ்த்யரை விரட்டினான். 'ஸர்ப்பமாகவே நீ ஆகக்கடவாய்' என்று அகஸ்த்யர் அவனைச் சபித்துவிட்டார். ஸ்வர்கபோகம் பூர்த்தி ஆவதற்குள்ளேயே சாபமாகிற இடி அவன் தலையில் விழுந்ததால் அவன் 'போகி'யாகவே பூமியில் விழுந்தான். போகி=போகமுள்ளவன். போகம்=ஸுகானுபவம், இன்னொரு பொருள் ஸர்ப்பத்தின் தேஹம். போகி என்றால் ஸுகமனுபவிப்பவனுக்கும், பாம்பிற்கும் பெயர். பாம்பாக விழுந்தான் என்பதை போகம் முடிவதற்குள் விழுந்ததால் மீதியுள்ள போகத்துடனேயே விழுந்தான் என்று 'போகி' பதத்தை ப்ரயோகித்து சமத்காரமாய்க் கூறியுள்ளார்.

நீண்டகாலமாக இந்த்ரனைப்பற்றிய பேச்சே ஒய்ந்து போய், புதிதாக இந்த்ர பதவிக்கு வந்தவனும் நஷ்டமானபின் தேவகுரு யோக த்ருஷ்டியால் பார்த்தார். தாமரைத்தண்டு நூலில் மறைந்துள்ள இந்த்ரனிடம் யோகபலத்தால் யாருமறியாமல் வந்து கருணைமிகுந்த வார்த்தைகளால் அவன் செய்ய வேண்டியதை உபதேசித்தார். "இப்படிப் பயந்து கொண்டு, தேவர்களுக்கும் வருத்தமளித்துக் கொண்டு எவ்வளவு காலந்தான் ஸரஸில் ஒளிந்து கொண்டிருப்பாய். அதற்குரிய பரிஹாரம் தேடாவிட்டால் ப்ரளயம் வந்த பிறகும் கூட பாபம் உன்னை விடாது. எல்லாப் பாபங்களையும் போக்கும் ஸமாதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலையிலுள்ளவனைக் கொல்வதைவிடக் கொடிய பாபம் கிடையாது. அனைத்து ஸம்ஸாரிகளுக்கும் அடைக்கலமாக வுள்ள மஹேசனின் திருவடி ஸேவையைத்தவிர வேறு வழியால் இப்பாபத்தைப் போக்க இயலவே இயலாது. பூமியில் பாசுபதவ்ரதத்தை மேற்கொண்டு சிவஸ்தலங்களைக் குறித்துச் செல். சிவனுடைய ஆக்ஞைப்படி உன்னை இந்தப்பாபம் ஒன்றும் செய்யாது. தொடர்ந்து வருவதோடு ஸரி. வேறொன்றும் செய்ய முடியாது; எந்த சிவஸ்தலத்தில் நுழையும்போதே, அம்ருதத்தில் நனைத்து சுத்தப்படுத்தப்பட்டாற்போல் உன்னுடைய அந்தராத்மா தெளிவடைகிறதோ அந்த ஸ்தலத்தில் கருணைக் கடலான மஹேசன் உன் பாபத்தைப் போக்குவார்'' என்று உபதேசித்தார் - தேவகுரு ப்ருஹஸ்பதி.

இந்த்ரனும் குருவின் கட்டளையைக் கொண்டாடி அப்படியேயென்று ஏற்றுக்கொண்டான். ப்ருஹஸ்பதியும் அவனுக்கு 'ஸ்வஸ்தி' கூறினார். ஐராவதத்தில் ஏறி ஈசனின் பலவித ஆலயங்களைக் குறித்துச் சென்றான். பாசுபத வ்ரதத்தோடு, ஹிமயம், மந்தரம் முதலிய மலைகளுக்கும், கங்கை, யமுனை முதலிய நதிகளுக்கும், நைமிசம் முதலிய வனங்களுக்கும் சென்றான். தபோவனம் கண்ணில் பட்டதிலெல்லாம் வஸித்தான். தீர்த்தம் பார்த்ததிலெல்லாம் ஸ்நானம் செய்தான். ப்ராம்மணர்களைப் பார்த்த போதெல்லாம் தனக் குவியல் அளித்து அவர்களை மகிழ்வித்தான். தெரிந்த வ்ரதமெல்லாம் நியமத்துடன் அனுஷ்டித்தான். சம்புவினுடைய மூன்றுவித லிங்கங்களையும் மானஸிக பூஜையாலும் வெளி உபகரணங்கொண்ட பூஜையாலும் ஆராதித்தான். எங்கும் எதிலிருந்தும் பாபசாந்தி ஏற்படவில்லை. பஹுவாகத் தபஸ் செய்து கொண்டே, பாபம் தொடர்கிறதே என்று வருந்திக் கொண்டே, ஸம்ஸார பந்தத்தைப் போக்கும் காற்றுவீசுகிற கதம்ப வனத்தை நெருங்கினான். ஸுந்தரேசரின் சிரஸிலுள்ள

1 இந்த்ரனுக்கு மருத்வான் என்று பெயர். மருத்துகளை = காற்றுகளை உடையவன் என்று பொருள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்பலபுஷ்பத்தின் நறுமணத்தைக் கவர்ந்து கொண்டு இந்த்ரனைச் சேர்ந்தவையான 1 காற்றுகள் நீண்டகாலத்துக்குப் பிறகு அதிதியாக வருகிற ஸ்வாமியை எதிர்கொள்வதுபோல் வீசின. கதம்பவனத்து மகரந்தப் பொடிகள் சிவகங்கை ஜலத் திவிலைகளும் சேர்ந்து காற்றுவழியாக வந்து மேலே பட்டதும் தேவேந்த்ரன் சொல்ல முடியாத ஸௌக்யத்தை அடைந்தான். மனம் தெளிந்தது. கண்கள் தெளிந்தன. பலமேற்பட்டது. வீர்யமேற்பட்டது. இப்படி அவன் நெருங்க நெருங்க, பாபம் தூர தூர விலகியது. அந்த நிமித்தங்களால் மிகவும் மனம் மகிழ்ந்து குருவின் வாக்யத்தை நினைத்துக் கொண்டு 'மூவுலகிலும் இது தான் பரமேசனின் மேலான ஸ்தானம்' என்ற முடிவுக்கு வந்தான். உடனே யானையை விட்டிறங்கிப் பரிசுத்தமாக அந்தப் பாபம் ஒன்றைத்தவிர மற்ற எல்லாருடனும் அந்தக் கதம்ப வனத்தில் நுழைந்தான். அங்கு வெய்யிலில் வாடும் கீரிகளுக்குப் பாம்புகள் தங்கள் படங்களால் குடைபிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். செந்நாயின் தித்திப்பல்லில் பெண்மான் கண்ணைச் சொறிந்து கொண்டிருந்தது. ஒரு மரத்தில் படர்ந்திருந்த கொடி, வேடர்கள் வேடிக்கையாக இழுத்துப் பார்த்தபோது இன்னொரு மரத்தின் ஸ்பர்சம் ஏற்பட்டுவிடுமே என்று பயந்து தன் துளிர்களைச் சுருக்கிக் கொண்டது. எல்லாவற்றையும் பார்த்தான். வழியிலேயே இந்த்ரனைப் பார்த்த ப்ரமத கணங்கள் - பாசுபத-மஹர்ஷிகள் தபஸால் மிக நிர்மலமாகியிருந்த இவனை ஸுந்தரேச ஸமீபத்துக்கு அழைத்துச் சென்றனர். எண்ணிப் பார்க்கமுடியாத - மூவுலகிலும் இதுவரை காணப்படாத - கேட்கப்படாத திவ்யமான இந்த லிங்கத்துக்கு முதல் காணிக்கை யாக இந்த்ரன், மலர்ந்தவையான கண்களாகிய உத்பலப் புஷ்பங்களை வாரி இரைத்தான். 1000 கண்களாலும் ஆவலுடன் பார்த்தான்.

காலிலிருந்து நெற்றிவரை எல்லாக் கண்களும் சொரிந்த ஆனந்தக் கண்ணீரால் இந்த்ரன் தேஹமே பக்தியால் உருகி ஜலமயமாகிவிட்டது போலிருந்தது. தண்டம் போல் விழுந்து வணங்கினான். எங்கும் கண்மயமான அவன் தேஹம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பூஜோபஹாரமாக (= காணிக்கையாக) ஸமர்ப்பிக்கப்பட்ட மலர்ந்த இந்தீவரபுஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மாலை போல் காட்சியளித்தது. இந்திரன் கணங்களுடனும் வ்ருஷபத்துடனும் நந்திகேசருடனும் புத்ரர்களுடனும் அம்பிகையுடனும் சேர்த்து ஈசனைப் பூஜிக்க விரும்பினான். எல்லா மஹான்களின் விருப்பமும் அதுவேதான். இந்த்ரன் நினைத்த மாத்ரத்தில் தேவசிற்பி விச்வகர்மா வந்து நாயகனின் ஆக்ஞையைத் தலைமேல் வஹித்து ஸுந்தரேசலிங்கத்துக்கு ஆலயம் அமைக்க ஆரம்பித்தான். சுபலக்னத்தில் விசாலமான - யானைகளால் தாங்கப்படுகிற - கிழக்கே த்வாரமுள்ள வானளாவிய விமான ரூபமான கர்ப்ப க்ருஹம் அமைத்தான். லோகக்ஷேமத்துக்காக மூன்று வாசலுள்ள மணிமண்டபத்துடன் மிக அழகிய அர்தமண்டபமும் அமைத்தான். பரிவார தேவதைகளின் ப்ரதிமைகள், அவைகள் ஸ்தாபிப்பதற்கான பலவிதமான ஸ்தானங்கள் எல்லாம் நிர்மாணித்து சுற்றிச் சுற்றி 5 ப்ராகார மதில்கள் - உயரமான கோபுரங்களுடன் எழுப்பினான். சூலபுஷ்கரிணியின் மேல்கரையில் சுபமான இடத்தில் ரத்ன வேலைப்பாடுகள் நிறைந்ததாக மீனாக்ஷிக்கும் கணேசருக்கும் ஆலயம் அமைத்தான். இன்னும பலவித மண்டபங்களையும் விசாலமான உத்ஸவ வீதிகளையும் இந்த்ரனின் ப்ரபுத்வம், பக்தி, விவேகம், ஸாமர்த்யம் எல்லாவற்றிற்கும் தகுந்தவையா யிருக்கும்படி மிகச்சிறப்பாக அமைத்தான்.

❀ மீனாக்ஷி விக்ரஹம் ❀

ப்ரஹஸத்^{3}வத^{3}னம் ப்ரஸன்னநேத்ரம் / த்^{3}விபு^{4}ஜந் த^{3}க்ஷிணதோ
த்^{4}ரு^{1}தோத்பலஞ்ச^{1}। கரகோபலவத்^{3} க^{4}னீப^{4}வந்த்யா /
த^{3}யயேவாக்ரு^{1}த விக்^{3}ரஹம் ஸ தே^{3}வ்யா: ॥

அந்த விச்வகர்மா சிரிக்கிற முகத்தையுடையதும் ப்ரஸன்னமான கண்களை உடையதும் இரு கைகளை உடையதும் வலப்புறத்தில் நீலோத்பலத்தை வைத்துக் கொண்டிருப்பதுமான தேவியின் விக்ரஹத்தை மழை ஜலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆலங்கட்டியாக கெட்டிப்படுவதுபோல் கெட்டியாக ஆனதான தயையைக் கொண்டே செய்வது போல் செய்தான். (தயையே உருவெடுத்து அம்பாள் மீனாக்ஷியாக ஆகியிருக்கிறது போலிருந்தது). ஸுந்தரேசலிங்கம் தயாமயமாக கதம்ப மரத்தடியில் இருப்பது வேதங்களுக்கே தெரியாது என்று முதலில் பக். (15) சொன்னார். தயையே உருவெடுத்தது என்று அம்பாளைச் சொல்கிறார்.

ஸ்வரூபமேதத் தவ ஸுந்த³ரேச / சுத்³த⁴ா த³யேத்யேவ து லக்ஷயாம: । கத³ம்ப³ மூலந் து தடஸ்த² லக்ஷ்ம /
காருண்யஸிந்தே⁴ா தவ தர்க்கயாம: ॥

'ஹே ஸுந்தரேசனே, சுத்தமான தயைதான் உனது ஸ்வரூபம். கதம்ப மரத்தடி தடஸ்த லக்ஷணமாகும். ஹே கருணைக்கடலே' என்று கடைசியிலும் - சொன்னதையே நினைவூட்டுவதற்காக 64 லீலைகளையும் சுருக்கிச் சொல்கையில் பக் (206) குறிப்பிடுகிறார்.

மரக்கிளையிலிருக்கிறது சந்திரன் என்று சொன்னால் சந்த்ரனில் ஸம்பந்தப்படாத கிளையைப் பார்த்தாலே சந்திரன் அறியப்படும். அதுபோல் காட்டும் லக்ஷணம் தடஸ்த லக்ஷணம். கதம்பவ்ருக்ஷ மூலத்திற்குச் சென்றால், பரமாத்மாவை தர்சிக்கலாம்.

விச்வகர்மா முறைப்படி நிர்மாணித்த மிக அழகிய அவ்விக்ரஹத்தில் தானே ப்ரவேசிக்க விரும்பினாள் அம்பாள். இந்த்ரனின் ப்ரார்த்தனை, குருவின் ஆவஹனம் இவற்றால் பதியின் அனுமதியுடன் ப்ரவேசித்தாள்.

முன்பு 'உடலெங்கும் இவ்வளவு கண்கள் மிக அதிகமாக உள்ளனவே' என்று வருந்திய இந்த்ரன் இப்போது விச்வகர்மாவின் வேலைப்பாட்டின் நேர்த்தியைப் பார்த்துவிட்டு, பார்க்க 'இவ்வளவு கண்கள் போதுமா? போதாதே' என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருந்தினான். இந்த்ரன் தேவிக்கு சிவனின் தென்பாகத்தில் ஸ்தானம் கல்பித்தது, அன்னை எப்போதும் ஈசனது இடப் பாகத்தில் இருந்து கொண்டு ஈசனின் வலப்பாகத்தைக் காண விரும்புகிறாள் என்று இங்கிதமறிந்து செய்தது போலிருந்தது.

தன்னிடமிருந்து தோன்றிய ஸகல ஜகத்தையும் அன்னையின் கண்ணே போஷிப்பதால், இந்த்ரகுரு ப்ருஹஸ்பதி, அன்னைக்கு மீனாக்ஷி எனப் பெயர் வைத்தார். மீன், தன் குஞ்சுகளைக் கண்ணால் பார்த்தே பரிபாலிக்கும். அதனால் மீன் கண்ணைப்போல (தன் குழந்தைகளான அனைத்து ஜகத்தி னரையும் போஷிக்கும்) கண்ணுள்ளவள் என்று பெயர் வைத்தார்.

இந்த்ரன் தேவலோகத்திலிருந்து தங்கத் தாமரைகளை வரவழைத்து ஈசனைப் பூஜிக்க நினைத்தான். வாயுவை அனுப்பினான். தான் சூலபுஷ்கரிணியில் ஸ்நானம் செய்தான். நித்யகர்மாவை முடித்துக் கொண்டு, தங்கத் தாமரைப் புஷ்பங்களை எதிர்பார்த்து சிறிது நேரம் பூஜை ஆரம்பிக்காமல் காத்திருந்தபோது சூலபுஷ்கரிணியிலேயே நறுமணம் மிகுந்த தங்கத்தாமரைகள் உதித்தன. ஆச்சர்யமடைந்து புஷ்கரிணிக்குப் 'பொற்றாமரை' என்று பெயர் வைத்துப் புஷ்பங்களைத் தானே பறித்துவந்தான். பரிசுத்தமாக்கும் புஷ்கரிணி ஜலங்களாலும் நறுமணம் மிக்க அத்தாமரைகளாலும் குருபதேசப்படி மீனாக்ஷி ஸுந்தரேசர்களைப் பூஜித்து நமஸ்காரங்கள் செய்து மகிழ்வித்தான்.

தழுதழுத்தக் குரலுடன் ஆனந்த பாஷ்பங்களுடனும் பரபரப்புடனும் வாக்குக்கு எட்டாத மீனாக்ஷிஸுந்தரேசர்களை வாக்கினால் அர்ச்சித்தான். "உலகில் உமது ஆலயம் அழகானது. அதைவிட லிங்கம் அழகானது, 'ஸுந்தரேசர்' என்ற உமது பெயரும் அழகுக்கெல்லாம் அழகானது, சொல்வதற்கு அம்ருதம் போன்றது. மந்தரமலையிலும் ஹிமயமலையிலும் மேரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குஹையிலும் உம்மை ஸேவித்திருக்கிறேன். (ஒரு இடத்திலும் இவ்வளவு அழகாக இல்லை.) விச்வபாரநகரம் ஒன்றுமட்டும் எனக்குத் தெரியாது. அங்கு இம்மாதிரி இருப்பீரோ என்று எனது ஸந்தேஹம். (ஸம்ஸாரத்துக்கு அப்பாற்பட்டது விச்வபாரம்.) யக்ஞங்களாலும் ஜபங்களாலும் ஹோமங்கள் - தானங்களாலும் பலவித தவங்களாலும் கிடைத்தற்கரியதான - உமது ஸன்னிதியிலிருக்கும் பாக்யம் இந்த மரங்களுக்குக் கிடைத்துள்ளது. அஸுரர்களை வதைத்தாயிற்று. மூவுலகையும் ஜயித்தாயிற்று, ஸ்வர்கத்துக்கு அதிபதியாய் இருந்தாய்விட்டது. இவற்றால் என்ன பயன். இங்குள்ள ம்ருகங்கள் - பக்ஷிகளுக்கு ஹாரத்தி எடுத்துக்கூட முக்தியடைய யோக்யதை இல்லை எனக்கு. முக்தியடைந்து தான் செய்யப்போவது என்ன? உங்களது சிவானந்தத்தை அப்போது அடைவேன். நாயகனான உம்மைக் கண்டதால் ஏற்பட்ட இந்த ஆனந்தத்தைவிட முக்தி ஆனந்தம் உயர்ந்ததா என்ன? / ஹே மீனாக்ஷி! சிவனுடன் சேர்ந்தேயிருக்கும் போது உன்னோடு பேசமுடியாது என்று சிறிது தனியாக்குகிறேன் - இந்த அபராதத்தை மனஸில் கொள்ளாதே. கிரிராஜனின் குமாரியாயிருந்தும் (= அரச குமாரியாயிருந்தும்) காடுகளிலும், மலைகளிலும் தன்னை அனுஸரித்து வருகிறாள் என்று மகிழ்ந்து கதம்பப்ரியையான உன்னை அனுஸரிப்பதற்காக சிவன் கதம்ப மூலத்தில் வஸிக்கிறார். ஜகத்து முழுவதற்கும் ஜகதீச்வரனுக்கும் சோபையளிப்பவளாய் நீ எங்கும் பரிபூர்ணமாயிருக்கிறாய். இருந்தாலும் கருணாமயமான இந்த ரூபத்தை விட்டுச் செல்ல மனம் வரவில்லை. இந்த மஹாவனத்தில் 'ஹரிகள்' இதோ இருக்கின்றன. இந்த்ர வ்ருக்ஷம் இதோ இருக்கிறது. இந்த்ரவல்லியும் இதோ இருக்கிறது. என் பெயர்கொண்ட இவை இங்கே இருப்பதை என் ஸேவையாக ஏற்றுக்கொள். [ஹரி என்று இந்த்ரனுக்கும் பெயர். இன்னும் யமன், வாயு, சந்த்ரன், ஸூர்யன், விஷ்ணு இவர்களுக்கும் பெயர். கிரணத்துக்கும் பெயர். (வாயு முதலியவருக்கும் கிரணத்துக்கும் பெயர் என்பது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்கு தேவையில்லை) குதிரை, கிளி, பாம்பு, குரங்கு, தவளை இவற்றிற்கும் பெயர். 'ஹரிகள் இதோ இருக்கின்றன' என்று இந்த்ரன் குறிப்பிட்டது குதிரை முதலியவற்றைத்தான்.] ஹே மீனாக்ஷி! உனது கடைக்கண் பார்வையால் எவ்வளவோ ப்ரம்மாக்கள், இந்த்ரர்கள் உண்டாவார்கள். நான் ஒருவன் இல்லாவிட்டால் தேவலோகம் கீழே நழுவி விழுந்துவிடுமா என்ன? தீனனான என்னை உனது கிங்கரர்களுக்குள் (= வேலையாட்களுக்குள்) சேர்த்துக் கொள். எனக்கு அஸுரர்களிடமிருந்த பொறாமை போய்விட்டது. தேவலோக போகத்தில் ஆசை ஓய்ந்துவிட்டது. உங்கள் அருள்திவிலையால் வ்ருத்ரஹத்யாதோஷமும் வெளியிலேயே தடைபட்டு நின்றுவிட்டது.'' - இவ்வாறு வணங்கித் துதித்தான். பக்திமான்களுள் முதல்வனான இந்த்ரனை, தயை அலைமோதும் கடைக்கண் பார்வையால் அனுக்ரஹித்து ஆதியுவர்கள் (= மீனாக்ஷிஸுந்தரேசர்) இருவரும் அவனைப் பார்த்து ''நீதான் ப்ரமத கணங்களுள் முதல்வன். இந்த இருகுமாரர்களைக் காட்டிலும் மூன்றாவதான குமாரன். உனது சிறந்த பக்தியை அறிவோம். உனது வ்ருத்ரஹத்யா தோஷம் விரட்டி ஒட்டப்பட்டது. இதேபோல் ஒவ்வொரு வருஷத்திலும் வஸந்தகால முதல் பூர்ணிமையில், கூட வருபவர் அனைவருடனும் வந்து இந்தப் பொற்றாமரைப் பூக்களால் எங்களை அர்ச்சிப்பாயாக.'' என்றனர்.

ஜகத்துக்கே முதலான தம்பதிகள் இப்படிக் கூறியதும், இந்த்ரன், ப்ருஹஸ்பதி, இந்த்ரனைப் பின்தொடர்ந்து வரும் மற்றவர்கள் எல்லாரும், புறப்படுவதற்காகத் திரும்பத்திரும்பச் செய்த நமஸ்கார பரம்பரைகளால் அந்த - உமாமஹேசர்களை ஒருவரைவிட ஒருவர் அதிக தயையுள்ளவராகச் செய்தனர்.

ஆமந்த்ர்ய த்^{3}விரதே^{3}ந்த்^{3}ர-வக்த்ர மஸக்ரு^{1}த் ஸம்ப்ரார்த்த்^{2}ய
நந்தீ^{3}ச்வரம் / ஸம்மான்ய ப்ரமதா^{2}ன் நிவேத்^{3}ய ஸகலம்
ச^{1}ண்டே^{3}ச்வரம் சாம்பவம்। ஆசீர்பி^{4}: ப்ரதிநந்தி^{3}தோ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முனி க^{3}ணை ராப்ரு^{1}ச்^{1}ச்^{2}ய வாச^{1}ஸ்பதிம் /
தி^{3}வ்யேன த்^{3}விரதே^{3}ன நிர்மலதரோ தே^{3}வ: ப்ரதஸ்தே^{2} புரீம் ॥

கஜானனனிடம் விடைபெற்றுக்கொண்டு, நந்திகேச்வரரை அடிக்கடி ப்ரார்த்தித்து, ப்ரமதர்களை கௌரவித்து, சம்புவைச் சேர்ந்தவரான சண்டேச்வரரிடம் எல்லாவற்றையுந் தெரிவித்து, முனிஜனங்களால் ஆசீர்வதித்துக் கொண்டாடப்பட்டவனாக ப்ருஹஸ்பதியிடமும் விடைபெற்றுக் கொண்டு மிகவும் நிர்மலமான இந்த்ரன் தேவலோகயானை ஐராவதத்திலமர்ந்து தன் புரிக்குப் புறப்பட்டான்.

❀ 2-வது லீலை - ஐராவதத்தின் சாபந் தீர்த்தல் ❀

இந்த்ரன் திரும்பிச் சென்றபின் ஒரு மன்வந்தரம் முடிந்தபிறகு தேவலோகத்தில் இன்னொரு இந்த்ரன் ஆட்சிக்கு வந்தான். ஒரு ஸமயம் அவன் ஐராவதத்திலேறி, எல்லா தேவர்களும் சூழ லீலையாக நகரைவிட்டு வெளியில் வந்தான். எல்லா ஸித்திகளுக்கும் இருப்பிடமான துர்வாஸரைத் தற்செயலாக அவன் ஸந்திக்க நேர்ந்தது. அந்த துர்வாஸரின் கோபாக்னி நன்கு ஜ்வலிக்குமேயானால் ஜகத்து முழுவதுமே அதில் ஒரே ஆஹுதியாகி பஸ்மமாய்விடும். ருத்ரனுக்குத்தான் ஜகத் முழுவதையும் ஸம்ஹரிப்பதற்கு அதிகாரமுண்டு என்ற கட்டுப்பாட்டைக் காப்பதற்காகத்தான் அவருடைய கோபாக்னி ஜ்வலிப்பதில்லை, தேவர்களைக் குறித்து யாகம் செய்ய அவர் அக்னிஹோத்ரசாலையை அடைந்தால் கூப்பிடப்படாமலே வந்தவர்களாக, ஆவாஹனக்ஷணத்திலேயே தேவர்கள் தாங்களே 'இதோ இருக்கிறேன்' என்று தன்னைக் காட்டிக் கொள்வார்கள். அவரிடம் பயந்துகொண்டு அவருடைய ஹோமாக்னி அணைந்து போவதேயில்லை; ஹோமம் பண்ணப்பட்ட ஹவிஸ்ஸை வெளியில் சிந்தவிடுவதேயில்லை, க்ஷீணிப்ப தில்லை, அரணி கடையும்போது உண்டாவதற்கு நேரங்கடத்துவ தில்லை. ஸூர்யன் போல் தபித்தார். அக்னிபோல் ஜ்வலித்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அங்கிருந்த தேவர்கள் அவரைக் கண்டதுமே நடுங்கினர். அவர் இந்த்ரன் யானைமீது இருந்தபோதிலும் ராஜா என்ற கௌரவத்தால் இருகைகளாலும் சிவப்ரஸாதமான தாமரைப் பூவை அவனுக்கு அளித்தார். அவன் மோஹத்தால் அதைப் பொருட்படுத்தாமல் யானையின் மஸ்தகத்தில் வைத்தான். அதுவும் அதன் இயல்புப்படி தும்பிக்கையால் அதை எடுத்துக் கசக்கிவிட்டது. உடனே துர்வாஸர் புருவங்களை நெறித்து கபிலநிறமான கண்களைச் சிறிது சுழற்றி, உதடுகள் துடிக்க கோபத்தால் ஜ்வலிப்பவர் போல் ஆகிவிட்டார். ஸூர்யன் அசையவில்லை. காற்று ஸ்தம்பித்து விட்டது. ஸமுத்ரங்களுடன் சேர்ந்த பூமி ஆடிற்று. ஆகாசமும் வலியுற்றது. அவர் கோரமான சாபத்தை யானைக்கும் யானையிலமர்ந்த இந்த்ரனுக்கும் கொடுத்தார். வஜ்ரந் தரித்த இந்த்ரனையே அடிக்கும் வஜ்ரமாகவும் நிரங்குசமான (= அடக்குவாரற்ற) யானைக்கு அங்குசமாகவும் சாபமிட்டார். 'மதத்தால் குருடான (= செய்ய வேண்டியதறியாத) இந்த இந்த்ரனுடைய மௌளியை (=தலையை)ப் பாண்டியன் பிளப்பான். இந்த யானையும் பூமியை அடைந்து அற்பமான யானையைப் போல் ஸஞ்சரிக்கட்டும்' என்றார்.

சாபங்கொடுத்தபிறகு எரிபொருள் தீர்ந்து விட்டபிறகு அடங்கும் நெருப்பு போலத் தானாகவே சாந்தியடைய ஆரம்பித்த இவரை தேவர்கள் பன்முறை நமஸ்காரம் செய்து ஸமாதானப்படுத்தினர். தேவர்களின் பரபரப்பு, மனவருத்தம், அவலநிலை, ஸ்தம்பித்துப் போதல், நமஸ்காரங்கள், ஸமாதானவார்த்தை இவைகளால் தெளிவடைய ஆரம்பித்த அவர், 'பாண்டியன் இந்த்ரனுடைய தலையைப் பிளக்க வேண்டாம். மௌளி என்றே பெயர் கொண்ட கிரீடத்தைப் பிளக்கட்டும். (மௌளி என்ற பதம் தலையென்றுங் கிரீடமென்றும் இருபொருளுடையது) ஐராவதத்துக்குக் கொடுத்த சாபமும் அது ஸுந்தரேசரை அர்ச்சித்தவுடன் நீங்கட்டும்' என்று அனுக்ரஹித்தார். [கிரீடப்பிளப்பு. பக் (113)ல்]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மஹேந்த்ரன் அருகிலேயே வஸித்துப் பழகிய ஐராவதம் மஹேந்த்ர மலையில் பிறப்படைந்தது. மத கந்தத்தால் மற்ற யானைகளை ஓடச் செய்யும் சிறந்த யானைகள், இந்த ஐராவதம் குட்டியாயிருக்கும் போதே, இதனுடைய காதசைப்புக் காற்றுப் பட்டே தூர ஓடின. அது சிங்கங்களை எல்லாம் துதிக்கையால் வாரிப் புல்லுக்கட்டைப் போல் தூர எறிந்தது. பெரும் முதலைகளையெல்லாம் தவளைகளைப் போல் காலாலேயே நசுக்கி அரைத்தது. ''முதலைகள் விழுங்குகின்றன. சிங்கங்கள் கொல்லுகின்றன, மனிதர்கள் பிடித்துவிடுகிறார்கள்.' என்று மற்ற யானைக் குட்டிகள் சொல்வதை இது வியப்புடன் கேட்டது. நதி - ஓடைகளை துதிக்கையால் ஒருமுறை உறிஞ்சி இது குடித்த ஜலந்தான் மதஜலம் என்ற பெயரில் ஓயாமல் வழிந்து கொண்டிருந்ததென நினைக்கிறேன். ஆடுகளைப் போல மற்ற யானைகளைத் தூக்கித் தூக்கி எறிந்தது. ஸமுத்ரஜலத்தை ஆகாச கங்கையை நோக்கி இரைத்து நீண்டகாலமாய்ப் பிரிந்த தம்பதிகளைத் தயவினால் சேர்த்து வைத்தது. இதைக் கண்டு வேடர்கள், புலிகள், சிங்கங்கள் எல்லாம் ஓடிவிடவே, அழிப்பவர்களை விரட்டி, ம்ருகங்களை ரக்ஷித்ததால் இதுவே ம்ருகராஜன் ஆயிற்று. இது மஹேந்த்ர மலையிலிருந்து மலயமலைக்கும் மலயமலையிலிருந்து தர்துர மலைக்கும் ஸஞ்சரித்துக் கொண்டு ஒரு ஸமயம் கதம்பவனத்தை அடைந்தது. அவ்வனத்திலிருந்து இதன் மத கந்தத்துக்கு ஆசைப்பட்டு வந்த வண்டுகளால் வழி காட்டப்பட்டது போல பொற்றாமரை ஸரஸை அடைந்தது. அங்கு கணேசருடைய மத கந்தத்தின் ஸாரமறிந்த வண்டுகள் இதன் மத கந்தத்தைப் புறக்கணித்தன. அது மந்தர மலை பாற்கடலில் விழுந்தது போல் பொற்றாமரை ஸரஸ்ஸில் விழுந்து கதம்பங்காட்டை அலைகளால் முழுகச் செய்தது. அழுக்கடைந்ததாய் மூழ்கிற்று. நிர்மலமாய் வெளியேறிற்று. முன்பு வெறும் 'பௌமம்'மாய் (= பூமியிலுள்ளதாய்) இருந்தது. இப்போது யானைகளுக்கு ஸார்வ பௌமமாக (= சக்ரவர்த்தியாக) ஆயிற்று. கரையேறி உள்ளும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புறமும் மாசற்றதாய் அந்த சாபத்தைத் தாண்டியது. துர்வாஸரின் வார்த்தையை நினைத்துக் கொண்டது. சிவகங்கையிலுள்ள தங்கத்தாமரைகளால் நாலு தந்தங்கொண்ட இந்த யானை ஏகதந்தயானையை (= கணபதியை)ப் பூஜித்தது.

புஷ்கரைரபி[4] ஷிச்யேசௌ / புஷ்கரோபஹ்ரு[1]தைரயம் ।
புஷ்கரைரேவ ச[1]ானர்ச்[1]ச[1] / புஷ்கரங்க[3]ாஹிதும் புன: ॥

[1]புஷ்கரத்தால் (உறிஞ்சிக்) கொண்டுவரப்பட்ட [2]புஷ்கரங்களால் மீனாக்ஷி ஸுந்தரேச்வரர்களுக்கு அபிஷேகம் செய்து [3]புஷ்கரங்களாலேயே அர்ச்சனை செய்தது - [4]புஷ்கரத்தை மறுபடியும் அடைவதற்காக. 1=தும்பிக்கை நுனி, 2=ஜலம், 3=தாமரை, 4=ஆகாசம். நான்கு பொருளிலும் ப்ரயோகித் திருக்கிறார்.

வெளுப்பான காஞ்சன புஷ்பம் (= ஊமத்தம் பூ) சிவனுக்கு மட்டும் ப்ரீதிகரமாயிருந்தது. இது கொண்டுவந்து அர்ச்சித்த மஞ்சளான காஞ்சன புஷ்பம் (= தங்கத்தாமரை) சிவைக்கும், சிவனுக்கும் இருவருக்கும் ப்ரீதியளித்தது. சாபம் விடுபட்ட அந்த கஜம் ஸந்தோஷத்தால் பூமியை தந்தத்தால் கீறித் தோண்டிய இடம் 'கஜதீர்த்தம்' என்று ப்ரஸித்திபெற்ற பெரும் ஸரஸாக ஆயிற்று. அந்த ஐராவதம் அந்த ஸரஸின் கரையில் ஐராவதேச்வர லிங்கத்தையும் ஐராவத கணபதியையும் ஸ்தாபித்துப் பூஜித்தது. ஸுந்தரேசருக்குக் கிழக்கில் தனது ஸ்வாமியின் பெயரால் புரந்தரேச்வரர் (= இந்த்ரேச்வரர்) என்ற இன்னொரு லிங்கத்தையும் ஸ்தாபித்தது. அங்கு நீண்ட காலம் வஸித்துப் பிறகு ஸுந்தரேசரால் அனுப்பப்பட்டு, இந்த்ரனாலும் ஆதரிக்கப்பட்டுத் தன் ஸ்தானத்தை அடைந்தது.

[அடுத்த லீலையில் அஸ்தமன வர்ணனை வருகிறது. இந்த லீலையில் 'புஷ்கர' சப்தப்ரயோகம் போல் அதில் த்[3]விஜசப்தப்ரயோகம் இருக்கிறது. அதுவும் அது போன்ற மூகபஞ்சசதி ப்ரயோகமும் இங்கேயே எழுதப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

த்^{3}விஜ: = பல், ப்ராம்மணன், பக்ஷி. த்^{3}விஜராஜ: = ப்ராம்மணர்களுக்கு ராஜா சந்திரன், பக்ஷிராஜா கருடன்.

த்^{3}விஜராஜ-சிரோமணோர் பி^{4}த^{3}ாம் / த்^{3}விஜராஜத்^{4}வஜ
சாலினச்^{5}ச^{1} ய:। கலயேன் மனஸாபி பாத்யதே(அ)- /
ந்தகப்^{4}ரு^{1}த்யை: க^{2}லு தத்^{3}த்^{3}விஜாவளி:॥

த்விஜராஜனை (=சந்திரனை) சிரஸில் ஆபரணமணியாகத் தரித்த சிவனுக்கும் (=சந்திரசேகரனுக்கும்) த்விஜராஜனை (=கருடனை) த்வஜமாக உடைய விஷ்ணுவிற்கும் (=கருடத்வஜ னுக்கும்) எவனொருவன் மனஸால் கூட வேற்றுமை கற்பிக்கிறானோ அவனுடைய த்விஜவரிசை (= பல் வரிசை) யமகிங்கரர்களால் உடைத்துத் தள்ளப்படுகிறது. என்று ஒரு ச்லோகம் த்விஜ சப்தத்தை மூன்று தடவை முறையே மூன்று பொருளிலும் உபயோகப்படுத்தி எழுதப்பட்டது ஒரு கவியால்.

ப்ராம்மணன், பக்ஷி என்ற இருபொருள்படும்படி ஸ்ரீ தீக்ஷிதர் அழகாக வர்ணித்திருக்கிறார் - ஸூர்ய - அஸ்தமன கால வர்ணனையில்

ப்ரசு^{1}க்ருசுர் த்^{3}விஜா: கேசி^{1}த^{3}பரே மௌனமாஸ்தி^{2}தா:।
அஸங்க^{4}ாதோ த்^{3}விஜானாமித்யாஸீத் தத்^{2}யந் தத^{3}ா வச^{1}:॥

கேசித்^{3} த்^{3}விஜா: = சில பக்ஷிகள். ப்ரசு^{1}க்ருசு: = கூச்சலிட்டன. அபரே (த்^{3}விஜா:) = மற்ற பக்ஷிகள். மௌனமாஸ்தி^{2}தா: = மௌனமாயிருந்தன. த்விஜ - ஒற்றுமை கிடையாதென்கிற வார்த்தை உண்மைதான் என்பது அப்போது நன்கு புரிந்தது.

'த்^{3}விஜர்கள் = ப்ராம்மணர்கள் எந்தச் செயலிலும் ஒன்று சேர்ந்து ஏகமனமுடையவராய் ஈடுபடுவதில்லை. சிலர் இதைச் செய்ய வேண்டுமென்பர், சிலர் செய்யக்கூடாது என்பர். சிலர் இப்படிச் செய்ய வேண்டுமென்பர், சிலர் அப்படிச் செய்ய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டுமென்பர்' என்ற உண்மையை த்^{3}விஜங்களின் ஒன்றுக் கொன்று நேர்மாறுதலான செயல்களைக்கொண்டு அழகாகத் தெரிவிக்கிறார். முதலில் முளைத்த பற்கள் விழுந்து இரண்டாம் முறை முளைப்பதால் அவை த^{3}விஜங்களாகும் = இரு முறை உண்டானவையாகும். ப்ராம்மணர் - க்ஷத்ரியர் - வைச்யர், பிறந்து, உரியகாலத்தில் உபநயனம் செய்விக்கப்படும்போது மறுபிறப் பெய்தியதாகக் கருதப்படுகின்றனர். அது குரு உண்டுபண்ணுகிற வித்யா ஜன்மம். எனவே இவர்களும் த்^{3}விஜர்களாவர். பக்ஷி, பல்லி, பாம்பு, மீன் முதலியவை முட்டையாக முதலில் வெளிவந்து அது உடைந்து மறுபடியும் வெளிவருவதால் அவையும் த்விஜங்களாகும். த^{3}ந்தவிப்ராண்ட^{3}ஜா: த்^{3}விஜா: । விப்ர: = ப்ராம்மணர். அண்டம் = முட்டை. அதிலிருந்து உண்டாவது அண்ட^{3}ஜம்.

மூக பஞ்சசதீ பாதாரவிந்த சதகம் 20-வது ஸ்லோகம், ஸ்ரீ காமாக்ஷியின் சரணமானது அவளது உதடுபோலிருக்கிறதென்று வர்ணிக்கிறது. 'ஸத்^{3}வ்ரு^{1}த்தருசிரை: ஸமைர் ஜுஷ்டம் சுத்^{3}தை^{4}ரத^{4}ரமிவ ரம்யைர் த்^{3}விஜக^{3}ணை: ।' ஸத்^{3}வ்ரு^{1}த்தத்தால் (=நன்னடத்தையால்) அழகானவர்களும் ஸமமானவர்களும் (=ஸமதர்சனமுடையவர்களும், சுத்தமானவர்களும் (= பாபமற்ற வர்களும்) ஸுந்தரமானவர்களுமான த்^{3}விஜர்களின் (=ப்ராம்மணர்களின்) கணங்களால் (= ஸமூஹங்களால்) அடையப்பட்டதாயிருக்கிறது, ஸ்ரீ காமாக்ஷியின் சரணம். அவளது உதடும் ஸத்^{3}வ்ருத்த (= நல்ல வடிவமைப்பால்) அழகானவைகளும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஒரே சீராக ஸமமாய் இருப்பவைகளும் சுத்தமானவைகளும் (= அழுக்கற்ற வைகளும்), ஸுந்தரமானவைகளுமான த்விஜங்களின் (=பற்களின்) கணங்களால் அடையப்பட்டதாயிருக்கிறது.

மந்தஸ்மித சதகம் 76. தேவியின் மந்தஸ்மிதம் (= புன் சிரிப்பானது) த்^{3}விஜராஜன் தன்னைப் பார்த்துக் கோபமடை யும்படி இருந்தபோதிலும் எப்போதும் த்^{3}விஜச் சேர்க்கை உள்ளதாயிருக்கிறது. த்^{3}விஜராஜன் (= ப்ராம்மணர்களின் ராஜா =

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சந்திரன்), தன்னைப்போல் தேவியின் மந்தஹாஸமும் தெளிவானதாகவும் வெண்மை காந்தி வீசுவதாகவும் ஆனந்தமளிப்பதாகவும் (=தனக்குப் போட்டியாக) இருப்பதால் அதைப் பார்த்துக் கோபப்படுவதாய் கவியின் உத்ப்ரேக்ஷை, த்^{3}விஜராஜனைக் கோபப்படுத்தும் மந்தஹாஸம் த்^{3}விஜச் சேர்க்கையுள்ளதாயிருக்கிறது. எப்போதுமே மந்த ஹாஸத்தின் போது பற்கள் தெரிகின்றன.]

இனி சிவலீலார்ணவத்தைத் தொடர்வோம்.

※ 3-வது லீலை - காடு திருத்தி மதுரைநகர நிர்மாணம் ※

விச்வகர்மாவைக் கொண்டு இந்திரன் நிர்மாணித்த மீனாக்ஷிஸுந்தரேசாலயம் அடர்ந்த காட்டால் மூடப்பட்டிருந்தது. மதுரையை அடுத்த கல்யாண நகரத்தைச் சேர்ந்தவன் - பரம பக்தனான ஒரு வைச்யன் ஒரு ஸமயம், பல இடங்களுக்குச் சென்று திரும்பி வருகையில் தன் கூட்டத்தாரை விட்டுப் பிரிந்துவிட்டான். அன்று ஸோமவாரம். ஸூர்யாஸ்தமன நேரம் நெருங்கிவிட்டது. / ஸூர்யன் அஸ்தமனம் அடையப் போவதையறிந்த அவனது அனுசரங்களான கிரணங்கள் பின்னுக்குப் பின்னுக்கு தயங்கின. முன்பு அவன் எழுச்சி யடையும்போது - உயர்நிலையிலிருக்கும்போது முன்னுக்கு முன்னுக்கு ஓடி வந்தவையான அதே கிரணங்கள் தான் இப்போது பின் வாங்குகின்றன. (உலக இயல்பு வர்ணனை).

ஸூர்ய ஒளியில் ஸந்தோஷமாயிருக்கிற - ராத்ரி வந்தவுடன் - இருட்டில் தவிக்கிற தன்மையுடைய சக்ரவாகபக்ஷிகள், வரப்போகும் இரவை நிந்தித்தன. சந்திர ஒளியைப் பருகும் சகோர பக்ஷிகள் இரவைக் கொண்டாடி வரவேற்றன. இருவகைப் பக்ஷிகளும் இப்படி ஸாயங்காலத்தில் மூக்கால் மூக்கைக் கொத்தி சண்டையிட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேற்கு திக்கில் ஸூர்யனுடைய ராகம் - சிவப்பு நிறம் (இன்னொரு பொருள் அனுராகம் = ஆசை) காணப்பட்டது. அது எவ்வளவு நேரம் இருக்கப்போகிறது? முன்பு கிழக்குத் திக்கில் பார்க்கப்பட்டது தானே இது? எப்போதும் ப்ரமித்துக் கொண்டே இருக்கிற - சுற்றிக் கொண்டேயிருக்கும் (இன்னொரு பொருள் - இவள் சிறந்தவள் அவள் சிறந்தவள் என்று மோஹங் கொண்டுள்ள) ஸூர்யன் ஒரு இடத்தில் நிலையான ராகம் காட்டமாட்டான்.

ஒரு ஒளிராசி மறைந்துவிட்டான். மிக நிறைய நக்ஷத்ரங்கள் உதித்தன. இருள் கவிழ்ந்த உலகில் அவ்வளவும் சேர்ந்து என்ன செய்தன?

ஸூர்யனுடைய கிரணங்கள்தான் நக்ஷத்ர உருவில் இருந்தன. இருந்தும் அவன் ஒருவன் இல்லையென்பதால் இருட்டுகள் தலை தூக்கின. / தன் ஜாதியைச் சேர்ந்த தாமரைப் பூக்களெல்லாம் ஸூர்ய ஒளி படாமல் கூம்பும்போது ஸூர்யன் கையிலுள்ள தாமரையும் தன் ஜாதியை அனுஸரித்துக் கூம்பியது. (இருகைகளிலும் தாமரை வைத்திருப்பதாய் ஸூர்யத்யான ச்லோகத்திலுள்ளது.) கவியின் சமத்காரமிது.

சிறிது நேரத்தில் எங்கும் கும்பிருட்டு சூழ்ந்தது.

ஒரு பக்தன் இருட்டில் வழி தெரியாமல் ஸோமவார உபவாஸத்தாலும் களைப்படைந்து சிவானுக்ரஹத்தால் வாத்யங்களுடன் கந்தர்வர்களின் கான த்வனியைக் கேட்டு அது வந்தவழியே வந்து ஸுந்தரேசர் ஸந்நிதியையடைந்து, திவ்ய சக்ஷுஸை அடைந்து, தேவர்கள், ரிஷிகள் எல்லாரும் த்யானம் - ஸாமகானம் - அபிஷேகம் - அர்ச்சனம் செய்வதையும் சிவகணங்கள் நர்த்தனம் செய்வதையும் அப்ஸரஸ்ஸுகள் நர்த்தனம் செய்வதையும், கின்னரர்கள் பாடுவதையும் கண்டு தானும் எல்லாருடனும் சேர்ந்து மகிழ்வுடன் பூஜித்தான். விடியற்காலம் ஜனஸஞ்சாரம் ஏற்படும்போது, இரவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவர்கள் - ரிஷிகள் இருந்த இடத்தில் மரங்களையும் ம்ருகங்களையும் தான் பார்த்தான். இந்த அத்புதக் காக்ஷியால் அம்ருத பாரணம் ஆய்விட்டது. வ்ரதாங்கமான பாரணம் பண்ண பக்கத்திலுள்ள ஊரை அடைந்தான். பந்துக்களுடன் மறுபடியும் சேர்ந்து, களைப்பாறிவிட்டு அந்த தேசத்தை முறையாக ஆண்டுவந்த குலசேகர பாண்டியனிடம் இரவில் கண்ட அத்புதத்தைச் சொன்னான்.

ஸுந்தரேசரும், அரசன் ஸ்வப்னத்தில் சந்திரகலையுடன் கூடிய ஜடையை உடைய ஒரு புருஷனாகத் தோன்றி, நகருக்கு மேற்கில் அடப்பங்காட்டில் மிருகக்கூட்டங்களுடன் பஹு காலமாகத் தாம் வஸிப்பதை அறிவித்து காட்டை நகரமாக்கி அதிலேயே அவனையும் வஸிக்கும்படி ஆக்ஞாபித்தார். குலசேகர பாண்டியனும் அவ்வாறே காட்டைத் திருத்த ஆட்களை நியமித்தான்.

ஸூர்யசந்த்ர கிரணம் நுழையமுடியாமல் அடர்ந்திருந்த காடு, வெட்டப்பட்டு வெளிச்சம் வந்ததும், சக்ரவாகபக்ஷிகள் ப்ரம்மசர்யத்தை விட்டுவிட்டன. சகோர பக்ஷிகள் துர்பிக்ஷத்தை விட்டுவிட்டன. (சக்ரவாகபக்ஷிகள் பகல் வெளிச்சத்தில் முழுவதும் ஜோடி சேர்ந்திருக்கும், இரவில் ஒன்றுக்கு அருகிலேயே ஒன்று இருப்பது தெரியாமல் அழுகைக் குரல் கிளப்பும். சகோரபக்ஷிகள் நிலாவைத்தான் பருகும்.)

அக்காட்டில் ஸஞ்சரிக்கும் ஜந்துக்கள் முன்பு வனசரங்களாய் - காட்டில் ஸஞ்சரிப்பவைகளாயிருந்தன. இப்போது அரசனின் ஆணையால் வெட்டப்பட்ட அக்காடே வனசரமாகிவிட்டது. (வனசரம் = முன்பு வனமாயிருந்தது. இப்போது வனமில்லை என்று கிடைக்கிறது. பூர்வம் அனுபூ4தம் = அனுபூ^{4}தச^{1}ரம். இப்படியே பூர்வந் த்^{3}ரு^{1}ஷ்டம் = த்^{3}ரு^{1}ஷ்டச^{1}ரம். இதேபோல் பூர்வம் வனம் = வனச^{1}ரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உள் இருட்டான அஜ்ஞானத்தையே போக்கும் ஈசன், காட்டின் அடர்த்தியால் ஏற்பட்ட வெளியிருட்டைப் பொறுப்பாரா? இவ்விருட்டு இவ்வளவு காலம் சிவனருகில் இருந்ததே பெரிய லாபம்.

அரசனின் ஆட்கள் புலிகளைப் பிடித்துப் பிடித்து நல்ல தோல்களாக எடுத்து எடுத்து ஈசனின் வஸ்த்ரதாரித்ர்யத்தைப் போக்கினர். = புலித் தோலுடுத்துபவருக்கு உடை நிறையக் கிடைக்கும்படி செய்தனர். / எல்லா ஜந்துக்களுக்கும் ப்ரளயம் வரும்போது யானைகள் மட்டும் கொல்லப்படாமல் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டன. ஸ்வரூபம் அழகாக இருந்தால் எல்லாமே நல்ல காலந்தான்.

ஆயிரக்கணக்கான ஸாலங்களை வெட்டி வானளாவும் ஒரு ஸாலம் செய்தனர். அநேகம் அற்பர்களால் யாதுபயன்? மிக உயர்ந்தவனான ஒருவனே ச்லாக்யம், ஸாலங்களை = மராமர மரங்களை. ஒரு ஸாலம் = ப்ராகார மதில்.

மிக அழகாக நகரம் நிர்மாணிக்கப்பட்டது. ஸுந்தரேசர் அதே புருஷ ரூபத்தில் சில்பியாகவும் வந்து செய்யும் முறை அறிவித்தார். ஈசனின் ஆலயத்துக்கு ஈசான திக்கில் அரண்மனை அமைந்தது. இந்திரன் மூன்று நாள் தொடர்ந்து மதுரமான ஜலம் வர்ஷித்தான். இதனால் இந்நகருக்கு 'மதுரை' என்று பெயர் என அசரீரி வாக்கு உதித்தது.

துர்கா, கணபதி, வடுக பைரவர், மாத்ருகணங்கள் அவரவர் ஸ்தானத்தில் ப்ரதிஷ்டிக்கப்பட்டபின், உடனே மஹேசனுக்கு உத்ஸவம் சிறப்பாக நடத்திப் பிறகு மகிழ்ச்சியுடன் குலசேகரபாண்டியன் நகரப்ரவேசம் செய்தான். மீனாக்ஷி ஸுந்தரேச்வரர்களை ஆத்மாநாத்ம விவேகத்தால் ஆராதித்துக் கொண்டு வித்வான்களைப் பூஜித்துக் கொண்டு மஹான்களை ஸேவித்துக் கொண்டு யாசகர்களுக்கு வாரிவழங்கிக் கொண்டு வேலையாட்களிடம் கருணையுடன் எல்லாரும் இன்புறும்படி மதுரையை ஆண்டுவந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ 4வது லீலை – தேவியைத் தடாதகையாக அவதரிக்கச் செய்தது ❀

ஸுந்தரேசரின் அனுக்ரஹத்தால் குலசேகர பாண்டியன் மலயத்வஜன் என்கிற குழந்தையை அடைந்தான். படிப்படியாக வளர்ந்த மலயத்வஜன், மண்விளையாட்டில் எங்கும் சிவன் கோவில்களையும் ப்ராம்மணர் வஸிக்கும் ஊர்களையும் கட்டி மகிழ்ந்தான். பின்னால் ஜகன் மாதாவையே (=மீனாக்ஷியையே) குழந்தையாக அடைந்து, ஜகத்துக்கே மாதாமஹன் ஆகப்போவதற்கு ஏற்றபடி அவன் விளையாட்டு இருந்தது. புரோஹிதர் அகஸ்தியர் உபநயனம் செய்தார். அவரிடம் வேதங்களைக் கற்றுக் கொண்டான். தந்தையிடம் தனுர்வேதம் கற்றான். (யாரும் கற்பிக்காமலே) ஸ்வபாவமாகவே பார்வதி பரமேச்வரர்களிடம் அசையாத பக்தி அவனுக்கு இருந்தது. முன் ஜன்மத்தில் விச்வாவஸு என்ற கந்தர்வனின் பெண்ணாயிருந்து, கௌரியைக் குறித்து தபஸ் செய்து, ஜகன்மாதாவிற்கே மாதாவாகும் பாக்யத்தை வரமாகப் பெற்று அதற்காக காஞ்சி மன்னனின் பெண்ணாக காஞ்சனமாலிகை என்ற பெயருடன் பிறந்த உத்தமியை மனைவியாகப் பெற்றான்.

இப்படி ஸுகமாக இருக்கும் விநீதனான பிள்ளையிடம் குலசேகரன் ஒரு நாள் ராஜ்யபாரத்தை ஒப்புவித்து, புத்ரவாத்ஸல்யத்தால், தர்ம மார்க்கத்திலேயே இருப்பவனுக்குத் தானும் தர்மோபதேசம் செய்தான் – "போக்கிரிகளிடம் ஏமாறாதே. ஸாதுக்களை துஷ்டர்களாகவும் துஷ்டர்களை ஸாதுக்களாகவும் காட்ட அவர்கள் முயற்சிப்பார்கள். அவர்களது வார்த்தையில் மயங்கினவன் போலவே நடித்து அவர்களை ஒடுக்கு. ப்ரஜைகளிடம் உக்ரமாக இருக்காதே. மிக ம்ருதுவாகவு மிருக்காதே. பரீக்ஷிக்கப்பட்ட–லோபமற்ற– கர்வமற்ற–ஹிதமான ஆத்மஜ்ஞர்களை மந்திரிகளாய்க் கொண்டு அவர்கள் சொற்படி நடந்து கொள். உன்னைப்போல் நிறையக் கற்றவன் – தீர்க்கதரிசி வேறுயாருமில்லை. இருந்தாலும் நீயும் ஸாதுக்களான மந்திரிகள் சொற்படி கேட்கவேண்டும். நீ, சத்ருவற்றவன், எல்லா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறிந்தவன், மக்களின் அன்பைப் பெற்றவன், புத்திமான், குருக்கள் - பெரியவர்களை ஸேவிப்பவன். உனக்கு எதுவும் என்னால் உபதேசிக்கப்பட வேண்டியதில்லை. இருந்தாலும் ஏதோ நான் பலரிடம் கேட்டதைச் சொன்னேன். என் மனஸில் ஒரு எண்ணமுள்ளது. அதைச் சொல்கிறேன். நன்கு மனஸில் கொள். ஒரு போதும் மறக்காதே. பரமேச்வரனால், தனது மகுடாலங்காரமான சந்திரனின் வம்சத்திலுதித்தவர்களான நம்மிடம் இந்த மஹத்தான ஸம்பத்து வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து, ஒருபோதும் இது என்னுடையதென்று நினைக்காதே. சிவத்ரவ்யத்தை எடுத்து எப்படி தேவர்களுக்கு யாகம், அக்னியில் ஹோமம், ப்ராம்மணர்களுக்கு தானம் செய்வது? என்று சிந்தித்து எல்லாச் செயல்களாலும் சிவனையே ஆராதிப்பாயாக.

சிவம் யஜாக்^{3}னௌ சிவமர்ச்^{1}ச^{1} ப^{4}ாஸ்கரே / சிவம் ஸ்மராந்த: சிவமேவ கீர்த்தய। சிவந் த்^{3}விஜேஷு ப்ரதிபூஜயானிசம் / சிவைகநிஷ்டே^{2}ா ப^{4}வ தாத ஸர்வத^{2}ா॥

குழந்தாய்! அக்னியிலும் சிவனை பூஜி. ஸூர்யனிலும் சிவனை அர்ச்சி. சிவனை உள்ளுக்குள் ஸ்மரித்துக் கொள். சிவனையே கீர்த்தனம் பண்ணு. எப்போதும் ப்ராம்மணர் களிடத்திலும் சிவனைப் பூஜை செய். எவ்விதத்திலும் சிவன் ஒருவரிடமே நிலைத்து நிற்பவனாய் இரு.

சிவனிலுமுயர்ந்தவர் கிடையாது. சிவனும் நமக்கு ஸ்ரீ ஸுந்தரேசரைத் தவிர வேறில்லை, என்று நிச்சயமாக ஸுந்தரேசரைப் பற்றிக்கொண்டு நெடுங்காலம் ஸுகமாய் ராஜ்ய பாலனம் செய்வாயாக'' என்று உபதேசித்தான்.

இப்படி உபதேசித்து ஆசீர்வதித்துவிட்டு, குலசேகர பாண்டியன் யோகமார்க்கமாக பரமபதமடைந்துவிட்டான். மலயத்வஜன் அகஸ்த்யரால் சுப முஹூர்த்தத்தில் ஸுந்தரேசர் ஸந்நிதியில் விபூதிரக்ஷை இடப்பட்டான். மந்த்ரிவ்ருத்தர் களாலும் நண்பர்களாலும் பந்துக்களாலும் ரக்ஷை இடப்பட்டான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லிங்கத்தின் சிரஸிலிருந்து புஷ்பம் தானாக எதிரில் விழுந்ததை - தீபத்திலிருந்து கிளம்பிய பொரிகளை வணங்கிப் பெற்றுக் கொண்டான். மஹரிஷிகள் நல்ல சகுனமென்று கொண்டாடி னார்கள். ஊரை வலம் வந்து ஆரத்தி எடுக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட அரண்மனையில் ப்ரவேசித்து ப்ராம்மணர் களுக்கு நிறைய தானம் செய்தான். மந்திரிகளால் ஸிம்மாஸனத்தில் அமர்த்தப்பட்டான். அவன் ராஜ்யத்தில் மழை உதவி இல்லாமலே பூமி விளைந்தது. இருந்தாலும் யாகங்களில் ஹவிர்பாகம் பெற்றுக் கொண்டதற்குப் பதிலாக அவ்வப்போது இந்திரன் மழை பொழிந்தான். அரசன் மனம் சிவாராதனத்தை விட்டு வேறுவிஷயத்தில் ஈடுபடவில்லை. வெளிக்கரணங்களால் மட்டுமே மற்ற வேலைகளைச் செய்தான். தந்தையின் கடைசி உபதேசத்தை இறுகப்பிடித்துக் கொண்டான். சிவனை ஆராதிப்பதாகவே செயலனைத்தையும் கருதினான்.

ம்ரு^{1}க^3ாங்கசூ^{1}ட^3ாமணி மீனலோச^{1}னம் / த^{3}யாமயந் த^{3}ர்சித-
ஸுந்த^{3}ரஸ்மிதம் । உத^3ார பூ^{4}ஷாசதமுத்பலாங்கிதம் /
வபுஸ் ததே^{3}வாஸ்ய மனஸ்யவர்த்தத ॥

சிரஸில் சந்திரகலை, மீன் போன்ற கண் - அழகிய மந்தஸ்மிதம். அநேக உயர்ந்த ஆபரணங்கள், கையில் நீலோத்பலம் உடையதான அம்பிகையின் தயாமயமான வடிவே எப்போதும் அவன் மனஸில் இருந்தது.

ஜடம் (=அறிவற்றது), அஜடம் (=அறிவுள்ளது) ஆன எல்லா ஜகத்தையுமே அவன் எப்போதும் நீலோத்பல மேந்திய-உன்னத ஸ்தனமுள்ள - சிரித்தமுகமுள்ள - ஹாரகிரீடங்களால் அலங்கரிக்கப்பட்ட அம்பிகையாகவே பார்த்தான்.

தர்மார்த்தகாமங்களை உரிய காலத்தில், ஒன்றினால் ஒன்றுக்கு ஹானி வராமல் ஸேவித்துக் கொண்டு, ராஜ்ய பாரத்தை, இமைத்தல் - மூச்சுவிடுதல் போல் ப்ரயத்னமின்றியே நிர்வஹித்துக் கொண்டு எப்போதும் சிவ த்யானம் செய்துவரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மலயத்வஜன், அந்தப்புரத்தில் காஞ்சனமாலையிடம் ஒரு நாள் தன் கலக்கத்தைத் தெரிவித்தான். 'இந்த மஹத்தான சந்திரவம்சம் என்னோடு நின்றுவிடும் போலிருக்கிறதே. சிவதீக்ஷையால் நிர்மலமான நமது குலத்தில் பித்ருக்கள் பிள்ளையிடமிருந்து தர்ப்பணத்தை விரும்புவதில்லை. (=பிள்ளை செய்யும் தர்ப்பணம் முதலியதால் தான் கரையேறவேண்டுமென்ற நிலை சிவபக்தர்களுக்குக் கிடையாது). இருந்தாலும் தொடர்ந்து சிவனை ஆராதிப்பவரை உண்டு பண்ணிவரும் வ்ரதம் நடுவில் என்னால் லோபிக்கக்கூடாது என்பதற்காகக் கவலைப் படுகிறேன்.

சிவார்ப்பிதாசேஷப[4]ரா நிராசிஷ: / சிவார்ச்[1]ச[1]னாமாத்ர-பத[3]ாதி[4]காரிண: । கத[2]ந் நு யாசே[1]மஹி லோகமாதரங் கத[2]ந் ந யாசே[1]மஹி வா குலக்ஷயே ॥

எல்லாப்பொறுப்பையும் சிவனிடம் ஒப்படைத்து எந்தவித ப்ரார்த்தனையுமின்றி சிவனைப் பூஜிப்பதில் மாத்ரம் அதிகாரமுடையவராயிருக்கும் நாம் இப்போது (தன் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் யாசிக்காமலே ஹிதத்தைக் கருணையுடன் செய்யும்) லோகமாதாவை புத்ர பாக்யத்திற்காக எப்படி யாசிப்போம்? குலமே க்ஷீணிக்கும் ஸமயத்தில் யாசிக்காமல் தான் எப்படி இருப்போம்?' என்று சொன்னான்.

இப்படியாகத், தான் ஒரு முடிவுக்கு வராமல் திகைத்து வருந்தும் மலயத்வஜனைப் பார்த்துப் பதிவ்ரதையான காஞ்சனமாலை மனமகிழ்வூட்டும் வார்த்தைகளைச் சொன்னாள் – 'வித்வான்களுக்கெல்லாம் ஸந்தேஹம் வரும்போது தீர்வு காண்பது தாங்கள் தான். தங்களது ஸந்தேஹத்தை வேறு யார் தீர்ப்பது? ஸாக்ஷாத் மீனாக்ஷியோ, அவள் போன்ற அவளது பக்தரோ தான் இது விஷயத்தில் பதில் சொல்லவேண்டும். ஆகையால் முக்காலமுமறிந்த – தேஜோநிதியான நமது குலகுரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகஸ்த்யரைக் கேட்டு அவர் சொல்படி நடப்போம்' என்று சொன்னாள்.

ப்ரியையின் இனிமையான வார்த்தையைக் கேட்டு உடனே மனஸால் குலபுரோஹிதர் அகஸ்த்யரை சரண மடைந்தான். நினைத்த மாத்திரத்தில் அவரும் வந்து சேர்ந்தார். அர்க்ய பாத்யாதிகளால் உபசரித்து ஆஸனத்தில் அமர்த்தி அவர் ஆஜ்ஞைப்படி அருகில் அமர்ந்தனர் தம்பதிகள். கை கூப்பிக்கொண்டிருக்கும் இருவரையும் கருணா த்ருஷ்டியால் அனுக்ரஹித்துக் கொண்டு அகஸ்தியர், - 'இது மஹத்தான சிவயோகி குலம். ஸாமான்ய ஜனங்கள் இதில் பிறக்கமுடியாது. குலத்திற்கும் கல்விக்கும் சீலத்துக்கும் தக்கபடி எண்ணுகிறாய். பஹுகாலமாய் மறைத்து வைத்திருந்த ரஹஸ்யத்தை உனக்கு உபதேசிக்க வேண்டியதைச் சொல்கிறேன் - பகவத் த்யானத்தால் நிர்மலமான மனஸால் க்ரஹித்துக் கொள். சுபகாலம் வந்துவிட்டது. உன் பத்னி இந்த காஞ்சனமாலிகை பஹு காலம் மீனாக்ஷியை உபாஸித்து, மற்றவராலடைய முடியாத - ஜகன் மாதாவிற்கே மாதாவாகும் - வரத்தைப் பெற்றாள். தான் பூமியில் அவதரிப்பதற்காக அம்பிகையாலேயே இவளுக்கு நீ பதியாகக் கற்பிக்கப்பட்டாய். ஜ்யோதி ஸ்வரூபிணியான தேவி எப்படி அவதரிப்பாள் என்பதைத் தான் சிந்திக்கவேண்டும். யாகாதிகள் செய்பவர்களுக்கு அக்னிமூலமாக எல்லா மனோரதங்களையும் அளிக்கும் தேவி, யாகாக்னியிலிருந்தே உதிக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது' என்று கூறினார்.

அவர் அப்படிச் சொன்னதும் தேவதுந்துபிகள் யாரும் வாசிக்காமலே தானே முழங்கின. மலயத்வஜனுக்கு வலது கண்ணும் காஞ்சனமாலிகைக்கு இடது கண்ணும் துடித்தன. இருவரும் அகஸ்த்யரை வலம் வந்து வணங்கினர். மயிர்க் கூச்சலுடன் மகிழ்ச்சியால் தடைப்பட்ட வார்த்தைகளால் அரசன், - 'சிதானந்தமயீயான ஜகன்மாதா எங்கே? அற்பமான நாங்கள் எங்கே? தங்களுடைய பாதஸேவையின் மஹிமை தான் இது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நான் தங்களது குழந்தை, தங்களுடைய தாஸன், தங்களுடைய ஸொத்து. எப்படி அனுக்ரஹிக்கிறீர்களோ அப்படியே நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்.' என்று கூறினான்.

இப்படித் தன்னை சரணமடைந்த மலயத்வஜனை, முன்பே அவன் நூறு அச்வமேதம் செய்திருந்த போதிலும், தேவியைப் புத்திரியாகப் பெறும் அதிகாரம் ஸித்திப்பதற்காக மறுபடியும் அச்வமேதம் செய்யும்படி ஆஜ்ஞாபித்தார் அகஸ்த்யர்.

யாகாரம்ப ஸமயத்தில் திரும்ப வருவதாகக் கூறித் தனது ஆச்ரமத்துக்குச் சென்றுவிட்டார். அச்வமேதத்துக்கு வேண்டிய வற்றைச் சேர்ப்பது மூலமாகவும் சிவனை ஆராதித்தான் மலயத்வஜன். உயர்ந்த குதிரையாகக் கொண்டுவந்தனர். பக்தர்கள் தனக்கு அபிஷேகம் செய்வதற்காக ஸுந்தரேச ராலேயே த்ரிசூலத்தால் பாதாளம் வரை பூமியைப் பிளந்து பாதாள கங்கை வரவழைத்து, ஜடையிலுள்ள கங்கையையும் கலந்து உண்டாக்கப்பட்டுப் பின்னால் சிவானுக்ரஹத்தாலேயே இந்திரன் பூஜிப்பதற்காக தங்கத்தாமரைகள் தோன்றியதால் 'பொற்றாமரைக் குளம்' என்று பெயர்பெற்ற - தீர்த்தக்கரையில் யாகசாலை நிர்மாணிக்கப்பட்டது. அருகிலேயே அரசர்கள் தங்குமிடங்கள் தபஸ்விகள் தங்குமிடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஸமயத்தில் ரிஷிகளுடன் அகஸ்த்யரும் வந்தார். மலயத்வஜன் மனைவியுடன் மீனாக்ஷிஸுந்தரேசரை நன்கு ஆராதித்து அகஸ்த்யர் சரணங்களை வணங்கி முனிவர்களின் அனுஜ்ஞை பெற்று அச்வமேதம் ஆரம்பித்தான். யாகத்துக்காக விடப்பட்ட குதிரை ஒரு வருஷத்தில் சுற்றிவந்தது.

ஸமுத்ரம் வரையிலுள்ள அரசர்கள் வந்துவிட்டனர். ஸகலகலாவல்லவர்களான அறிஞர்களும் வந்துவிட்டனர். ஹவிர் பாகம் பெற்றுக்கொள்ள தேவர்கள் வரப்போகிறார்கள். ஆகையால் வஸந்தருதுவும் ஆவலுடன் வந்தது.

மாந்துளிர் கிடைக்குமென்ற ஆசையே ஒட்ட அற்றுப்போய் விரக்தியடைந்த குயில்கள் பனிக்காலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முடியும்வரை தூங்கி இப்போது எழுந்தன. ஆகாசத்திலிருந்து வந்ததுபோல் அவைகளுக்கு பஞ்சமத்வனி கூவல் வந்தது. [வாடிய மரங்கள் தானே தெளிந்தன. மலய மலையிலிருந்து தென்றல் கிளம்பியது. மன்மதனின் தோளில் களைப்பாற விரும்பினாள் வீரலக்ஷ்மி. / மன்மதனின் புரோஹிதர்களான வண்டுகள் சப்தமிட்டுக் கொண்டு புஷ்பங்களை மந்திரித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் மன்மதனுடைய பாணங்களாகிய அப்புஷ்பங்கள் இருக்குமிடத்தை விட்டு அசையாமலே எப்படி லக்ஷ்யத்தை அடிக்கும்? / வஸந்தருதுவாகிய ஆசார்யரிடத்தில் வேதாத்யயனம் செய்யும் ப்ரம்மசாரிகளாக வண்டுகள் இருந்தன. ப்ரம்மசாரிகள் வேதத்தை எப்போதும் உருவேற்றிக் கொண்டிருப்பார்கள். வண்டுகளும் காமனுடைய வேதத்தை உருவேற்றுகின்றன. (வண்டுகள் ரீங்காரம் செய்வது காமோத்தீபகமாய் இருக்கிறது). ப்ரம்மசாரிகள் பிக்ஷை எடுப்பார்கள். இவைகளும் ஒவ்வொரு மரங்களிலும் சென்று மகரந்த பிக்ஷை எடுக்கின்றன. ப்ரம்மசாரிகளைப் போல் வண்டுகளும் பகலில் தூங்குவதில்லை.

யக்ஞம் செய்ய, அத்வர்யு, ஹோதா, உத்காதா, ப்ரம்மா என்ற நால்வர் தேவை. யுவாக்கள் மன்மத மஹாயக்ஞம் செய்தனர். மலயமாருதத்தை (=தென்றல் காற்றை) அத்வர்யுவாகவும் குயிலை ஹோதாவாகவும் வண்டை உத்காதாவாகவும் வஸந்தருதுவை ப்ரம்மாவாகவும் வரித்து அந்த யக்ஞத்தைச் செய்தனர். (காமஸுகம் அனுபவிப்பதற்கு இவைகள் துணையாயிருந்தன என்பதை அழகாகக் கூறியுள்ளார்.)

ஜகத்தே மோஹத்தில் மூழ்கிக் குருடாகி, செய்ய வேண்டியதறியாதிருக்கும்போதும் சிலர் மோஹமின்றி, ஆஹிதாக்னிகளாய் யக்ஞங்கள் செய்தனர். இதன் மூலமாக மன்மதனுக்கு அபகீர்த்தி ஏற்பட்டது. வண்டுகள் என்று சாக்கு, அபகீர்த்திதான் வண்டுகள் ரூபத்தில் கருப்பாக எங்கும் வியாபித்தது. கீர்த்தியை வெளுப்பாகவும் அபகீர்த்தியைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கருப்பாகவும் வர்ணிப்பர். கருப்பான வண்டுகள் எங்கும் பரவிப் பறந்ததைப் பார்த்தால் மன்மதனுடைய அபகீர்த்தி பரவுவது போலிருந்தது.

மாமரம் வேரிலிருந்தே எங்கு பார்த்தாலும் இடைவெளியின்றி துளிர்த்திருந்தது. அப்போதும் குயில்களுக்கு ஸந்தோஷமேற்படவில்லை. எல்லாத் துளிர்களையும் உட்கொள்ள முடியவில்லையே என்று வருத்தம், உட்காருவதற்குக் கிளையே கிடைக்கவில்லையே - துளிர்மயமா யிருக்கிறதே என்றும் வருத்தம்.

வண்டுகள் எவை? குயில்கள் எவை? காற்று எது? சந்திரன் யார்? வஸந்தன் யார்? மன்மதன் யார்? (ஒன்றுக்கொன்று என்ன ஸம்பந்தம்?) இருந்தாலும் விரஹிகளின் (= பிரிவால் வருந்துங் காதலர்களின்) துரதிருஷ்டத்தால் அவர்களை மேலும் மேலும் வருத்தும் விஷயத்தில் எல்லாருக்கும் ஒரே கருத்து இருந்தது.

வஸந்த ருதுவின் ப்ரஸாதத்தால் வாஸந்தி (=குருக்கத்தி) விசகிலம், மா, சம்பகம் முதலியன எல்லாம் நுனிவரைக்கும் பூத்துப் புஷ்பமயமாயிருந்தன. ஊமத்தையிலும் அதே ஸம்ருத்தி இருப்பதைப் பார்த்து வெட்கமடைந்தவை போல அவை தலை தாழ்ந்தன.

தன் நண்பன் மன்மதன், தபஸைக் கலைத்ததால் ஏற்பட்ட சிவனுடைய கோபத்தால் விபத்தை அடைந்தான் என்பதை நோக்கி வஸந்தன் (=வஸந்தருது) காட்டு மரங்களில் பூஜைக்குதவும் நூதனமான துளிர்களையும் புஷ்பங்களையும் உண்டுபண்ணி சிவபூஜை விஷயத்தில் முனிவர்களுக்குத் தொண்டு புரிந்த~ன். / நியமங்கள் நிறைந்த முழு வருஷமும் முடிந்து குதிரையும் வஸந்த காலத்தில் திரும்பி வந்ததும் முனிவர்களின் உத்தரவுப்படி அச்வமேதத்தால் ஈசனை ஆராதிப்பதற்காக மலயத்வஜன் தீக்ஷை பெற்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகஸ்த்யர் - அத்வர்யு, ஆச்வலாயனர் - ஹோதா, ஜைமினி - உத்காதா, வஸிஷ்டர் - ப்ரம்மாவாக இருந்தனர்.

யாகம் செய்பவருக்கு பல தீக்ஷைகள் உண்டு. அவற்றுள் உடம்பில் வெண்ணெய் பூசிக்கொள்வது ஒன்று. மலயத்வஜன் மனஸ் வெண்ணெயாலானது என்று முன்பே அறிந்திருந்தோர் வெண்ணெய் பூசிக்கொண்ட அவன் வெளிப்புறமும் வெண்ணெயாலானவன் என்று அறிந்தனர். (உருகிய மனங் கொண்டவன் என்பதை அழகாகச் சொல்கிறார்).

கையை முஷ்டியாக மூடிக்கொள்வது ஒரு தீக்ஷை, இளமையிலிருந்தே அதிதிகளிடம் தாராளக் கையுள்ளவனாய் இருந்து பழகியவனானபடியால் ஒரு க்ஷணம் கையை மூடிக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை.

அத்வர்யுவான அகஸ்த்ய பகவான்தான் யக்ஞம் முடியும் வரை ராஜா, அப்போது புரசந்தண்டம், மான்தோல், தர்பமுஷ்டி, ஆஸனம் இவைகள் விஷயத்தில் ப்ராம்மணர்களுக்கு துர்பிக்ஷம் சிதிலமாயிற்று. இவை எளிதாக நிறையக் கிடைக்க வழி வகுக்கப்பட்டது. 'நீவார தான்யங்களை விதையுங்கள். தர்பங்களை வளருங்கள். கருங்காலி-புரசு-பில்வக் கன்றுகளுக்கு ஜலம் விடுங்கள். ம்ருதுவான மரவுரிகளை உடனே சேகரியுங்கள்', என்று அகஸ்த்யரின் சிஷ்யர்கள், ராஜ புருஷர்களுக்கு உத்தரவிட்டனர்.

யக்ஞத்தில் அளவற்ற பல பதார்த்தங்களை உண்ணும் ப்ராம்மணர்களைப் பார்த்த தேவர்கள், 'மிகவும் பாபியான ப்ரம்மா யக்ஞத்தில் பாகங்கொடுத்து நம்மை ஏமாற்றிவிட்டார்' என்று பேசிக்கொண்டார்கள்.

அச்வமேதம் முறைப்படி நடந்து வரும்போது ஒரு கட்டம் முடிந்து இன்னொரு கட்டம் ஆரம்பிப்பதற்குள் உள்ள இடைவேளைகளில் சாஸ்த்ரமியற்றியவர்களான - அவர்களின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிஷ்யர்களான ரிஷிகள் மீமாம்ஸா, ந்யாயம், யோகம், ஸாங்க்யம் முதலிய சாஸ்த்ரங்களைப்பற்றி சர்ச்சை செய்தனர்.

'இப்போது ஹவிஸ்-ஸ்வீகாரத்துக்காக எல்லா தேவர்களும் வரப்போகிறார்களே. தேவர்களுக்கு சரீரம் கிடையாது என்று எப்படி ஸாதிக்கப்போகிறீர்?' என்று ஜைமினியைப் பார்த்து சிலர் கேட்டார்கள். (ஜைமினி செய்த தர்ம மீமாம்ஸையில் இந்திரன் முதலிய தேவதைகள் அந்தந்த சப்தம் தான். உருவம் கிடையாது).

யே ஹ்யுச்^{1}ச^1ாவச^{1}மவஜானதே ப்ரபஞ்ச^{1}ம் / மித்^{2}யேதி
த்ரிபு^{4}வன தே^{2}சிகா மஹாந்த:। தச்^{1}சி^{2}ஷ்யா வயமபி சக்திதோ
வத^3ாமே-த்யாஹுஃ ஸ்தான் ப்ரதி ச^{1}துராஸ்து பூர்வதந்த்ரே ॥

(இப்படிக்கேட்ட) அவர்களைப்பார்த்து மீமாம்ஸா வல்லுனர்கள் - ''மஹான்களான - மூவுலகுக்கும் தத்த்வோபதேசம் செய்பவர்களான வ்யாஸாசார்யர்கள், பலவிதமாகக் காணப்படுகிற ப்ரபஞ்சம் முழுவதையுமே பொய்யானது என்று அவமதிக்கிறார்கள். அவர்களின் சிஷ்யர்களான நாங்கள், எங்கள் சக்திக்கேற்றபடி சொல்கிறோம் (= முழுவதுமே இல்லை என்று சொல்லாமல் தேவதாசரீரம் முதலியவை இல்லை என்கிறோம்'') என்று பதிலளித்தனர். (தர்க்க வ்யாகரண வேதாந்த ஸாங்க்ய யோக சாஸ்த்ரங்களிலும் இதே போல் ரஸமான கேள்விபதில்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன. இங்கு எழுதப்படவில்லை)

ஹோதாவாக இருந்த ஆச்வலாயனர் யாஜ்யா மந்த்ரம் சொல்லி முடித்ததும் அத்வர்யு-அகஸ்த்யர் அச்வத்தின் வபையை ஹோமஞ் செய்தார். எப்போதுமே சிவத்யானத்துடன் இருக்கும் மலயத்வஜன், அப்போது தனது த்யானபலத்தால் ஸர்வஜகத்தையும் அவர் மூலமாக யக்ஞேசரான சிவனிடம் ஹோமம் செய்து ஸமர்ப்பித்தான். ஸர்வஜகத்தையும் சிவார்ப்பணம் செய்வதாய்த் த்யானித்தான். முன்பு தவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யாதவருக்குக் கிடைக்காததான-மாந்தரின் உள் இருட்டை = அக்ஞானத்தைப் போக்க வல்லதான - ஹோம கந்தத்தை ஸதஸிலுள்ள வித்வான்களான மஹான்கள் முகர்ந்தனர். ரிஷிகள் வேதத்தில் சொல்லப்பட்ட அளவுக்குமேல் ஹவிஸ் கொடுக்க பயந்தனர். சொல்லப்பட்டபடியே கொடுத்தனர் (= ஹோமஞ் செய்தனர்). தேவ வர்க்கங்களோ தானாகவே வலுவில் நிறைய எடுத்துக்கொண்டன. / யஜமானனுடைய விருப்பங்களை யெல்லாம் ப்ரார்த்தித்து நிறைவேற்றும் உத்காதாவாக இருந்த ஜைமினி - உத்கீதோபாஸனை அறிந்தவர்.ஜகன்மாதா தேவியின் அவதாரம் நடைபெறவேண்டுமென்பதை விரும்பிக் கொண்டு உத்கானம் செய்தார். (உத்கீதோபாஸகர், யஜமானனுக்கு எந்தெந்த விருப்பங்கள் நிறைவேற வேண்டுமென்று நினைக்கிறாரோ அது எல்லாம் அந்த உபாஸனாபலத்தால் நிறைவேறும்). / 'யக்ஞத்தில் பூதானம் செய்ய வேண்டுமென்று சாஸ்திரம். ஸமுத்ரம் சூழ்ந்த பூமி முழுவதையுமே எங்களுக்கு அளித்துவிட்டாய்' என்று மிகவும் ஸந்தோஷத்துடன் ரித்விக்குகள் அரசனை ஆசீர்வதித்துப் புகழ்ந்தனர். ப்ராம்மணருக்கு பூமியை ரக்ஷிப்பதில் அதிகாரமில்லாததால் திருப்பிக் கொடுத்துவிட்டனர். இருமடங்கு தனங்கொடுத்து பூமியைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் தனது ஐச்வர்யத்தையுஞ் சேர்த்து ப்ராம்மணர்களுக்கு அளித்தான் மலயத்வஜன். ராஜர்ஷியின் அச்வமேத அவப்ருதஸ்நானம் (= யாகம் முடிந்து செய்யும் ஸ்நானம்.) அவனுடன் சேர்ந்து ஸ்நானம் செய்பவர்களோ வஸிஷ்டர் முதலிய ரிஷிகள் ஸ்நானதீர்த்தமோ ஈசன் சூலத்தால் ஏற்பட்ட பொற்றாமரை - ஒவ்வொன்றும் மூவுலகையும் பரிசுத்தப் படுத்துவதாய் அமைந்தது.

அறியவேண்டியவை அனைத்துமறிந்தவர்கள் - மித்ராவருணபுத்ரர்கள் - இரு ப்ரம்மரிஷிகளும் (வஸிஷ்டரும் அகஸ்தியரும்) தங்களுக்குள் ஆலோசித்து, அன்னை அவதரிப்பதற்காக புத்ரகாமேஷ்டியை சீக்ரமாக ஆரம்பித்தனர். புத்ரகாமேஷ்டி செய்ய அரசன் ஸங்கல்பம் செய்தபோதே 'யாகாக்னியிலிருந்து உதிப்பாயாக' என்று பிறை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூடிப்பெருமானால் உத்தரவிடப்பட்டவளாக சிவையும் (=பார்வதியும்) பூமியில் அவதரிக்க ஸங்கல்ப்பித்தாள்

ஜகத்தே தெளிவடைந்தது. அக்னி தங்கவர்ணமாக இருந்து கொண்டு ப்ரதக்ஷிணஜ்வாலையுடன் ஹவிஸைப் பெற்றுக் கொண்டது. தாமரைகந்தத்துடன் ஹோமப்புகை கிளம்பிற்று. ஹோமம் செய்யப்போகும் ஹவிஸ்ஸில் ஜகன்மாதாவை த்யானித்துக்கொண்டு, அரசனுக்கும் தெரிவித்து வடக்கு முகமாக நின்றுகொண்டு அகஸ்திய மஹர்ஷி ஜ்வலிக்கிற அக்னியில் ஹவிஸை ஹோமம் செய்தார். / ஆஜ்யாஹுதி விழுந்ததால் வளர்கிற அக்னியிலிருந்து ஒரு கன்னிகை - நீலோத்பலமாலை போல் மிருதுவானவள். லாவண்யமாகிற அம்ருத அலையின் உருவானவள் - கிரீடத்தில் பொருந்திய தங்கத்தாமரை மாலையில் கலந்து கட்டப்பட்டுத் தொங்குகிற முத்துகளுடையவள் - நெற்றி முன்பக்கம் மறைக்கிற சூர்ணகுந்தலங்களுக்கு இடையில் தெரிகிறவையான - துள்ளும் மீன் போன்ற கண்களுள்ளவள் - தனது காதுகளால் மணிகள் பொருந்திய தாடங்கங்களை பூஷிப்பவள் - கபடமற்ற புன்சிரிப்பு - மொழிகளிக்கு இடையே காணப்படுகிற குந்தப்பூ போன்ற தந்தங்கொண்டவள் - புலிநகம் பூண்டவள் - மும்மூர்த்தி களையும் காப்பதற்காக ஏற்பட்டன போலுள்ள மூன்று மார்பக உருப்புகள் கொண்டவள் - புதிதாகத் தோன்றிய கல்ப்பதருவின் துளிர்போலுள்ள கையின் நுனியில் நீலோத்பலப் பூச்செண்டு தரித்தவள் - இப்படி ஸர்வாபரண பூஷிதையாகத்தோன்றினாள். இப்படியாக, காஞ்சனமாலை - மலயத்வஜன் பாக்யப்பலனாக அன்னை அவதரித்தாள்.

அம்ப^{3}ாம்பே^{3} த்யம்ரு^{1}தரஸங் கி^{3}ரா கிரந்தீ / மஞ்ஜீர-க்வணித-மனோஹரஞ் ச^{1}ரந்தீ । ஸா ப^{3}ாலா ஸ்வயமப^{4}ஜந் ந்ரு^{1}பால பத்ன்யா: / பர்யங்கம் ச்ருதிசிக^{2}ரை: க்ரு^{1}தாப்^{4}யஸூயம் ॥

அந்த சிறுமி அம்ப அம்ப (அம்மா, அம்மா) என்று வார்த்தையால் அம்ருதரஸத்தைப் பொழிந்து கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொலுஸு சப்திக்கும்படி அழகாக நடந்து தானாகவே அரசபத்னியின் - காஞ்சனமாலையின் மடியை அடைந்தாள். 'நம்மிடம் மட்டுமே இருந்த பரதேவதை இங்கு சென்றுவிட்டாளே, நம்மைவிட இந்த காஞ்சனமாலையின் மடி உயர்ந்ததாகி விட்டதே' என்று ராணியின் மடியைப் பார்த்து வேதாந்தங்கள் அஸூயையடைந்தன.

காஞ்சனமாலை அக்குழந்தையை அடிக்கடி கட்டிக்கொண்டாள். ஒவ்வொரு க்ஷணமும் தொட்டாள். தாமரை போன்ற முகத்தைத் திரும்பத் திரும்ப முத்தமிட்டாள். மலர்ந்த கண்களால் பார்த்தாள். போதுமென்றே தோன்றவில்லை. மூவுலகத் தாயைக் குமாரியாகப் பெற்றவளுக்கு ஆனந்தம் மிகுந்து மதுரமான ஸ்தன்யம் நிறையச் சுரந்தது.

ப்ரேயஸ்யா ஸவித[4]முபேத்ய தீ[3]யமானா - / முத்ப்லுத்ய
ஸ்வயமுபகூ[3]ஹிதும் பதந்தீம்। கன்யாந் தாமம்ரு[1]தமயீ
மிவாத[3]த[3]ான: / கைவல்யந் த[4]ரணிபதிஸ் த்ரு[1]ணாய மேனே॥

ப்ரியை(காஞ்சனமாலிகை)யால், அருகில் வந்து கொடுக்கப்படுபவளும், கட்டிக்கொள்வதற்காகத் தானே துள்ளிப் பாய்ந்து வருபவளும், அம்ருதத்தாலேயே உண்டாக்கப் பட்டவள் போலிருப்பவளுமான அந்த கன்யகையை வாங்கிக் கொண்ட பூபாலன் (மலயத்வஜன்) மோக்ஷத்தைப் புல்லுக்கு ஸமமாக நினைத்தான். / கபடமற்ற புன்சிரிப்புடன் மதுரமான அக்ஷரமுடைய குமாரியின் முகத்தை பாண்ட்ய தம்பதிகள் நன்கு பார்க்க முடியாமல் கண்களில் ஆனந்தக் கண்ணீர்ப் பெருக்கை அடிக்கடி துடைத்துக் கொண்டே இருக்க நேர்ந்தது. ஈசனை ஸ்மரிப்பதற்கோ, யாகத்தின் மீதி பாகத்தை முடிப்பதற்கோ, மஹான்களான ரிஷிகளை வணங்குவதற்கோ, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஆனந்தப் படுவதற்கோ, எதற்கும் அவர்களுக்கு அப்போது ஸாமர்த்யமில்லை. / குழந்தையின் மார்பில் பாலூட்டும் அவயவம் மூன்றின் அறிகுறியைக் கண்டு தம்பதிகள் சிறிது கலக்கமுற்ற போது மேக கர்ஜனை போல் கம்பீரமாக ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகாச வாக்கு “இக்குமாரிக்குத் தடாதகை எனப்பெயர். இவளை மணக்கப் போகிறவர் பார்த்ததும் அதிகமாயுள்ள மூன்றாவது அவயவம் அமுங்கிவிடும்” என்று முழங்கியது. அம்ருதம் பொழியும் இந்த அத்புதவாக்கைக் கேட்டு இருவரும் மகிழ்ந்தனர். மலயத்வஜன் ஸர்வ தனத்தையும் தக்ஷிணையாக அளித்துச் செய்யவேண்டிய யாகத்தை முடித்து குலகுரு அகஸ்த்யரின் கையில் அந்தப் பரதேவதையை ஸமர்ப்பித்து பத்னியுடன் அவர் பாதத்தில் வணங்கினான்.

ஹஸ்தே க்3ரு1ஹீதாங் கலசோத்3ப4வஸ் தா- / மத்4யாத்ம-
வித்3யாம் முனி-மண்ட3லாய। ஆனந்த3ப3ாஷ்பை:
புலகோத்3க3மைச்5ச1ா- / ப்யனக்ஷரங் கேவலமாச1ச1க்ஷே ॥

கையில் வாங்கிக்கொள்ளப்பட்ட அவளை அகஸ்தியர் ஆனந்த கண்ணீராலும், மயிர்க்கூச்சலாலும் ‘இவள் தான் அத்4யாத்ம வித்யை’ என்று முனிவர்களுக்கு வார்த்தை யில்லாமலே அறிவித்தார்.

ப்ரசிதி2லகலுஷம் ப்ரசாந்தமோஹம் / ப்ரமத3-தரங்க3-
பரம்பராதி4ரூட4ம்। ஜக3த3கி2லமபூ4த3பூ4த பூர்வம் /
மனுஜகுலாவதரே ஜக3ஜ்ஜனன்யா: ॥

முதன்முறையாக மனுஷ்ய குலத்தில் ஜகன் மாதா அவதரித்தபோது அனைத்துலகும் கல்மஷமற்று மோஹந் தெளிந்து ஆனந்த அலைகளில் மிதந்தது. / அகஸ்த்யர், மேதை உண்டுபண்ணுவதற்காக சிவனுடைய மேதாவிலாஸ ரூபமாகவே இருக்கிற குமாரியை தங்கம் பசுநெய் கலந்த மதுரமான தேனைப் பருகச் செய்தார். / மலயத்வஜன் பத்னி-காஞ்சன மாலையின் மிகப் புண்யம் செய்துள்ள மடியில் அமர்ந்து அக்குமாரி, அதுவரை பழகியிராத முதன் முதலாவதான தாய்ப்பால் குடிக்கும் செயலை அங்கீகரித்தாள். தாயின் பாலை ஒருமுறை வாய்வைத்துப் பருகி, குமாரி ஸுகமடைந்தாள். பெண்ணின் தாமரை - முகத்தைக் கண்ணால் பருகிக்கொண்டிருக்கிற தாயாரோ த்ருப்தி அடையவேயில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அசரீரியால் ஆகாசத்தில் தானே தோன்றிய வாக்கு சொன்னபடியே அரசன் குழந்தைக்கு மூவலுலகோர் காதுகளையும் மகிழ்விப்பதான 'தடாதகை' என்ற பெயரைச் சூட்டினான். அரண்மனை ஸ்த்ரீகள் தங்கச்சங்கிலி - வெள்ளிச் சங்கிலியால் கட்டப்பட்ட மணிமயமான தொட்டிலில் ம்ருதுவான விரிப்பில் குழந்தையைப் படுக்கவைத்துத் தாலாட்டினர்.

அரண்மனை ஸ்த்ரீகள் குழந்தையைத் தாலாட்டும்போது, 'ஸம்ஸார தாபத்தால் வருந்துவோர்க்குத் தாபத்தைத் தணிக்கும் அம்ருதமானவள் இவள், இனிமையாய் பேசுகிறவளும் தாமரைக்கையால் வீணையை தரிப்பவளுமான ஸரஸ்வதி இவளே. 'தேவி, நீ இப்படி விழித்திருந்து விளையாடினால் ஜகத் முழுவதும் க்ஷேமமுள்ளதாய் ப்ரகாசிக்கிறது, நீ கண்ணை மூடி உறங்கினாலோ செயலற்றவராகிவிடுகிறோம். ப்ரளயகாலத்தில் போல் ஜகத்தே மூழ்கிவிடுகிறது' - என்று சொன்ன வார்த்தை களை, மறைந்திருக்கும் தேவர்கள், உண்மையிலேயே பரதேவதையிடத்தில் இந்த வார்த்தைகள் பொருந்துகின்றன என்று நினைத்து, ப்ரதித்வனியால், திரும்பச் சொன்னார்கள் போலிருந்தது -

விஹ்ரு[1]திஷு பிதரௌ ஸபாத்ர-ஹஸ்தா / வ்யதனுத ஸா
பு[4]ஜிநா வினைவ த்ரு[1]ப்தௌ। கத[2]மிவ ப[4]வதி க்ஷுத[4]ா
த்ரு[1]ஷா வா / ஸக்ரு[1]த[3]னுஸந்த[3]த[4]தாந் தத[2]ாவித[4]ாந் தாம்॥

அன்னமளிக்கும் விளையாட்டுகளில் அவள் கையில் பாத்ரம் வைத்துக்கொண்டு தாய்தந்தையரை, சாப்பிடாமலேயே த்ருப்தியடைந்தவர்களாய்ச் செய்தாள். அம்மாதிரியான அவளை ஒரு க்ஷணம் த்யானிப்பவர்களுக்குப் பசியோ, தாஹமோ எப்படி ஏற்படும்?

அவள் பந்து விளையாடும்போது அந்தப் பந்தின் பேரில் யோகிகளுக்குச் சிறிது பொறாமை ஏற்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ச்ருதிஷு நிஹிதத்3ரு1ஷ்டயோ(அ)ன்ய வித்3யா: / ப4க3வதி
சூலினி தாஸ் ஸ ச1ாதி3சக்தௌ। க்வசி1த3பி கில கந்துகே து
ஸாபீ - / த்யஜனி மனாக3பி யோகி3னாமஸூயா ॥

மற்ற வித்யைகள், வேதங்களில் கண்ணுள்ளவை (=வேதமார்கத்துக்கே வருபவை). அந்த வேதங்கள் பரமேச்வரனிடத்தில் கண்ணுள்ளவை - (= பரமேச்வரனை லோகத்துக்கு காட்டுவதற்காகவே ஏற்பட்டவை.) அந்த பரமேச்வரன் ஆதிசக்தியிடத்தில் கண்ணுள்ளவன். அந்த ஆதிசக்தியானவள் ஏதோ ஒரு பந்தில் கண்ணுள்ளவளா யிருக்கிறாளே'' - என்று அவர்கள் பொறாமைப்பட்டனர்.

நிகி2ல-ஜனிமதாம் ஸத3ா லிக2ந்தீ / நிடில-தலேஷு
சுப4ாசுப4ாக்ஷராணி। அலிக2த3பரிஜானதீவ ப3ாலா /
கத2மபி ஸா பு4வி வர்ணமேகமேகம் ॥

எப்பொழுதும் எல்லா ஜந்துக்களுடைய (பிறப்போர் அனைவருடைய) நெற்றி ப்ரதேசத்திலும் நல்ல - கெட்ட அக்ஷரங்களை எழுதுகிறவளான அந்தபாலா ஒன்றுமறியாதவள் போல் தரையில் எப்படியோ (சிரமப்பட்டு) ஒவ்வொரு எழுத்தையும் எழுதினாள்,

அத2 பு4வி விலிக2ந்த்யச1ந் துரீயங் / கலச-ப4வஸ்ய முனே:
புர: குமாரீ। ஸத3ய முபதி3தே3ச ப4க்தி யோக3ாத் / ப்ரணமதி
காமகலா-ரஹஸ்யமஸ்மின் ॥

பிறகு அகஸ்த்ய முனிவருக்கு எதிரில் தரையில் நாலாவது உயிரெழுத்தை ('ஈ' என்பதை) எழுதுகிற அந்தக் குமாரி, பக்தியால் வணங்குகிற அவரிடத்தில் காமகலா ரஹஸ்யத்தை தயையுடன் உபதேசித்தாள். 'ஈ' என்பது, 'ம்'சேர்த்துச் சொன்னால் மஹாமந்த்ரமாகும். அக்ஷராப்யாஸம் என்ற பெயரில் பக்தரான அகஸ்த்யருக்கு உபதேசம் செய்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு நாள் மலயத்வஜபாண்டியன், 'ஸுமதி' என்ற தனது மந்திரியை அருகிலழைத்து வைத்துத் தனது மனைவி காஞ்சனமாலிகையும் குமாரி தடாதகையும் பக்கத்தில் கேட்டுக்கொண்டிருக்கும் போது "ஹே ஸுமதியே! என் தந்தையார் எனக்கு ராஜ்யலக்ஷ்மியை அளித்து '10000 வருஷங்கள் சத்ருவில்லாமல் பரிபாலனம் செய்' என்று சொன்னது உனக்கு நினைவிருக்கும். குருக்களின் வீண்போகாத ஆசீர்வாதத்தாலும் உனது புத்திசக்தியாலும் அது நிறைவேற்றப் பட்டது. 10000 வருஷங்கள் முடிந்துவிட்டன. குலமும் அகஸ்த்யரால் உத்தரணம் செய்யப்பட்டது. குமாரியும் குழந்தைப் பருவம் நீங்கி ராஜ்யபரிபாலன யோக்யமான வயஸிலிருக்கிறாள். அவளுக்கு விவாஹமாகவில்லையே என்ற ஒன்றுதான் எனது பூர்த்தியாகாத ஆசை. தேவலோகத்திலும் பூலோகத்திலும் இவளுக்கு உசிதமான பதி யாரென்று நமக்கு விளங்கவில்லை. இந்த எனது மனோரதத்தையும் சீக்ரமாகவே பரமேச்வரன் பலனுள்ளதாக்கிவிடுவார். என்னைப் போல் நீயும் இவளுக்கு ஹிதம் நினைப்பவன், ராஜ்யபாலனத்தில் உயர்ந்த ஸஹாயமாயிருக்கிறாய். இனி நடக்கப்போகும் இந்தத் தடாதகையின் விவாஹ விஷயத்தில் அவள் அம்மா ஸ்வதந்த்ரமானவளாகிறாள். ப்ரபுக்களால் அடையத் தகுந்தது என்னால் அடையப்பட்டுவிட்டது. குலமும் குமாரியால் உத்தரணம் செய்யப்பட்டதாய்ப் பார்க்கப்பட்டது. ஜகன்மாதாவின் சரணத்தை அடைய வேண்டுமென்ற ஒன்றுதான் இப்போது எனது விருப்பம்" என்று கூறினான். / இதைக் கேட்டதும் தானும் பதியுடன் கூடவே பரமபதமடைந்து விடுவதென்று முடிவெடுத்ததால் அரசி காஞ்சனமாலை வருந்தவேயில்லை. கணக்கிடப்படாத பெரும் சோகத்தால் மந்திரி ஸுமதியும் தடாதகையும் மூர்ச்சையடைந்தார்கள்.

குளிர்ச்சிதரும் உபசாரங்கள் செய்யப்பட்டு எப்படியோ அம்பிகை ஸ்வய அறிவைப் பெறும்போது அதற்குள் அகஸ்த்யர் அங்கு வந்து அவளிடம் - "தாயே! மூவுலகாலும் வணங்கத் தக்கவளே! மறைப்பில்லாத ஆத்மஜ்ஞானரூபிணியே! மனுஷ்யப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெண்ணாக நடிப்பதால் மட்டும் மேலான ஜ்யோதியை அஜ்ஞானம் அமுக்க முடியுமா? மனிதப் பெண் என்ற நடிப்பை உதறிவிட்டு வயஸுமுடியும் தருவாயிலுள்ள - உன்னையே சரணமடைந்த - இவனை சீக்ரமாக, பாபங்களை எல்லாம் போக்கும் கடாக்ஷப் பார்வைகளால் அனுக்ரஹிப்பாயாக. உன்னைக் கன்யகாதானம் செய்து கொடுத்து உனது தந்தையைக் கடனற்றவனாகச் செய்வதற்காக உனது தாயையும் கட்டுப்படுத்து. பதியுடன் கூடச் செல்லும் எண்ணத்தை விட்டுவிடச் செய்'' என்று சொன்னார்.

இதி கலசப4வேன பே3ாதி4தா ஸா / ஜக்3த3ரணிர் ஜனகஞ்
சி1ராத் ப்ரபன்னம். அமனுத பரமே பதே3 நித4ாதும் /
ஸுலப4மியச்1 ச்2ரித-ரக்ஷணம் ஹி தஸ்யா: ॥

இவ்வாறு அகஸ்த்யரால் போதிக்கப்பட்ட அந்த - ஜகத்தாகிய அக்னிக்கு உத்பத்திஸ்தானமான அரணியானவள் (=ஜகன்மாதா) நெடுங்காலமாகத் தன்னையே சரணமடைந்தவனான தந்தையைப் பரமபதத்தில் வைப்பதற்கு நினைத்தாள். அவளுக்குத் தன் பக்தர்களை ரக்ஷிப்பது இவ்வளவு ஸுலபமல்லவா? (நினைப்பதைத் தவிர அதிகமாக எதுவும் செய்ய வேண்டியதில்லையல்லவா?)

[இதே போன்ற கருத்துள்ள ஒரு ரஸமான ச்லோகம் க்ருஷ்ண விலாஸத்தில் -

கடாக்ஷமாத்ரேண ப4வாம்பு3ராசே: / பாரம் பரம் ப்ராபயிதுஸ்
த்ரிலோகீம். ஸக்ரு1ந் நமஸ்யா பரமாதரஸ்தே / யத்னானுரூபம்
ஹி ப2லங் க்ரியாணாம் ॥

ஹே க்ருஷ்ணா!கடைக்கண் பார்வை மாத்திரத்தாலேயே மூவுலகையும் பிறவிக்கடலின் மறுகரையை அடைவிக்கிற உனக்குக் (கொடுக்க வேண்டிய) கரையேற்றுவதற்கான கூலி, ஒருமுறை நமஸ்காரம்தான். ப்ரயத்னத்துக்கு அனுரூபமாகத் தானே வேலைகளுக்குப் பலன் கிடைக்கும். அதிகம் உழைத்தால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதிகக் கூலி. பார்வையாலேயே கரையேற்றினால், கூலி, நமஸ்காரம் போதும். (க்ரு^{1}ஷ்ணப்ரணாமோ ந புனர் ப^{4}வாய என்றபடி ஒரு தடவை நமஸ்கரித்தாலும் பகவான் கரையேற்று வான் என்ற கருத்து நயம்படக் கூறப்பட்டுள்ளது.)]

அண்டினவர் அனைவருக்குமே ஓயாது முக்தியளித்து வரும் போது, தந்தை என்பதற்காக என்ன செய்யப்பட்டது என்னால் என்று மனஸில் வெட்கமடைந்தாள் அம்பிகை.

ப்ரவஸஸி யதி^{3} தாத ஹா ஹதாஹம் / ந க^{3}ணய வத்ஸ ப^{4}யங் குதச்^{5} ச^{1}னேதி। வ்யதிகரிதபராவராத்மப^{4}ாவா / வ்யவஹரதி ஸ்ம பராபி தே^{3}வதா ஸா॥

அந்தப் பரதேவதை கூடத், தான் பரதேவதை என்ற எண்ணம் மாறித் "தந்தையே! நீர் (என்னைப் பிரிந்து) பரலோகம் செல்வீரானால் நான் தொலைந்தேன்" என்று உலகத்துப் பெண் போலவும், உலகத்து ஸாதாரணப் பெண் என்ற எண்ணம் மாறிப் பரதேவதை என்ற எண்ணத்துடன் "குழந்தாய் எதிலிருந்தும் பயப்படாதே (நான் இருக்கிறேன் காப்பாற்ற)" என்றும் சொன்னாள்.

தன் தேவதையான தடாதகையின் தோள்களில் பூமிபாரத்தையும் (பூமியைப் பரிபாலிக்கும் பொறுப்பையும்) கடைக்கண்ணில் ஐச்வர்யத்தையும் இரு சரணங்களிலும் தன் மனஸையும் ஜீவிதத்தையும் வைத்துவிட்டு மலயத்வஜ பாண்டியன் பயமற்றவனானான். தன் பெண்ணின் அனுக்ரஹத்தால் ஸுந்தரேசரின் கர்பக்ருஹத்தில் அவன் நுழைந்தபோது அதன் பிறகு எல்லாரும் அங்கு மஹேச லிங்கத்தை மட்டும்தான் கண்டார்கள்.

லிங்கத்திலேயே ஐக்யமடைந்துவிட்டான் மலயத்வஜ பாண்டியன்.

பர்த்தாவின் பிரிவாலேற்பட்ட சோகத்தால் மூர்ச்சை யடைந்த தாயைக் கட்டிக்கொண்டு தானும் வருந்துகிற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அம்பிகையைப் பார்த்து மறுபடியும் அகஸ்தியர் - 'மறுபடியும் இந்தத் தவறு வந்துவிட்டதே, இதனால் துக்கம் போய்விடுமா? அஜ்ஞானத்தால் ஏற்பட்ட தாயின் சோகத்தைப் போக்கு, மனுஷ்யவேஷ நடிப்பு போதும். ஹே அம்பிகையே! உலகம் முழுவதற்கும் நீ அடைக்கலம் - புகுமிடமாக இருக்கும்போது, நீ சொல்வதெல்லாம் வேதங்களாயிருக்கும்போது, உன்னிடமே மனஸை வைத்து உன்னிடமே லயமடைந்த தந்தையைக் குறித்து வருந்துவோருமுண்டா'' என்று சொன்னார்.

இப்படி எல்லாமறிந்த அகஸ்த்யரால் ஸமாதானம் செய்யப்பட்ட அம்பிகை, ஸர்வ பாபத்தையும் அழிக்கும் கடைக்கண் பார்வைகளால் மந்திரி ஸுமதியையும் தாயையும் அனுக்ரஹித்தாள்.

பிறகு உலகிற்கே மங்களமளிக்கும் முஹூர்த்தத்தில் ப்ரஜைகளாலும் ஆப்தஜனங்களாலும் புரோஹிதரான அகஸ்த்யராலும், ஸுந்தரேச்வரரின் ஸந்நிதியை அடைவித்து மணிமய ஸிம்மாஸனத்தில் பட்டாபிஷேகம் செய்விக்கப் பட்டாள் அம்பிகை.

ந யத^{3}திச^{1}ரிதம் ஜனேஷு கேனா - / ப்யபரி மிதம் நனு
ப^{4}াக்^{3}ய மே தத^{3}ஸ்யா:। த்ரிபு^{4}வன ஜனனீ க்ரு^{1}தாபராத^{4}ங் /
கமிவ நியச்^{1}ச^{2}து ஸா கத^{2}ம் த^{3}யார்த்^{3}ரா ॥

ப்ரஜைகளில் யாராலுமே தவறு செய்யப்படவில்லை. இது இவளது அளவற்றதான பாக்யமல்லவா? தயையால் ஈரமான நெஞ்சுள்ள மூவுலகத்தாய், அபராதம் செய்தவன் யாரைத்தான் எப்படித்தான் தண்டிக்க முடியும்? (நல்ல வேளையாக யாரும் குற்றம் செய்யவில்லையோ பிழைத்தாள்.) / ''ராஜாவுக்குக் கொடுக்க வேண்டிய கப்பம் முழுவதும் கட்டிவிட்டு மிச்சம் சிவனுக்காக என்று வைத்திருப்பதையும் உன்னை சேர்ந்தவர்கள் கொண்டுபோய் விடுகிறார்கள்'' என்று ஜனங்கள் சொல்லும்போது அம்பிகை சிரித்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ 5-வது லீலை - தடாதகை விவாஹம் ❀

பட்டாபிஷிக்தையான ராஜகுமாரியை விஜய யாத்ரையில் நாட்டமுள்ளவளாகச் செய்வதற்காக, மார்கங்கள்தோறும் தங்கியிருந்த சேற்றையெல்லாம் காய வைத்துக்கொண்டு சரத் ருது வந்தது. மரம், மலை, பாலை, கடல் என்று வேறுபாடில்லாமல் உலகனத்தையும் ஜலரூபமாய்ச் செய்து மிக்க புகழ் சேர்த்து வைத்தவைபோல் மேகங்கள் எங்கும் நிர்மலமாய்க் காணப்பட்டன. (புகழை வெளுப்பாய் வர்ணிப்பது வழக்கம். மேகங்கள் வெளுப்பாயின).

ஒரே ஜலப்ரளயஞ் செய்த அப்பேர்ப்பட்ட மேகங்களும் மிகக் குறைந்த ஜலமுள்ளவையாகவும் இடி ஓசை ஓய்ந்தவைகளாகவும் ஒன்று இரண்டு என்று எண்ணிப் பார்க்கக் கூடிய மின்னல் உள்ளவைகளாகவும் ஆகிவிட்டன என்றால் உலகில் எதுதான் ஸ்திரமானது (நிலையானது) என்று நம்புவது? (எதையும் நம்புவதற்கில்லை, எல்லாமே நிலையற்றவைதான்)

இடி, மின்னல், ஜலம், மேகம், காற்று முதலியவை முன்பு கொண்டாடி வரவேற்கப்பட்டன. சரத் காலத்தில் அவைகளே ஜனங்களுக்கு நிந்திக்கத் தக்கவையாயின. மக்களின் குணம் ஸமயத்துக்குத் தக்கபடி தானே இருக்கிறது?

மேகங்கள் ஓய்ந்துவிட்டாலும் ஒன்றுங் குறைவில்லை. பூமிதளம் குளிர்ச்சியாக்கப்பட்டது. காடு வளர்ச்சியுற்றது. ஏரி, குளங்கள் நிரம்பின. ஆனால் சில சாதகபக்ஷிகள் மட்டும் கேடுற்றன. (மேகத்திலிருந்து நேரே விழும் ஜலந்தான் அவற்றுக்கு உதவும். மற்ற பக்ஷிகளைப் போல் ஆற்றில் குளத்தில் அலகால் நீர்குடிக்க அவற்றால் முடியாது.) / பூமிதலத்தை ஜலப் பெருக்கால் நிரப்பி, மரங்களைத் துளிர்க்கச் செய்து எந்தப் பயனையும், பார்க்காமல் மேகங்கள் மறைந்தன. பயனை அனுபவிக்கிற அடுத்த சரத்காலம் வந்தது. சாதகபக்ஷிக்குத்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கேடு, மேகங்கள் பலனைப் பார்க்கவில்லை என்பதெல்லாம் அன்யாபதேசம் - இதிலிருந்து உலக இயல்பு தெரிகிறது. ஒன்றைக் காட்டுவதற்கு வேறொன்றைச் சொல்வது அன்யாபதேசம்.

மிக விஸ்தாரமாக மேகங்கள் மழை பொழிந்ததை சரத்காலம் ஒய்வித்தது. இதுவே அதற்குப் புகழ் ஈட்டித் தந்தது. அளவுக்கு மிஞ்சி நிகழ்வதைத் தடுப்பதைவிடப் புகழ் பெறுவதற்கு வேறு என்ன வேண்டும்?

ஒரு நாள் அம்பிகை ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்ட ஸபையில் அமர்ந்து ஜனங்களுக்கு ஆறு தர்சனங்களாலும் அடைய முடியாத தனது தர்சனத்தை அளித்தாள்.

ச^{2}த்ர மேகதர முச்^{1}ச்^{2}ரித மஸ்யா: / மூர்த்^{4}னி தேன சிசிரஞ் ஜகத^{3}ாஸீத்। ஏதத^{3}த்ர நித^{3}ர்சன மேஷா / யத் பரபஞ்ச^{1}வபுஷா பரிணேமே ॥

இவளது தலையின்மேல் உயரமாக ஒரு குடை பிடிக்கப்பட்டது. அதனால் உலகே குளிர்ந்ததாயிருந்தது. இவளே உலகருபமாக மாறினாள் என்பதற்கு இதுவே எடுத்துக் காட்டாகும்.

அஸ்துவன் க்வச^{1}ன வந்தி^{3}க^{3}ணாஸ் தா -/ மஸ்துவன்
னபரத: ச்ருதிஸங்க^{4}ா:। ஆத்^{3}யமத்ரஜக்^{3}ரு^{1}ஹுர்
கு^{3}ணவத்வாத் / ஸர்வ ஏவ ந பரந் தத^{3}ப^{4}ாவாத் ॥

ஒரு புறம் ஸ்துதிபாடகர்கள் துதித்தனர். மறுபுறம் வேதகணங்கள் ஸ்துதிசெய்தன. எல்லா ஜனங்களும் குணமிருந்த தால் முதலாவதை (ஸ்துதிபாடகர் ஸ்துதியை) எடுத்துக் கொண்டார்கள். அதில்லாததால் (குணமில்லாததால்) மற்றதை வேதங்களின் ஸ்துதியை எடுத்துக் கொள்ளவில்லை. குணமுள்ளதைத்தானே எல்லாரும் விரும்புவார்கள். வேதங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அம்பிகையை நிர்குணப்ரம்மமாக சொல்கின்றன. புரிந்து கொள்வது மிகக்கடினம். மீனாக்ஷி போன்ற ஸகுணரூபம் பக்தர் எல்லாராலும் கொண்டாடத்தக்கது என்பது த்வனிக்கிறது.

தாயார் காஞ்சன மாலையைத் தன் பீடத்திலமர்த்தி அவள் காலடியலமர்ந்து தேவி, மந்திரி ஸுமதியுடன் விஜயத்திற்காக மந்த்ராலோசனை செய்தாள்.

''ஒவ்வொரு வருஷமும் விஜய யாத்ரைக்காக அரசரை த்வரிதப்படுத்துவீரே. நான் சிறுமி என்று நினைத்து இப்போது என்னைத் தூண்டவில்லையா? நான் குழந்தைதான், போர்ப் பழக்கமில்லாதவள்தான்; நேர்மாறாக அரண்மனைக் குள்ளேயே வைக்கப்பட்டவள்தான். இருந்தாலும் இவளுடைய (தாயாருடைய) ஆசீர்வாதத்தாலும் உமது புத்தி பலத்தாலும் விஜயத்திற்காக முயற்சிக்கிறேன்,'' என்று மந்திரியைப் பார்த்துச் சொன்னாள்.

அப்போது காஞ்சனமாலை - ''குழந்தாய், இப்படி ஒருபோதும் சொல்லாதே. மந்திரி ஸுமதியால் நமக்கு விஜயம். எப்போது எது செய்யவேண்டுமென்பதெல்லாம் மந்திரி அறிவார்'' என்று சொன்னாள்.

அம்மாவின் மென்மையைப் பார்த்து புன்சிரிப்படைந்த குமாரியைப் பார்த்துக், காலம் கடந்த இவளது தந்தையை நினைத்துக் கொண்டு பாஷ்பத்தால் தழுதழுத்த வார்த்தை களுடன் வினயமாக மந்திரி - ''தேவி! குழந்தாய்! நீ சொன்னது என்னை அனுக்ரஹிக்கும் எண்ணத்தால், வேறு விதமாக அல்ல. வேதவார்த்தைகளுக்கு ஒப்பானவையன்றோ உனது வார்த்தைகள். விஜயத்துக்காக யத்னம் செய்ய வேண்டியது தான்; உண்மை. ஆனால் அதற்கு முதல் ஸாதனம், சத்ருக்கள். சத்ருக்களே இல்லாதபோது யாரை ஜயிப்பது? தேடிப் பார்க்கிறேன், சத்ரு யாருமே தெரியவில்லை. ஆகையால் உன்னிடம் விஜயயாத்ரைக்காக விஜ்ஞாபனம் செய்யவில்லை'' என்று சொன்னார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்போது அகஸ்த்யர் தானாகவே அங்கு வந்து பஹுவிதமாக ஆசீர்வாதங்கள் செய்து அம்பிகையைப் பார்த்துச் சொன்னார்-

ஸாத^{4}யிஷ்யஸி கரக்^{3}ரஹணந் த்வம் / ஸர்வத^2ா ச^{1}லது தே ஜயயாத்ரா। பூ^{4}ரியம் ப^{4}வது புண்யதமா தே /
பாவனீபி^{4}ரபி^{4}தோ ப்^{4}ரமணீபி^{4}: ॥

"நீ கரக்ரஹணத்தை ஸாதிப்பாய் (கப்பம் வஸூலிப்பதை ஸாதிப்பாய். இன்னொரு பொருள் - பாணிக்ரஹணத்தை ஸாதிப்பாய்.) எப்படியும் உனது ஜயயாத்ரை நடக்கட்டும். பவித்ரமான உனது ஸஞ்சாரங்களால் இந்த பூமி மிகமிகப் புண்யமானதாகட்டும்" (நீ பிறந்ததாலேயே புண்யமானதாயிற்று. பரிபாலிப்பதால் இன்னும் புண்யமானதாயிற்று. எங்கும் சுற்றுவதால் இன்னும் புண்யமானதாகட்டும் என்பது 'புண்யதமா' என்பதால் குறிக்கப்படுகிறது)

அம்பிகை பிறந்தபோது மூன்று ஸ்தனங்களுடன் பிறந்தாள். பெற்றோர் அதைக் குறித்துக் கவலையுற்ற போது அசரீரவாக்கு ஆகாசத்திலுதித்தது - "தடாதகை எனப்படும் இவளை மணக்கப் போகிறவன் எப்போது பார்க்கிறானோ அப்போது மூன்றாவது ஸ்தனம் மறைந்துவிடும்." பக் (56)ல்.

அதை நினைத்து அகஸ்த்யர், பரமசிவன் விவாஹம் அம்பிகைக்கு ஸித்திப்பதற்காக யாத்ரைக்கு உத்ஸாஹ மளிக்கிறார். முன்பு ஹிமயத்தில் நடந்த பார்வதீபரமேச்வர விவாஹத்தை அகஸ்த்யர் கண்ணால் பார்க்கவில்லை. விவாஹ தர்சனத்துக்காக எல்லாரும் வடக்கில் கூட்டமாக கூடவும், பாரத்தால் வடக்கு பாகம் அமுங்கித் தென்பாகம் மேல்கிளம்ப, பாரத்தை ஸமமாக்குவதற்காக மஹா மஹிமையுடைய அகஸ்தியர் தெற்கே சிவனால் அனுப்பப்பட்டார். தெற்கில் வந்து அவருக்கும் விவாஹக்காட்சி தருவதாய் சிவபெருமான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரமளித்திருக்கிறார். அதன்படி இப்போது மீனாக்ஷிஸுந்தரேச விவாஹத்தைப் பார்த்து அனுபவிப்பதற்காக இப்போது யாத்ரை கிளப்பினார். நல்லதான ஜயமென்று பெயர் கொண்ட முஹூர்த்தத்தில் ஸைன்யத்துடன் நகரை ஒட்டிய வெளி ப்ரதேசத்தில் ப்ரவேசிக்கச் செய்துவிட்டு அகஸ்தியர் மலயமலைக்குச் சென்றுவிட்டார்.

மந்திரி ஸுமதி சொற்படி அங்கேயே = நகர ஸமீபத்திலேயே ஓரிரவு தங்கி உடன் வந்தவர்களில் திருப்பி அனுப்பவேண்டியவரை அனுப்பிவிட்டுப் பிறகு ப்ரயாணம் தொடர்வதென முடிவாயிற்று. / தடாதகை தேவி விஜயத்துக்காக மேருவின் வடபுறத்துக்கும் செல்ல இருக்கிறான் என்று அதைக் காண்பதற்காகச் செல்வதுபோல் ஸூர்யன் மேற்கு மலையையடைந்தான்.

ஸூர்யன், மேற்குமலையில், தான் விழுந்துகொண்டிருந்த போதிலும் தன்னைத் தொடர்ந்து வருங் கிரணங்களை உயரத் தூக்கினான். தன்னைச் சார்ந்தவருக்காக இம்மாதிரி கஷ்டம் அனுபவிக்காதவனுக்கு 'லோகபந்து' என்ற பெயர் ஜெரிக்குமா?

ஸூர்யன் எத்தனை தடவை மூழ்கினான்? எத்தனை தடவை வெளிவந்தான்? இப்போது மூழ்கும்போதும் ப்ராம்மணர்கள் அவனுக்கு ஜலாஞ்ஜலி - அர்க்யம் அளித்தனர்.

கூடவே தன்னுடன் கடலில் விழுங்கிரணங்களும் வெகுநேரம் முன்பே திரும்பிவிட்ட கிரணங்களும் துல்யமானவை தான் ஸூர்யனுக்கு. ப்ரபுக்களின் அவிவேகம் - பகுத்தறிவின்மை இப்பேர்ப்பட்டது.

'இன்னமுமா அஸ்தமிக்கவில்லை?' என்று கோபத்தால் சிவந்த யுவதிகளின் கண்களால் பார்க்கப்பட்டதால்தானோ என்னவோ ஸூர்யன் செந்நிறமானான்.

ஸூர்யன் மூழ்குவது போலிருக்கிறான். இன்னும் மூழ்கவில்லை. அவனுடைய எல்லாக் கிரணங்களும் இன்னும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகன்றுவிடவில்லை. அதற்குள்ளேயே எங்கே இருந்தனவோ, எப்படி ஒன்று சேர்ந்தனவோ இருட்டுகள் சூழ்ந்துகொண்டன. (இவ்வர்ணனைகளெல்லாம் அன்யாபதேச வகையைச் சேர்ந்தவை). பக் (64) காண்க.

இரவு முழுவதும் அன்னையுடன் உரையாடிவிட்டு விடிந்ததும் அன்னையால் மங்களரக்ஷை அணிவிக்கப்பட்டு விஜயதுந்துபி கோஷத்துடன் ஸைன்யத்துடன் பல்லக்கில் புறப்பட்டாள் தேவி.

ஸுமதியும் கவசமணிந்து குதிரையிலேறி அம்புராத் தூணியைக் குதிரையில் கட்டி அம்பு ஏந்தி நாணேற்றிய வில்லுடன் ஆப்தஸைன்யத்துடன் அம்பு விழும் தூரத்தில் தேவியை பின் தொடர்ந்தான். குழந்தைகள் முதலாக அனைவரும் காணிக்கையுடன் கூட்டமாக தேவியைக் காணவந்தனர். க்ராம ஜனங்கள் பேச்சில் ஆவலால் பல்லக்கை மெதுவாகச் செலுத்திக் கொண்டு சிரித்துக் கொண்டே தேவி, அவர்கள் பேச்சைக் கேட்டாள். / 'மலயத்வஜன் பெண்ணைப் பார் காளி! குப்ஜிகையே! இவள் முகம் தகப்பனாரைப் போலிருக்கிறது. என் பெண்ணைவிட ஐந்தாறு மாஸம்தான் பெரியவளிவள். குழந்தைதான். அச்வமேதத்தில் தோன்றினாள், எவ்வளவு கெட்டிக்காரியாயிருக்கிறாள். கணவன் எப்படிப்பட்டவனாயிருப்பான் இவளுக்கு'. 'தேவி உனது தயையால் எங்களுக்கு நூறு ஆடு, பத்துப் பசு, ஐந்தாறு எருமைகள் உள்ளன. பஹு தூரம் தாஹமுற்றிருக்கிறாய், சிறிது உஷ்ணமான இந்தப் பசும்பாலைச் சாப்பிடு. பழையது இருக்கிறது, கஞ்சி இருக்கிறது, ஊறுகாய் இருக்கிறது, இஷ்டப்படி குளிர்ச்சியானதையோ உஷ்ணமானதையோ சாப்பிட்டுவிட்டுச் செல், பசியுடன் போகாதே பெண்ணே! உனக்காக கோழி-ஆட்டை பலி கொடுத்து தேவியைப் பிரார்த்திக்கிறோம். ஸுகமாய்ப் போய்த் திரும்பிவா. உன்னை அந்தக் கிழவி எப்படி விட்டாள்?' – இப்படிப் பேசினர். ''நீதான் மலயத்வஜன் பெண்ணா?'' என்று கேட்டனர். கையால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொட்டனர், நூற்றுக் கணக்காக ஆசிகள் வழங்கினர். தேவி எல்லாரையும் அவரவருக்கேற்றபடி உபசரித்தாள். மரங்கள் - மலைகள் - நதிகளைக் கூர்ந்து ஆவலுடன் பார்த்துக் கொண்டு மெதுவாகச் சென்றாள். தென்னை - பலா - பாக்கு - மா - வாழை - கரும்பு நிறைந்த காவேரிக் கரையில் கூடாரமமைத்து நடுப்பகலில் களைப்பாறினார்கள்,

ஸ்வேத3-ரஜ்யத3ளிகாந்த-நிமஜ்ஜத்3 -/ தூ4ஸராளகதயாதி4க
த்3ருு1ச்யம்। ஆனனம் விகஸிதேக்ஷணமஸ்யா: / த்4யான
மங்க3ளமபூ4த்3 பு4வனானாம் ॥

வியர்வையால் சிவந்த நெற்றிப்ரதேசத்தில்படுகிற புழுதிபடிந்த முன்பக்க கேசங்களால் மிகவும் பார்க்கத்தக்கதான - மலர்ந்த கண்ணுள்ள - தேவியின் முகம் தன்னை த்யானிக்கும் உலகோருக்கு மங்களமளிப்பதாக இருந்தது.

தேவி, ஸைனிகர்களை கடாக்ஷங்கள்ால் அனுக்ரஹித்து விட்டு ஸுமதியால் அமைக்கப்பட்ட அத்புதமான சயனக்ருஹத்தில் மஞ்சத்திலமர்ந்து சுபவார்த்தையால் ஸுமதியை அனுப்பிவிட்டு நகைகளைக் கழற்றிவைத்துவிட்டுத் தன் ஸகீக்களுடன் பேசிக்கொண்டு அவர்களுடைய ப்ரயாணக் களைப்பைப் போக்கினாள். / ஸுமதி, 'வந்த ஸைன்யங்களைக் களைப்பாற்றி நாளை தங்கி, வரும் ஸைன்யங்களைச் சேர்த்துக் கொண்டு மறுநாள் புறப்படலாம்' என்றான். மறுநாள் காலையில் பட்டுவஸ்த்ரங்களால் திரைபோடப்பட்ட காவேரி ஜலத்தில் தோழிகளுடன் குளித்து விளையாடினாள் தேவி. குதிரைகள், ஜேணங்கள் அகற்றப்பட்டுக் களைப்பாறின. யானைகள் அவிழ்த்துவிடப்பட்டு ஸுகமடைந்தன, சிப்பாய்கள் குளித்து உண்டு ஸுகமாய்த் தூங்கினர்.

தேவி குதிரையில் ஏறிச் செல்பவளாய் காவேரியின் அழகைப் பார்த்துப் பார்த்து ரஸித்தாள். போதுமென்ற த்ருப்தியே வரவில்லை. தன் ஸகீக்களுடன் களைப்பைப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போக்கினாள். தமது கைக்கு எட்டுகிறபடி உயர்ந்து நிற்கிற காவேரிக் கரைத் தென்னைகளின் நீரை அருந்தி த்ருப்தியடைந்த தேவர்கள் மருந்தாகத்தான் ஒருமுறை சந்த்ரகலா - அம்ருதம் சிறிதளவு அருந்துகின்றனர். / காவேரி ஜலம் ஸமுத்ரத்தில் விழுந்து ஒரு இடத்தில் ஸ்தம்பித்து மற்ற ஜலத்தோடு கலக்காமல் நின்ற பகுதியைத்தான் இக்ஷு (=கரும்பு) ஸமுத்ரம் என்கின்றனர்.

'பாதிகங்கை' எனப் புகழப்படுகிற காவேரியை ஸ்துதி செய்து 'நம் குருபத்னீ லோபாமுத்ரைதானிவள்' என்று தோழிகளுக்கு காவேரி விஷயத்தில் மிகவும் ஆதரவு வரும்படி செய்தாள் தேவி. கங்கையிலுள்ள ப்ரீதியை விட காவேரியிடம் அதிகமான ப்ரீதியை அடைந்தாள் - காரணம் - குருபத்னீ என்பதல்ல. கங்கையைப் போல் தனக்கு ஸபத்னீயாக (பரமேச்வரன் தலையிலேறிக் கொண்டு) காவேரி, போட்டி போடவில்லை என்பதே. (ஸ பத்னீ = சக்களத்தி)

தேவி, குதிரையேறி பரிமித ஸைன்யம் பின் தொடர, முகாம் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு மாலை கூடாரத்துக்கு வந்து சேர்ந்தாள். மறுநாள் கிளம்பிய தேவியை வழியில் ஸுமதி பலவிதமான ஸேவையால் பரிசரித்துக் கொண்டு, ஒருவனே பாராக்காரனாகவும் மந்திரியாகவும் சிப்பாயாகவும் இப்படி பஹுவிதமாக இருந்தான்.

தேவி விஜயயாத்ரை புறப்பட்டதை அறிந்த அனைத்து அரசர்களும் காணிக்கைகளுடன் வந்து சரணமடைந்து ஸுமதி மூலமாகத் தாங்கள் பஹுகாலமாகவே பணிந்தவர்கள் என்பதைத் தேவியிடம் தெரிவித்தனர். ஸுமதியால் ஸூசிக்கப்பட்டு எல்லாரும் ரத்ன புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பித்து வாஹனங்களையும் தனத்தையும் காணிக்கையாகச் செலுத்தி, தேவியின் பாத பீடத்தருகில் வணங்கினார்கள். 'தேவி, பயப்படாதீர்கள், ஸுகமாய்ச் சென்று வாருங்கள்' என்று ம்ருதுவதாக உரைத்தாள். அந்த வார்த்தையின் மென்மையைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கேட்டு அவர்கள் எழுந்து தேவியை நோக்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு - 'கருணைக்கடலான மலயத்வஜ தேவன் எம்போன்றவரிடம் காட்டிய கருணையைப் போல் நூறுபங்கு உம்மால் காட்டப்படுகிறது. இருந்தாலும் விண்ணப்பிக்க வேண்டியது ஒன்றுள்ளது. குலதாஸர்களாய் தன்னையே அர்ப்பித்தவர்களாய் எம்போன்ற வீரர்கள் இருக்கும்போது, தேவி, தானே யாத்ரை கிளம்பினால் இதைவிட எங்கள் குலத்துக்குப் புகழ் குறைவு வேறு என்ன? ஆகையால் தேவி, தாயாரிடமே திரும்பிச் சென்றுவிட வேண்டும். இந்த ஸுமதியின் தலைமையில், தங்களது அனுக்ரஹலேசத்தைக் கொண்டு, தேவர்களைக் கூட ஜயித்துக் கொண்டுவருவோம்.'' என்று சொன்னார்கள்.

''நீங்கள் இப்படிப்பட்டவர்கள் தான். பூமியைச் சுற்றிப் பார்ப்பதற்காகத்தான் நாம் புறப்பட்டிருக்கிறோம். ஆவல் இருந்தால் உடன் வாருங்கள்.'' என்று கூறிய தேவி, ஸுமதியால் கொடுக்கப்பட்ட பஹுவித பூஷணங்களாலும் வாஹனங்களாலும் அவர்களை ஸம்மானித்து ஸேனா முகாமில் சேரச் செய்தாள். மந்திரி, தேவியின் பேச்சு காம்பீர்யம், ஸமயோசித ஜ்ஞானம், (எப்போது எது செய்யவேண்டுமென்ற அறிவு), வணங்கியவர்களிடம் க்ருபை, புகழில் ஆசை எல்லாவற்றையும் பார்த்து, ஸந்தோஷம், அத்புதரஸம் இரண்டும் கலந்ததால் ஸ்தம்பித்துப் போய் அடிக்கடி இவள் காலில் வணங்கினான். வாத்ஸல்யத்தால் ஆசீர்வாதமும் செய்தான்.

''நீர் மந்த்ரியாயிருப்பதால்தான் - உமது ஸஹாயபலத்தால்தான் - இவ்வளவு அரசர்களும் வணங்கினார்கள். உம்மிடமே கற்றுக் கொண்ட வார்த்தைகளால் நீர் அருகிலேயே இருக்கும் பலத்தாலல்லவா இவர்களிடம் ஏதோ சொன்னேன். இதற்கு மேல் செய்யவேண்டியவற்றிலும் நீர்தான் ப்ரமாணம் (= உமது கருத்துப்படிதான் அனைவரும் நடக்கவேண்டும்)'' என்று கூறி தேவி மந்திரியின் உழைப்பு-ச்ரமம் அனைத்தையும் போக்கினாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸங்கீதத்துடன் கூடிய மத்தள வீணா வேணு நாதத்தால் தோழிகளால் தூங்கச் செய்யப்பட்ட தேவியை, விடியற்கால மானதும், வைதாளிகர்கள் போல் (= ஸ்துதிபாடகர்கள் போல்) உச்சத்வனியில் பாடக் கற்றுக்கொண்ட சில தோழிகள் எழுப்பினார்கள்.

ஆமோத^{3}தே ப^{3}த கியத் கமலாகரோ(அ) ய - / மஸ்மின்னபி
ப்ரவிகஸத் யரவிந்த^{3} கோசே। உன்முத்^{3}ரயத்வ மது^{4}னா
நயனாரவிந்த^{3} - / மாமோத^{3}தா மகி^{2}லமம்ப^{3} ஜக^{3}த் த்வயேத^{3}ம்॥

இந்தத் தாமரை மொட்டு மலரும் போதே, இந்தத் தாமரைக் குளம் எவ்வளவு ஆனந்தமடைகிறது! அம்ப, நீயுமுனது கண்ணாகிய தாமரையைத் திற. உன்னால் அகில உலகும் மகிழட்டும்.

ஸுப்ராதமஸ்து மலயத்^{4}வஜ கன்யகாயா: / ஸுப்ராதமஸ்து மது^{4}ராபுரவல்லப^{4}ாயா: । ஸுப்ராதமஸ்து விது^{4}வம்சபதாகி-காயா: / ஸுப்ராதமஸ்து ஹரிதாம் ஜக^{3}தாம் த்ரயாணாம் ॥

மலயத்வஜ கன்யகைக்கு ஸுப்ரபாதம் = நல்ல விடியற்காலம். மதுராபுர நாயிகைக்கு ஸுப்ரபாதம். சந்த்ர வம்சத்தின் ஜயக் கொடிக்கு ஸுப்ரபாதம், திக்குகளுக்கும், மூன்று உலகங்களுக்கும் நல்ல விடியற்காலமிருக்கட்டும்.

இப்படியாகத் தோழிகளால் எழுப்பப்பட்ட தேவி, நித்யம் செய்ய வேண்டியவற்றைச் செய்து கொண்டு, மந்திரியால் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த ஸைன்யத்தைப் புறப்படச் செய்து, அரச கணங்கள் புடைசூழப் புறப்பட்டாள். தேவியின் விஜய யாத்ரையைத் தெரிவிக்கும் தூதர்கள் ஒவ்வொரு திக்கிலும் சென்று திரும்பிவந்து விஷயத்தை மந்திரியிடம் தெரிவிப்பதற் குள்ளேயே அந்தந்த அரசர்கள், தமது பத்னீ-புத்ரர்களுடன் காணிக்கையுடன் தேவியை சரணமடைந்தார்கள். வருகிறவர்கள் - வணங்குகிறவர்கள் - பலவிதக் காணிக்கைகளை எதிரில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்து ப்ரியவார்த்தை பேசுபவர்களை அனுக்ரஹிப்பதின் காரணமாக மார்கத்தில் அடிக்கடி தேவிக்கு விலம்பம் ஏற்பட்டது. தேவி, ராஜ்யலக்ஷ்மியை, தன்னை சரணாகதி செய்த பூபாலர்களிடமும், ரத்னங்கள் தங்கக் குவியல்களை ப்ராம்மணர்களிடமும், கீர்த்தியையும் ப்ரதாபத்தையும் எல்லா திக்குகளிலும் வாரி வழங்கிக் கொண்டு சென்றாள். பாஹுப்ரதாபத்தால் ஜயிக்கப்பட்ட சத்ரு அரசர்களின் ராஜ்யலக்ஷ்மிகள் போலிருக்கிற தோழிகளால் சூழப்பட்டவளாக, தன் முன்னோர்களால் ஆளப்பட்ட பூமியின் எல்லைக்கு அலங்காரமான பனிமலையை அடைந்தாள். அதன் சிகரத்திலிருந்து பூமியில் பாய்ந்து கனகல க்ஷேத்ரத்தைச் சுற்றி ஓடுகிற கங்கையைப் பார்த்ததுமே பூர்வஜன்ம ஸஹோதரி ஸ்நேஹத்தால் உருகிய ஹ்ருதயமுடையவளானாள். பெரும் ப்ரவாஹம், மஹத்தான ஜல ஜந்துக்கள் முன்பு பார்க்கப்படாதது - கேட்கப்படாதது - ஊஹித்துச் கூடப் பார்க்கப்படாததை எல்லாம் சித்ரத்தில் வரையப்பட்டவள் போல் அசையாமல் பஹுநேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ப்ராகே3வ பாண்ட்3யதனயா-ச1 ரணாரவிந்த3 -/ ஸேவானு
ப4ாவசி1ரநிர் ஹ்ரு1த கல்மஷாஸு। ஸேனாஸு தத்ர ஜலமாத்ர
க்ரு1தோபயோக3ா / ஹ்ரீணேவ ஸா ஸரித3வாபத3
வாங்முக2த்வம் ॥

தன்னிடத்தில் ஸ்நானம் செய்வதற்கு முன்பே பாண்டியகுமாரியின் பாதாரவிந்த ஸேவாமஹிமையால் பஹுகாலமாகவே பாபமெல்லாம் தொலைந்து மிகவும் பரிசுத்தமாயிருக்கிற ஸேனைகளிடத்தில், ஸ்நானத்தால் ஸ்தூல தேஹ சுத்தி, தாஹசாந்தி, குளிர்ச்சி உண்டாக்கல், அன்னம் சமைத்தல் முதலியதில் மட்டும் ஸாதாரணமான ஜலம் உபயோகப்படுவது போல் உபயோகப்பட்ட கங்கா நதியானது (மற்றவர்களிடம் உபயோகப்படுகிறதான - பெரும் பாபங்களைப் போக்கும் தனது உயர்ந்த சக்திக்கு இங்கு சிறிதும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உபயோகமில்லாததால்) வெட்கமடைந்தது போல் கீழ்நோக்கி ஓடிற்று. ஸ்வபாவமாக ஜலம் கீழ்நோக்கி ஓடுவதைக் கவி இப்படி வர்ணிக்கிறார். வெட்கப்படுபவர் கீழ் நோக்குவது ப்ரஸித்தம் என்பதை வைத்து உத்ப்ரேக்ஷாலங்காரம். பக் (10) காண்க.

ஸேனை முழுவதையும் ஹரித்வாரம் அருகில் தனித்தனியே நிறுத்திவிட்டு ஸுமதி, கங்கையின் அலைகளை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நிற்கும் தேவியிடம் - 'தாயே! உனது கீர்த்தியைப்போல் ஜகத்தை பரிசுத்தமாக்குகிறவளும், உனது தயையைப்போல் தங்குதடையின்றி ப்ரவஹிக்கிறவளும், உனது மொழியைப் போல் அம்ருத இனிமை - ஆழம் உடையவளுமான - சிவன் ஜடைகளிலிருந்து கிளம்பிய பாகீரதியைப் பார். மோக்ஷமேறப் படிக்கட்டு இவள். பாபக்கடலைத் தாண்ட இவள் படகு. ஸம்ஸார விஷத்தீயின் கொடுமையகல இவள் அம்ருதம். ஜனங்களின் உள்ளிருட்டை (அஜ்ஞானத்தை)ப் போக்கும் நிலா இவள். நீ யார் எப்படிப்பட்டவள் என்பது இவளுக்குத் தெரியும், இவள் யார் எப்படிப்பட்டவள் என்பது உனக்குத் தெரியும். உம்மிருவர் மஹிமையும் நீங்கள் இருவரே நன்கு அறிவீர். பாரதவர்ஷபூமி இவ்வளவு தான். உனது குல பரம்பரையாக வந்த ராஜ்யபூமி இது தான். பாவனமான ஜலமுடைய கங்கையை உனது ஸ்நானத்தால் இன்னும் பாவனமாக்கிவிட்டு இதோடு திரும்புவதே உசிதம்.'' என்று சொன்னான்.

தேவி, 'கங்கைமஹிமை நீ சொன்னபடியேதான். பரம்பரையாக வந்த ஸொத்து கையைவிட்டுச் செல்லாமல் ஸ்திரப்படுத்திக் கொள்வதில் ஏற்படும் புகழ், உண்மையில் புகழில்லை, இகழைத் தடுத்ததேயாகும். அஜ்ஞானமனைத்தையும் தொலைக்கும் இந்த கங்கையில் நீராடி இவளுடைய பலத்தால் (பாரத வர்ஷத்தைத் தவிர) தேவர்கள், ஸித்தர்கள் வஸிக்கிற மற்ற வர்ஷங்களையும் உன் உதவியுடன் ஜயிப்பேன். ஸேனை இங்கேயே இருக்கட்டும்' என்று சொன்னாள். 'ஸேனையும் வரட்டும்' என்றான் ஸுமதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தோழிகளுடன் கங்கையில் பஹுகாலம் விளையாடி ஸ்நானம் செய்து எழுந்து நித்யகர்மாவை முடித்துக் கொண்டு, பாலமாக நெருக்கிக் கட்டப்பட்ட ஆயிரம் கப்பல்களால் கங்கையைத் தாண்டினாள். ஸேனையும் கங்கையில் ஸ்நானம் செய்தது, நீரைப் பருகிற்று, இருந்தும் அதனால் எந்தப் புண்யமும் புதிதாக வந்துவிட்டதாய் நினைக்கவில்லை. ஸூர்யன் தேரிலேயே வஸிப்பவர்க்கு தீபங்களால் என்ன ப்ரகாசம் வரும்? கப்பல் - பாலத்தில் மூன்று நாள் சேர்ந்தாற்போல் இரவுபகலாய்ச் சென்று அக்கரை சேர்ந்தது ஸேனை. மலைமேலேறும்படி ஸேனைக்கு உத்தரவிட்டுவிட்டு தான் ஒரு சிறுதேரில் ஏறிக் கொண்டாள் தேவி. தோழிகள் தேரைச் செலுத்தினர். தேர்க்குதிரைகள் தேவியின் கண்பார்வை - கிரணங்களால் ஸுகமாக பிடித்துக் கொள்ளப்பட்டவையாக மேடுபள்ளம் எதையும் பொருட்படுத்தாமல் பனிமலை சிகரங்களில் ஏறிச் சென்றன. நாணல், தர்பம் காடாக அடர்ந்துள்ள - கங்காப்ரவாஹத்தால் பரிசுத்தமான - மிக அழகியவையான தபஸ்விகளின் ஸ்தானங்களை வலமாக்கிக் கொண்டு மெதுவாய்ச் சென்றாள் தேவி.

ரத்னானி தத்ர வணிஜோ பி^{4}ஷஜோ(அ)க்^{3}ரஹீஷுர் /
தி^{3}வ்யௌஷதீ^{4}ர் க^{3}ஜவரானபி ராஜகீயா: । அஸ்மாத்^{3}ரு^{1}சா:
க்ஷிதிஸுரா: புனராஹரந்த / ப^{4}ாகீ^{3}ரதீ^{2}-தட-ருஹாணி
குசாங்குராணி ॥

வ்யாபாரிகள் அங்கு நிறைந்திருக்கும் ரத்னங்களை எடுத்துக் கொண்டனர். வைத்யர்கள் திவ்யமான மூலிகைகளைப் பறித்துக் கொண்டனர். அரசர்களைச் சேர்ந்தவர்கள் சிறந்த யானைகளைப் பிடித்துக் கொண்டனர். எம்போன்ற ப்ராம்மணர் களோ கங்கைக்கரையில் முளைத்திருந்த இளந் தர்பங்களைக் கொண்டு வந்தனர்.

ஆமுக்த்-கஞ்சு^{1}கமதி^{4} ஜ்ய சராஸ-காண்ட^{3}-/ முன்னத்^{3}த^{4}
குந்தள- நியந்த்ரித-வன்ய-புஷ்பம் । ஸேனா-ரஜோ-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மஸ்ரு1ணிதாலக- ஸுந்த3ரந் தத் / தத்த்வம் பரம் வன ச1ரைரபி தத்ர த்3ரு1ஷ்டம் ॥

சட்டையணிந்து, நாணேற்றிய வில்லுடன், உயர்த்திக் கட்டப்பட்ட கேச பாசத்துள் காட்டிலுள்ள பூக்களைச் சொருகிக் கொண்டு, முன்பக்க கேசங்கள் ஸேனைப் புழுதிபடிந்து வழவழப்பாகி மிக அழகாயிருக்கிற அந்த பரதத்வமானது வேடர்களால் கூட அங்கு காணப்பட்டது. (முனிவருமறிதற்கரிய பரம்பொருள் வேடர்களுக்கும் ஸுலபமாய்க் காணக்கிடைத்தது) வேடர்கள் க்ருஹங்களில் ஸேனைசிப்பாய்களுக்கு கஸ்தூரிமான் மாம்ஸ ஊறுகாயுடன் தேன்கலந்த புதுமூங்கில் ஸக்துமா நல் விருந்து கிடைத்தது. விருந்தினரை வேடர்கள் சாமரத்தால் விசிறினார்கள். ஹிமயமலை வேடர்கள், ஸிம்மம் பிளந்ததால் யானைகளின் மஸ்தகங்களிலிருந்து விழுந்த முத்துக்களை மாலையாக்கி தேவிக்கு காணிக்கையாக்கி, மலையிலுள்ள பலவிதமான ப்ரதேசங்களைக் காண்பித்து தேவியை ஸேவித்தார்கள்.

''இங்குதான் எங்கள் குலபதியை ஒரு மனிதன் வில்லாலடித்தான்'' என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். தூரத்தில் தெரியுமிது தங்க வாழைக்காடு. ஒரு கிழக்குரங்கு (ஹனுமார்) பஹுகாலமாக இங்கே வஸிக்கிறது.

நாச1க்ஷுதே ந நிமிஷந்தி ந நி :ச்வஸந்தி / வல்மீகத : ப்ரஸ்ரு1மரா வபுஷா து மர்த்யா:। ஸந்தி த்3ருமா இஹ சதந் த3ள புஷ்ப-ஹீனான் / சி2த்த்வா நயாம யதி3 தே3வி தி3த்3ரு1க்ஷஸே தான் ॥

''பேசுவதில்லை, கண் இமைப்பதில்லை, மூச்சு விடுவதில்லை. புற்றிலிருந்து வெளிவந்தவை. மனித உடல் படைத்தவை. நூறு (= நிறைய) மரங்கள் இங்கு உள்ளன. இலையோ பூவோ இல்லாதவை. நீ பார்க்க விரும்பினால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவற்றை வெட்டிக் கொண்டு வருகிறோம்.'' என்று வேடர்கள் தேவியைப் பார்த்துக் கூறினர். (புற்று மூடும்படி, அசையாமல், பேசாமல், இமைக்காமல், மூச்சுவிடாமல் தபஸ்செய்வோரை மனித உருக்கொண்ட மரங்கள் என்றே நினைக்கிற வேடர்களின் அறியாமையை அழகுறச் சொல்லியிருக்கிறார்.)

'எங்கள் கோத்ரத்துக்கே பிதாமஹீ - கடந்தது, வரப் போகிறது அனைத்துமறிந்தவள் - வில்தேற்சியுள்ளவள் - 'அம்பிகை' என்று இருக்கிறாள். காந்தி, வாக்கு, கருணை, தோள்வலிமை, எல்லாவற்றையும் பார்த்தால் அவளே தான் நீ. கண்கள்மேல் ஆணையிட்டுச் சொல்கிறோம். உனது கையைக் காட்டினாயே, இந்தக் கைபலத்தால் ஜயிக்கப்பட்டவன் தான் உனது கணவன் ஆகப்போகிறான், வேடஸ்த்ரீகள் சொல்வ தெல்லாம் உண்மையே என்று அறிந்து கொள் (= எங்கள் வார்த்தை நிச்சயம் பலிக்கும்). ஒருபோதும் எங்களைப் பட்டணத்து ஜனங்களைப் போல் எண்ணாதே' என்றனர், வேட்டுவஸ்த்ரீகள். பார்வதி-பரமேச்வரர்கள் வேட உருவில் அர்ஜுனனுக்கு அருள வந்ததால் 'கோத்ரபிதாமஹீ' என்றனர்.

இவ்வாறு வேடதம்பதிகளெல்லாம் சொல்லவதைக் கேட்டு புன்சிரிப்படைந்தனர் தேவியின் தோழிகள். வேடர்களுக்கு 'ஒருபோதும் மனித-மரங்களை வெட்டாதீர்கள்' என்று உத்தரவிட்டுவிட்டு தேவி மெதுவாக ஹிமகிரியைத் தாண்டிச் சென்றாள்.

கிம்புருஷ வர்ஷத்திற்குச் சென்றனர். அங்கு சென்றதும் ஸேனைகளுக்குப் பசி, தாகம், ப்ரயாணச்ரமம், வியர்வை எதுவுமேயில்லை. அங்குள்ளோர்க்கு மேகஜலமே தெரியாது. பயிர்வகை கேள்விப்பட்டதேயில்லை. பணம் சேர்த்தல் தானம் இரண்டினுடைய வார்த்தைகூடக் கிடையாது. ஆச்சர்யமா யிருந்தது. கப்பம் வாங்க வழியில்லை. / அம்ருதத்தைவிட இனிமையான ஸ்வச்சமான ஜலம், நல்ல வாஸனையுள்ள பலவித

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மரங்களின் பழங்கள் எல்லாவற்றையும் பார்த்ததிலேயே த்ருப்தி பூர்ணமாய் ஏற்பட்டுவிட்டது. ஆவலினால் சிலர் அவற்றை எடுத்துக் கொண்டனர் - சாப்பிடுவதற்கல்ல. / அத்புதமான மரங்கள், கொடிகள், பசுபக்ஷிவகைகள் தேவஸ்த்ரீகளை ஒத்த ஸ்த்ரீகள் அங்கு இருந்தபோதிலும் சுத்தஸத்வமயமான பூமியான படியால் ஸேனாவீரர்களுக்கு எதிலும் ஆசை வரவில்லை. / அங்கு தமது ஜடையிலேயே கூடுகட்டி, அதில் ஸுகமாய்த் தூங்கி, விழித்துப் பக்ஷிகள் சப்திப்பதைக் கேட்டுக் களைப்பாறுகிற - தன்யர்களான அத்யாத்ம யோகிகளை அனுக்ரஹித்துக் கொண்டு ஜகன்மாதா மெதுவாகச் சென்றாள். பஹுகாலமாக முனிவர் குழாத்தாலே மிக சிரமப்பட்டு மனஸுக்குள் த்யானத்தாலே நீவார தான்யத்தின் முனைபோல் மெல்லியதாக எந்த ஆத்மதத்வம் பார்க்கப் பட்டதோ, அதுவே கோடிபாலஸூர்ய ப்ரகாசமாய் ஸ்த்ரீ ரூபமாக வில்லேந்திக் கொண்டு காணப்பட்டது. கிழங்கோ, பழமோ, ஜலமோ முனிவர்கள் அளித்ததை வாங்கி உண்டாள் அம்பிகை. ஹேமகூடம் வழியாக ஹரிவர்ஷம் சென்று அதற்கு வடக்கில் நிஷதமலையில் ஏறினாள். மலையில் மேற்கு வழியாக மேருவைச் சுற்றிக் கொண்டு கேதுமால வர்ஷத்தை அடைத்து யக்ஞவராஹ மூர்த்தியை வணங்கினாள். நீல - ரம்யக - ஹிரண்மய - ச்வேத - ச்ருங்கி மலைகளைக் கடந்து உத்தர குருதேசத்தை அடைந்து மத்ஸ்ய மூர்த்தியை வணங்கினாள். வடக்கு ஸமுத்ரத்தைக் கண்டாள். இந்த வர்ஷங்களில் (பாரதமில்லாத வர்ஷங்களில்) முனிவர்கள் இலையை உண்பவராகவும் நகரத்தோர், பலா - மா - நாவல் - இச்சிப் பழங்களை உண்பவராகவும் இருந்ததால் அவர்களிடம் கப்பம் வசூலிக்க முடியாமல் தேவி ஸமுத்ரத்திடமிருந்து காணிக்கை பெற நினைத்தாள். கையால் நாண்கயிற்றைத் தொட்டு அம்புராத் தூணியில் பார்வையைச் செலுத்துவதற்குள் பலவித காணிக்கைகளை எடுத்துக்கொண்டு வந்து ஸமுத்ரதேவன் தேவியை சரணடைந்து, கூறலானான்:—

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'முத்து நதி தென்ஸமுத்ரத்தில் ப்ரவேசிக்கிறது. தங்கமயமான ஜம்பூநதி கிழக்கு ஸமுத்ரத்தில் ப்ரவேசிக்கிறது. நானோ வெற்று ஆள், இது விஷயத்தில் இதோ மத்ஸ்யராஜர் - வேதங்களைத் தேடி மீட்பதற்காக எனது உள்பாகம் முழுவதும் பரிசோதித்துப்பார்த்தவர் - இருக்கிறாரே, இவரே ஸாக்ஷி. நீ ஸத்யப்ரியை, சரணாகதவத்ஸலை என்று, நெடுங்காலமாய்க் காப்பாற்றி வைத்திருந்தது இவ்வளவு கொண்டுவந்திருக்கிறேன். மைநாக மலையிலுள்ள யானைகள் இவை. கபஸ்திமான் என்ற த்வீபத்தில் இருந்தது இந்த ரத்ன கணம், மேற்கு ஸமுத்ரத்திலிருந்து இந்த சங்குகள் கொண்டு வரப்பட்டன. கரும்பு ஸமுத்திரத்திலிருந்து ஆமைகள் - மீன்கள் - வெல்லப்பாகு கொண்டுவரப்பட்டன. புது நெய்மகரங்கள் நெய்ஸமுத்ரத்திடம் யாசகமாய்ப் பெற்றவை. மூப்பு - நரை - பிணிதீர்க்கும் திவ்யமான ஸுரை, ஸுரா ஸமுத்ரத்திலிருந்து கொண்டுவந்தது - மணமுள்ளது. தயிர் ஸமுத்ரத்திலிருந்து இந்த வெண்ணெய் கொண்டுவரப்பட்டது. இது இங்கு இருப்பதை இதுவரை அந்த நவநீதசோரனும் அறியவில்லை. க்ஷீரஸமுத்ரம், பாலையே உணவாகக் கொண்ட விமலமான குதிரைகளையும் யானைகளையும் கொடுத்தது. சந்த்ரகலா ஒன்று இருந்தது. அதை முன்பே சிவனுக்குக் கொடுத்தாய் விட்டது. சில ஸ்த்ரீகள் இருக்கிறார்கள். உனது ஸகீகளைப் பார்த்துவிட்டதால் (இவர்கள் அவர்களைவிட அழகாயிருப்பதால்) அந்த ஸ்த்ரீகளைக் கொண்டு வரவில்லை. நீயே காமதேனு, நீயே கல்ப்ப லதை. ஆகையால் அவ்விரண்டையும் கொண்டு வரவில்லை. தாம்ரபர்ணீ ஜலபானஸுகம் அனுபவித்தவருக்கு அம்ருதத்தால் ஒன்றும் ஆகவேண்டியதில்லை. ஸமுத்ரமணிகளுக்குள் கௌஸ்துபமும் சிந்தாமணியும் ப்ரஸித்தமானவை, இந்த மணிமாலை வேறுவிதமானது. உனது விவாஹோத்ஸவத்தில், எனது க்ஷேமத்திற்காக இதை அணிந்துகொள்' என்றான். இவ்வாறு காணிக்கைகளை அறிவித்து கையில் மணிஹாரத்தை அளித்து வணங்கிய ஸமுத்ரராஜனை ஸுமதியைக் கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுப்பி அம்ருதத்தில் நனைத்த வார்த்தைகளால் தேவி - ''எனது ஸகீ லக்ஷ்மீக்குத் தந்தையானபடியால் முறைப்படி எனக்கும் தந்தைதான் தாங்கள். உங்களால் இந்த ஆபரணம் கொடுக்கப்பட்டது'' என்று கூறிக் குளிர்ந்த பார்வையால் ஸமுத்ரராஜனை மகிழ்வித்தாள். பத்ராச்வ வர்ஷம் சென்று ஸீதா நதியைக் கடந்து அதன் கரையில் தபஸ் செய்யும் ஹயக்ரீவரை வணங்கினாள். அவரிடமிருந்து தடையற்ற விஜயத்தை வரமாகப் பெற்றுக் கொண்டு இளாவ்ருத வர்ஷத்தில் ஜம்பூநதி உத்பத்திஸ்தானத்தை அடைந்தாள். ஜம்பூநதி ஜலம், பாசி, நுரை, தாமரைப் புஷ்பம், உத்பல புஷ்பம், சங்கு, வண்டு, ஹம்ஸம் எல்லாமே தங்கம். அதனதன் உருவைக் கொண்டுதான் தனித்துத் தெரிந்து கொண்டனர். எல்லாவற்றின் நிறமும் மஞ்சள் ஆனதால் நிறத்தினால் பிரித்து அறிய முடியவில்லை.

ப்ரதிகரி-பரிசங்கி-தத்^{3}வாஹினீ-க^{3}ந்த^{4} - த^{3}ந்தாவள - /
ப்ரதிஹதி-சிதி^{2}ல-க்ஷரஜ்-ஜம்பு^{3}-ஸம்பூ^{4}த பூ^{4}ரித்^{3} ரவா ।
ஸரிதி^{3} யமபி^{4} தோ(அ)பி ஸம்ப்லாவயந்தீ வனந் தீரயோ -/
ரக்ரு^{1}த க்ரு^{1}த-நிவேசமஸ்மின் ப^{3}லம் ஹைமமே வாகி^{2}லம் ॥

தடாதகையின் ஸைன்யங்கள் ஜம்புநதியின் இருகரைகளிலும் முகாமிட்டிருந்தன. எதிரி யானை என்று எண்ணிக் கொண்டு தங்கமயமான நாவல்மரத்தை தடாதகையின் ஸைன்யத்து யானைகள் முட்டியதால் சிதிலமாய்ப் போய்க் காயமடைந்த அம்மரத்திலிருந்து இங்குமங்குமாக நிறைய நிறைய வெளிவந்த தங்க த்ரவப்பெருக்கு சேர்ந்து கொண்டதால் ஜம்பூநதி, வெள்ளம் அதிகமாகி இருகரையும் மூழ்கச் செய்து தடாதகையின் ஸைன்யம் முழுவதையும் தங்கமயமாக்கியது.

மேருசிகரத்தின் நுனிபாகத்திலுள்ள இந்த்ராதி திக்பாலகர்களை ஜயிப்பதற்காக தேவி, ஸைன்யத்துடன் உயரக்கிளம்பினாள். தனது ஸைன்யம் பொறுக்க முடியாமல் பயந்து ஓடுவதைத் தடுக்க முடியாமல், இந்த்ரன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதிகோபத்துடன் தானே வந்தான். தேவி அவனுக்கு எதிரில் தன் தேரைச் செலுத்தினாள். ஸுமதி தேவியை நமஸ்கரித்து ஸமாதான வார்த்தைகள் சொல்லி நிறுத்தி, தான் முற்பட்டான். தேவி ஜயாசிகள் வழங்கினாள். 'மீனாக்ஷி ஜயதி' என்ற ஒரே மந்த்ரத்தால் இந்த்ரனை திணறவைத்துச் செயலற்றவனாக்கி, தேவி முன் நிறுத்தினான். ஸுமதி. இந்த்ரன் தேவியை சரணடைந்து 'திடீரென்று மனுஷ்ய ஸைன்யம் வருகிறதென்ற கோபத்தால், அது உன்னுடையதென்று அறியாமல் சிறிது நேரம் சண்டையிட்டுவிட்டேன். மன்னிப்பாய்.' என்று வேண்டி, காமதேனு - அப்ஸரஸ்கள் - கல்ப்பவ்ருக்ஷங்கள் - மஹாமணி - யானை - குதிரையுடன் தேவராஜ்யத்தையே ஸமர்ப்பித்து, 'இந்த தேவ ராஜ்யம் நூற்றுக்கணக்கான தடவை ஸஹாயமாக வந்து அஸுரர்களை அழித்து உனது பிதா - மலயத்வஜனால் காப்பாற்றப்பட்டது. இதை நீ எடுத்துக் கொண்டு, உனக்குக் கிங்கரனாயிருக்கும் நிலையை அருள்; அல்லது முன்போல் என்னையே ஆளும்படி ஏவு' என்றான். தேவி, கருணை நோக்கால் அனுக்ரஹித்து 'நீ ஸமர்ப்பித்ததைப் பெற்றுக் கொண்டு உனக்கே திரும்ப அளித்துவிட்டேன். பயமின்றி நீ ஒருவனே ப்ரம்மாவின் பகல் முழுவதும் இந்த்ரனாக இரு' என்று கூறி, ஸுந்தரேசரின் அபிஷேகம் - பூஜைக்காகக் காமதேனு வையும் கல்ப்பதருக்களையும் உடன் அனுப்பும்படி சொல்லிவிட்டுக் கிளம்பினாள். / 'அக்னியிடம் சண்டைக்குச் செல்லாதே, ஸேனையை நிறுத்து. என் தந்தை அவர்' என்று ஸுமதியிடம் கூறினாள். அதற்குள் மங்களத்ரவ்யங்களுடன் அக்னியே எதிர்கொண்டார். ரதத்திலிருந்து இறங்கி ஸந்தோஷமாய் அக்னியை வணங்கி அவர் கொடுத்த காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டாள். அக்னியின் பத்னீ - ஸ்வாஹாதேவி, ஜம்பூ நதிக்கரை (தங்க ஜலமுள்ள நதி அது) மஞ்சள், நீலமலை சிகரத்திலிருந்து கொண்டுவந்த கண் மை, ஜ்வலிக்கும் வஸ்த்ரங்கள், மணிகள் இவைகளைத் தனியே தானும் காணிக்கையாக அளித்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'உனது விவாஹத்தில் நான் ஸாக்ஷியாயிருக்க ப்ரார்த்திக்கிறேன்' என்று கூறிய அக்னிக்குப் புன்சிரிப்புடன் விடையளித்துவிட்டுக் கிளம்பினாள். / 'ஒருபோதும் மதுராபுரீ ஜனங்கள் கண்ணில் படாதீர்கள்' என்று யமன் நித்யம் போதித்திருந்ததால், மீனாக்ஷிஸைன்யத்தைப் பார்த்ததுமே யமபடர்கள் ஓடிவிட்டனர். முன்னால் சென்ற ஸுமதி அங்கங்கு நரகத்திலிருந்தவர்களை எல்லாம் தன் பார்வையாலேயே கரையேற்றிவிட்டான். பக்தன் பார்வையில் பட்டவர்க்கெல்லாம் நல்லகதி என்பது ஜகன்மாதாவின் மஹிமையாகும். உலக்கை - பாசம் தரித்த யமபடர்களாலும் ரோகங்களாலும் சூழப்பட்டவனாய் தூரத்தில் கை கூப்பி யமன் நிற்பதைக் கண்டாள் தடாதகை தேவி. ஸுமதியின் அனுமதியின் பேரில் யமன் அருகில் வந்து, தேவியின் பாதத்தில் வணங்கி எழுந்து, தனது கதாயுதத்தை ஸமர்ப்பித்து வினயமாய் - 'உன் வசத்திலுள்ள பாரதபூமியில் பாபம் செய்வோர் கிடையாது. முன் பாபத்தால் நரகத்திலிருந்தோரும் ஸுமதியால் கரையேற்றப் பட்டனர். ஆகவே இங்கு எனக்கு வேலையில்லை. ஓய்வுதான். வேலையின்றி இங்கு இருப்பானேன். எனது ஸைன்யத்துடன் கூட உனது ஸைன்யத்தின் முகப்பில் ஸஞ்சரிக்கிறேன். உன் எதிரிகளிடம் என்னை ஏவு' என்று கூறினான். ஸுமதி யமனைப் பார்த்து புன்சிரிப்புடன் 'யுத்தத்தில் எமக்கு எதிரில் வருவோரே கிடையாது. யாராவது வந்தாலும் அவர்கள் ஸ்வர்கத்துக்கு விருந்தினராவார்கள். உன்னிடம் வரமாட்டார்கள். நீ ஓய்வெடுத்துக் கொள்வது தான் ஸரி' என்று சொன்னான். / தேவி யமனை அனுப்பிவிட்டு விஜயயாத்ரை தொடர்ந்தாள். நிர்ருதி, காணிக்கை செலுத்தி வணங்கினான். அவனையும் விடுத்து வருணனை நோக்கிச் சென்றாள். வருணன், சங்கு, பவழம், தாமரை, முத்து, நரை - ரோகங்களைப் போக்கும் வாருணீ எனப்படும் கள்ளு, பச்சைக் குதிரைகள் எல்லாவற்றையும் ஸமர்ப்பித்துக் காலில் விழுந்தான். அவனை அனுக்ரஹித்து விடைகொடுத்து வாயுநகரத்தை நோக்கிப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புறப்பட்டாள். மலயமலையிலிருந்து வீசும் தென்றல் காற்றை (= பாண்டியதேசத்தில் பழக்கமானதை) முன்னிட்டுக் கொண்டு பாரிஜாத புஷ்பங்களைக் காணிக்கையாக்கி, மற்ற வாயுக்களும் தேவியை ஸேவித்தன. ஸுமதி ஒவ்வொரு வாயுவின் குணவிசேஷங்களையும் தேவிக்குச் சொன்னான். தேவியால் தயவுடன் அனுப்பப்பட்டுத் தன்தன் சேஷ்டைகளை தேவிக்கு வேடிக்கையாகக் காட்டிக்கொண்டு வாயுக்கள் இருப்பிடம் சென்றன.பிறகு குபேரனை நோக்கிச் சென்றாள். வழியிலேயே குபேரன் எதிர்வந்து சங்கம், பத்மம், மகரம் முதலிய நிதிகளை ஸமர்ப்பித்து கனகரத்ன ராசிகளையும் கொடுத்து வணங்கி 'உத்தமமான வரன் (= சிவன்) இன்னும் சில அடிகள் சென்றால் உனக்குக் கிடைப்பான்' என்று சொன்னான். வரநிதி என்று நவநிதிகளில் ஒன்று. அதைத்தவிர எட்டு நிதிகளைக் கொடுத்து விட்டு வரன் சில அடிகள் சென்றால் கிடைப்பார். = சிவன் கிடைப்பார். வரநிதி கிடைக்கும் என இரு பொருளில் கூறினான். அவனையும் அனுப்பிவிட்டு பரமேச்வரன் ஸன்னிதியைக் குறித்துக் கிளம்பினாள். / அவ்வளவு ஸைன்யத்தையும் பொருட்படுத்தாமல் தானே யுத்தத்திற்குத் தயாரானாள். சிவன் நகரமருகில் ஸேனை ஸிம்மநாதம் செய்தது. முரசொலி, யானைப் பிளிறல், குதிரை கனைத்தல் எல்லாமாக, ஸிம்மநாதத்தைப் பெரிதுபடுத்தின. அதைக் கேட்டு நந்தி வெகுண்டார், பரமசிவனோ மகிழ்ந்தார். நாத தத்வத்தைப் புரிந்துகொண்டு களிப்புவர் சிவனைத் தவிர வேறு யாருமில்லை. / தனது ப்ரமதஸேனையுடன் சிவனருகில் வந்து நந்தி கோபத்தால் ஜ்வலித்துக் கொண்டு மனுஷ்யஸேனை வந்திருப்பதைத் தெரிவித்தார். 'கர்பத்திலிருந்தேயும் பரம்பரையாகவேயும் தங்களுக்கு தாஸர்களாயிருந்து வந்த பாண்டிய பூபாலர்களில் குலசேகரனையும் அவன் புத்ரன் மலயத்வஜனையும் அறிவீர். அந்த மலயத்வஜனின் பெண் தடாதகை, குழந்தைப் பருவம் சிறிது நீங்கியதுமே, புல்லுக்கட்டுகள் போல் நரஸேனையை செலுத்திக் கொண்டு இங்கு வருகிறாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனுஷ்யர்களுக்கு அடங்கக் கூடிய சிலரிடமும், அவரே போன்ற சில மட்டமான தேவர்களிடமும் தன் பராக்ரமத்தைக் காட்டிவிட்டு என்னைக் கூட மதிக்கவில்லை. அவளை பூமிக்கு ஓடச் செய்து அவளைத் தொடர்ந்து வந்த சில தேவாதமர் களையும் தாபஸர்களையும் தண்டிப்பேனாக' என்று இவ்வாறு கூறி தண்டம் போல் விழுந்து வணங்கினார். / சிவன் புன்சிரிப்புடன் 'அவளைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தவறின்றி மிக கவனமாக அவளை எதிர்த்துச் சென்று க்ஷேமத்துடன் மறுபடியும் என்னிடம் வந்துசேர்' என்றார். நந்தியோ அந்த வார்த்தை, அந்தப் புன்சிரிப்பு ஒன்றையும் சிந்தித்துப் பாராமல், ஏழுகோடி ப்ரமதஸேனாநாயகர்களுடன் வெளிவந்தார். ஏழு கண்ணுடையோர், மூன்று மூக்குடையோர், ஆறு முகமுடையோர், இருவயிறர், பத்துக் காலர், அறுபது-எழுபது கையுள்ளோர், ஜ்வலிக்கிற கேசமுள்ளோர், மொட்டையர், சிகையுள்ளோர், ஜடைதரிப்போர், கை காலில்லாதோர், தலையற்றோர், வயிற்றில் முகமுள்ளோர், தலையில் காலுள்ளோர், தணல் கண்ணர், விஷங்கக்குவோர், தொங்கு நாக்கர், தொங்குமுதடுடையோர், கருப்பர், சிவப்பர், கொம்பு - இறக்கை - அலகு உடையவர், புலிக்காலர், யானைக்காலர், குதிரைக்காலர், காக்கைக்காலர், மரம் - மலை - கல் - நகங்களை ஆயுதமாய்க் கொண்டோர், கரடி - குரங்கு - செந்நாய் - பாம்பு - புலி - சிங்க - சரப - யானை முகத்தோர் இப்படிக் கூட்டம் கூட்டமாக பூதகணங்கள் அட்டஹாஸத்துடன் வெளிவந்து ஒரு க்ஷணத்தில் குதிரைகளை ஓடவைத்து, யானைகளைச் சுழற்றி, சிப்பாய்கள் இருக்குமிடம் தெரியாமற் செய்து, மந்திரியையும் செய்வதறியாது மோஹிக்கச் செய்தனர். அவர்கள் தொடைவேகத்தாலேயே காலாட்களை தூரத்தில் சென்று விழும்படி பறக்கச் செய்தனர். 'ப்பூ' என்று வாயால் ஊதியே யானை - குதிரை கூட்டங்களை பறக்கச் செய்தனர். கை தட்டும் காற்றாலேயே தேர்களை ரணகளத்திலிருந்து பஹு தூரத்தில் வீழ்த்தினர். சிறு தீபத்தைப் பேய்க்காற்று போலவும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காய்ந்த புதரை காட்டுத் தீ போன்றும், இருள் கூட்டத்தை ஸூர்யோதயம் போலவும் ப்ரமத ஸைன்யம் நரஸேனையை அழித்தது. யுத்தவேடிக்கை காணவந்த ஸித்த - சாரண - தேவ - நாகர்கள், அப்ஸரஸ்களின் பின்புறம் வழியாக பூதகணங்கள் கண்ணில் படாமல் ஓடினர். / நரஸேனையை ஓடச்செய்து சிவகணங்களுடன் நந்தி முன்னேறியதும், வில்லேந்தி, களித்த முகத்துடன் தேவியின் தோழியர் எதிர்ப்பட்டனர். தான் யுத்தம் செய்யத் தகுந்த எதிரி கிடைக்காததால் யுத்த ஆவல் குறைந்திருந்த அம்பிகை, தோழிகளின் முயற்சியைப் பார்த்து இப்போது நாணேற்றிய வில்லை எடுத்துக் கொண்டாள். இருட்டில் ஸூர்யகிரணங்கள் விழுவது போல் தோழிகளின் பாணங்கள் ப்ரமதகண மண்டலமெங்கும் பாய்ந்தன. முன்பே பார்க்க விகாரமாயிருந்த ப்ரமத ஸைன்யத்தைத் தமது பாணங்களால் இன்னும் விகாரமாக்கி அந்த வேஷத்தைப் பார்த்துத் தோழிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு விளையாடினர். தேவிதோழிகளின் பாணங்களால் அடியுண்டு கைச் சூலம் நழுவி, தோமரம் பிளக்கப்பட்டு, கதை நொறுங்கி, வில் தூர எறியப்பட்டு சிவகணங்கள் நந்திகேசரை சரணடைந்தனர். ஓடுங்கணங்களைத் தடுத்துக் கொண்டு, தேவியின் தோழிகளை அதட்டிக் கொண்டு வந்த - இரண்டாவது சிவன் போலிருந்த நந்திகேசர், எதிரில் தேவி ரதத்திலிருப்பதைக் கண்டார். தோழிகள் அவரை தயவின்றி அடித்தனர். அம்பிகை மிக மெதுவாக அடித்தாள். மாதாவின் கையிலிருந்து வரும் பாணங்கள் குழந்தையை மர்ம ஸ்தானத்தில் அடிக்குமா? தன்னையறியாமலே 'ஸ்வாமினியே' என்றும் 'தாயே' என்றும் வாயில் வார்த்தை வர, அடிக்கடி பலாத்காரமாக அஞ்ஜலிபந்தம் பண்ண முயற்சிக்கிறதான கையால் ஒரு க்ஷணம் யுத்தம் புரிந்தார், நந்திகேசர். உண்மையில் அம்பிகையின் வில், கரும்பென்றும் பாணங்கள் புஷ்பங்களே என்றும் சாஸ்திரங்கள் கூறுவதால், அவள் விடுத்த பாணங்களால் நந்திக்குப் ப்ராணவியோகம் ஏற்படவில்லை. / எல்லாமறிந்த நந்திகேசர்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யுத்தத்திலிருந்து உடனே திரும்பி சிவனிடம் சென்று பாதங்களில் விழுந்து பலமுறை வணங்கி, 'அவளுடன் சேர்க்கை தான் தங்களுக்கு உகந்தது, ஒரு போதும் சண்டை உகந்ததல்ல - வாருங்கள், செல்வோம்' என்றார். புன்சிரிப்புடன் நந்தியின் கையைப் பிடித்துக் கொண்டு வெளிவந்தார் மஹேசன்.

பாண்ட்^{3}யராஜது^{3}ஹிதுர் ஹி த^{3}க்ஷிண: / ப்ராஸ்பு^{2}ரத்
ஸமரகர்மணே பு^{4}ஜ: । வீக்ஷிதே து வ்ருஷப^{4}த்வஜே விப^4ா-/
வஸ்பு^{2}ரத் ஸ்வயமத^{3}க்ஷிணோ பு^{4}ஜ: ॥

பாண்டிய ராஜ புத்திரியின் வலதுகை யுத்தம் புரியத் துடித்தது. பரமேசனைப் பார்த்தவுடனேயே இடதுகை துடித்தது. ✿சுபசகுனம். பக்47 கடைசிவரி காண்க.

ஆதி^{3}மம் ரஸமிவாத்த விக்^{3}ரஹம் / த்யக்தரௌக்ஷ்யமிவ
தேஜஸாந் நிதி^{4}ம் । ஸா த^{3}த^{3}ர்ச சரதி^{3}ந்து^{3}ஸுந்த^{3}ரம் /
புங்க^{3}வே புரஹரம் ஸநந்தி^{3}னம் ॥

ச்ருங்கார ரஸமே உருவெடுத்துவந்தது போலும், ஸூர்யன் தனது உக்ரத்தன்மையை விட்டுவிட்டு வந்தது போலுமிருக்கிற - சரத்கால சந்த்ரன் போல் அழகான சிவன், நந்தியுடன் கூட வ்ருஷபத்தின் மேலிருப்பதைப் பார்த்தாள் தேவி. கையிலிருந்து வில் நழுவிற்று. அவரைத் தழுவிக்கொள்ள மனம் பறந்தது. உடம்பெங்கும் மயிர்க் கூச்சல் எழுந்தது. மார்பில் அதிகமாக இருந்த (மூன்றாவது) ஸ்தனம் அமுங்கிப் போயிற்று. (தேவி யாகாக்னியிலிருந்து உதித்தபோது மூன்று ஸ்தனங்களுடனிருந்ததைக் கண்டு மலயத்வஜனும் காஞ்சனமாலிகையும் கவலையுற்றபோது ஆகாசவாணி 'கவலைவேண்டாம், தடாதகா என்ற பெயருடைய உமது குமாரியை, அவளுக்குப் பதியாக வரப்போகிறவன் பார்க்கும் போது அதிகமான அங்கம் மறைந்துவிடும்' என்று கூறிய படியே இப்போது நேர்ந்தது.) அவளைப் பார்த்ததும் தன் வசமிழந்தார் சிவன். நந்தியும் பாணம் விழுமோ என்று நடுங்கிக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டிருந்தார். அந்தஸமயம் பார்த்து மன்மதன் தனது பழைய கோபத்தைத் தீர்த்துக் கொண்டான். மூவுலகும், 'இந்த குமாரி எப்படி யுத்தம் பண்ணப்போகிறாள், இந்த சிவன் எப்படி யுத்தம் பண்ணப்போகிறார்' என்று பார்க்க விரும்பும் தருணத்தில் இருவருமே யுத்தம் பண்ணவில்லை. மாறுதலாக இருவரையுமே மன்மதன் அம்புக் கூட்டங்களை வாரி இரைத்துத் தாக்கினான். பரமசிவனை ஜயிக்க ஒரே குறிதவறாத அம்பு, தேவிதான் என்று அறிந்து, முன்பு தேவியைக் கொண்டு சிவனை ஜயிக்கமுயன்று தோற்றான். இப்போது அவளாலேயே ஜயித்துப் பெரும் புகழடைந்தான். காலம் தான் ஜயத்துக்குக் காரணம்.

தஸ்தம்பி[4]ரே ச[1] முமுஹுச்[5]ச[1] ச[1]கம்பிரே ச[1] / வித்ராஸிதா யுதி[4]
தயா ப்ரமத[2]ா: ஸமஸ்தா: । ஸத்[3]யோ த[3]சா பரிணதா நனு
சைவ தஸ்யாங் / கஸ்யாபி ஜீர்யதி ந சைவஜனாபச[1]ார: ॥

அவளால் யுத்தத்தில் பயமுறுத்தப்பட்டு, ப்ரமதர்கள் அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள், மோஹமடைந்தார்கள், நடுங்கினார்கள். அதே தசை உடனே அவளிடத்தில் (சிவனைப் பார்த்ததால்) ஏற்பட்டது. சிவனைச் சேர்ந்தவர்களிடத்தில் செய்த அபசாரம் யாருக்கும் ஜரிக்காது. (முதல் ஸந்திப்பு காரணமாக ஏற்பட்ட ஸ்தம்பம் - மோஹம் - நடுக்கங்களை துர்வினைப் பயனாக ஏற்பட்டவை என்று அழகாக வர்ணித்துள்ளார்.)

எதிரில் சிவனைக் கண்டதும் தேவியின் மூன்றாம் ஸ்தனம் மன்மதனுடைய ஒற்றன் போல் எப்போது உள்ளடங்கிற்றோ, அப்போதே ஸுமதியால் கூப்பிடப்பட்டு சிவன் தேவியருகில் வந்தார்.

த[3]த்[3]ரு[1]சே கில புஷ்பவர்ஷமேகம் / ப்ரகடம் மூர்த்[4]னி தயோஸ்
தத[3]ா ப்ரவ்ரு[1]த்தம் । ஹ்ரு[1]த[3]யஸ்த[2] பரஸ்பராதி[4]க[3] ம்யம் /
வவ்ரு[1] தே ச[1]ாந்தரமாங்க[3]ஜந் தத[3]ந்யத் ॥

எல்லாருமறிய இருவர் சிரஸிலும் ஒரு புஷ்ப வர்ஷம் விழுந்தது. சிவனது ஹ்ருதயத்திலுள்ள தேவிக்கும், தேவியின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஹ்ருதயத்திலுள்ள சிவனுக்கும் மட்டும் தெரியக்கூடிய இன்னொரு புஷ்பவர்ஷம் மன்மதன் விடுத்தது உள்ளே நடந்தது. தேவியின் குனிந்த முகத்தைக் கையினால் நிமிர்த்தி மஹேசன் 'தேவி, இதோ பார். ஏன் வெட்கப்படுகிறாய்? யுத்தத்தில் உன்னால் நாம் ஜயிக்கப் பட்டு விட்டோம், உனது எண்ணம் புரிகிறது. புரிந்து கொள்ள வேண்டியது மீதி ஒன்றுமில்லை. இருந்தாலும் வாயால் உன்னைக் காஞ்ச^{1}ன மாலிகாம் (= ஏதோ ஒரு மாலையை) யாசிக்கிறேன்' என்றார்.

இப்படியாகப் புன்சிரிப்புடன் சிவன் கூறவும் உடனே தேவி ஸாமர்த்யமாக ரஸம் ததும்ப 'அப்படியே செய்யுங்கள்' என்று பதிலளித்தாள். ('என்னிடம் உனக்கு மிகுந்த அனுராகமிருப்பது நன்கு புரிந்த போதிலும் (காஞ்சன = ஏதோ ஒரு, மாலிகாம் = மாலையை) எனக்குக் கொடு என்று உன்னை வாய்விட்டு யாசிக்கிறேன்' என்று சிவன் சொன்னதை, '(உன் தாயார்) காஞ்சனமாலையிடம் (சென்று) உன்னை எனக்குக் கொடுக்கும்படி வாய்விட்டுக் கேட்கிறேன்' என்று அவர் சொன்னதாகத் தனக்கு அனுகூலமாக எடுத்துக் கொண்டு தேவி திறமையாய்ப் பதிலளித்தாள். இருபொருளுக்கும் இடமிருப்பது ரஸிக்கத்தக்கது.

க^{4}டித மகி^{2}லம் ஜ்ஞாதோ ப^{4}ாவோ ந கிஞ்ச^{1}ன சேஷிதம் /
தத^{3}பி ப^{4}வதீம் வாச^{1}ா யாச^{1}ாமி காஞ்ச^{1}ன மாலிகாம் ।
இதி நிக^{3}த^{3}தி ஸ்மேரே சம்பெ^{4}ள ரஸோத்தர முத்தரஞ் /
ச^{1}துரமவத^{3}த் ஸத்^{3}யோ ப^{3}ாலா தத^{2}ா க்ரியதாமிதி ॥

சிவனும் அந்த வாக்ஸாமர்த்யத்தை உணர்ந்து 'அப்படியே செய்கிறேன். நீ இப்போதே திரும்பிச்செல். வரும் ஸோமவாரத்தில் மதுரைக்கு வருகிறேன். ஏற்பாட்டுடன் இரு' என்று புன்சிரிப்புடன் கூறி அந்தர்தானமடைந்தார் (=மறைந்தார்). தேவியையும் மனஸினுள் வைத்துக்கொண்டார் – 'அந்தர் த^{3}தே^{4} தாமபி' என்று அழகாய்க் கூறியிருக்கிறார். அந்தர் த^{3}தே^{4} = மறைந்தார், தாமபி = அவளையும், அந்த: =

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனஸுக்குள்ளே, த^{3}தே^{4} = தரித்துக்கொண்டார். (= சிவனின் மனஸைவிட்டு தேவி அகலவில்லை.) / 'உனது விஜயயாத்ரைக்கு, உடனே கரக்ரஹணம் (=கப்பம் வசூலித்தல், பாணிக்ரஹணம்) பலன் கிடைக்கும்' என்று அகஸ்த்யர் சொன்னதை மறக்காதே (அவர் சொன்னது நடக்கப்போகிறது)' என்று ஸுமதியால் அறிவிக்கப்பட்டு லஜ்ஜையுடன் உள்ளுக்குள்ளே, சிரித்துவிட்டு அப்போதே மதுரையை நோக்கிப் புறப்பட்டாள், தேவி.

ஸுகமாய்த் தூங்கினபின் எழுப்பப்பட்டது போல் எழுந்த ஸேனையை அனுக்ரஹித்துக் கொண்டு புஷ்பகவிமானமேறி ஆகாச மார்கமாய்ச் சென்றாள். பஹு தூரத்திலிருந்து பார்க்கும்போது, உயர்ந்த மலைகள், புற்றுகள் போன்றும், பெருங்காடுகள், புல்வெளிகள் போன்றும், கங்கை போன்ற நதிகள், நூல் போன்றும் தெரிந்தன. நகரருகிலுள்ள உபவனத்தி லிறங்கி, ஸுமதி அறிவித்த சுபமுஹூர்த்தத்தில் பாற்கடலி லுதித்த யானை மீதேறி மெதுவாக, அலங்கரிக்கப்பட்ட ராஜ க்ருஹத்தை அடைந்தாள். க்ருஹத்தில் ப்ரவேசித்து ஒரு க்ஷணம் ஸதஸில் நின்று பட்டண ஜனங்களையும் கூடவந்தவர்களையும் அனுப்பிவிட்டுத் தோழிகளுடன், ஸுமதி முன் செல்லத் தாயின் இருப்பிடமடைந்தாள். ஆஸனத்திலிருந்து எழுந்து, விரைந்து வருகிற - ஆனந்தக் கண்ணீரால் பார்வை தடைபடுகிற - தாயை, பாதங்களில் புஷ்பம் இரைத்துத் தன் பெயரைச் சொல்லி, வினயமாக வணங்கினாள் தேவி. வணங்கிய பெண்ணைக் கட்டிக்கொண்டு தாய் உச்சிமுகர்ந்தாள், முகத்தில் முத்தமிட்டாள், மறுபடியும் வெகுநேரம் கட்டிக் கொண்டாள், மறுபடியும் வெகு நேரம் உச்சி முகர்ந்தாள். ஆனந்த அலை மோதலை அடக்கிக்கொண்டு, சிரமப்பட்டு ஆனந்தக் கண்ணீரைத் தடுத்துக்கொண்ட பாண்டியதேவியிடம் சென்று ஸுமதியும் தோழிகளும் பாதங்களில் பலமுறை வணங்கினர். 'இது ஸமுத்ரம் தந்தது, இது தேவர்கள் தந்தது, இது பூபாலர்கள் தந்தது' என்று காணிக்கைகளை தனித்தனியாக ஸுமதி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காட்டியபோதிலும் அரசியால் தேவியின் முகத்தில் பதிந்த கண்ணைத் திருப்பி அவற்றைப் பார்க்க இயலவில்லை. ‘இவ்வளவு ஜயமும் ஸுமதியின் ப்ரபாவத்தால் கிடைத்தது. இந்தத் தோழிகளால் ஸுகமாகப் போஷிக்கப்பட்டேன். இவர்களைப் பார்’ என்று தாயிடம் தேவியே தெரிவித்தாள். அவ்வாறே காஞ்சனமாலை மந்திரி காட்டியதையெல்லாம் பார்த்தாள். கல்பதருக்களையும் காமதேனுவையும் பூஜித்து வணங்கிப் பெற்றுக் கொண்டாள். / தோழிகளும் ஸுமதியும் சேர்ந்து காஞ்சனமாலையிடம் ‘இவைகளால் என்ன ஆகப்போகிறது. தேவர்களுக்குள் யார் வரனோ (=ச்ரேஷ்டமானவனோ) எல்லா உலகிலும் யார் வரனோ (=ச்ரேஷ்டமானவனோ) அந்த வரனே தேவியால் தானே ஸம்பாதிக்கப்பட்டுவிட்டான்’ என்றனர். அர்த்தம் புரியாமல் திகைத்த காஞ்சனமாலையிடம் விஷயத்தை விளக்கி அவளது கட்டளைப்படி விவாஹ மங்கள ஏற்பாடுகளைச் செய்ய வெளிக்கிளம்பினான், ஸுமதி. / ஈச்வரனை மணந்து கொள்ளும் மங்களம் நெருங்கிவிட்ட பெண்ணைக் கண்டு மகிழ்ந்ததைவிட, புத்ரியின் உத்ஸவத்தில் ப்ரியமுள்ள மலயத்வஜனை நினைத்து இதைப் பார்க்க இல்லையே என்று அதிகம் வருந்தினாள் காஞ்சனமாலை. பெண்ணிற்கு ஆரத்தி எடுத்து விபூதியால் ரக்ஷையிட்டாள். தேவர்கள், அரசர்கள், தபஸ்விகள் எல்லாருக்கும், ஸகலவஸ்துக்களும் நிறைந்த பலவிதமான தங்குமிடங்கள் சுற்றிலும் விரைவில் ஏற்பாடு செய்தான் ஸுமதி. ஊர் ஜனங்கள் ஒவ்வொரு க்ருஹத்திலும் நறுமணமுள்ள த்ரவங்களால் சுவர்களை மெழுகி, தங்கவாழை கட்டி, குடை நிறுத்தி, உயரமாகக் கொடி பறக்கவிட்டு ஊரை அலங்கரித்தனர்.

விநிர்க^{3}தஸ் ஸுந்த^{3}ரநாத^{2} லிங்க^{3}தோ / மஹேச்வரோ
மானுஷமாஸ்தி^{2}தோ வபு: । புரோபசல்யே(அ)வததார
ஸம்வ்ரு^{1}தோ / க^{3}ணைஸ் ஸுரைர் மாத்ரு^{1}க^{3}ணைச்^{5}ச^{1}
ஸர்வத: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸுந்தரேச லிங்கத்திலிருந்து மனுஷ்ய தேஹத்துடன் மஹேசன் வெளிவந்து ப்ரமதகணங்கள் - தேவர்கள் - மாத்ருகணங்களால் எல்லாப்பக்கங்களிலும் சூழப்பட்டவராக நகர ஸமீபதேசத்தில் அவதரித்தார். பாண்டியதேவி மந்திரியை அனுப்பினாள். அவன் சிவனிடம் முஹூர்த்தமங்களம் நெருங்கி விட்டதை அறிவித்தான். சிவனும் விவாஹத்துக்குரிய வேஷத்துடன் அழகானவராக மதுரையில் ப்ரவேசிப்பதற்காக வெளிநடந்தார். உலகிற்கே ஒரே வீரன் - மன்மதனை வென்று பெருங்கீர்த்தி அடைந்ததான நெற்றிக்கண், இப்போது மன்மதன் தன் பராக்ரமத்தைக் காட்டியபோது, வெட்கமடைந்தது போல் உள்ளடங்கி மறைந்தது. நாகரத்னம் பதித்த கிரீடமணிந்து, கஸ்தூரி திலகமிட்டு, புதியதாய் முளைத்த மீசையுடன், சட்டையணிந்து, குங்குமப்பூ தரித்து, உடலில் கஸ்தூரி பூசி, பொன்னாடை அணிந்து, ரத்ன மயமான தோள்வளை, கங்கணம் முதலியவை தரித்து தனித்தனி விதமான ரத்னமாலைகள் - முத்துக் குண்டலமணிந்து காலில் சலங்கையணிந்து அத்புதமாய் விளங்கினார் சிவன்.

விசுத்^{3}த^{4}-முக்தாப^{2}ல-குண்ட^{3}லாங்கிதம்/ விகீர்ணமந்த^{3} ஸ்மித-
ஸுந்த^{3}ரானனம்। விசால நேத்ரம் வத^{3}னம் நிரீக்ஷிதும் /
தத^{3}ஸ்ய ஸைவார்ஹதி மீன லோச^{1}னா ॥

சுத்தமான முத்துக்குண்டலமுள்ளதும் புன்சிரிப்பை வாரி இறைக்கும் அழகிய முகம் (= வாய்) கொண்டதும். அகன்ற கண்ணுள்ளது மான ஈசனின் அந்த முகத்தைப் பார்ப்பதற்கு அந்த மீனாக்ஷி தான் தகுந்தவள்.

பூமியையே தாங்கும் மஹாநாகங்களை கழற்றிவிட்டதால் மஹாபாரம் நீங்கிய-சிவனது ம்ருதுவான கைக்கு ரத்னக் கற்களாலான தோள்வளை, கங்கணம் முதலியதால் பாரமே தெரியவில்லை. 'திக்குகளையே வஸ்த்ரமாய்க் கொண்டவர், இப்போது தங்கவஸ்த்ரத்தை எப்படி உடுத்திக்கொண்டார்?'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று ஆச்சர்யப்பட வேண்டியதில்லை. இவருடைய - தங்கமாய் மின்னும் தேஹகாந்தியால் (இவர் அணியும்) பத்து திக்குகளும் உருக்கிய தங்கம்போல் ஒளிர்பவையாகின.

வபுச்^{5} சி^{1}த^3ாநந்த^{3}மயம் யத^{3}த்^{3}பு^{4}தம் / தத^3ாவ்ரு^{1}தந்
தாவத^{3}வித்^{3}யயாத்^{3}யயா। இத^{3}ந் ததஸ் ஸுந்த^{3}ர மித்த^2 -
மாவ்ரு^{1}தம் / மணித்விஷேதி ந்யஷத^{3}ன் மஹர்ஷய: ॥

'ஜ்ஞானானந்த ரூபமான அத்புதமான பரமேசஸ்வரூபம் மூலாவித்யையால் மறைக்கப்பட்டுள்ளது. அதைவிட அழகான இந்த தேஹம் இப்படி ஆபரணமணிகளின் காந்தியால் மறைக்கப்பட்டுவிட்டதே' என்று மஹ்ரிஷிகள் (நன்கு பார்க்கமுடியாததால்) வருந்தினர்.

'ஈசனுக்கு ஸமமானவர் யாருங்கிடையாது என்று வேதம் சொல்வது ஸரியில்லை, ஈசனுக்கு ஸமமாக இதோ கண்ணாடியில் ப்ரதிபிம்பமிருக்கிறது' என்று சொல்வது போல், இந்த்ரன், அலங்க்ருதரான மஹேசனுக்கு எதிரில், ஒரு விசாலமான முகம் பார்க்குங் கண்ணடியைக் காட்டினான். நந்திகேசர், பாதங்களில் மாட்டிவிட்ட ரத்ன பாதுகைகளை பரிசுத்தமாக்கிக் கொண்டு, விஷ்ணு-ப்ரம்மா இருவர் கையையும் லீலையாய் பிடித்துக் கொண்டு மஹேசன் மெதுவாய் வெளிவந்தார். மதத்தினால் சோம்பலுடன் நடத்தல் - கண்ணை மூடுதல் - கையால் தொட்டவுடன் காதை அசைப்பதை நிறுத்துதல் ஆகியவற்றை அப்பொழுதே கஜானனரிடமிருந்து கற்றுக்கொண்டு, வ்ருஷபமே சிறந்த யானைவாஹனமாக மாறியது. ஈசன் அதில் ஏறிக்கொண்டு - இருபுறமும் இருயானைகளில் ப்ரம்மாவும் விஷ்ணுவும் பேசிக்கொண்டு வர, ஒருபுறம் மஹாகாளர் முதற்கொண்ட ப்ரமதகணங்களையும் மறுபுறம் தேவாஸுரஸித்த சாரணர்களையும் வழியை விட்டு தூர விலகிப் பக்கங்களில் நிற்கும்படி கட்டுப்படுத்திக் கொண்டு நந்திகேசர், இந்திரனுடன் முன் செல்ல, ஸ்துதிபாடகர்களாக, ஒருபுறம் ஸ்ம்ருதி -

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதிஹாஸங்களுடன் சேர்ந்து வேதங்களும், மறுபுறம் தந்த்ர சாஸ்த்ரங்களுடன் சேர்ந்து சிவாகமங்களும் ஸ்துதி பண்ண, ஆத்மஜ்ஞானிகளான யோகிகளும் அந்த ஸ்துதியில் கலந்துகொள்ள - அத்புதமாய் பவனிவந்தார். அவரெதிரில், எல்லாருக்கும் முன்னால் பாண்டியராஜஸேனை, அதன்பின் தேவர்கள், அவர்களுக்குப்பின் ப்ரமத கணங்கள், அவர்களுக்குப் பின் பலவித ஜய த்வஜங்கள் என்று இப்படிச் சென்றனர். / மஹேசனைத் தொடர்ந்து பின்புறத்தில் இந்த்ராணி முதலிய தேவஸ்த்ரீகளாலும் மாத்ரு கணங்களாலும் சூழப்பட்டவர்களாக உயர்ந்த சிறு தேரிலமர்ந்து லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் சென்றனர். விசேஷமாக, அரண்மனை வனிதையர் லக்ஷ்மியையும், ப்ராம்மணர்களின் பத்னிகள் ஸரஸ்வதியையும் பக்தியால் வணங்கி ஸ்துதி செய்தனர். பெரிய வெண்கொற்றக் கொடை பிடிக்கப்பட்டு வெண்சாமரம் வீசப்பட்டு பவனிவரும் ஸுந்தரேசரைப் பார்த்து 'இதோ ராணியின் பதி வருகிறார், பாருங்கள்' என்று நகர ஜனங்கள் சொல்வதைக் கேட்டு சிவகணங்கள் அஸூயைப் பட்டனர்; ப்ரம்மாவும் விஷ்ணுவும் புன்சிரிப்புடன் சிவனைப் பார்த்தனர். நாற்புறமிருந்தும் பார்க்கவந்து கூடிய ஸ்த்ரீ ஜனங்கள், ஒரு முகம் - இருகை - இரு கண்களுடனிருந்த போதிலும் தேஹ காந்தியால் அமானுஷராய் விளங்குகிற பரேசனை கண் அசையாமல் பார்த்துக் கொண்டு ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள் — 'தாமரை போன்ற முகம்' ஆச்சர்யம், கண்கள் ஆச்சர்யம், கைகள் ஆச்சர்யம், மார்பு ஆச்சர்யம், பார்வைத்திறமை ஆச்சர்யம், மதயானையில் அமர்ந்திருப்பது விசித்ரம்'. 'இவனை இரண்டேயிரண்டு கண்ணால் பார்த்து, இரண்டேயிரண்டு கைகளால் தழுவி எப்படி ஸுகிப்பாள் தடாதகை. ஆகையால் நாமனைவரும் ஆசை நிறைவேறாதவர்களாவோம்'. 'இந்த யுவா நமது மனஸை அபஹரித்துக் கொண்டான். கண்ணை அபஹரித்துக் கொண்டான், ஐந்து ப்ராணன்களையும் அபஹரித்துக் கொண்டான், உடல்மட்டும் இங்கு வீழ்த்தப்பட்டது, வெட்கம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கெட்ட மன்மதன் அதில் அடிக்கிறான்.' 'உன்னைப் பார்க்க வந்திருக்கும் - உன்னை அண்டியவர்களான எங்களை, நீ பார்த்துக் கொண்டிருக்கும் போதே மன்மதன் ஹிம்ஸிக்கிறான் என்று இவன் ஸந்நிதியில் சொல்வோம். நமது நகரத்துக்கே ப்ரபு அல்லவா இவன்'. ஒருவள் — 'நான் அம்புஜாக்ஷனை (=விஷ்ணுவை) நன்கு பார்த்தேன்.' இன்னொருவள் — 'நான் இப்போது ப்ரம்மாவை அருகில் பார்த்தேன்'. மூன்றாமவள் — 'நான் இந்த யுவாவை முதலில் பார்த்து மோஹமடைந்து ஒன்றையுமே அறியவில்லை.' ஒருவள்: — 'நான் இவனுடைய அகன்று நீண்ட கண்களைப் பார்த்தேன்.' இன்னொருவள்: — 'நான் இவனுடைய வெளுப்பான மந்தஸ்மிதத்தைப் (=புன்சிரிப்பை) பார்த்தேன்'. மூன்றாமவள்: — 'நான் இரண்டையும் பார்த்தேன்.' முதலிருவரும்: — நமக்குள்ளே இவள் ஸாக்ஷாத்தாக வால் - கொம்பு இல்லாத பசுவேதான்.'' (கம்பராமாயணத்தில் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்று சொன்னது போல் கண்களைப் பார்த்தவள் அவைகளிலேயே பார்வை லயித்துப் போகாமல் புன்சிரிப்பையும் பார்த்தேன் என்று சொன்னதால் ரஸிக்கத் தெரியாதவள் - பசு என்று ஏசுகிறார்கள்.)

''மன்மதனை ஜயித்த இந்த யுவா, அந்த மன்மதன் வேறு யாரும் காணாமல் பாண்டியகுமாரியிடம் வைத்திருந்த ஸர்வஸொத்தையும் இப்போது தானே பிடுங்கிக் கொள்ள வந்துவிட்டான்.''

இப்படியாக ஒவ்வொரு வீதியிலும் ஸ்த்ரீகள் பேசிக்கொள்வதைக் கேட்டுக் கொண்டு ஈசன் புன்முறுவலுடன் சென்றார். நகரஸ்த்ரீகள் நெற்பொரிகளையும் முத்துக்களையும் வழியில் நகரஸ்த்ரீகள் அவர்மேல் வாரி இரைத்தார்கள். ராஜக்ருஹத்துக்கு அருகில் யானையை நிறுத்தி, முதலில் தேவஸ்த்ரீகளுடன் கூட லக்ஷ்மியையும் ஸரஸ்வதியையும் உள்ளே அனுப்பும்படி, நந்திக்கு உத்தரவிட்டார் மஹேசன். நந்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரம்பு அடியால் கூட்டத்தை விலக்கி வழி ஏற்படுத்தவும், எல்லா தேவஸ்த்ரீகளுடனும் ஜகன்மாதாக்கள் ராஜக்ருஹத்தை அடைந்தனர். புரோஹிதர் அகஸ்த்யர் அவர்களை முறைப்படி பூஜித்து ஸ்துதி செய்தார். காஞ்சனமாலிகை வேகமாக ஓடிவந்து பாதங்களில் மலர் தூவி வணங்கினாள். லக்ஷ்மி, ஸரஸ்வதி, இந்திராணி மூவரும் தனித்தனியே காஞ்சன மாலிகையைக் கட்டிக் கொண்டு கொண்டாடினர். அவள் விநயத்துடன் லக்ஷ்மிக்குத் தாமரையையும், ஸரஸ்வதிக்கு அழகான கிளியையும், இந்திராணிக்கு ரத்னத்தையும் கொடுத்தாள். ''மாதாமஹியே வா, மணப்பெண் எங்கே இருக்கிறாள்? எங்கள் தாயைக் காட்டு'' என்று அவர்கள் கூற, காஞ்சனமாலிகை அவர்களைத் தடாதகை இருக்குமிடத்துக்கு அழைத்துச் சென்றாள்.

பத்ராஸனத்தை விட்டு எழுந்து பாதுகையணிந்து வினயமாக நடந்துவருகிற - விவாஹத்துக்குரிய வேஷத்தால் கோமளமாய் விளங்குகிற வதூவைப் பார்த்து தேவஸ்த்ரீகள் அசையாமல் நின்றனர். தேவியின் பாதங்களை ஸேவிக்க வந்த வேதாக்ஷரவரிசை போலிருந்தது ரத்னபாதுகைகளின் ஓரத்தில் கோர்க்கப்பட்ட முத்துகளின் வரிசை. பாதங்களிலிடப்பட்ட புதிய ஸம்பங்கிக் குழம்பின் சென்னிறத்தையும் பாதுகைகளிலுள்ள ரத்னங்களின் ஒளியையும் மீறி தேவியின் பாதங்களின் இயற்கையான சிவப்பு நிறம் வெளித்தெரிந்தது. ஸரஸ்வதி கண் ஜாடையால் லக்ஷ்மிக்கும் தெரிவித்து தேவியின் சரண கமலங்களை ஒரு க்ஷணம் கண்களை அகற்றி நன்கு பார்த்தாள். பிறகு கண்களை மூடிக்கொண்டு நெடுநேரம் அவைகளைத் த்யானித்தாள். ஸர்வாபரண பூஷிதையாய் ஸர்வாங்க ஸுந்தரி, உத்பல புஷ்பப்ரியனான கணவனை உபாஸிப்பதற்காக கையில் உத்பலபுஷ்பத்தை ஏந்திக் கொண்டாள். காதில் உத்பல புஷ்பத்தைச் சொருகிக் கொண்டாள். அவள் கண்களும் உத்பலம் போன்றிருந்தன. அவளே உத்பல மாலை போல அதிமென்மை யான அங்கங்களுடையவளாயிருந்தாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விவாஹம் நெருங்கிவிட்ட களிப்பால் உண்டான புன்முறுவலுடன் மெதுவாய் எதிரில் வருகிற சிவனுடைய ச்ருங்கார - அதிதேவதையான தேவியைப் பார்த்து உலகிற்கே முதல் அழகியான லக்ஷ்மியே லஜ்ஜையடைந்தாள். அப்ஸரஸ் கணங்களோ லஜ்ஜைப்படுவதற்குக் கூட லஜ்ஜைப்பட்டன. உலகப் பொருள்களைக் குறிக்கும் மலின வார்த்தைகளால் தேவியை வர்ணிக்காமல் மௌனமாயிருந்ததாலேயே ஸரஸ்வதி தனது பாண்டித்யத்தை விளக்கினாள். இந்திராணி, தேவியின் அத்புதரூபத்தைக் காண, தான் ஒருமுறை கௌதமரிடம் உறவுகொண்டாவது தானும் அஹல்யா சாபத்தால் ஆயிரம் கண் பெற விரும்பினாள். (கவியின் உத்ப்ரேக்ஷை கட்டுக்கடங்காது.)

பிறகு தேவி பூஷண பாரத்தால் மெதுவாக ஸரஸ்வதியையும் லக்ஷ்மியையும் வணங்கினாள். தேவஸ்த்ரீகள் தேவியை வணங்கினர். இந்திராணியை தேவி ஆலிங்கனம் செய்துகொண்டாள். ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் தேவியைத் தழுவி, 'இந்த நமஸ்காரம் எங்களுக்குப் பெரிய லாபம். விவாஹம் முடிந்ததும் உன்னை வணங்கவே நேரம் கிடைக்காது' என்றனர்.

மஹேச்வரன் யானையிலிருந்து இறங்கி சிவகணங்கள் - தேவர்கள் பின்தொடர விஷ்ணு-ப்ரம்மா கைகளைப் பிடித்துக்கொள்ள ராஜ க்ருஹத்தில் நுழைந்தார். அகஸ்த்யர் ஈசனை அர்க்ய-பாத்ய-ஆசமனீயங்கள் கொடுத்து பூஜித்து ப்ரஸன்னமான ஈசனது பார்வையால் தன்யராகி, மஹர்ஷிகளைக் கொண்டு அவரை உள்ளே அழைத்துவரச் செய்தார். அரண்மனை ஸ்த்ரீகள் ஈசன்மேல் சுபமான பொரிகளை பிடிபிடியாய் இரைத்தனர். ஜடையில் விழுந்து சிதறித் தெறித்த கங்கா ஜலத் திவிலைகள் அவரைச் சுற்றி விழுவது போலிருந்தது அது. வாசற்படியில் நுழைந்ததும் காஞ்சனமாலை தூண்ட, லக்ஷ்மி, தேவனுக்கு பாலால் பாத்யமளித்தாள். கையில் தீபமேந்தி சிவனை இந்திராணியுடன் ப்ரதக்ஷிணம் செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவஸ்த்ரீகளுடன் தான் முன்சென்று, அழைத்துச் சென்றாள் ஸரஸ்வதி. நான்கு பவழத் தூண்கள், விசித்ரமான வைடூர்யங்களாலான விடங்கம், தொங்குகிற முத்துமாலை ஸரங்கள் - இப்படி அழகாய் அலங்கரிக்கப்பட்ட விவாஹ மேடையை அடைந்தார் ஸுந்தரேசர்.

பே4ரீ-ப4ாங்கார-ஸாந்த்3ரம் ப3ஹிரப3ஹிரபி ப்ரௌட4
சுத்3தா4ந்த-காந்தா -/ பாணி-வ்யாவித்3த4- தூர்ய-த்4வனி-
ஜனித-ச1மத் கார-ஸங்கீ3த-ரம்யம் । ஜாமாத்ரு1-
ச்லாக4னோக்தி- வ்யதிகரித-வதூ4 -ப3ாந்த4வோல் லாஸ
ஹாஸம்/ ஜஜ்ஞே ராஜ்ஞோ க்3ரு1ஹந் தன் முனி-ஜன-
ரசி1தோத் துங்க3- மங்க3ள்ய-கே4ாஷம் ॥

வெளிப்புறம் 'பாம்'-'பாம்' என்று பேரீசப்தம், உள்ளே தேர்ந்த அந்தப்புர ஸ்த்ரீகள் கையால் முழங்குகிற மத்தள த்வனியுடன் கலந்த அழகிய ஸங்கீதம். மாப்பிள்ளையைப் புகழும் பேச்சுக்களுடன் கலந்ததான உறவினர்களின் உல்லாஸமான சிரிப்பு. முனிவர்களின் உரத்திய மங்களகரமான மந்த்ரகோஷம் இப்படித் திகழ்ந்தது, ராஜ க்ருஹம். / ரத்ன மயமான ஆஸனத்திலமர்த்தி ஆதி யுவாவை, பழைய முனிவர்கள், தானாகவே முழங்கும் முரசு த்வனியுடன் சேர்ந்து ஆசீர்வதித்தனர். மணிமய புஷ்பங்களை வாரி இரைத்து வணங்கினாள் காஞ்சனமாலிகை. லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் சுட்டிக்காட்ட, மாமியாரை கௌரவத்துடன் பார்த்தார் மஹேசன்.

அகஸ்தியருடன் கலந்துகொண்டு ப்ரம்மாவின் உத்தரவுப்படி லக்ஷ்மியும் ஸரஸ்வதியும், வெட்கத்தால் தலை குனிந்திருக்கும் தேவியை மஹேசனின் பாதி ஆஸனத்தில் அமர்த்தினர். விஷ்ணுவும், ப்ரம்மாவால் ஏவப்பட்டுத் தங்கையை ஈசனுக்கு தானம் செய்வதற்காக காஞ்சனமாலிகைக்கு எதிரில் லக்ஷ்மியுடன்கூட மணப்பெண்ணருகில் அமர்ந்தார். முன்பு பார்வதி - விவாஹத்தைப் பார்க்க இயலாதபடி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகஸ்தியரைத் தென்புறம் அனுப்பியதால் அந்தக் கடன் தீர இப்போது ஈசன் அவரை விவாஹ ஹோமத்தில் ப்ரம்மாவாக வரித்தார். ப்ரம்மதேவரை அத்வர்யுவாக வரித்தார். முன்பு முயற்சித்தும் காணக்கிடைக்காத ஈசன் பாதத்தை - இப்போது லக்ஷ்மி விட்ட பாத்யத்தால் அலம்பப்பட்டிருப்பதை, அசையாமல் பார்த்துக்கொண்டு மலர்களால் அர்ச்சித்தார் விஷ்ணு. தேவியை மடியில் வைத்துக்கொண்டு ராஜ்யலக்ஷ்மியாகிய தக்ஷிணையோடு சேர்த்து முவ்வேதக்கவியான வரனுக்கு அளித்தார். கொடுப்பவர்க்கும் பெறுபவர்க்கும் கோத்ரமிருக்கிறதா? பிதா இருக்கிறாரா? பிதாமஹர் இருக்கிறாரா? ஆகையால் 'உமக்கு இவளைக் கொடுக்கிறேன்' என்று இவ்வளவுதான் தான மந்திரம். நிமிர்த்திக் காட்டப்பட்ட சிவன் கைமேல் வைக்கப்பட்டதான தேவியின் கை, 'தான் மேம்பட்டது' என்பதை வெளிப்படுத்தியது. 'அரசர்கள் - திக்பதிகளை ஜயித்து கரம் (கப்பம்) க்ரஹித்தாள் தேவி. நீர் அவள் கரத்தை (கையை) க்ரஹித்துவிட்டீர்' என்று ஈசனைப் பார்த்து ஸரஸ்வதி புன்சிரிப்புடன் சொன்னாள்.

தேவியும் தேவனும் மாலை மாற்றிக் கொண்டனர். லாஜ (= பொரி) ஹோமமாயிற்று. தேவியின் காலைப்பிடித்து அம்மி ஏற்றினார், சிவன். 'இப்போது காலைப் பிடிக்க ஆரம்பித்தது மேலும் மேலும் வளரட்டும்' என்றார் விஷ்ணு. மூவுலகும் காக்கும் ஈசன், தேவியின் சரணாரவிந்தம் கையிலிருக்கும்போது, ஸமஸ்த ஐச்வர்யமும் கையிலிருப்பதாக எண்ணினார்.

ஆமுக்த-மஞ்ஜீரமலக்தகாங்க - / மாகுஞ்சி^{1}தங் கிஞ்சி^{1}தி^{3}வ
ஹ்ரியாந்த:। ஸ்வின்னங் கரே ஸ்வித்^{3}யதி லக்^{3}னமைசே /
த^{4}ன்யா: பத^{3}ந் தத்^{3} த^{3}த்^{3}ரு^{1}சுர் ஜனன்யா: ॥

கொலுசு அணிந்து, சம்பங்கிக் குழம்பு பூசப்பட்டு, வெட்கத்தால் சிறிது உள்ளே குறுகி, வியர்வையடைந்த ஈசன் கையில் ஒட்டிக்கொண்டு தானும் வியர்வையடைந்ததான

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்னையின் பாதத்தை பாக்யவான்கள் கண்டனர். / காஞ்சன மாலிகையின் கண்களில் ஆனந்தம் பெருகிற்று. ஜகன் மங்கள தம்பதிகள் அக்னியை வலம் வந்தனர். விவாஹ ஹோம சேஷத்தை முடித்து, ப்ரம்மா, அகஸ்தியர் பார்க்க, ரத்னபீடத்தில் இடப்புறம் வதூவையும் வலப்புறம் வரனையும் அமர்த்தினார். இடைவெளி கொஞ்சமுமின்றி நெருங்கியிருந்தும் அந்த ஜோடிக்கு பரஸ்பரம் த்ருப்தி வரவில்லை. இருவருக்கும் ஒரே சரீரமாயிருந்தபோதே த்ருப்திவராதவர்களுக்கு நெருங்கி அமர்வதால் எப்படி த்ருப்திவரும்? ப்ரம்மா முதலிய ப்ரம்மர்ஷிகள் சிரித்துக் கொண்டே வழக்கத்தைக் காப்பாற்று வதற்காக வேதமந்த்ரங்களால் தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

ஈசன், ப்ராம்மணர்களுக்கு தக்ஷிணைகள் கொடுத்து மகிழ்வித்து, தேவர்களை உசிதமான உபசாரங்களால் ஸம்மானித்துவிட்டு, இளைப்பாறுவதற்காக தடாதகையின் அந்தப்புரம் சென்றார். ஸரஸ்வதியும் லக்ஷ்மியும் தேவிக்கு அடிக்கடி தைர்யம் சொன்னார்கள். தேவியின் கையைப் பிடித்துக்கொண்டு உயர்ந்த மஞ்சத்திலமர்ந்தார் தேவன். சிவந்த உதடு, சஞ்சலமான நீண்ட கண்கள் உடையதான சிறிது வியர்த்த - வெட்கத்தால் குனிந்த தேவியின் முகத்தை, வியர்வைத் துளிகளைத் துடைப்பவர்போல் நிமிர்த்தினார் ஈசன். அருகிலுள்ள தோழி அளித்த தாம்பூலத்தைக் கையில் வைத்துக் கொண்டு வெட்கத்தால் திகைக்கிற தேவியைப் பார்த்து லக்ஷ்மீ, 'கணவனுக்குக் கொடு' என்று விளையாட்டாய்ச் சொன்னாள். ''இந்த வளையல்கள் எங்கிருந்து பெற்றாய்? இந்த ஹாரம் யார் காணிக்கையாகக் கொடுத்தது?'' என்று நகைகளைப் பற்றி அறிந்து கொள்ளக் கேட்பவர் போல், தேவியை ஒவ்வொரு அங்கமாகத் தொட்டார் ஈசன். அதை அதைக் கேட்கும்போதெல்லாம் தேவி வெட்கத்தால் பதிலளிக்கவில்லை. நிர்பந்தமாய்க் கேட்டாலும் சிரமப்பட்டு புன்சிரிப்பையே பதிலாக்கினாள். கோபம் வரவழைத்துப் பார்த்தார். 'உனது அன்னை காஞ்சனமாலை, மலயத்வஜனுக்கு போக ஸ்த்ரீயா?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அல்லது பல மனைவிகளில் அவளும் ஒருத்தியா?' என்று கேட்டார். அதற்கும் கோபத்தால் புருவத்தை நெறிப்பதுதான் பதிலாயிற்று. தேவியின் தோழிகளிடம் சொல்லிவைத்து, அவள் ஒன்று செய்யச் சொல்லி ஜாடையால் அறிவித்தால் அதைப் புரிந்துகொள்ளாதவர்கள் போல் நடித்து வேறொன்று செய்யச் சொல்லிக் கோபமூட்டித் தான் சிரித்துக்கொண்டே அவளைப் பேசச் செய்தார். தேவி பார்த்தாலும், சிரித்தாலும், மௌனமாயிருந்தாலும், வேண்டாமென்று தடுத்தாலும், எது செய்தாலும் தேவனுக்கு அதனால் மகிழ்ச்சி ஏற்பட்டது. இவ்வாறு மணப்பெண்ணுடன் மகிழ்ந்திருக்கும்போது சமையல்காரர்கள் வந்து உணவு ஸஜ்ஜமாய் விட்டதை அறிவித்தனர்.

❀ 6-வது லீலை - வெள்ளியம்பலத்தில் நடனம் காட்டியது ❀

ஈசன் கட்டளைப்படி அவர்கள், முதலில் போஜனம் செய்விப்பதற்காக நாற்புறமிருந்தும் ப்ராம்மணர்களை ஒன்று கூட்டினர். மஹர்ஷிகளை மந்திரி ஸுமதியே பக்தியுடன் அழைத்துவந்தான். பதஞ்ஜலியும் வ்யாக்ரபாதரும் நடராஜனின் நடனத்தைத் தர்சிக்காமல் ஒருபோதும் ஜலங்கூட அருந்துவதில்லை. அவர்கள் சிதம்பரத்தைக் குறித்துப் புறப்பட்டனர். அதை அறிந்த ஸுந்தரபாண்டிய தேவன், அவர்களை அழைத்துவரச் செய்து பக்தியுடன் எதிர்கொண்டு பாதங்களில் வணங்கி விநயமாக 'ஸபாநடேசன் பொன்னம்பலத்தில் தேவர்-ஸித்தர் கூட்டங்கள் ஸேவிக்க, நடனம் செய்வது போல், ஹாலாஸ்யநாதனும் இங்கு வெள்ளியம்பலத்தில் எப்போதும் நடனம் செய்கிறார். இங்கேயே அந்த அத்புதமான - மத்யான்னவேளை நடனத்தை ஸேவித்துவிட்டு, ப்ராணாக்னி ஹோத்ரம் செய்து எங்களை அனுக்ரஹிப்பதற்காக சீக்கிரம் வாருங்கள்'' என்று வேண்டினார். அவர்களும் அப்படியே என்று பொற்றாமரையில் நியமஸ்நானம் செய்து ரஜதஸபையை (வெள்ளியம்பலத்தை) அடைந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ரம்மகபாலம் உள்ளே மறையும்படியும் சந்த்ர கலை தெரியும்படியும் ஜடைகளைக் கட்டிக்கொண்டு காலில் நாகபூஷணம் பூண்டு நடேசன் ஸபையில் அவதரித்தார். விஷ்ணு மத்தளம் கொட்டினார், ப்ரம்மா தாளம் போட்டார். மீனாக்ஷீ கிடைத்த மகிழ்ச்சியால் முன்பே நர்த்தனம் செய்ய விரும்பிய ஈசன் இப்போது பக்தனுக்கு இரங்குதல் என்பதை சாக்காக வைத்து ஸந்தேஹமின்றி நர்த்தித்தார். வாத்யம்-பாட்டுக்கு ஏற்ப பாத தாளம் போட்டுக் கொண்டு, ரஸம் மேலிட, நன்கு ப⁴ாவம் தெரியும்படி, சுழலும் வேகத்தில் ஹாரம் அறுகும்படி லலிதமாக உடலை வளைத்து ஆடினார். 'ஸ்திதாவர்த்தகம்' என்ற ந்ருத்தத்தில் உயரத் தூக்கப்பட்ட ஈசன் கால், நடனந் தர்சிக்கும் முனிவர்களின் - அரக்கு போல் உருகிப்போன - சித்தத்தில் வைக்கப்பட்டதால் அதில் ஒட்டிக் கொண்டதால் அசைக்க முடியாதது போல், வெகுநேரம் அதே நிலையில் விளங்கிற்று. உலகே அவர் நடனத்தைக் கண்டு, மயிர்க் கூச்சலெழுந்து, ஆனந்தக் கண்ணீர் மல்கி, ஆச்சர்யத்தால் மோஹித்து, வேறு வ்யாபாரமின்றி சித்ரத்தில் எழுதப்பட்டது போலிருந்தது. தேவியின் உத்தரீயத்தால் முகம் துடைக்கப்பட்டு, தலை சந்த்ரன் நழுவி, ந்ருத்தத்தின் முடிவில் அழகாயிருக்கிற ஈசனின் தேஹத்தைப் பார்த்து அவ்விரு முனிவரும் ஸ்துதித்தனர்.

'பக்தர்களுக்கு அருள்வதில் வெண்ணெய் போல் ம்ருதுவான உனது சித்தத்தைவிட இன்னும் ம்ருதுவான பாதங்கள் எங்களுக்காக இப்படி ஆயாஸப்படுத்தப்பட்டன. ஹே நாத! முதலில் அதைப் பொறுத்தருள வேண்டும். எங்களை அனுக்கிரஹிக்க இப்போது நடந்தது போல் லோக ஹிதத்துக்காக கனகஸபையில் நடப்பது போல் தினமும் இந்த வெள்ளி ஸபையிலும் ந்ருத்தோத்ஸவம் நடக்க வேண்டும்' என்று ப்ரார்த்தித்தனர். 'அப்படியே' என்று அவர்களுக்கு வரமளித்து, லோகஹிதத்தைக் கேட்டதால் அவர்களிடம் மேலும் ப்ரஸன்னமாகி, மற்றவர்க்குக் கிடைக்காத சிவஜ்ஞானத்தை அளித்து அவர்களை அனுக்ரஹித்தான் ஈசன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈசனை ஸேவித்துவிட்டு வந்த ப்ராம்மணர்களையும் தேவர்களையும், பாத்யம் கொடுத்துத் தங்க - ஆஸனங்களில் உண்பதற்காக அமர்த்தினார் அகஸ்த்யர். கர்ப்பூரம் - குங்குமப்பூ கலந்த சந்தனம் பூசி மாலைபோட்டு தக்ஷிணை கொடுத்துப் பூஜிக்கப்பட்டவர்களாக அவர்கள் ரஸம் ததும்பும் உண்டி அருந்தினர். பற்பல விதமான பக்ஷ்ய - போஜ்ய - லேஹ்ய - சூர்ண - பானங்களால் ஆச்சர்யமுற்ற தேவர்கள் நூற்றுக் கணக்காக 'ப்ரம்மனால் (அம்ருதத்தை மட்டும் உணவாக அளித்து) ஏமாற்றப்பட்ட ஜாதி' என்று தமது ஜாதியை நிந்தித்தனர். ஒவ்வொன்றின் பெயர், அதை எப்படி உண்பது, அதன் ரஸம் எல்லாவற்றையும் மனுஷ்யர்களிடம் கேட்டுக் கொண்டு மிகுந்த ஆதரவுடன் ஆச்சர்யத்தில் மூழ்கியவர்கள் போல் உண்டனர் தேவர்கள். தேவர்களாகி அம்ருதம் உண்பதற்காக காற்று-ஜலம்-சருகு உண்டு தபஸ் செய்தவர்கள், தேவர்கள் செய்த அம்ருதமுண்ணும் - ஜாதி நிந்தையைக் கேட்டுவிட்டுத் தங்கள் வ்ரதங்களை விட்டு விட்டனர். பல வயிறு, பல வாய், பல கை, பல நாக்கு உள்ள எண்ணற்ற சிவகணங்களைக் கண்டு நாமும் அப்படியிருந்தால் தேவலை என்று போஜன ரஸிகர்கள் ஆசைப்பட்டனர்.

இப்படி உலகே த்ருப்தி செய்விக்கப்பட்டதைக் கேட்டுவிட்டு நித்யகர்மாக்களை முடித்துக் கொண்டு வதூவுடன் கூட மங்கள முரசொலியுடன் போஜன வேதியிலமர்ந்தார் மஹேசன். ஸரஸ்வதி-ப்ரம்மா, லக்ஷ்மீ-விஷ்ணு, இந்த்ராணீ-இந்த்ரன் எதிரில் அமர்ந்தனர். கணபதி - ஸ்கந்தன் - நந்திகேசன் சிவன் பக்கத்திலமர்ந்தனர். பஹுவிதமான ருசிகரமான அன்னத்தை அன்னபூர்ணா பரிமாற, அருகிலுள்ளோரை வேடிக்கைவார்த்தைகளால் மகிழ்வித்துக் கொண்டு தேவியுடன் புஜித்தார் மஹேசன். மேலுலகில் கிடைத்தற்கரிய உண்டி வகைகளில் சிறிது சிறிது தானே எடுத்து மஹேசன் கஜானனனும் ஸ்கந்தனும் பொறாமைப்பட, நந்தி கேசருக்கு தயவுடனளித்தார். உண்டு எழுந்து நண்பர்களைக் களைப்பாற அனுப்பிவிட்டு தேவன் தடாதகையின் சயனக்ருஹத்தை அடைந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ 7-வது லீலை - அன்னமடு ஸ்ருஷ்டித்தது ❀

பிறகு பாகசாலை வேலையில் அமர்த்தப்பட்டிருந்தோர் காஞ்சன மாலிகையிடம் வந்து நூற்றுக்கணக்காக அன்னக் குவியல்கள் மிச்சமிருப்பதாய்த் தெரிவித்தனர். 'தேவர்கள் முப்பத்து முக்கோடி, சிவகணங்கள்-மனுஷ்யர்கள் சாப்பிட்டவர் எவ்வளவு பேர் என்று எண்ணமுடியாது. சாதம், பருப்பு, வடை, பழம், வெல்லம், சர்க்கரை, அன்னம் முதலியவை இவ்வளவு மிச்சம் என்று எங்களால் கணக்கிட முடியாது. இவைகளுக்கு என்ன உபயோகம் என்று கட்டளையிட வேண்டும்,' என்றனர். இதைக் கேட்டு அவள் சேடிகள் மூலம் பெண்ணிடம் ஸூசித்தாள். தேவியும் வெட்கத்துடன் 'இவற்றை என்ன செய்வது?' என்று ஈசனிடம் கேட்டாள். 'நீ மூவுலகிற்கும் ராணி, உனது அன்ன ஸம்ருத்தியை உண்ண எனக்கு ஜனங்கள் யார் இருக்க முடியும்? இருந்தாலும் எனது ஸேவையில் ஈடுபட்டிருந்ததால், உண்பதற்கு நேரங் கிடைக்காமல் குண்டோதரன் என்று கணன் ஒருவனுளன், அவனை வயிறு நிறைய உண்ணச் செய்' என்று கூறி ராஜபத்னியின் அன்ன ஸம்ருத்திகர்வத்தைப் போக்குவதற்காக மூவுலகையும் சரீரமாய்க் கொண்ட வைச்வாநரரூபமான ஈசன், குண்டோதரன் வயிற்றில் ப்ரவேசித்தார்.

தேவியின் கட்டளைப்படி சமையல் தலைவர்கள் குண்டோதரனை போஜன மண்டபத்தில் அமர்த்தி விசாலமான இலைகள் போட்டு பக்ஷ்யம் - போஜ்யங்களை வர்ஷித்தார்கள். அவர்கள் 'சாப்பிடு' என்றதும் இவன் கோபத்துடன் 'ப்ராணாஹூதிக்குப் போதுமானது கூட கண்ணுக்குத் தென்படவில்லை. எப்படி உண்ண ஆரம்பிப்பேன்?' என்றான். காஞ்சனமாலையும் ஸுமதியும் அங்குவந்து வியப்புடன் அன்னம் சமைப்போர் - அப்பம் செய்வோரைக் கொண்டு மறுபடியும் பலமுறை அன்னராசிகளைப் பரிமாறச் செய்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாத்ரத்தில் அடங்காமலிருக்கும் அன்னராசியை காய்கறிகளுடன் சேர்த்து எப்படியோ ஒரு ப்ராணாஹுதி செய்துவிட்டு மிகவும் பசியால் பீடிக்கப்பட்டவனாக அமர்ந்திருந்தான் அவன்.

அரசியின் தாஸிகள் பரபரப்படைந்து எல்லாரும் சேர்ந்து கையில் கிடைத்த பக்ஷ்யபோஜ்யங்களை ஒருவரிசையில்லாமல் பக்வம், அபக்வம் எல்லாவற்றையும் ஓடி ஓடி வந்து அளித்தனர். அதன் பிறகு எப்படியோ ஒருவாறு ஐந்து ப்ராணாஹுதிகளைப் பூர்த்தி செய்து பெரும் பசியால் வாட்டமுற்று அவ்வளவுபேர் பரிவேஷணம் செய்தும் அதற்குள் ஏற்படும் காலவிலம்பத்தை அவன் பொறுக்கவில்லை. கணக்கற்ற அன்னக் குவியல்கள், அபூபமலைகள் இவற்றால் இடைவெளியின்றி நிறைந்திருந்த சமையல் சாலையில் தானே நுழைந்துவிட்டான், பெரும் மடுவில் மதயானை இறங்குவது போல் பக்ஷ்யவர்கங்களுடன் சேர்த்து அன்னக் குவியல்கள் - கண்ணில் பட்டவைகளை அறுபது, தொண்ணூறு, நூறு என்று ஒரே கபளமாக்கினான். அன்னராசிகளை விரிப்புகளுடனும், பால் நெய்களை பாத்ரங்களுடனும் சேர்த்து விழுங்குகிற இவனிடமிருந்து பயந்து ஓடினர், பாகசாலை வேலைக்காரர்கள். காஞ்சனைமாலையின் ப்ரார்த்தனையின் பேரில் கல்ப்பவ்ருக்ஷங்களும் - காமதேனுவும் ஸ்ருஷ்டிபண்ணின எண்ணற்ற பதார்த்தங்களும் இவனுக்கு ஊறுகாய் ஸ்தானத்துக்குத்தான் வந்தன. கோதுமை, உளுந்து, கடலை, பயறு, நெல், ச்யாமை, நீவாரம், எள்ளு முதலிய தான்யங்களையும் மற்றவற்றையும் குதிர்-அண்டா-குடங்களுடன் சேர்த்து சாப்பிட்டான். சேடிகள் பயந்தோடிப் பரபரப்படைந்து வந்து சொன்ன அவன் செயலைக் கேட்டு வெட்கமடைந்து, தடாதகை, தானே அவனைநோக்கி ஓடினாள். ஈசன் அவளைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புட னிருந்தார். / அக்ஷயமான அன்னமடுவை ஒரு க்ஷணத்தில் ஸ்ருஷ்டித்தாள் தேவி. அதையும் நான்கே பெருங்கவளங்களால் விழுங்கித் தரை மட்டுந்தான் மிச்சமென்று செய்துவிட்டான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ 8-வது லீலை - கங்கையை வரவழைத்தது ❀

'அன்னத்தால் வயிறு நிரம்பவில்லை. ஜலத்தினாலாவது நிரப்புகிறேன், கொடுங்கள்' என்று குண்டோதரன் யாசிக்கவும், தேவி அலை ததும்பும் கங்கையை ஸ்மரித்தாள். உடனே கங்கை மலயமலை சிகரத்திலிருந்து கிளம்பி அகன்ற அலைகளால் பூமி முழுவதையும் மிதக்கச் செய்பவள் போல் மதுரை நகரருகில் வந்தாள். அந்த தேவ நதியையும் வாயில் கையை வைத்துக் கொண்டு வேடிக்கையாக முழுவதும் குடித்துவிட்டான். அவனைத் தூண்டிவிட்ட கங்காதரனுக்கே அனுதாப மேற்பட்டது.

மணலை மட்டும் மிச்சம் வைத்து கங்கையைக் குடித்த பிறகும் தாகமடங்காமல் கடைவாயை நக்குகிற அவனது வாட்டத்தைப் பார்த்து வருந்திய தேவி, லஜ்ஜையுடன் ஈசனிடம் 'தங்கள் ப்ரபாவமறியாமல் முன்பு நான் அன்னக்குவியல்கள் நிறைய மிகுந்திருப்பதாகச் சொன்னதைப் பொறுத்துக் கொண்டு குண்டோதரனின் தாகத்தைத் தணித்தருள வேண்டும்' என்று வேண்டினாள். 'ஏதோ ஒரு வ்யாஜத்தால் (=சாக்கால்) உன்னைப் பேசவைத்து உனது வார்த்தைகளைக் கேட்கவேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தேன். அதை நிறுத்தியாய் விட்டது. உனது மஹிமையால் இந்த கங்கை ஓயாத வெள்ளமுள்ளதாயிருக்கட்டும். வேகமாக வந்ததால் வேகவதி என்ற பெயருடன் விளங்கும்.' என்று பாண்டிய குமாரியை ம்ருதுவான பேச்சால் தெளிவடைவித்து, அவளுடன் ரமித்தார் ஸுந்தர பாண்டியதேவன்.

மறுநாள் ஸமஸ்த தேவர்களாலும் அகஸ்த்யர் முதலிய பரமரிஷிகளாலும் பாண்டிய ராஜ்யத்தில் அபிஷேகம் செய்யப்பட்டு அந்த தடாதகை பட்டமஹிஷியுடன் பூமியை ஆண்டுவந்தார் ஈசன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கைலாஸாத்3ரிம் சாஸத: கல்ப்பகோடீ: / பூர்ண: கோசோ யஸ்ய பி4க்ஷாகபாலை: । ப்ராப்தேனேத்த2ம் பாண்ட்3ய - ராஜ்யாதி4பத்யம் / லப்3த4ா ஸத்3யஸ் தேன லக்ஷ்மீரபாரா ॥

கைலாஸத்தைக் கல்ப்பகோடி காலமாக ஆண்டபோது, கஜானாவில் பிச்சைவாங்கும் மண்டையோடுகள் நிறைந்திருந்தன. பாண்டிய ராஜ்யத்துக்கு அதிபதி ஆனவுடன் உடனே எல்லையற்ற லக்ஷ்மி கிடைத்தாள். ஊர்-எல்லை விஷயம், ஜலத்தில் அணைகட்டும் விஷயம், மாடுமேய்த்தல், வ்யாபாரிகள் - ஸம்மேளனம் முதலிய எல்லா விஷயங்களிலும் முன்பு மீனாக்ஷீயால் எந்தக் கட்டுப்பாடு வகுக்கப்பட்டதோ அதையே இவரும் நடைமுறையாக்கினார்.

பாண்ட்3யாத்4க்ஷ: பாண்ட்3யஜாமாத்ரு1தே3வ: / ப்ரேயான் ராஜ்ஞ்யா: பாலகோ த்3ராமிட3ானாம் । இத்யாக்2யாபி4: ப்ரீதிரஸ்யா தி4காஸீ-/ த3ாத்ம-ப்ரஹ்ம-ஜ்யோதிராதி3ச்ருதிப்4ய:॥

வேதப்ரஸித்தமான ஆத்மா, ப்ரம்மம், ஜ்யோதிஸ் முதலிய பெயர்களைவிட, பாண்ட்ய தேசாதிபதி பாண்ட்யனின் மாப்பிள்ளை, ராணியின் ப்ரியர் (=கணவன்) தமிழர்களின் 'ரக்ஷகர்' என்கிற பெயர்களைக் கேட்பதில் இவருக்கு ப்ரீதி அதிகமாயிருந்தது.

ராஜப்பொறுப்பை வஹிக்கிற இவர் உலகமக்கள் எல்லாரும் தம்தம் தர்மத்தை அனுஷ்டிக்கச் செய்தார். தர்மத்தை முழுவதுமாக நிலைநாட்டியதன்மூலம் யமனை மாத்திரம் தன் அதிகாரத்திலிருந்து நழுவச் செய்தார் (=அதர்மம் செய்வோர் யாருமே இல்லாததால் யமன் தண்டனைக்கு யாரும் உட்படவில்லை.)

9-வது லீலை - ஏழு ஸமுத்ரங்களையும் வரவழைத்தது

இவ்வாறு ராஜ்யமாண்டுவரும் போது ஒருநாள் தேவி மிகுந்த கவலையில் மூழ்கியிருப்பதைக் கண்டு காரணம் என்னவென்று திரும்பத்திரும்ப கேட்டார். தேவி 'தங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ரஸாதத்தால் அந்தந்த தர்மங்களைச் செய்து வருகிற எனது மாதா தீர்த்த யாத்ரையில் ஆவல் ஏற்பட்டு ஸமுத்ரஸ்நானம் செய்ய நாளை புறப்பட விரும்புகிறாள்' என்று சொன்னாள்.

ப்ரியையின் துக்கத்துக்குக் காரணத்தை இவ்வாறு கேட்டுத் தெரிந்துகொண்ட தேவன் ஏழு ஸமுத்ரங்களையும் ஸ்மரித்தார். அடுத்தகணம் அவை புருஷரூபத்துடன் வந்து தேவனை வணங்கின. ஒவ்வொன்றின் பெயரையும் சொல்லிக் கூப்பிட்டு, 'ஸோம ஸுந்தரேசாலயத்துக்குக் கிழக்கிலுள்ள குளத்தில் ஸான்னித்யமடையுங்கள்' என்று தேவன் உத்தரவிட்டார். ப்ரஜைகள் எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஸமுத்ர ராஜர்கள் புருஷரூபத்தை விட்டுவிட்டு ஆகாசத்தில் தூரத்தில் அலைகளால் திக்குகளையெல்லாம் வ்யாபித்துக் கொண்டு காட்சியளித்தனர். குளத்துக்குள் அடங்கும்படி தம் தம் ரூபத்தைக் குறுக்கிக்கொண்ட போதிலும் அத்புதமான அலைவரிசைகளால் அவர்கள் நன்கு புலப்பட்டனர். ஸமுத்ரங்களின் ப்ரவாஹங்களால் இழுக்கப்பட்ட மேகங்கள், மின்னல்கள் முறையே அவற்றில் பாசிகளாகவும் பவழங்களாகவுமாயின.

முன் யுகத்தில் பாகீரதீ ஜலத்தால் போதுமான அபிஷேகம் பெற்ற ஈசனுக்குப் பால், தயிர், நெய் முதலிய அந்தந்த ஸமுத்ர த்ரவ்யங்களால் இப்போது இரண்டாவது அபிஷேகம் நேர்ந்தது. (ஈசன் வ்யோமகேசர் (=ஆகாசத்தைக் கேசங்களாகக் கொண்டவர்). ஸமுத்ரங்கள் ஆகாசத்தை வ்யாபித்ததால் இவருக்கு அபிஷேகமேற்பட்டது.)

பிறகு பாண்ட்ய தேவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஸமுத்ரங்கள், தேவனின் ஸமீபத்தில் ரித்விக்காக இருக்கும் அகஸ்த்யரின் அண்ணத்தில் ஜலம் ஊறச் செய்வன போல் அக்குளத்தில் விழுந்தன. (முன்பு ஸமுத்ரம் முழுவதும் பருகிய அகஸ்த்யருக்கு அருகில் இப்போது ஸமுத்ரங்கள் வந்ததும் அவருக்கு ருசி தட்டியது போலிருந்தது என்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்ப்ரேக்ஷையால் (=தற்குறிப்பேற்றத்தால்) அகஸ்த்யரின் மஹிமை ஸ்மரணம் இது.)

ஆகாசத்தில் கிடைக்காதவையான பால், நெய், ஸுரை கரும்புச் சாறு, தயிர் இவற்றை அருந்துவதற்காக விமானங்களில் ஏறிக்கொண்டு குறுக்காகப் பறந்துவந்த தேவர்கள் இந்த ஸமுத்ரங்களின் ப்ரவாஹத்தில் புழு மூழ்குவது போல் மூழ்கிப் போயினர்.

பால் ஸமுத்ரம் முதலிய ஏழு ஸமுத்ரங்களும் ஒன்றாகக் கலந்தபோது உப்பு ஜலம் ஒன்றே பால் முதலிய உயர்ந்த வஸ்துகள் அனைத்தையும் ஒரே ஸமயத்தில் கெடுத்துவிட்டது. மூடத்தனம் (=அறிவின்மை) ஒன்று இருந்தால், அது, சூரத்தனம், கொடையாளித்தனம், நிலைத்து நிற்றல், கம்பீரமாயிருத்தல் முதலிய எல்லா நற்குணங்களையுங் கெடுத்துவிடுகிறதல்லவா?

அந்த ஸப்தஸாகர தீர்த்தத்தில் அந்தந்த ஸமுத்ரத்துக்குரிய சப்தம், ஸ்பர்சம், ரூபம், கந்தம் ரஸம் எல்லாம் கலந்துபோய் சித்ர சப்தம், சித்ர ஸ்பர்சம், சித்ரரூபம், சித்ரகந்தம், சித்ரரஸம் என்று ஆயின. இது இருக்கட்டும். இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ததின் பலனாக ஸ்வர்கமடைந்தவர்களும் ஸ்வர்கத்திலும் சித்ரமானவர்களாகவே இருந்தனர்.

ஆகமங்களில் ப்ரம்மஸ்வரூபத்தை 'ஸர்வகந்தம்' (=எல்லா கந்தமும் கொண்டது), 'ஸர்வரஸம்' (=எல்லா ரஸமுங் கொண்டது) என்று உபாஸிக்கச் சொல்லியுள்ளது. அப்பேர்ப்பட்ட ப்ரம்ம ஸ்வரூபமாகவே ஆகிவிடுவதென்பது இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதாலேயே கிடைத்துவிடுகிறது. அதனால் ந்யாயமறிந்தவர்கள் ஆகமங்களை அனுஸரிக்க மாட்டார்கள். ('தேன் ஸமீபத்திலேயே கிடைக்கும்போது எதற்காக மலைக்குப் போகவேண்டும்?' என்பது இங்கு கொள்ளப்பட வேண்டிய ந்யாயம்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீரும் பாலும் மட்டுங் கலந்திருந்தால் பிரித்தெடுக்கும் திறன் பெற்ற ஹம்ஸங்கள், எல்லாங் கலந்ததைப் பிரிக்க இயலாமல் உத்ஸாஹங் குன்றி, மீன்-தவளை - ஆமைகளுக்கு ஒப்பானவையாகி வெட்கமடைந்து அசையவேயில்லை.

❀ 10-வது லீலை - மலயத்வஜனின் சாயையை வரவழைத்தது ❀

ஸ்த்ரீகள் பதியுடன் கூடத்தான் ஸமுத்ரஸ்நானம் செய்யலாம், அல்லது புத்ரவதியாயிருப்பவர் செய்யலாம் என்ற சாஸ்த்ரத்தைக் கேட்டு காஞ்சனமாலை கவலைப்படுவதைக் கேட்டு, 'திரும்பிவராத சிவஸ்தானத்தை அடைந்துவிட்ட மலயத்வஜனை எப்படிக் கொண்டுவருவது?' என்று ஸுந்தரபாண்டியன் இன்னும் கவலையுற்றார். மல்யத்வஜனின் சாயையை வரவழைத்து மீனாக்ஷிக்குக் காட்டி ஆச்சர்யமாய்ப் பார்த்த அவளைக் கொண்டு காஞ்சனமாலைக்கு அறிவித்தார். ப்ராண நாதனை விமானத்தில் பார்த்த மகிழ்ச்சியால் அவள் மீனாக்ஷியைக் கட்டிக் கொண்டாள், உச்சி முகர்ந்தாள். ஸுந்தர பாண்டியன் அனுமதி அளிக்க விமானத்திலிருந்து இறங்கிவந்த கணவனுடன் லஜ்ஜையுடன் சேர்ந்து ஸமுத்ர ஸ்நானம் செய்தாள். பதி வியோகத்தால் தீனமாயிருந்த அவளது தேஹம் ஸ்நானம் செய்து எழுந்தபோது சந்த்ர கலை தரித்து அழகிய சிரிப்புடன் மூன்று கண்கள் உள்ளதாக மாறிற்று. / அவள் பதியுடன் கூட நிலையான சம்புபதத்தை அடைகிறவளாக புத்திரியைப் பிரியும் துக்கத்தைச் சிறிது மனஸில் கொண்டு 'நீங்கள் இருவரும் பூர்ணமான ப்ரம்மம் என்று இப்போது அறிந்தேன். என் பாசங்கள் அனைத்தும் அறுபட்டன. இருந்தும் உனது பாக்யங்களைப் பார்க்கும் பாக்யம் பாதியில் விட்டுப் போயிற்றே என்று வருந்துகிறேன். ப்ரியனின் பாதகமலத்தைப் பொறுமை யுடனும் தைர்யத்துடனும் அன்புகலந்த பக்தியாலும் சுச்ருஷை செய். புத்ரனைப் பெற்று அவனை ராஜ்யபாரம் வஹிக்கும்படி அபிஷேகம் செய்துவிட்டு நீ உன் ஸ்தானத்துக்கு வந்ததும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உன்னைப் பார்க்கிறேன்' என்று கூறினாள். இப்படிக் கூறிவிட்டு எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட திவ்யமான சங்கரஸ்தானத்திற்கு காஞ்சனமாலை கிளம்பினதும் மீனாக்ஷியின் முகம் ஆனந்தத்தால் ஏற்பட்ட கண்ணீரால் அலங்கரிக்கப்பட்டது; சோகத்தால் ஏற்பட்ட கண்ணீரால் தூஷிக்கப்பட்டது. அந்தந்த ஸந்தர்பத்துக்குரிய அந்தந்த வார்த்தைகளால் தேவியின் சித்த க்லேசத்தைத் துடைத்து அவளுடன் ஆனந்த ஸமுத்ரத்தில் ஈசன் ஜலக்ரீடை புரிந்தார்.

❀ 11-வது லீலை - ஸ்கந்தனை உக்ரபாண்டியனாக அவதரிக்கச் செய்தது ❀

கேந்த்3ரே ச1ந்த்3ரே, தே3சிகே ச1ாமராணா-/ம்ரு1க்ஷே ரௌத்3ரே,
ரௌத்3ரவ்ரு1த்தி: பரேஷு । ப்ராது3ர்பூ4த:, பாண்ட்3ய வம்சஸ்ய
பூ4த்யை/தஸ்யா க3ர்ப4ாத், தாரகாரி: குமார: ॥

சந்த்ரனும் குருவும் கேந்த்ரத்திலிருக்கும் போது ஆர்த்ரா நக்ஷத்ரத்தில் பாண்டிய வம்சம் விளங்க மாற்றாரிடம் கோபமாயிருக்கிறவரான தாரகாஸுர சத்ரு ஸுப்ரம்மண்யன் தேவிக்குக் குழந்தையாய்த் தோன்றினார். பின்னால் இவன் மேருமலை அடிவாரத்திலிருந்து நிறைய தங்கக் கட்டிகளைக் கொண்டுவரப்போகிறான் என்பதற்காக, ப்ராம்மணர்களுக்கு வாரிவழங்குதல் என்ற ஒரு சாக்கை வைத்து, மஹேசன் வரப்போகும் தங்கக் கட்டிகளுக்கு கஜானாவில் இடம் சேர்த்து வைத்தார்.

அகஸ்த்யர் சொற்படி உக்ரன் என்று குழந்தைக்குப் பெயர் வைத்தார், ஈசன். வேதங்கள் சாஸ்த்ரங்கள் எல்லாம் உரிய காலத்தில் குருவின் உபதேசத்தை ஒரு சாக்காக வைத்து அவனுக்கு விளங்கின. (=ஈசனின் புத்ரனான படியால், வேதங்கள் சாஸ்த்ரங்கள் அவனுக்குத் தானே விளங்கின. ஆனால் தானே விளங்கின என்று வெளியில் தெரியக்கூடாது என்பதற்காக குருவின் உபதேசத்தை ஒரு சாக்காக வைத்துக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டு குரு உபதேசித்ததால் தான் விளங்கின என்று மற்றவர்க்குத் தோன்றும்படி செய்தன. இதேபோல் வாரிவழங்குதல் என்ற ஒரு சாக்கை வைத்து என்ற இடத்திலும் பொருள்கொள்ள வேண்டும். கஜானா நிறைந்திருக்கிறது. இருக்கிற தங்கம் செலவானால் தான் வரப்போவதற்கு இடம் கிடைக்கும். செலவுக்கு ஒரு சாக்கு ப்ராம்மணதானம்.) ஈசனே சஸ்த்ரங்கள் - அஸ்த்ரங்களைக் கற்பித்தார். ஸூர்யவம்சத்தில் ஸோமசூடன் என்ற அரசனின் மகள் காந்திமதியை, அவன் கொடுக்க, அழைத்து வந்து உக்ரபாண்டியனுக்கு விவாஹம் செய்வித்தார்.

❀ 12-வது லீலை - சக்தி, தண்டம், சக்ரம் அளித்தது ❀

சக்தி, (=வேல்) தண்டம், சக்ரம் ஆகிய ஜ்வலிக்கும் ஆயுதங்கள் மூன்றைக் கொடுத்து விநீதனான குமாரனைப் பாண்டிய ராஜ்யத்தில் அபிஷேகம் செய்துவைத்தார். தேவியுடன் கூட அவருக்கு வருஷங்கள் கடந்தன. 'இப்படி பூமியைப் பரிபாலிக்க வேண்டும், இப்படி கொழுப்பெடுத்தவர்களை அடக்கவேண்டும், இப்படி நடந்துகொள்ள வேண்டும்' என்று புத்ரன் உக்ரனுக்கு உபதேசித்துவிட்டு அந்த தம்பதிகள் - ஸுந்தரபாண்டியர் மூலலிங்கத்திலும் தடாதகை மீனாக்ஷியிலும் ஐக்யமடைந்தனர். உக்ரபாண்டியன் மீனாக்ஷீ-ஸுந்தரேசரூபமாக மறைந்திருக்கும் பெற்றோரை தினமும் ஸேவித்துக் கொண்டு மற்ற அரசர்களை அடக்கி ஆண்டுவந்தான்.

❀ 13-வது லீலை - ஸமுத்ரம் சுவற சக்தியைப் ப்ரயோகித்தது ❀

உக்ரபாண்டியன், நூறு அச்வமேதங்களால் பரமேசனை ஆராதித்தான். ஸ்வர்கபோகங்களைப் பூமியிலேயே அனுபவித்தான். அதனால் இந்த்ரன் அவனிடம் அஸூயை கொண்டான். கரைகடந்த அலைப்பெருக்கால் ராஜதானி - மதுரையை ஆக்ரமித்து அவனது ராஜ்யத்தை ஸ்வீகரித்துக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள்ளும்படி அருகிலிருக்கும் தென் ஸமுத்ரத்தை அவன் ஏவினான். ஸமுத்ரம் கரைகடந்து ஊர்களை அழிப்பதற்குள், ஸ்வப்னத்தில் ஸுந்தரேசர் போதித்தபடி இரவில் விழித்து யானையிலேறிச் சென்று மைமலை வருவதுபோலும் நீலவானம் கீழ்நோக்கி வருவது போலும் ஸமுத்ரம் வருவதைப் பார்த்து ஸந்தோஷமடைந்தபோதிலும் உக்ரபாண்டியன், பலவகை ப்ராணிகள் இப்படி நாசமடையும் போது வேடிக்கை பார்க்கக் கூடாது என்று, கோபத்துடன், ஈசன் அளித்த சக்தியை ஸமுத்ரத்தில் வீசினான். சக்தி சீறிக் கொண்டு சென்று ஒரே இழுப்பில் உறிஞ்சி பூமியில் ஸமுத்ரம் பெருகுவதற்கு முன்பிருந்த ஈரத்தையும் காயவைத்துவிட்டது. ஸமுத்ரத்தின் எல்லை குறைந்துவிட வேண்டாமென்று சக்தியைத் திரும்ப அழைத்துக் கொண்டு - ஸமுத்ரத்தை உறிஞ்சி சக்தி ஏற்படுத்திய அந்த பூமி முழுவதையும் ஸுந்தரேசனுக்கு உடனே அளித்து விட்டான்.

❀ 14-வது லீலை - சக்ரத்தால் இந்திரனின் கிரீடத்தைப் பிளந்தது ❀

கைலாஸத்திலிருந்து லங்கைவரை ஒருபோது மழையின்மை யோகம் ஏற்பட்டபோது எல்லா அரசர்களையும் கூட்டி உக்ரன் அகஸ்த்யரிடம் செய்யவேண்டியதைக் கேட்டான். அவர் கட்டளைப்படி எல்லாரும் இந்த்ரனைப் பூஜித்து வணங்கி மழையை யாசித்தனர். மீனாக்ஷியின் பிள்ளைக்கு இந்த தீனத்தனம் மனஸுக்கு ருசிக்கவில்லை. பராக்ரமத்தால் மழையை அடைய நினைத்தான். மலயமலையில் வேட்டையாடச் சென்ற ஸமயத்தில் மலைச்சிகர நுனியில் ஸ்வேச்சையாய் அமர்ந்திருந்த 'புஷ்கலாவர்த்தம்' முதலிய மேகங்களை வேலையாட்களால் பிடித்துவந்து கட்டிப்போட்டு ஜயிலிலடைத்தான். ஜயில் காவற்காரர்களின் ஸ்நேஹத்தால் அந்த மேகங்களுள் சில, ஒரு நாளைக்கு ஒருமுறை இருமுறை பூஞ்சோலை பராமரிப்போராலும், வேறுசில, வீட்டில் மயில் குஞ்சுகள் - வளர்ப்போராலும் ரஹஸ்யமாக இழுத்துச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செல்லப்பட்டன. கர்ஜனை ஒழிந்து மின்னல்விலாஸம் இன்றி பயத்தால் வற்றிப்போய் புழுதியேறிப் புகைமட்டும் மிச்சமாக, உக்ரபாண்டியன் கட்டளைப்படி, மேகங்கள் ஜயிலில் வஸித்தன. பாதாளம் முதல் ஸப்தரிஷிலோகம் வரை உலகையே ஜலவெள்ளத்தில் மிதக்க அடிக்கும் மஹாமேகங்கள் இப்படி உக்ரனால் சிறைசெய்யப்பட்டதைக் கேட்டுக் கோபமடைந்து இந்த்ரன் அவனுடன் போர்புரிய வந்தான், ஆகாசம் முழுவதும் நாண் கயிற்றின் கோஷம் வ்யாபித்து பாணமழையால் யானை - குதிரை - சிப்பாய்கள் அழிந்து எங்கும் ரத்தவெள்ளத்தால் சிவந்து இருவருக்கும் கோரயுத்தம் நடந்தது. கழுகுகளை அடிப்பது போல் அடித்துத் தேவர்களை விமானத்திலிருந்து வீழ்த்தினான் உக்ரன். மழைக்குத் தடையை உண்டுபண்ணின வானசாரிகளை அங்கமங்கமாக வெட்டி மாம்ஸம்-மஞ்ஜை ரத்த மழை வர்ஷித்தான். அவன் எல்லையின்றி விடுத்த பாணங்கள் முள் கூட்டங்கள் போல் வானெங்கும் வ்யாபித்தன. தேவர்கள் ஸைன்யம் நிற்கவோ, போகவோ, அசையவோ முடியாமல் ஸ்தம்பித்தது. அஸ்த்ரத்தால் அஸ்த்ரத்தைத் தடுத்து, சஸ்த்ரத்தால் சஸ்த்ரத்தையும் சஸ்த்ரம் ப்ரயோகிப்போரையும் பிளந்து, தன் தந்தையின் நெற்றிக்கண் அக்னிபோல் ஜ்வலித்தான் உக்ரன்.

இந்த்ரன் வஜ்ரத்தை ப்ரயோகிப்பதைப் பார்த்து, உக்ரன் ஈசன் கொடுத்த சக்ரத்தை ப்ரயோகித்தான். அது வஜ்ரத்தை ஸ்தம்பிக்கச் செய்து இந்த்ரனின் கிரீடத்தைப் பிளந்துவிட்டுத் திரும்ப உக்ரன் கைக்கே வந்தது. இப்படி பங்கப்பட்டு தலைவிரிகோலமாய் ஓடினான் இந்த்ரன். மற்ற தேவர்கள் சண்டமாருதத்தில் அகப்பட்ட பஞ்சுக் கூட்டம் பறப்பதுபோல் பறந்தனர்.

க்ரந்த^{3}த்^{3} - க^{3}ந்த^{4}-த்^{3}விபமபஸரத்-ஸெந்த^{4} வோத்து^{4} த-
யோத^{4} -/ ப்ரத்யுத்^{3} த^{4}ார-வ்யஸன-விமுக^{2}ா பேத-பாத^{3}ாத
ஜாதம் । த3ாவத்3தே3வப்வர-ஸமரோத3ந்த-யாத2ார்த்^{2}ய
பே^{3}ாத^{4}-/ ப்^{4}ராம்யத்பௌரம் நக^{3}ரமப^{4}வத்^{3} ஜர்ஜரம்
நிர்ஜராணாம் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மதகந்தம் வீசும் யானைகள் அலறின. குதிரைகள் தூர ஓடின. அவை ஓடும்போது தன் மேல் ஏறியிருந்த வீரர்களை உதறிவிட்டு ஓடின. குதிரையிலிருந்து விழுந்தவரைத் தூக்க முயற்சிக்காமல், காலாட்படை, தான் தப்பினால் போதுமென்று யுத்தகளத்தை விட்டு அகன்றுவிட்டது. தேவோத்தமர் களெல்லாம் ஓடும்போது அவர்களிடமிருந்து யுத்தம் பற்றிய வார்த்தைகளின் உண்மையை அறிவதற்காக நகர ஜனங்கள் அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தனர். இவ்வாறு தேவநகரமே வெலவெலத்துப் போய்விட்டது. ஆடிப்போய்விட்டது. நிர்ஜரா : = ஜரையற்றவர்கள். ஜரையற்றவர்களின் நகரமே சிதறிப் போய்விட்டது.

❀ 15-வது லீலை - மேருவைச் சண்டாயுதத்தால் அடித்தது ❀

மீனாக்ஷியின் புதல்வன் இப்படி பூமியை ஆளும்போது ஒருபோது ஐந்து க்ரஹங்கள் வக்ரமாகி ஸேதுமுதல் ஹிமயம் வரை மழை பெய்யாமற் செய்தன. ஜனங்கள் பஞ்சத்தால் வாடினர். அகஸ்த்யர் கட்டளைப்படி ஸோமவார வ்ரதமிருந்து ஸோமஸுந்தரனை ஆராதித்தான் உக்ரன், கருணைக்கடல் - ஈசன் அவனது ஸ்வப்னத்தில் தோன்றி, ‘வக்ரமாயிருக்கிற சுக்ரன் முதலிய க்ரஹங்களால் ஒரு வருஷத்துக்கு மழையின்மை ஏற்பட்டுள்ளது. வருஷம் முடிந்ததும் அவர்கள் கிங்கரர்களாய்ச், சொன்னபடி கேட்பார்கள். முன்பு யாமளித்த சண்டாயுதம் என்ற தண்டத்தால் பலாத்காரமாக ஸுவர்ணமலை மேருவிலிருந்து நிறையத் தங்கம் கொண்டு வா’ என்று கூறினார். அவனும் சண்டாயுதத்துடன் விடியற்காலம் கிளம்பினான்.

சிவனின் வில் அந்த மேரு. வில்லின் நுனியில் ஈசனால் கழற்றி வளயமாக வைக்கப்பட்ட ‘வாஸுகி-நாண்கயிறு’ போல மேருச்ருங்கத்தில் தேவகங்கை ஓடுகிறது. ஸர்வரத்னங்களுக்கும் இருப்பிடமான அந்தத் தங்கமலையை ரக்ஷிப்பதற்காக இரவும் பகலும் பாராக்காரர்கள் போல் சந்த்ரஸூர்யர்கள் சுற்றி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருகிறார்கள், ஒருபோதும் விடுவதில்லை. அங்கு கல்லெல்லாம் ரத்னம், மண்ணெல்லாம் தங்கம், நீர் வீழ்ச்சி கங்கை, வேடன் ஸ்ரீ சங்கரன். இருகாலுடையவர்கள் = மனுஷ்யர் முதலியவர், பக்ஷிகள், அறுகால் வண்டுகள், நாற்கால் கால்நடைகள் எல்லாம் அந்த மேருவின் ஸம்பந்தத்தால் அஷ்டாபதமயமாக - எட்டுக்கால் உள்ளவர்மயமாக ஆகிவிடுகிறார்கள். (உண்மைப்பொருள் - அஷ்டாபதம் - தங்கம். தங்கமயமாக.) தேவர்களின் வாஸஸ்தானமான அதன் சிகரங்கள் காட்டுத்தீயால் உருகும் போது ''ஸ்வர்கம் ஸ்திரமானதல்ல' என்ற வார்த்தை ப்ரமாணமானதுதான்'' என்று ப்ரத்யக்ஷமாய் தெரிகிறது. தங்கமே அங்கு மண்ணாக இருப்பதால் நகையில் ஆசைகொண்ட தேவஸ்த்ரீகள் நகை பண்ணக் குயவனிடம் செல்கின்றனர். தங்க மாமரங்களில் பழுத்த இலையையும் பசுந்துளிரையும் இனந்தெரிந்து கொள்ள முடியாமல் அங்கு குயில்கள் கஷ்டப்படுகின்றன. ஆனால் எல்லாப் புஷ்பங்களும் தங்கமயமாய் ஒரே நிறமாயிருந்த போதிலும் அந்தந்த புஷ்பத்தின் வாஸனையை நன்குணர்ந்த வண்டுகளுக்குப் பிரித்துத் தெரிந்துகொள்வதில் கஷ்டமேயில்லை. இப்பேர்ப்பட்ட ஸர்வதேவர்களும் வஸிக்குமிடமான மேருவை அடைந்து ப்ரதக்ஷிணம் செய்து அதன் அனுக்ரஹத்தை எதிர்பார்த்துக் கொண்டு உக்ரபாண்டியன் அதனெதிரில் நின்றான்.

உக்ரபாண்டியன் எதிரில் நிற்கும்போது கூட சும்மா இருந்தது தங்கமலை. ராமர்விஷயத்தில் ஸமுத்ரம் என்ன செய்தது? இதுதான் (=தன்னை மதிப்பவரை அவமதிப்பதுதான்) ஜடங்களின் இயற்கை. பெயருக்கேற்ப பாண்டியனின் மனம் மாறியது. மஹேசன் அளித்த தண்டத்தைச் சுழற்றி மேருவை அடித்தான். மேருவை வில்லாகக் கொண்டதால் ஈசனுக்கு 'ஸ்திரமான வில்லுடையவர்' என்ற பெயர் இருந்தது. அந்த மேருவே இப்போது ஆடிப்போயிற்று. ஸூர்ய வெப்பத்தால் பழுத்திருந்த அதில் அடி விழுந்ததும் அது இன்னும் அகன்று தேவர்கள் நெருக்கடியின்றி வஸிக்க இடமளித்தது. மேருவே அடிபட்டு ஆடியபோது, முன்பு ராவணனால் அசைக்கப்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கைலாஸத்திற்கு அதனாலேற்பட்ட வெட்கம் போய்விட்டது. பிறகு மேரு, அவனை ஸுந்தரேசரின் பிள்ளையென அறிந்து தன் ரூபத்தைக் காட்டி மிக வினயமாக - 'ஸ்தாவர சரீரமுள்ளவனாயிருப்பதால் உன்னை அறிந்து கொள்ளவில்லை. உலகின் இயற்கையை அறிந்தவனான நீ ஒருபோதும் கோபிக்கக் கூடாது. உனது தந்தையின் வில் நான். என்னை நீ பொடியாக்கினால் உடையவனான உன் தந்தைக்குத்தான் அது குறைவு. உடைமைப் பொருளான எனக்கு ஒன்றுமில்லை. எனக்கு நிறைய ஸுவர்ணமிருக்கிறது. இப்படி மிகக் குறைவாய்ச் சொல்வானேன்? நானே உனக்காகத்தானிருக்கிறேன். விருப்பப்படி என்னை வேண்டிய மட்டும் உபயோகித்துக் கொள்.' என்று சொன்னது. / இவ்வாறு மேருவால் கோபத்தையகற்றி ப்ரஸன்னமாக்கப்பட்ட உக்ரபாண்டியன், மேருகாட்டிய பெருஞ் சுரங்கத்திலிருந்து சண்டாயுத தண்டத்தால் பலவிதத் தங்கங்களைப் பெயர்த்து, ஆகாசக் குதிரைகள் பூட்டிய வண்டிகளில் ஏற்றிவந்து, மழைத்தடை உள்ள வரை தங்கமழை பெய்து குடிமக்களைக் காப்பாற்றினான். நித்யமே மழையின்மை இருந்தால் நலம் என்று அவர்கள் நினைக்கும்படி அடிக்கடி தங்கத்தை வர்ஷித்தான்.

ஈசன் அருளால் காந்திமதியிடம் வீரபாண்டியன் என்ற குழந்தையை அடைந்தான், வயது வந்ததும் ராஜ்யத்தை அவனிடம் ஒப்படைத்துவிட்டு உக்ரன் பரமானந்த பதத்தை அடைந்தான். வீரபாண்டியன் (-பேரன்) செய்த பக்தி - பூஜை - தபஸ்களால் ஈசனுக்கு அவனிடம் புத்ரனிடத்திலிருந்ததைவிட ப்ரீதி அதிகம் வளர்ந்தது.

❀ 16-வது லீலை - ரிஷிகளுக்கு வேதப்பொருளுணர்த்தியது. ❀

கண்வாதி மஹர்ஷிகள் ஒரு ஸமயம் ஸுந்தரேசர் ஸேவையால் வேதார்த்தத்தை அறியவிரும்பி கதம்பவனம் = மதுரை வந்து தபஸ்-கர்ம-த்யானம் - தானங்கள் செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டு ஒரு வருஷம் ஈசனருகில் கழித்தனர். அவர்கள் பக்திக்கு வசப்பட்டு ப்ரஸன்னராகி ஈசன் அந்தண உருக்கொண்டு நிஜஸ்வருபத்தை விளக்கினார். ஸுந்தரேசர் ஸந்நிதியில் புலித்தோலிலமர்ந்து, வணங்கி அருகிலமர்ந்த ரிஷிகளுக்கு வேதங்களை விளக்கினார் - 'ப்ரணவம், தாரம், ஓங்காரம் என்றெல்லாம் கூறப்படும் சப்தப்ரம்மம், ஒன்றாகவும், மூன்றாகவும், நான்காகவும், ஐந்தாகவும் இருந்து கொண்டு ஆகமங்களில் பன்னிரண்டாகவும் பிரித்துச் சொல்லப்படுகிறது. அதிலிருந்து வ்யாஹ்ருதிகள், அவைகளிலிருந்து காயத்ரி, காயத்ரியிலிருந்து உபவேதங்களுடன் வேதங்கள், அவைகளி லிருந்து ஸமஸ்தமான காவ்யசாஸ்த்ரங்களான சப்தங்கள் அனைத்தும் உண்டாயிருக்கின்றன. ப்ரணவத்தின் மஹிமை சொல்லிமுடியாதது. உலகிலுள்ள சப்தம் அனைத்தும் அதிலிருந்துதான் வந்திருக்கிறது. இப்படியாக ஒரே தாயிடமிருந்து உண்டாகி ஒரே அபிப்ராயத்துடன் ஒரே குறிக்கோளைக் குறித்து செல்லும் சாஸ்த்ரங்களை, 'ஒன்றுக் கொன்று முரண்பட்டவை' என்று, தன் புத்திமுரண்பாட்டைக் கொண்டு அறியாதவர் கூறுகின்றனர். இந்த லிங்கத்தில் மறைந்திருக்கும் பரமமான ஜ்யோதிஸ்ஸைத்தான் எல்லா சப்தங்களும் தத்பரமாய் அறிவிக்கின்றன. அங்கங்கள், மந்த்ரங்கள், தந்த்ரங்கள், சாஸ்த்ரங்கள், வேதங்கள், முடிவில் உலகத்தோர் கதைகள் கூட இங்குதான் முடிகின்றன. இந்த சிவனைவிட்டு வேறில்லாத - எல்லாருக்கும் அனுக்ரஹிக்கும் - சக்தி இருக்கிறாளே, அவளை சரணாகதி அடையாமல் சப்தங்களைக் கொண்டு அந்த சிவ தத்வத்தை அறியமுடியாது. அவள் பாதத்தில் ஈடுபடாதவர்கள் கொஞ்சம் மேலே ஏறுபவர் போல் அதிகமாகக் கீழே இறங்குகிறார்கள். அவள்தான் பேசுகிறாள், அவள்தான் பேசவைக்கிறாள். அவளே அறிகிறாள். அவள் அறிவுருபமானவள். அவள்தான் நடை. அவள்தான் நடத்துபவள். அவளே இந்த மீனாக்ஷி. தபஸ்-தானம்-யாகம் முதலியவற்றால் அவளையே, வேறு எதையும் நாடாமல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சரணடையுங்கள். பிறகு ஸமஸ்தமான சப்தங்களும் ஒரே பரம் பொருளை உணர்த்துகின்றன என்பது உங்களுக்கு நன்கு தெரியும்' என்று இவ்வாறு கூறி அந்த ரிஷிகளின் தலையில் தனது கையை வைத்து அவர்களை அனுக்ரஹித்துவிட்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த மூலலிங்கத்தில் மறைந்தார், ப்ராம்மணராக வந்த ஈசன்.

ஃ 17-வது லீலை – ரத்ன வ்யாபாரியாக வந்து மகுடம் பண்ண ரத்னமளித்தது. ஃ

பஹுகாலம் சென்றதும் வீரபாண்டியன், போக ஸ்த்ரீகளிடம் கெட்ட எண்ணங் கொண்ட பல புத்ரர்களை அடைந்தான். பலவிதமாக மீனாக்ஷீ-ஸுந்தரேச்வரர்களை ஆராதித்து தனது பட்டமஹிஷியிடம் வம்சத்தை வளர்க்கும் புத்ரனை உண்டுபண்ணினான். எப்போதும் வேட்டையாடுதலில் ஈடுபட்ட அவன் ஒரு ஸமயம் காட்டில் புலியால் வீழ்த்தப்பட்டான். அந்த ஸமயம் பார்த்து அவனது போகஸ்த்ரீ பிள்ளைகள், ஸொத்து முழுவதையும் திருடிக் கொண்டு ஓடிவிட்டனர். வீரபாண்டியனின் ஐந்து வயது பாலனை ராஜாவாக அபிஷேகம் செய்து பட்டத்தில் அமர்த்த குலமூதாதையர் ஒருவர்க்கொருவர் கலந்து ஆலோசித்தனர். 'முகுடம் தலையில் சூட்டித்தான் அபிஷேகம் செய்யவேண்டும். ராஜாவாக அபிஷேகம் செய்து ராஜ்யம் ஸ்திரப்பட்டபின்பு தான் ராஜ்யத்தில் ரத்னங்களை ஸம்பாதித்து முகுடம் செய்ய முடியும். என்ன செய்வது? சம்புவின் அனுக்ரஹம் வீண்போகாது. முடிவு என்னவென்று தெரியவில்லை' என்று அவர்கள் கவலைப்படும்போது ஸ்ரீஸுந்தரேசரே ஒரு ரத்ன வ்யாபாரியாக, பல வேலைக்காரர்களால் சூழப்பட்டு, பெரும் ஸம்ருத்தியால் ஜ்வலித்துக்கொண்டு, ராஜஸேவகர்களிடம், தான் ரத்னவ்யாபாரி என்று சொல்லிக் கொண்டுவந்தார். கூலி ஆட்கள் கொண்டுவந்து வைத்த ரத்னப்பெட்டியைத் திறந்து, தனது ரத்னசாஸ்த்ரத் தேர்ச்சியை வெளியிட்டுக் கொண்டு கூறினார் – 'எல்லாரும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரத்னத்தைப் பார்க்கிறார்கள், எல்லாரும் உடலிலும் அணிகிறார்கள், ப்ரம்மத்தின் தத்வத்தைப் போல ரத்னங்களின் தத்வத்தை ஒருவரும் அறிவதில்லை', என்று கூறி, இந்த்ரன் செய்த யாகத்தில் பசுவாயிருந்த பலாஸுரனுடைய தேஹ தாதுக்களிலிருந்து எந்த ரத்னங்கள் வந்தன? சிவன் தேஜஸ்ஸிலிருந்து வந்தவை எவை? யஜ்ஞவராஹஸ்வாமி வாய் நுரை வழிந்ததிலிருந்து வந்தவை எவை? இந்த்ரன் கண்பீளையிலிருந்து வந்தவை எவை? ததீசி மஹர்ஷியின் எலும்புகளிலிருந்து வந்தவை எவை? பூலோகத்தில், ஸ்வர்கத்தில், பாதாளத்தில் ரத்னச்சுரங்கங்கள் தனித்தனியாக எவை உள்ளன? நிழலோட்டம் எந்த ரத்னத்துக்கு எப்படி? உருவம் எப்படி? ஸ்பர்சம் எப்படி? எடை எப்படி? அளவு எது? விலைகள் எப்படி? எவைகள் தோஷங்கள்? எவைகள் குணங்கள்? எவை ஜாதி விசேஷங்கள்? ஜாதிபோல் தோன்றுபவை எவை? எவை செயற்கை நிறம் கொண்டவை? எவை முழுவதுமே செயற்கையானவை? எப்போது அணிய வேண்டும்? எப்படி அணியவேண்டும்? யார் அணிய வேண்டும்? எங்கு அணியவேண்டும்? வாங்குவது எப்படி? விற்பது எப்படி? தானம் கொடுப்பது எப்படி? தானம் பெறுவது எப்படி? இவைகளை எப்படி ரக்ஷிப்பது? எப்படி பரீக்ஷிப்பது? இவைகளுக்கு உபநிஷத் என்ன? ப்ராம்மணாதி நாலு ஜாதிகளில் எது எந்த ஜாதி? ஸ்த்ரீரத்னம் எது? புருஷரத்னம் எது? ஜீவ-அஜீவப் பாகுபாடு எப்படி? எவை மனுஷ்யர்களுக்கு உகந்தவை? எவை தேவர்கள் அணியத்தக்கவை? ஸுலபமாய்க் கிடைப்பவை எவை? கிடைத்தற்கரியன எவை? எவை உண்டானால் உத்பாதம், (= உலகிற்கே தீங்கு) வரும்? எவை எந்த மருந்தில் உபயோகப்படும்? நூற்றுக்கணக்கான ரத்னங்களின் பெயர்கள் என்னென்ன? என்றெல்லாம் விளக்கினார். ஸமஸ்த தேவர்களுக்கும் ரத்னமாயிருக்கிறவரும் ரத்னமயமான தாழ்வரை கொண்ட தங்கமலையை வில்லாக ஏந்தியவருமான ஈசனைத் தவிர வேறு யாரால் முடியுமிது? 'ஸுந்தரேசனின் பிள்ளையின் பேரனான இந்த ராஜபுத்ரன்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யான் கொண்டுவந்த விலைமதிப்பற்ற இந்த ரத்னங்களை அணியத் தகுந்தவன். இவைகளைக் கொண்டு கிரீடம் பண்ணி அணிவித்துப் பட்டாபிஷேகம் பண்ணி ராஜ்யம் நிலைபெற்றதும் உசிதப்படி ரத்ன மூல்யத்தைக் கொடுங்கள்' என்று கூறி வேண்டிய அளவு திவ்ய ரத்னங்களை அளித்து எல்லோர் எதிரிலேயே, உடன் - வந்தோர், உடைமை எல்லாவற்றுடன் மறைந்தார் மஹேசன். அந்த அடையாளத்தால், வந்தது ஈசனே என உணர்ந்து எல்லாரும் குழந்தையின் பாக்யத்தை, ஆனந்த பாஷ்பம் மேலிட்டுத் தழுதழுத்த குரலில் கொண்டாடினர். சாஸ்த்ரப்படி மகுடம் பண்ணி ராஜமந்திரிகள், குழந்தைக்கு அபிஷேகம் செய்தனர். தயையால் நனைந்த ஈசன் பார்வையாலேயே முதலில் அபிஷேகம் செய்விக்கப்பட்ட குழந்தைக்கு மந்திரிகளும் பின்னால் அபிஷேகம் செய்தனர். அது முதல் 'அபிஷேக பாண்டியன்' என்ற பெயர் விளங்கிற்று அவனுக்கு. ஈசனுடைய பக்தவாத்ஸல்யம் இப்படிப்பட்டது. சிவலிங்கங்களைப் பார்ப்பது சிவன் மஹிமையைக் கேட்பது - சிவனைப் பூஜிக்க ஆசைப்படுவதுதான் குழந்தையாயிருக்கும் போதே அபிஷேக பாண்டியனுக்குக் கௌதுகமாயிருந்தது = ஆவலுள்ள விளையாட்டாயிருந்தது. தன்னைக் கடனாளியாக நினைத்துக்கொண்டு ரத்னம் வழங்கிய ஈசனை ரத்னங்களாலேயே எப்போதுமர்ச்சித்தான். ஈசன், கல்வகையை மட்டும் சேர்ந்த சில ரத்னங்களை இவனுக்கு அளித்தார். இவன் எல்லா வஸ்துக்களிலும் ரத்னங்களை = உயர்ந்தனவற்றை ஈசனுக்குக் காணிக்கையாக்கினான்.

கஸ்தூரீ - ஹிமவாலுகா-ஹிமபயச்^{5}- ஶ்ரீ க^{3}ந்த^{4}-
கே^{3}ாரோச^{1}னா-/ காச்மீரை ரனுலேபித : பசுபதி :
பாண்ட்^{3}யாத்மஜேனாஸக்ரு^{1}த் । கஸ்தூரீ-க^{4}னஸார-ஸுந்த^{3}ர
இதி க்^{2}யாதிந் தத^{3}ாதி^{3}ச்ரிதோ / யேனாத்^{3}யாபி ஸமீஹதே
தனுப்^{4}ரு^{1}தாம் தாமேவ ஸேவாம் பராம் ॥

அபிஷேகபாண்டியனால் ஸுந்தரேசன், கஸ்தூரி - பச்சைக்கர்ப்பூரம்-பன்னீர்-சந்தனம்-கோரோசனை-குங்குமப்பூக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களால், அடிக்கடி காப்பு சாத்தப்பட்டார். அது முதற்கொண்டு 'கஸ்தூரி-கர்ப்பூர ஸுந்தரர்' எனப் ப்ரஸித்திபெற்று இப்போதும் ஜனங்கள், மேலான அதே ஸேவையைத் தனக்குச் செய்ய வேண்டுமென விரும்புகிறார்.

ப்ரதிவருஷமும் செய்யும் தாமரைப் பூ - அர்ச்சனையைச் செய்யவந்த இந்த்ரன், அபிஷேக பாண்டியன் செய்திருந்த பூஜையைக் கண்டு வெட்கித்தான். ஒருஸமயம் வருணனிடம் பேச்சின் நடுவில் இந்த்ரன், ஈசனின் பக்தவாத்ஸல்யத்தையும் பாண்டியக் குழந்தையின் பக்தியையும் பற்றிக் கூறினான். வருணன் தானும் ஈசனை ஸேவிக்க நினைத்தான், அதற்கு முன் முதலில் இந்த்ரன் சொன்ன இரண்டையும் பரீக்ஷைபண்ண எண்ணினான்.

❀ 18-வது லீலை - வருணன் ஏவிய ஸமுத்ரத்தை உறிஞ்சியது ❀

வருணனை ஜலோதரரோகம் பீடித்துக் கொண்டிருந்தது. அது நீங்குவதற்காக ஈசனை மதுரையில் பூஜிக்க நினைத்தான். அதற்கு முன் பரீக்ஷையைத் தொடங்கினான். ஸமுத்ரத்தைத் தூண்டினான்.

முன்பே ஒருமுறை தோற்றிருந்தபோதிலும் ஸமுத்ரம் வருணனின் தூண்டுதலால் மதுரையை உட்கொள்ளப் பொங்கிவந்தது. பயந்த ஜனங்கள் அரசனை சரணடைந்தனர். அவன் ஸுந்தரேசனை சரணடைந்தான். பாண்டியன் பார்க்கும்போதே ஈசன் தனது கேசத்தில் நான்கைப் பிய்த்து ஆகாசத்தில் எறிந்தார். அவை மேகமாகி, காய்ந்த வஸ்த்ரம் பள்ளத்திலுள்ள நீரை உறிஞ்சுவது போல் ஸமுத்ரஜலத்தைக் குடித்துவிட்டன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ 19-வது லீலை - ஜடைமேகங்களால் மழை-வெள்ளத்திலிருந்து மதுரையைக் காப்பாற்றி 'சதுஷ் கூடம்' எனப் பெயர் வைத்தல். ❀

இந்த அத்புதத்தைப் பார்த்தபின்பும் வருணன் பரீக்ஷிப்பதை நிறுத்தவில்லை. தேவர்களுக்கே இம்மாதிரி நிலை இருக்கும்போது மனுஷ்யர்களுக்குப் புத்திபேதம் ஏற்படுவது அத்புதமே இல்லை, மேகங்களை ஏவினான். முன்பு ஜயிலிலடைக்கப்பட்டதற்குப் பதில் செய்ய நினைத்து மேகங்கள் ப்ரளயகாலம்போல் பயங்கர முழக்கத்துடன் ஆகாசம் முழுவதையும் விழுங்கின. ஆலங்கட்டி மழை பொழிந்தன.

கோடையில் அழிந்த மன்மதனை, மேகஜலம், கீழ்காற்று, தாழம்பூவின் நடுவிலுள்ள ஆகாசம், மின்னல், புது அடப்பம் பூவிலுள்ள மகரந்த தூசி ஆகிய பஞ்சபூதங்களைக் கொண்டு மறுபடியும் ஸ்ருஷ்டித்தார் ப்ரம்மா. / காற்றால் அலைக்கப்பட்டு எப்படியோ தம் அலகில் விழுந்த புதுஜலத்தை சாதகபக்ஷிகள், தாமே பசியுடன் இருப்பதால் எதிரே பசியுடன் இருக்கும் குஞ்சுக்கு கொடுக்கவுமில்லை. குஞ்சு பசித்திருப்பதால், தாம் பருகவுமில்லை. / கமலங்கள் ஒய்ந்துவிட்டன. கலாநிதியும் (=சந்திரன்) கலஹம்ஸங்களும் கண்ணிலேயே படவில்லை. 'க' எழுத்தில் தொடங்கும் பொருள்களின் தலையில் சனியிருந்தான். கலாபீ மட்டும் விதிவிலக்கு (கலாபீ=மயில்) மேகத்தைக் கண்டு களிநடம் புரியும் மயிலைக், கலாபீ என்ற க-வில் தொடங்கும் சொல்லால் குறித்தது கவியின் திறமை. அப்போதுதான் விதிவிலக்கு கூற முடியும்.

ஸூர்யன், சந்திரன், நக்ஷத்ரம் எல்லாம் மறைந்து இருள் சூழ்ந்த ஸமயத்தில் யுவதிகளுக்கு, வீட்டிலுள்ள சக்ரவாக பக்ஷிகளே பகல் இரவைத் தெரிவிக்கும் குருக்களாயிருந்தன.

ஸூர்யன் மறைக்கப்பட்டு செடி கொடிகள் பூப்பது ஒய்ந்து விட்டபோது காற்று கொண்டுவரும் மழைத்துளிகளே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மன்மதனின் பாணஸ்தானத்தில் அபிஷேகம் செய்விக்கப் பட்டன. மன்மதன் புஷ்பங்களைக் கொண்டு உலகைத் தன் வசப்படுத்துபவன். புஷ்பங்கள் ஓய்ந்தபோது, மழைத் துளிகளைக் கொண்டே அவ்வாறு செய்தான். அதற்காக சளைக்கவில்லை.

ஹம்ஸங்கள் பறந்து சென்றபின் வண்டுகள் தாங்கள் மட்டுமாக ஓடையில் இருக்க நினைத்தன. தாமரைப் பூக்களும் ஓய்ந்துவிட்டதால், வண்டுகளின் எண்ணம் பலிக்கவில்லை. மற்றவர்க்குத் தீங்கு நினைப்பவர்க்குத் தீங்கு, தானே முற்படும்.

தாமரை ப்ரகாசிக்கவில்லை. (பதிலாகத்) தாழம்பூ இருக்கிறது. ஹம்ஸங்கள் இல்லை. மயில்கள் இருக்கின்றன. சந்த்ரன் இல்லை, மன்மதன் இருக்கிறான். உலகில் எது இல்லாததால் என்ன குறை வருகிறது?

மயில்கள் இனிமையாகக் 'கேகா' என்று கூவும்போது தவளைகளும் கர்ணகடோரமாய்க் கத்தின. நல்ல கவிகள் கவிதை களை இயற்றும்போது துஷ்கவி ஊமையாகவா இருக்கிறான்? விரஸமாக அவனும் ஏதாவது கவிதை இயற்றத்தான் இயற்றுகிறான்.

விருந்தாளியின் பாக்யத்தாலும் குடும்பிகளுக்கு அபிவ்ருத்தி ஏற்படும். ஹம்ஸங்கள் சென்றபின்பு தாமரை ஓடை சோபிக்கவில்லை. / உள்ளுக்குள்ளே தாமரை-உத்பலம் இல்லாமல் கரையில் தாழை பூத்திருந்த ஓடைகள், உள்ளுக்குள் தனமில்லாமல் வெளியில் யானை-குதிரைகள் நெரிசலாக இருக்கும் ராஜக்ருஹம் போலிருந்தன.

புதுமழையால் மகிழ்ச்சியுறும் மக்களைக் கண்டு கோபங்கொண்ட வருணனின் ஏவலால் மேகங்கள் எல்லை மீறி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மழை பொழிந்தன. அக்னிக்கு ஸகாவாக இருக்கும் வாயு இப்போது வருணனுக்கு ஸகாவானார். தேவர்களுக்குக் கூட சத்ருத்தன்மையோ, நட்போ ஸமயத்துக்குத் தக்கபடி தானிருக்கிறது. காற்றுடன் சேர்ந்து அதிமழையால் காட்டுமரங்களை வேரறுத்து யானை-மாடு-குதிரை-மனிதர்களை இழுத்துக்கொண்டு பெரும் சுழல் அலைகளுடன் நதிகள் பெருக்கெடுத்தன. பசு-பக்ஷி-மனிதர்களையும் க்ராமம்-நகரம்-ஆச்ரமம்-வீடுகளையும் கூட்டம் கூட்டமாக மேகங்கள் பெருமழையால் வீழ்த்தின. ஜனங்களுடன் பாண்டியன் ஈசனை சரணடைந்தான். ஈசன் தனது ஜடையிலிருந்து உண்டான மேகங்களால், மழை பொழியும் மேகங்களை மறைத்தார். சிவஜடாமேகங்கள் மதுரையை கூடாரம் போல் வ்யாபித்து பூமியிலுள்ள வெள்ளத்தையும் தடுத்தன; மேலே விழும் மழையையும் க்ரஹித்துக் கொண்டன. ஊராருக்கு மழை சப்தமே காதில் விழவில்லை. விசிறினால் தான் காற்று கிடைத்தது. இப்படி தோற்கடிக்கப்பட்ட மேகங்கள் திரும்பிச் சென்றன. லஜ்ஜையால் வருணனுடன் பேசவில்லை. அவனும் அவைகளுடன் பேசவில்லை. ஈசனும் தனது மேகங்களை இழுத்துக் கொண்டார். பூமிதளம் இயற்கைநிலையை அடைந்தது. நான்கு திக்கிலும் கூடம் போல் (மண்டபம் போல்) மேகங்களை நிறுத்தி ஊரை ரக்ஷித்ததால் ஈசன், அதுமுதல் சதுஷ்கூடம் (=நான் மாடக்கூடல்) என்றும் மதுரைக்குப் பெயர் வைத்தார். இரு அத்புதத்தையும் பார்த்து, வருணன், தன்னிடம் இந்த்ரன் வர்ணித்தது ஒரு உதாஹரணத்துக்குதான் (இன்னும் எவ்வளவோ மஹிமை இருக்கிறது ஈசனுக்கு) என்று எண்ணினான். அவனும் பொற்றாமரையில் மூழ்கி, தனது ஜலோதரரோகம் நீங்கப்பெற்று அதிலுள்ள தங்கத்தாமரைகளால் அர்ச்சித்து ஸ்துதிகள் செய்து மீனாக்ஷீ ஸுந்தரேசர் அனுக்ரஹம் பெற்று பாண்டியனிடம் நட்பு பூண்டு தன் ஸ்தானமடைந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

※ 20-வது லீலை - எல்லாம் வல்ல ஸித்தராக அருள் புரிந்தது. ※

அபிஷேக பாண்டியன் பூமியை ஆளும்போது ஒரு ஸமயம் ஈசன், ஜபமாலை ஏந்தி, ஜடை தரித்து, விபூதி பூசி, ஜ்வலிக்கும் தங்கப்பிரம்பு தாங்கி, அழகிய யுவாவாக, ஸித்த வேஷத்துடன், சிஷ்யர்களுடன், கருணாமூர்த்தியாய், எல்லோருக்கும் எளியவராய், பார்க்கப்பட்ட மாத்திரத்திலேயே பார்ப்பவரின் வாக்கு - மனங்களை அபஹரித்துக் கொண்டு, நொண்டி - ஊமை - திக்குவாயர் - செவிடு - நபும்ஸகன் - குருடு - முடங்களைத் தனது பாத தூளியாலேயே குணப்படுத்திக் கொண்டு, தனது பாதஜலத்தைக் குடிக்கச் செய்தே பலவிதமான மலட்டுத் தன்மையைப் போக்கி, முடியும் தருவாயிலிருந்த வம்சத்தை தழைக்கச் செய்து கொண்டு, கிழவர்களை யுவாவாகவும், யுவாக்களுக்கு யௌவனம் ஸ்திரமாயிருக்கும் படியும் செய்து கொண்டு, விபூதியாலேயே, பலவருஷங்களாய்த் தொடரும் ரோகங்களைத் தீர்த்துக் கொண்டு, நாக்கில் விபூதி தூவி ஜடமாயிருப்பவர்களைக் கவிகளாய்ச் செய்துகொண்டு, விஷய போகங்களில் ஈடுபட்டு மனம் மாசடைந்தோர்க்குப் பரம வைராக்யத்தை அளித்துக் கொண்டு, தனது ஆசீர்வாத வாக்காலேயே, பிச்சைகூடக் கிடைக்காமல் தவித்தோரைப் பெரும் தனிகராக்கிக் கொண்டு, ஒரே க்ஷணத்தில் பாம்பு கடித்தோரைப் பிழைக்கச் செய்து கொண்டு, ஸ்த்ரீகளைக் கணவனுக்குப் பிடித்தமானவர்களாகவும், புருஷர்களை மனைவிக்குப் ப்ரியமானவர்களாகவும் செய்துகொண்டு, வைத்யர்களுக்கு நம்பிக்கையூட்டும் மூலிகைகளை வழங்கிக் கொண்டு, தன்னை ஸ்மரிப்பவர்க்கு குடிகை, வஸ்த்ரம், கத்தி, பாதுகை, ரஸம், லேபம், மை முதலிய ஸித்திகளை ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும்படி செய்து கொண்டு, 'ஆதிஸித்தர்' என்று தனது பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே க்ரஹம், பூதம், பிசாசு, யக்ஷிணீ, கணம், கூச்மாண்டம், விநாயகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதலியவற்றை ஓடும்படி செய்துகொண்டு, கண்ணுக்குத் தெரியாமல் பேசிக்கொண்டு, பேசும்போதே திடீரென்று மறைந்து கொண்டு, ஒரு போது கிழவன், ஒருபோது யுவா, ஒருபோது ஜடாதாரி, ஒருபோது மொட்டைத்தலையனாகக் காட்சியளித்துக் கொண்டு, அருகிலேயே உயரமான மலைகள் - ஸமுத்திரங்கள் - காடுகளைக் காட்டிக்கொண்டு, பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவற்றை மறையச் செய்துகொண்டு இவ்வாறு அற்புதங்கள் நிகழ்த்திக்கொண்டு மதுரை நகரில் விளையாடினார்.

※ 21-வது லீலை - கல்யானையைக் கரும்பு தின்ன வைத்தது. ※

அரசன் காதுக்கு ஜனங்கள் வழியாக இது எட்டியது. ஒரு நாள் அவனும் ஸ்வாமி தர்சனத்துக்காகச் சென்றபோது ஸுந்தரேசர் கோவிலில் விமானத்துக்கு மேற்கில் இவர் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். ஸித்தருடைய தேஜஸே அவர் பரம்பொருள் என்பதை உணர்த்தியது. மேலும் சிறிது அறிய விரும்பி அவன், 'கோத்ரமென்ன? பெயரென்ன?' என்று வினவினான். அவர் ஜபமாலையைக் காதில் வைத்துவிட்டு பத்மாஸனத்தைத் தளர்த்தி, அம்ருதத்தில் நனைத்தெடுத்தது போன்ற வார்த்தைகளால் 'குலம், கோத்ரம், பந்துக்கள், வர்ணாச்ரமக் கட்டுப்பாடு எதுவும் அவதூத நிலையிலிருப் போர்க்குக் கிடையாது. பெயர் 'ஸித்தர்' என்பது உனக்கே ஸ்பஷ்டமானது. லோகப்ரஸித்தமான அறுபத்து நான்கு கலைகளில் உனக்கு ஆவல் இருந்தால் காட்டுகிறேன். எனது அத்புதமான ஸித்தியைப் பார்', என்றார். அரசனும் தன் கையில் காணிக்கையாகக் கொண்டு வந்திருந்த கரும்பைத் தின்னும்படி, விமானத்தைத் தாங்குவதாக அமைக்கப்பட்டிருந்த கல்யானையைச் செய்யவேண்டும் என்றான். ஸித்தரும் புன்முறுவலுடன் 'ஸரி' என்றார். உடனே அந்தக் கல்யானை கர்ஜித்துக் கொண்டு அரசன் கைக்கரும்பைத் துதிக்கையால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இழுத்து விழுங்கிவிட்டு அவன் கழுத்திலுள்ள மணிமாலையையும் க்ரஹித்தது. ஆச்சர்யமுற்ற அரசன் அடிக்கடி விழுந்து நமஸ்கரித்தான். வம்சகரமான புத்ரனை அவனுக்கு அனுக்ரஹித்துவிட்டு புன்முறுவல் பூத்தமுகத்துடன் அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஸித்தவேஷ ஈசன் மறைந்தார்.

அபிஷேகபாண்டியனுக்கு விக்ரமபாண்டியன் பிறந்தான். தந்தைக்குப்பிறகு அவனும் தந்தையின் கட்டளைப்படி சிவநாமம் ஜபித்துக் கொண்டு சிவனையே ஆச்ரயித்து சிவனிடத்திலேயே எல்லாபாரத்தையும் வைத்து உலகனைத்தையும் சிவரூபமாகவே பார்த்துக் கொண்டு ராஜ்யத்தை ஆண்டுவந்தான்.

❀ 22-வது லீலை - ஆபிசாரிக யானையை நரஸிம்மாஸ்த்ரத்தால் அழித்தது. ❀

அவனிடம் பொறாமை கொண்டு சோழ அரசன், யுத்தத்தால் அவனை ஜயிக்க முடியாமல் புத்தர்களைக் கொண்டு அபிசாரம் செய்தான். மலைபோல் ஒரு யானை அவனைக் கொல்லவந்தது. விக்ரமபாண்டியன் ஸுந்தரேசனை சரணடைந்தான். ஈசனும் கோவிலுக்கு வெளியில் இளந்துளிரைத் தலையில் சேகரமாய்ச் சொருகி, குந்துமணி பூஷணமணிந்து, நாணேற்றிய வில்லுடன் வேடனாகக் காட்சியளித்தார். நரஸிம்மாஸ்த்ர ப்ரயோகத்தால் ஈசன் யானையைப் பிளந்தார். நரஸிம்மாஸ்த்ரத்தால் ஈசன் யானையைப் பிளந்தது அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

ஸ ஹஸன் னச[1]லேன த[4]ன்வனா / விசிகே[2]ன ஸ்வயமச்[1]
யுதேன ச [1]। ஜக[3]தே[3]கத[4]னுர் த[4]ர: க்ஷணா- / த[3]பி[4]னத்
ஸிந்து[4]ர மாபி[4]ச[1]ாரிகம் ॥

ஈசன் சிரித்துக் கொண்டே, அசலமான (= அசையாத = இழுத்தால் வளையவும், நாண் கயிற்றை விட்டால் நிமிரவும் கூடியதல்லாத மேருமலையாகிய) வில்லைக் கொண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அச்யுதமான (= வில்லைவிட்டு வெளிவராத) அம்பினாலும் (= அச்யுதர் என்ற பெயருடைய - நரஸிம்மராகிய அம்பினாலும்) ஆபிசாரிக யானையை பிளந்தார்.

[இதேபோல் திருவாரூர் த்யாகேசனைக் குறித்து இரட்டைப் புலவர் கள் (= நொண்டியான புலவர், குருட்டுப் புலவர் தோளில் ஏறிக்கொண்டு வழிநடத்துவார். இப்படி இருவரும் க்ஷேத்ராடனம் செய்பவர்கள்) வேடிக்கையாகத் த்ரிபுர ஸம்ஹார நிலையை வர்ணித்துப் பாட ஆரம்பித்தனர்.

'நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபம் கற்சாபம், பாணமோ' -

மேலே தோன்றவில்லை இருவருக்கும், ஈசனுக்கு நாண்கயிறு வாஸுகிநாகம். அது நஞ்சிருக்கும் (= நஞ்சு, விஷம், விஷமுள்ளது) நஞ்சு போயிருக்கிறது, இழுத்தால் அறுந்துவிடும். இழுத்து பாணம் விடமுடியாத நஞ்சுபோன நாண்கயிறு. வில்லாவது நன்றாயிருக்கிறதா என்றால் அது கல்லாலான வில், வளையவே வளையாது. பாணமாவது ஸரியாயிருக்கிறதா என்றால் அதுவும் ஒழுங்கில்லை என்று வர்ணிக்க வேண்டும். பாணத்திற்கு என்ன தோஷம் சொல்வதென்று இருவருக்கும் தோன்றவில்லை, அப்போது காளமேகப் புலவர் அங்குவந்தவர் - 'மண் தின்ற பாணமே' என்று பாணத்திற்கு தோஷம் கண்டுபிடித்தார். மண் தின்ற (= க்ருஷ்ணாவதாரத்தில் மண்ணைத் தின்று, 'வாயைக் காட்டு' என்று யசோதை சொன்னபோது ஈரேழுலகத்தையும் தன்னுள் காட்டிய) விஷ்ணு பாணமாயிருந்தார் என்பதை மண் தின்றபாணமே என்று கூறினார். பாணமும் ஒழுங்கானதில்லை என்பது கிடைப்பதற்கு மண்தின்ற = கரையான் - மண்ணால் தின்னப்பட்ட (பாணம்)' என்று பொருள் கொள்ளவேண்டும்.

- தாணுவே!
சீராரூர் மேவுஞ் சிவனே நீர் எப்படியோ
நேரார் புரமெரித்த நேர்'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று வெண்பா முடிகிறது. 'ஆரூர் சிவனே! மிக நன்றாக இருக்கிறது நீங்கள் த்ரிபுரஸம்ஹாரம் செய்தது' என்று மூவர் சேர்ந்து த்யாகேசனைப் பாடியபாட்டு, இது.

(பின்னால் காளமேகப் புலவரைப் பார்ப்பதற்காகச் சென்ற இரட்டைப் புலவர்கள், அவர் காலகதியடைந்து மயானத்தில் வெந்து கொண்டிருக்கும் நிலையில்தான் காண முடிந்தது.

'ஆசுகவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ் காளமேகமே – பூசுரா!
விண்கொண்ட செந்தழலிலே வேகுதே ஐயய்யோ
மண் தின்ற பாணமென்ற வாய்'

என்று முன்பு தடைப்பட்ட தம் பாடலை காளமேகம் பூர்த்தி செய்ததைக் குறிப்பிட்டு, அவர் பிரிவிற்கு வருந்தினர்.)

த்ரிபுரஸம்ஹார மூர்த்தியைக் குறித்து ரஸமான ஒரு ப்ரார்த்தனை ச்லோகம் –

மௌர்வீ-மூர்த்^{4}னி ரத^2: சராஸன-சிரஸ்-ஸஞ்ச^1ாரி
ச^{1}க்ரத்^{3}வயம் / ச^{1}க்ராந்தர் நிஹித: சரஸ் தது^{3}த^{3}ரே ஸூதஸ்
தத^3ாஸ்யே ஹயா:। தேஷாமேவ சிர: பதே^{3}ஷு வஸதி:
ஸ்வஸ்யேதி யஸ்ய ச்ருதம் / தேவச்^{5} சி^{1}த்ரபரிச்^{1}ச^{2}த^{3}ஸ் ஸ
ப^{4}க^{3}வான் குர்யாத் ஸத^3ா மங்க^{3}ளம் ॥

ஈசனுக்கு ரதம் பூமி, வில் மேரு, ரதசக்கரங்கள் சந்த்ரஸூர்யர்கள், பாணம் விஷ்ணு, தேரோட்டி ப்ரம்மா, குதிரைகள் வேதங்கள் என்பதையும் ஈசன் வேதாந்தங்களில் தெரியவருகிறான் என்பதையும் மனஸில் கொண்டு பார்க்க வேண்டுமிதை. ஈசனின் ரதத்தை (= பூமியை), அவரது நாண் கயிறு (= வாஸுகி நாகம்) தன் தலையில் சுமக்கிறது. அவரது தேர்ச்சக்கரங்கள் (= ஸூர்ய சந்த்ரர்கள்) வில்லினுடைய (= மேருமலையினுடைய) தலைபாகத்தில் ஸஞ்சரிக்கின்றன. ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சக்கரத்தின் (= ஸூர்யனின்) உள்ளே பாணம் (= விஷ்ணு) வைக்கப்பட்டிருக்கிறது. பாணத்தின் (= விஷ்ணுவின்) வயிற்றில் - நாபியில் தேரோட்டி (= ப்ரம்மா) இருக்கிறார். தேரோட்டியின் (= ப்ரம்மாவின்) வாயில் குதிரைகள் (= வேதங்கள்) உள்ளன. குதிரைகளின் (= வேதங்களின்) தலைபாகங்களில் (= வேதாந்தங்களில்) தனக்கு (=விற்போர் புரியும் ஈசனுக்கு) வாஸம் (= தேர்க்குதிரைகளின் தலைபாகங்களில்தான் விற்போராளி காணக்கிடைக்கிறார்.) இவ்வாறு விசித்ரமான உபகரணங்களையுடைய அந்த பகவான் எப்போதும் மங்களத்தை உண்டாக்கட்டும்.]

வேட உருவில் ஈசன் வீழ்த்திய யானை வீழ்ந்து மலையாயிற்று. வணங்கிய அரசனைக் கருணைநோக்கால் அனுக்ரஹித்துக் குலத்துக்கேற்ற புத்ரனை வரமாக அளித்துவிட்டு மறைந்தார் மஹேசன். விக்ரமபாண்டியனுக்கு ஈசனருளால் ராஜசேகரன் பிறந்தான். உரிய காலத்தில் அவனிடம் ராஜ்யபாரத்தை ஒப்படைத்துவிட்டு விக்ரமபாண்டியன் சிவபதமடைந்தான்.

ஸப்தமோ மலயத்^{4}வஜஸ்ய ஸ ஸப்தஸப்தி-ஸமத்^{3}யுதிர் /
பி^{3}ப்^{4}ரத^{3}ங்க^{3}த^3-நிர்விஶேஷமஶேஷமேவ மஹீதலம் ।
ஆரராத^4 ஸப^4ாஜனை ரதிமானுஷைர் மது^{4}ரேச்வரம் /
ரஞ்ஜயஞ் ஜனதா: ஸுதானிவ ராஜசேக^{2}ர பார்த்தி^{2}வ: ॥

மலயத்வஜனிலிருந்து ஏழாமவன் - ஏழு - குதிரையனை (ஸூர்யனை) யொத்த காந்தியுள்ளவன் ராஜசேகர அரசன், தோள்வளையை வஹிப்பது போல் ச்ரமமேயில்லாமல் பூமிதலம் முழுவதும் வஹித்துக் கொண்டு (=ராஜ்யபரிபாலனத்தை ஸுகமாகச் செய்துகொண்டு) தன் புத்ரர்களைப் போல் குடிமக்களை மகிழ்வித்துக்கொண்டு, மனிதர்களின் சக்திக்கு மீறியதான பூஜைகளால் மதுரேசனை ஆராதித்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀ 23-வது லீலை - கிழவர் - குமரன் - பாலனானது ❀

ராஜசேகரன் ஆட்சிக் காலத்தில் விருபாக்ஷர் என்கிற ப்ராம்மணர் நெடுங்காலம் ஈசனை ஆராதித்து கௌரி என்கிற மகளைப் பெற்றார். ஐந்து வயதுக் குழந்தை கௌரி, யாசித்துக் கேட்டதால் அம்பிகையின் ஏகாக்ஷர மந்த்ரத்தை அவளுக்கு உபதேசித்தார். பூர்வபுண்யவாஸனையால் கௌரியும் இடைவிடாது ஜபித்து மந்த்ரஸித்தி பெற்றாள். விருபாக்ஷர் ஒரு ஸமயம், குருகுல வாஸம் செய்துகொண்டு தனது க்ருஹத்துக்கு பிக்ஷைக்கு வந்த ஒரு ப்ரம்மச்சாரிக்குத் தன் கௌரியை - குலம் கோத்ரம் விசாரிக்காமல் - கன்யகாதானம் செய்து கொடுத்துவிட்டுப், பின்னால் சிவத்வேஷி - குடும்பத்தவன் என்பதை அறிந்தும் 'சிவன் கட்டளையை ப்ரம்மா, இந்த்ரன் முதலியவர்களாலும் மீறமுடியாது. எல்லாம் அவன் செயல்' என்று தெளிந்து உரிய சீர்வரிசைகளுடன் பெண்ணை மாப்பிள்ளையுடன் அனுப்பிவைத்தார். தம் பிள்ளை தானாக மணந்து அழைத்து வந்த மருமகளின் நெற்றியில் விபூதியைக் கண்டு வெகுண்ட - சிவத்வேஷிகளான மாமனாரும் மாமியாரும் கௌரியை ஒரு தனி வீட்டில் வைத்தனர். சிவபூஜை - த்யானம் என்ற பேச்சே இல்லாத - ச்மசானம் போல் அமங்களமான அந்த வீட்டில் ஸர்வமங்களையை த்யானித்துக் கொண்டு காலம் கழித்தாள் கௌரி. / மாமனார் - மாமியார் வெளியில் சென்றிருந்தபோது தனியாய் அந்த வீட்டிலிருக்கும் கௌரியிடம் விபூதிருத்ராக்ஷம் தரித்த கிழப் ப்ராம்மண ரூபமாய் ஸுந்தரேசன் வந்தார். அந்தக் கிழப் ப்ராம்மணரை அதிதி ஸத்காரத்தால் இவள் உபசரித்துக் கொண்டிருக்கும் போதே மாமனார் அங்கு வந்துவிட்டார். உடனே கிழப் ப்ராம்மணர் அழகிய யுவாவாக மாறிவிட்டார். சிவனையே த்யானித்துக் கொண்டு அவள் பயத்தால் நடுங்குவதைக் கண்டு, உடனே பால்குடிக்கும் பச்சைக் குழந்தையாக மாறி அவளது மாமியார் மாமனார்களுக்கு ஆத்திரம் உண்டாகும்படி குரலெழுப்பினார். 'குழந்தை ஏது?'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று மாமனார் கேட்கவும் 'எதிர்வீட்டுக் குழந்தை' என்றாள். கோபங்கொண்ட மாமனார் குழந்தையுடன் அவளை வெளியேற்றினார். இரவுமுழுதும் கண்ணீருடன் கழித்தாள். அந்தக் குழந்தையை ஈசனின் மேற்கு முகமாக எண்ணி த்யானித்துக் கொண்டிருந்தாள். விடியற் காலையில் அவளை வ்ருஷபத்தில் ஏற்றி, ஊரார் வியக்கும்படி தனது ஸ்தானத்துக்கு அழைத்துச் சென்றார் ஈசன். (மேற்கு முகம் - ஸத்யோ ஜாதம் = அப்பொழுதுதானுண்டானது.)

ஸ்தனந்த4யந் தே3வ முபாஸ்ய ஸா ஜஹௌ/ ஸ்தனந்த4யத்வம்
ப4வ-ஸங்க4 -ஸஞ்சி1தம் । க்ரமேத ஸம்ப4ாவவிதர்க்ய-
வைப4வே / க்வ தத்க்ரது-ந்யாயவிது3க்தி-பத்3த4தி : ॥

'ஒருவன் அந்திம காலத்தில் எதை நினைக்கிறானோ அந்த ரூபத்தையே அடைகிறான்' என்று அறிந்தோர் கூறுவது வழக்கம். ஆனால் இந்த கௌரியோ, பால்குடிக்கும் வயதுள்ள சிவக் குழந்தையை த்யானம் செய்து, மறுபடியும் பிறந்து தாய்ப்பால் குடிக்கும் நிலையை அடையாமல் சிவபதமடைந்தாள். நினைத்துப் பார்க்க முடியாத மஹிமையுடைய சிவன் விஷயத்தில் உலகத்து அறிஞர் சொல்வது பலிக்குமா?

[இதேபோல் யாதவாப்யுதயத்தில் குறும்புக் கிருஷ்ணனைப் பற்றி - அவன் யசோதையால் கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் நிலையைப் பற்றி ஒரு ச்லோகம்.

ப3த்3த4ந் தத2ா ப4ாவயதாம் முகுந்த3 - / மயத்ன
விச்1சே2தி3னி கர்ம-ப3ந்தே4 । தபஸ்வினீ தத்க்ரது-
நீதிராத்3யா / ஸவ்ரீட3 மாரண்ய-கத2ாஸு தஸ்தெ2ள ॥

அவ்வாறு கட்டப்பட்டிருக்கும் நிலையில் ஸ்ரீக்ருஷ்ணனை த்யானிப்பவர்களின் நல்வினை-தீவினை பந்தமெல்லாம் யத்னமில்லாமலே அறுபட்டுப் போவதைப் பார்த்து 'தத்க்ரது நீதி' என்கிற ஸ்த்ரீயானவள் வெட்கமடைந்து காட்டுக்கதைகளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈடுபட்டாள். எப்படி உபாஸிக்கிறானோ அப்படிப்பட்ட நிலை அவனுக்கு வரும் என்று சொல்கிற நீதி, 'இங்கு, தான் பலிக்க வில்லையே - கட்டுண்டவனைத் த்யானித்தால் கட்டெல்லாம் அவிழ்ந்துபோகிறதே' என்று வெட்கமடைந்தாள். வெட்க மடைந்தவர் வேறு எதிலோ ஈடுபடுவது போல், காட்டுக்கதை களைப் பேசிக்கொண்டிருந்தாள்.(ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் கூறப்பட்டுள்ள இந்த நீதி காட்டுக் கதையளவிலிருந்தது. க்ருஷ்ணனிடத்தில் பலிக்கவில்லை என்றும் பொருள், ப்ருஹதாரண்யகம் = பெருங்காடு. 'நீதி' என்பது வட மொழியில் ஸ்த்ரீலிங்க சப்தம். எனவே 'நீதி என்கிற ஸ்த்ரீ வெட்கமடைந்தாள்' என்று நீதியை ஒரு ஸ்த்ரீயாக வர்ணிக்க முடிந்தது. நீதி வெட்கப்பட்டது என்றால் நீதிக்கு வெட்கமுண்டா என்ற கேள்வி எழும். நீதி என்கிற ஸ்த்ரீ என்று சொல்லிவிட்டால் கேட்க முடியாது.)]

ஃ 24-வது லீலை - கால் மாறி நடனமாடியது ஃ

ராஜசேகரபாண்டியன், தனக்கு நர்த்தனம் ஆடத்தெரியாது என்று காரிகால்சோழன் சொன்னதைக் கேள்விப்பட்டு உடனே நர்த்தனக்கலையை நன்கு கற்றுத்தேர்ந்து ஒரு சிவராத்திரியில் கோவிலில் ஈசனைப் பூஜித்து, நர்த்தனமாடினான். இடதுகாலை மடக்கி உயர்த்தி அதிக நேரம் ஒரேநிலையில் நிறுத்துவது ச்ரமத்தை அளித்தது. நடேசனுக்கும் இப்படித்தானே ச்ரமம் இருக்கும் என்று தோன்றியது. உடனே நடேசனை இடது காலை பூமியில் ஊன்றி வலது காலை உயர்த்தி நர்த்தனமாடி ச்ரமத்தைப் போக்கிக் கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்தித்தான். நடேச பிம்பம் அசையவில்லை. உடனே தன் தலையையே கத்தியால் வெட்டி ஆராதிக்கத் துணிந்தான். ஈசன் ப்ரஸன்னமாகிக் காலை மாற்றிவைத்து நடனம் புரிந்தான்.

ஈசன் ஆனந்தரூபமானவன். எந்த ச்ரமமுமற்றவன் என்பதை அரசன் அறியாதவனல்ல. பிம்பங்கள் ஒரே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலையில்தான் இருக்கும் என்பதையும் அறியாதவனல்ல. இருந்தாலும் அவனுக்கு அப்படித் தோன்றியது. தபஸ் செய்தாலும் கிடைத்தற்கரிய பக்தி அது. அந்த அத்புத தாண்டவத்தை ஈசனருளால் ஜனங்களும் ஸேவித்தனர். சிவபக்தனான அரசனின் ராஜ்யத்தில் வஸிப்போர் ஸாதாரண ஜனங்களல்ல - ஈசனின் பரிவாரங்களான கணேச்வரர்களே யாவர். தனது ப்ரார்த்தனைக்காகக் காலை மாற்றி ஆடிய தேவனிடத்தில் ராஜசேகரன் விசேஷமான பக்தி வைத்தான். அதுமுதல் அவன் வம்சத்தாரும் அந்த கால்மாற்றி ஆடிய ஈசனையே சரணடைந்தனர். அபராத க்ஷமாபணமாக நூற்றுக்கணக்காக ரத்னாபரணங்கள் ஸமர்ப்பித்துப் புத்ரவரம் பெற்றான் ராஜசேகரன். விரைவில் குணவானான குலோத்துங்க பாண்டியனைப் பெற்று உரியகாலத்தில் அவன் பொறுப்பேற்றதும், தான் சிவகதி அடைந்தான். குணம், சீலம், குலம் எல்லாவற்றாலும் உயர்ந்தவன் என்பதைக் கண்டு, குலோத்துங்கனுக்கு அங்கங்கிருந்து அரசர்கள் தம் தம் குமாரிகளைக் கொடுக்கவும், அவனுக்குப் பதினாறாயிரம் மனைவியர் ஏற்பட்டனர். எல்லாரிடத்திலுமாக 'அனந்த குணன்' முதற்கொண்ட அறுபதாயிரம் புத்ரர்கள் உண்டாயினர். எல்லாரும் குலத்துக்கேற்றவர் - மூத்தவனிடத்தில் மற்றவர்கள் உயிரையே வைத்திருந்தார்கள். வீரபத்ரதேவர், தனது உடலிலிருந்தே வந்த - தன்னை ஒத்த பராக்ரமமுடைய - கணங்களுடன் கூட சிவத்வேஷிகளைத் தண்டித்தது போல குலோத்துங்கனும் புத்ரர்களுடன் கூட சிவத்வேஷிகளை தண்டித்தான்.

ஜ 25-வது லீலை - குற்றமற்ற வேடன் மேல் வீண்பழி சுமத்தாதபடி உண்மை விளக்கியது. ஜ

ஒரு ப்ராம்மணன், கைக்குழந்தைக்காரியான மனைவியுடன் மதுரை வந்து வெய்யில் தாளாத நடுப்பகல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நேரத்தில் - ஒரு ஆலமர நிழலில் மனைவி, குழந்தைக்குப் பால்கொடுத்துக் கொண்டு, கையைத் தலையணையாக வைத்துப் படுத்துக்கொண்டிருக்க, அவளது தாஹத்தைத் தீர்ப்பதற்காக - ஜலம் கொண்டுவரச் சென்றான். நிர்மலமான ஓடையிலிருந்து தாமரை இலையில் ஜலம் கொண்டுவந்து பார்க்கும்போது ஒரு பாணம் பாய்ந்து மனைவி மாண்டிருந்தாள். மார்பில் குழந்தை அழுதுகொண்டிருந்தது. துக்கத்தால் மூர்ச்சையடைந்து சிறிது நேரம் கழித்துக் காரணத்தைக் காண சுற்றிலும் பார்க்கும்போது அருகில் வில்லுடன் வேட்டையாடும் ஒரு வேடனைக் கண்டு, இவன்தான் கொன்றிருக்க வேண்டுமென நினைத்து, அவனை சிண்டைப் பிடித்து இழுத்துச்சென்று குலோத்துங்கனிடம் முறையிட்டான். வேடன், இல்லையென பலமாக மறுக்கவும், குலோத்துங்கன் ஈசானுக்ரஹத்தால்தான் உண்மையறிய வேண்டுமென, வேடனைப் பிடித்துவைத்துக் கொண்டு, ப்ராம்மணனையும் நல்வார்த்தையால் சாந்தப்படுத்தி ஸுந்தரேசனை சரணடைந்தான். 'ப்ராம்மணனையும் அழைத்துக் கொண்டு இரவில் ஊருக்கு வெளியே ஸஞ்சரி. உண்மை விளங்கும்' என ஈசன் கட்டளையிட்டார். அரசனும் அப்படியே செய்யும்போது செட்டித் தெருவில் இரு யமதூதர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டான் - ''நெடுங்காலத்துக்கு முன் ஒரு பக்ஷியை அடிப்பதற்காக வேடன் விட்ட பாணம் ஆலமரக் கிளையில் ஒட்டிக் கொண்டிருந்தது. இன்று காற்றுவேகத்தால் அது விழுந்து, எதிர்பார்க்கப்படாமல் எப்படி ப்ராம்மணியைக் கொன்றதோ, அதேபோல் இந்தத் திருமணத்திலும் பாணிக்ரஹணம் ஆனதுமே ஒரு பசு மேளமுழக்கத்தால் மிரண்டு தும்பை அறுத்துக் கொண்டு ஓடிவந்து முட்டி மணமகனை வீழ்த்தும்படி செய்து எளிதாக அவனுயிரைக் கொண்டு செல்வோம்,'' என்று அந்த யமதூதர்கள் பேசிக் கொண்டனர். ஸந்தேஹத்தைப் போக்கும் அந்த வார்த்தையைக் கேட்டு, அரசன், ப்ராம்மணன் இருவரும் ஆச்சர்யமடைந்து மணவீட்டில் பாணிக்ரஹணம் நடக்கும்வரை காத்திருந்து, கேட்டதுபோலவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நடந்ததைக் கண்டு, வேடன்மேல் தப்பில்லையென உணர்ந்தனர். அரசன் நிறைய தனம் கொடுத்து ப்ராம்மணனை ஸந்தோஷிக்கச் செய்து வேடனையும் அனுப்பிவிட்டு மந்திரிகளிடம் மஹேசனின் அருளைக் கூறி மகிழ்ந்தான். 'சிவபக்தரான உமக்கு ஒருபோதும் களங்கமே வராது. பழிச்சொல் வராமல் (= பழிநேராமல்) பகவான் காக்கிறார்' என்று மந்திரிகள் அரசனைக் கொண்டாடினர். கீழ்க்கண்ட ச்லோகத்தில் இது அழகாகச் சொல்லப்பட்டுள்ளது -

விது^{4}: கலங்கீ வியதி ப்^{4}ரமன்னஸௌ / கலங்கசங்காபி ந சங்கராச்ரிதே। அதோ ந தே ஸ்யாத^{3}பவாத^{3} பீ^{4}ரிதி / ப்ரசம்ஸித: பாண்ட்^{3}யந்ரு^{1}பஸ் ஸ மந்த்ரிபி^{4}: ॥

'ஆகாசத்தில் சுற்றுகிற இந்த சந்த்ரன் களங்கமுள்ளவனாயிருக்கிறான். சங்கரனை அண்டியிருக்கிற சந்த்ரனிடத்திலோ களங்கமிருக்கிறதோ என்ற ஸந்தேஹத்துக்குக் கூட இடமில்லை. ஆகையால் ஈசனை அண்டியுள்ள உமக்கு, அபவாதம் வந்துவிடுமோ என்று பயப்படும் நிலை வராது. ஈசன் அப்படி நேராமல் காப்பார்' என்று மந்திரிகள் குலோத்துங்க பாண்டியனைப் புகழ்ந்தனர். (களங்கம் என்பதற்கு சின்னம் (=அடையாளம்) என்றும் பழிச் சொல் என்றும் இருபொருள்). ஆகாச சந்த்ரனில் களங்கம் (= மான் சின்னம்) இருக்கிறது. சிவன் தலைச் சந்த்ரனில் களங்கம் (= சின்னம்) இல்லை. இதை வைத்து சிவனைச் சார்ந்தவருக்குக் களங்கம் (=பழிச்சொல்) ஏற்படாது என்று கூறினார்.

சிவனைச் சேர்ந்த பாண்டியனையும், சேராத மற்றவரையும் உபமேயமாக்கி, உபமானமாக சிவன் தலைச் சந்த்ரனையும் ஆகாச சந்த்ரனையும் கூறியிருக்கிறது. உபமானத்தைப் போல் உபமேயம் என்று சொல்ல வேண்டும். முடியாது; பொருந்தாது. 'மற்றவரிடம் அபவாதம் ஒட்டிக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொள்ளக் கூடும்; சிவபக்தனிடம் ஒட்ட முடியாது' என்று சொல்ல வேண்டும். இதை உபமானத்தால் விளக்கு வதாயிருந்தால், சிவனைச் சேராத பொருள் ஒன்று, சேர்ந்த பொருள் ஒன்று எடுத்துக் கொண்டு 'சிவனைச் சேராததில் நேரக் கூடிய தோஷம் சிவனைச் சேர்ந்ததில் இல்லை பார்' என்று காட்ட வேண்டும். இங்கு உபமானம் சிவனைச் சேராத ஆகாச சந்தரனும் சிவன் தலை சந்த்ரனும். 'ஆகாச சந்தரனில் களங்கமிருக்கிறது. சிவன் தலைச் சந்த்ரனில் களங்க மில்லை.' என்று கூறினால் இந்தக் களங்கம் வேறு; இது சின்னம், அபவாதமல்ல. 'பக்தியற்றவனிடம் களங்கம் வரக் கூடும். பக்தனிடம் களங்கம் வராது' என்று கூறும் பொழுது. இந்தக் களங்கம் வேறு, - இது அபவாதம், சின்னமல்ல. உபமான, உபமேயங்களில் தர்மம் ஒரே வகையாக இருக்க வேண்டும். ஆகாச சந்த்ரனில் இருப்பதும் சிவன் தலைச் சந்த்ரனில் இல்லாததும் சின்னந்தான். 'அபவாதம் வரக்கூடும்; வராது' என்பதற்கு இது உதவாது. 'சிவ பக்தரல்லாத மற்றவரிடம் சின்னமிருக்கிறது.' என்றோ, 'சிவ பக்தரிடம் சின்னம் இல்லை' என்றோ கூறிப் பயனில்லை. பொருந்தவும் பொருந்தாது. சிவ பக்தனிடம் அபவாதம் நெருங்காது என்பதுதான் தேவை. என்ன செய்வது? அபவாதமும் சின்னமும் வெவ்வேறு களங்கங்களாக இருந்தபோதிலும் களங்கம் என்று ஒரே சொல்லால் கூறப்படுவதால் இரண்டையும் ஒன்றாக்கி, 'ஆகாச சந்தரனில் களங்கமுள்ளது. சிவன் சந்தரனில் களங்கமில்லை. அதேபோல் சிவ பக்தனிடம் களங்கம் அண்டாது. மற்றவனிடமே வரக்கூடும்' என்று கூறப்பட்டது.

ச்லேஷை மூலமாக வெவ்வேறு பொருள்களை ஒன்றாக வைத்துக் கொள்ளல் - 'அபே^{4}த^3ாத்^{4}யவஸாயம்' இங்கு கையாளப்பட்டது. பக் (15) காண்க.

குலோத்துங்கன் சிவபதமடைந்தபின் அனந்தகுணன் பட்டத்துக்கு வந்து ராஜ்யத்தை இனிது ஆண்டுவந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜ 26-வது லீலை - மஹாபாதகம் தீர்த்தது. ஜ

அவந்தி நகரில் இருந்த ஒரு மட்டமான ப்ராம்மணன், தனது தாயையே பெண்டுகொண்டாடி, அதனால் வெகுண்ட தந்தையையும் கொன்று, அவரது தனம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு அவளையும் அழைத்துக் கொண்டு இரவில் புறப்பட்டான். நடுவழியில் வேடர்கள் அவனை அடித்து வழிப்பறி செய்து ஸ்த்ரீயையும் பிடித்துக்கொண்டு ஆள்மாத்திரமாக விட்டுச் சென்றனர். அவன் பிச்சைகூட ஸரிவரக் கிடைக்காமல் இளைத்து, பிணியால் பீடிக்கப்பட்டு, வஸ்த்ரத்துக்கும் வழியின்றி, தீனனாய் அலைந்துகொண்டு பாக்யவசத்தால் கதம்பவனம் (= மதுரை) வந்தடைந்தான். ஊரில் நுழைந்ததுமே அன்னம் வஸ்த்ரம் கிடைத்தது. மீனாக்ஷியின் அருளால் இன்றும் மதுரையில் யாரும் பசியால் வருந்துவோரில்லை, துக்கப்படுபவரில்லை. அங்கு ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும்போது ஒரு ஸமயம் இரவில் உலகிலில்லாத சோபையுடைய - உல்லாஸமாய்ப் பேசிக்கொண்டிருக்கிற வேட தம்பதிகளை ஸுந்தரேசர் கோவில் வாசற்புறத்தில் கண்டான். அவர்களிடத்தில் நம்பிக்கையடைந்து, தனது செயலனைத்தையும் கூறினான். வேட்டுவ ஸ்த்ரீ சொன்னதை அனுஸரித்து வேடன், ப்ராம்மணனிடம், ''எவ்வளவு கர்மயோகங்களாலும் தவங்களாலும் போக்கடிக்க முடியாததாயிருந்த போதிலும், நீ உனது பெரும் பாவத்தை இந்த ஈசனின் அருளால் போக்கலாம். மூன்று வருஷம் இந்த ஈசனைப் பூஜிப்பாயாக,'' என்று கூறினான். இருவேட தம்பதிகளும் உடனே மறைந்ததைக் கண்டு, அவன் ஸந்தேஹமற, அனைவருக்கும் அடைக்கலமான உமாமஹேச்வரர்களைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். இடையறாது ஜபம் - அர்ச்சனை - த்யானம் - நமஸ்காரம் - ப்ரதக்ஷிணம் - ஸ்தோத்ரங்கள் செய்து மூன்று வருஷங்கள் வழிபட்டான். ஊரோர் பார்க்கும் போதே சிவகணங்கள் அவனை சிவபுரமழைத்துச் சென்றனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஃ 27-வது லீலை - குருத்ரோஹியைக் குருஉருவிலேயே வந்து சண்டையிட்டு வீழ்த்தியது. ஃ

'அங்கன்' என்று கத்திசண்டை கற்பிப்பவன் ஒருவன், தன்னுடைய பல சிஷ்யர்களுக்குள் 'ஸித்தன்' என்பவனை புத்ரன் போல் அபிமானித்து அவனுக்கு விசேஷமாகக் கற்றுக் கொடுத்தான். கெட்ட எண்ணம் கொண்ட அவனோ, தனது குருவை ப்ரகாசப்படுத்தாமல் அவனது சிக்ஷையாலேற்றபட்ட தனது ஸாமர்த்தியத்தை மட்டும் வெளிக்காட்டிக் கொண்டு அதே குருவிடம் தன்னோடு கூட கற்றவர்களைத் தனது சிஷ்யர் களென்று பொய்ப் ப்ரசாரம் செய்துகொண்டு திரிந்தான். ஈசனை வணங்குவதற்காக அங்கன் பெரும்பாலும் கோவிலிலேயே வஸிப்பான். ஒருநாள் அவன் கோவிலில் இருந்தபோது இந்த துஷ்டன் ஸித்தன், அங்கனுடைய பத்னியைக் கவர விரும்பினான். அவள் இவனை அவமதித்தாள். / ஒரு ஸமயம் ஸுந்தரேசனே அங்கனுடைய ரூபம் தாங்கி இந்த ஸித்தனுடன் ஊருக்கு வெளியில் ஜனங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வாளேந்தி விசித்ரமாய்ப் போர்புரிந்து உடலை பலவிதமாய் வளைத்து அவனது கத்தி வீச்சு தன்மேற்படாமல் ஏமாற்றி அவன் பிடியை பலத்த அடியால் தளரச்செய்து கத்தியை ஆட்டுவது, சுழற்றுவது, உயரத் தூக்குவது, தாழ்த்துவது, அசையாமற் பிடிப்பது என்று ஒவ்வொரு நொடியிலும் இன்னதுதான் செய்கிறாரென்று அறியமுடியாமல் செய்து இறுதியில் அந்த துஷ்டனை வெட்டிவீழ்த்தி 'அங்கன் ஜயித்தான்' என்ற புகழைப் பரப்பிவிட்டு மறைந்தார். கோவிலில் ஈசன்முன் நிற்கும் அங்கனுக்கு இந்தச் சண்டையைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஜனங்கள் புகழ்வதைக் கேட்டபிறகு தான், ஈசன் திருவருளை நினைத்து வியந்தான். ஜனங்களும் இந்த அதிசயத்தை அறிந்து அங்கனை சிவனாகவே மதித்தனர். காலக்ரமத்தில் அங்கன் - தம்பதிகளை ஈசன் தன் ப்ரமத கணங்களுள் சேர்த்துக் கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ॐ 28-வது லீலை - ஆபிசாரிகப் பாம்பு விஷதாபம் அகற்றியது. ॐ

அந்த ஸம்பவம் முதற்கொண்டு தேசத்தில் சிவபக்தி மஹிமை நன்கு ப்ரகாசிக்கவும் அதைப்பொறுக்காத பௌத்தர்கள் அபிசாரப்ரயோகத்தால் உக்ர விஷங்கொண்டதொரு பாம்பை ஸ்ருஷ்டித்து ஏவினார்கள். அதைக் கண்டு அரசன் ஊருக்கு வெளியிலேயே சிவனை ஸ்மரித்துக்கொண்டு அம்புகளால் அதை அடித்து வீழ்த்தினான். அது உக்ரமான விஷாக்னியைக் கக்கியது. அதனால் தவித்துப்போய் ஜனங்களும் அரசனும் ஸுந்தரேசனை சரணமடைந்தனர். ஈசனும் புன்னகையுடன் லிங்கத்தினின்றும் கிளம்பி வந்து பாம்பருகில் சென்று சாந்தமான கண்ணால் சுற்றிலும் பார்த்தார். அதற்கு முன்பே பாம்பு மலையாக மாறிவிட்டது. விஷாக்னியால் தாபமுற்ற மனுஷ்யர்களையும் மரங்களையும் தனது கருணையாகிய அம்ருதத்தில் மூழ்கடித்து ஸுகப்படுத்தினார், ஸுந்தரேசன்.

ॐ 29-வது லீலை - ஆபிசாரிகப் பசுவை வாஹன வ்ருஷபத்தால் வதைத்தது. ॐ

பாம்பு இப்படி பலிக்காமற் போனதும் பௌத்தர்கள் ஒரு அபிசாரப்பசுவை மீண்டும் ஏவினர். ஈசன் அதை அழிக்கத் தனது வ்ருஷபத்தை பணித்தர்ர். ஈசனின் வ்ருஷபம் அந்தப் பசுவைக் கொம்பால் குத்தி வீழ்த்தியது. அது ஒரு மலையாக மாறி விழுந்ததும் தானும் அதனருகில் ஒரு மலையாயிற்று. 'வ்ருஷாசலம்' என்ற பெயருடன் ஊருக்கு வடக்கில் இன்றும் அம்மலை விளங்குகிறது.

அனந்தகுணன், தனது மகன் - குலபூஷணனுக்கு உரிய வயது வந்ததும் ராஜ்ய பாரத்தை அவனிடம் ஒப்புவித்து விட்டு, தான் சிவபதமெய்தினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கா3ம்பீ4ர்யேண நிஷங்க3தாம் விசிக2தாம் த4ர்மத்3ருஹாம் நிக்3ரஹா - / து3ச்1ச்2ராயேண சராஸதாம் கடகதாமுச்1 சா1 வசை1ர் வாங்முகை2: । விச்வேஷாமனு ரஞ்ஜனைரனுப மைருத் தம்ஸதா மப்யஸௌ / பி3ப்4ராண: குல பூ4ஷண: குலபதிம் தே3வ: ஸிஷேவே சிவம் ॥

குலபூஷண பாண்டியன், தனது கம்பீரத்தன்மையால் (=ஹ்ருதய ஆழங்காணமுடியாத் தன்மையால்) ஈசனுக்கு அம்புராத்தூணியாயிருக்கும் தன்மையையும், தர்மத்ரோஹி களை ஒடுக்குவதால், பாணமாயிருக்கும் தன்மையையும், தனது உயர்வால், வில்லாயிருக்கும் தன்மையையும், பலவிதமான வாக்கு ப்ரயோகங்களாலே, காப்பாக இருக்கும் தன்மையையும் அனைவரையும் களிப்பூட்டுபவையான ஒப்பற்ற செயல்களால், சேகரமாய் (சிரோ-பூஷணமாய்) இருக்கும் தன்மையையும் வஹிப்பவனாய் தன் குலத்துக்கே பதியான சிவனை ஸேவித்தான். ‘ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், துஷ்டச்செயல் செய்வோரை அழிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கிறேன்’ என்று கூறிய விஷ்ணுவைப் போல் குலபூஷணனும் தர்மத்ரோஹிகளை ஒடுக்கினான் என்பது கருத்து. துஷ்டர்களை தண்டிப்பதில் விஷ்ணுவாக இருந்தான். விஷ்ணு, த்ரிபுரஸம்ஹாரத்தின் போது ஈசனுக்கு பாணமாக இருந்தபடியால் ‘விஷ்ணுவாக’ என்பதற்குப் பதில் ‘ஈசனின் பாணமாக’ என்று கூறப்பட்டது. இதே போல் மற்றதும். பாணம் வைக்கும் இடம் அம்புராத்தூணி. ஈசனுக்கு அம்புராத்தூணி ஸமுத்ரம் தான் - அம்பாகிய விஷ்ணு அதில் பள்ளி கொண்டிருப்பதால். காம்பீர்யத்தில் ஸமுத்ரமாக இருந்தான். உயர்வில் = மேன்மையில் வில்லாக = மேருமல்லயாக இருந்தான். (மேருமலைதான் ஈசனுக்கு வில்) (மலை போலுயர்ந்தவனாயிருந்தான்) வாக்கு வன்மையில் கடகமாக (= காப்பாக = ஆதிசேஷனாக) இருந்தான். ஈசன் ஆதிசேஷபூஷணன். ஆதிசேஷன், பதஞ்ஜலி உருவில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாக்சாஸ்த்ரம் (= வ்யாகரண மஹாபாஷ்யம்) செய்தார். எல்லாரையும் மகிழ்விக்கும் விஷயத்தில் சேகரமாக - சிரோ பூஷணமாக - சந்த்ரனாக இருந்தான். சந்த்ரசேகரன் என்று ஈசனுக்குப்பெயர். சந்த்ரன் அனைவரையும் மகிழ்விப்பது போல் இவனும் மகிழ்வித்தான். எல்லாவிதத்திலும் ஈசனுக்கு உபயோகப்பட்டுக் கொண்டு ஆராதித்தான் என்பதும் கிடைக்கிறது.

(இதே போல் ஒரு அழகிய ச்லோகம் - குவலயாநந்தத்தில் -

தே^{3}வம் வந்தே^{3} சரதி^{4} - சரதி^{4}ம் தே^{3}வதா-ஸார்வபௌ^{4}மம் /
வ்யாஸப்ரஷ்ட^{2}ா பு^{4}வனவிதி^{3}தா யஸ்ய வாஹாதி^{4}வாஹா: ।
பூ^{4}ஷா-பேடீ பு^{4}வனமதலம் புஷ்கரம் புஷ்பவாடீ /
சாடீபாலா: சதமக^{2}முக^{2}ா ச்^{5}ச^{1}ந்த^{3}ன த்^{3}ருர் மனோபூ^{4}: ॥

சரதி^{4}யை சரதி^{4}யாகவும், (=ஸமுத்ரத்தை அம்புராத் தூணியாகவும்,) ஜகத் ப்ரஸித்தர்களான வ்யாஸர் முதலிய ரிஷிகளைத் தன் வாஹனத்தை வஹிப்பவர்களாகவும், அதல லோகத்தை (=நாகலோகத்தை) நகைப் பெட்டியாகவும், ஆகாசத்தைப் புஷ்பத்தோட்டமாகவும், இந்த்ரன் முதலியோரைத் தனது வஸ்த்ரம்-காப்போராகவும், மன்மதனைச் சந்தன மரமாகவும் கொண்டவரை - தேவர்களுக்குச் சக்ரவர்த்தியான தேவனை வணங்குகிறேன் - ஸ்துதிக்கிறேன்.

சரம் என்றால் அம்பிற்கும் ஜலத்துக்கும் பெயர். சரதி என்றால் அம்பு இருக்குமிடம், ஜலமிருக்குமிடம். சரதியை சரதியாகக் கொண்டவர் = ஜலமிருக்குமிடமான ஸமுத்ரத்தை அம்பு இருக்குமிடமாகக் கொண்டவர் = ஸமுத்ரசயனம் செய்யும் விஷ்ணுவை அம்பாக உடையவர். சிவனின் குதிரைகள் வேதங்கள், அவற்றை வஹிப்பவர்கள் ரிஷிகள் - வ்யாஸர் முதலியவர் - வேத மந்த்ரங்களை வாயால் சொல்பவர்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவனுடைய ஆபரணங்கள் பாம்புகள், அவைகள் வைக்கப்படும் பெட்டி அதலம் (=நாகலோகம்). சிவனுக்கு புஷ்பம் சந்த்ரன். அந்தப்புஷ்பம் பூக்கும் நந்தவனம் ஆகாசம். ஆகாசத்தில் தானே சந்த்ரன் தோன்றுகிறான்? ஈசனுக்கு வஸ்த்ரம் திக்குகள் தான். அவற்றைக் காப்பவர்கள் இந்த்ரன், அக்னி முதலிய திக்பாலர்கள். ஈசன் மன்மதனை எரித்து அவன் சாம்பலை சந்தனம்போல் உடலில் பூசிக்கொண்டதால் ஈசனுக்கு மன்மதன் தான் சந்தன மரம்.

※ 30-வது லீலை - பெரும் ஸேனை காட்டியது. ※

குலபூஷணன் ஸுந்தரேசர் சரணங்களை ஆராதித்துக் கொண்டு பூமியை இனிது ஆண்டுவந்தான். அவனுக்கு 'ஸுந்தரேசன்' என்று ஒரு ஸேனாபதி இருந்தான். அவன் ஸுந்தரேசன் சரணங்களில் மிகுந்த பக்தியுள்ளவனா யிருந்தான்.பலம் மிக்கவனான வேடர் தலைவன் சேதிபதி பாண்டிய தேசத்தின் மேல் படையெடுக்க முயன்றான். அவனை எதிர்க்கப் படை திரட்டுவதற்காகக் குலபூஷணன், தன் ஸேனாபதி ஸுந்தரேசனிடம் மிக நிறையப் பணம் கொடுத்தான். அவனோ 'அரசன் வேட்டுவத் தலைவனை வெல்லும் விஷயத்தில் நீர் தான் ஜாமீன்' என்று ஈசனிடம் நிவேதித்துவிட்டு எதற்கும் கவலைப்படாமல் எல்லாப்பணத்தையும் சிவார்ப்பணம் செய்தான். பழுதுபார்த்து வெள்ளையடித்துக் கோவிலைப் புதுப்பித்தான். ரதம், குதிரை, யானை எல்லாம் தங்கமயமாக்கினான். 'ஸைன்யத்தைக் கொண்டு வருகிறேன்' என்று பலவித வார்த்தைகளால் மந்திரிகளை ஏமாற்றினான். அரசன் கேட்டதற்கு 'ஸேனை சேர்த்தாய்விட்டது' என்றான். மந்திரிகள் வார்த்தையைக் கேட்டு அரசன் தன்மேல் கோப மடைந்துவிட்டான் என்பதைக் குறிப்பாலுணர்ந்து, ஸைன்யத்தைக் காட்டுவதற்காக அரசனை மந்திரிகளுடன் வெளியே அழைத்துவந்தான். ஈசன் ப்ரமத கணங்களை மனித உருவுடன் சிப்பாய்களாக்கி, தேர்ப்படை, ய்யானைப்படை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குதிரைப்படை, காலாட்படை நான்கும் நான்கு ஸமுத்ரம் ஒன்று சேர்ந்ததுபோல், புழுதியால் திசைகளை மறைத்துக் கொண்டு வர, ஒட்டகம் - மாடு - யானை பூட்டிய ரதங்களில் பலவித யுத்த ஆயுதங்கள் ஏற்றப்பட்டு வர, பலவித ஜயக்கொடிகளுடன் நந்தி முதலியவரை ரதமேறிவரச் செய்தார்.

ஸுரவாஹினீ-லஹரி-சுப்^{4}ரபட-/ பரிவீதமௌளிரஸி-ச^{1}ர்மத^{4}ர:
। பரிநர்த்தயம்ஸ் துரக^{3}மிந்து^{3} த^{4}ரோ / நிரக^3ாத^{3}நாதி^{3}ரபி
ஸாதி^{3}வபு: ॥

கங்கை ப்ரவாஹமாகிய வெளுப்பு வஸ்த்ரத்தால் முண்டாசு கட்டி, கத்தி-கேடயமேந்தித், தானே குதிரையை நர்த்தனம் செய்வித்துக் கொண்டு ஸுந்தரேசன் வெளியில் வந்தார். அனாதியான போதிலும் ஸாதியாக வந்தார் (=ஆதியற்றவரான போதிலும் ஆதிஉள்ளவராக வந்தார் என்று முரண்பாடு தோன்றுகிறது. ஸாதி = குதிரைக் காஸாரி என்று முரண்பாட்டுக்குப் பரிஹாரம்) பாய்ந்துவரும் குதிரையைச் சுழற்றிக் கொண்டு வந்து கட்டுப்படுத்தி வீர ரஸமே உருவெடுத்தது போல், அரசன் முன்வந்து, அவன் வணங்க இவரும் வணங்கினார். முன்பு பார்த்தறியாத - நினைத்துப்பார்க்க முடியாத ப்ரபாவமுடைய அந்தக் குதிரை வீரனையும் அந்தப் பெரிய ஸேனையையும் பார்த்து அந்த வீரனின் உத்தமமான ரூபத்தால் மனம் - வாக்கு கவரப்பட்டு அரசன் சிறிதுநேரம் அசைவற்று நின்றான். நட்புமொழிகளாலும் வஸ்த்ரம் - பூஷணங்களாலும் ஸந்தோஷப் படுத்தி அடிக்கடி அந்த வீரனை இறுகத்தழுவிக் கொண்டான். 'ஒரு கொசுவை வெல்லுவதற்காக சிந்தித்த எனக்கு இந்த மதயானையே கிடைத்திருக்கிறது' என்று அரசன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒற்றர் மூலம், பகைவன் ஸிம்மத்தால் வீழ்த்தப்பட்டு மாண்ட செய்தி வந்தது. ஸந்தோஷமடைந்த அரசன் குதிரைவீரனுக்குத் தனது சிபிரம் செல்ல (முகாமிற்குச் செல்ல) அனுமதி அளித்தபோது, குதிரை - ஸைன்யங்களுடன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குதிரைக்காஸாரி - ஸுந்தரேசன் உடனே மறைந்தார். லீலைகள் புரிவதில் ஆர்வங்கொண்ட மதுரேசனின் மஹிமை இது என அறிந்து குலபூஷணன் கோழ்ச்சொல்லிகளை தண்டித்து, ஸேனாபதியை மிகவும் பஹுமானித்து அவன் செய்தது போலவே தானும் தனது ஸொத்து = யானை, குதிரை, பசு, எருமை, தான்யம், தனம், பூமி, மித்ரம், பிள்ளை, தாரம் அனைத்தையும் 'சிவனுக்காக எனக்கல்ல' என்று சிவார்ப்பணம் செய்து ஒரு பெரிய யாகம் செய்து சிவனை ஆராதித்தான்.

❀ 31-வது லீலை - குறைவற்ற நிதியளித்தது ❀

அரசனது பொக்கிஷசாலை தானங்களால் காலியாய் விட்டதும் கருணாநிதி ஸுந்தரேசன் அக்ஷயமான தனத்தை அளித்தார். குபேரனுக்கு அக்ஷய நிதியளித்த சிவன் பிக்ஷுகனாகத் தானிருந்தார். இப்போது குலபூஷணனுக்கு அளிக்கப்பட்ட அக்ஷய நிதியால் சிவனுடைய இருப்பிடம் ஸுவர்ணத்தால் - ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டது. (=அரசன் மிகுந்த ஸுவர்ணம் - ரத்னங்களைக் கொண்டு கோவிலை அலங்கரித்தான்)

❀ 32-வது லீலை - வளையல்கள் விற்றது ❀

தாருவனத்தில் பிக்ஷாடன - ஸுந்தரரைக் கண்டு ஆசை கொண்ட ரிஷிபத்னிகள், கணவர்களின் சாபத்தால் மதுரையில் வணிகர்குலங்களில் நூற்றுக் கணக்கான அழகிகளாகப்பிறந்து சிவன்கதையில் ஈடுபட்டவர்களாக வளர்ந்தனர். யௌவனப் பருவம் அடையும்போது அவர்கள் மனஸில் மன்மதனும் மன்மதனை வென்ற சிவனும் சேர்ந்து நண்பர்கள் போல் ப்ரவேசித்தனர். அந்தப் பெண்களுக்கு அருள்புரிய ஈசன் வளையல்செட்டியாக வந்தார். 'சிவனிடத்தில் தனது புஷ்பபாணங்கள் பலிக்கவில்லையென்றெண்ணி மன்மதன் (இப்போது ஆயுதமாக) வளையல்களை எடுத்துக் கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸஞ்சரிக்கிறான்' என்று ஸ்த்ரீகள் பேசிக்கொண்டனர். செட்டிப் பெண்களிடம் பரஸ்பரம் ச்ருங்காரம் தொக்கிநிற்கும் இன்மொழிகளால் விளையாடி, அவர்கள் கையைத் தொட்டு வளையலேற்றி, அவர்களுக்குப் பிறவிப் பயனளித்து, அவர்கள் மகப்பேறால் ஸௌகமடைந்தபின் சாபம் நீக்கப்பட்டவர்களான அவர்களை ப்ரமத கணங்களைக் கொண்டு கைலாஸத்துக்கு அழைத்துக் கொண்டார், ஸௌந்தரேசன்.

※ 33-வது லீலை - யக்ஷிணிகளுக்கு அணிமாதி ஸித்திகளை அருளியது. ※

ஒருபோது ஈசன் ஆலமரத்தடியில் ஸநகாதி முனிவர்களுக்கு அணிமாதிஸித்திகளை அளிக்கவல்லதான தேவிசரண பூஜரஹஸ்யத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். அவர்களும் மிகுந்த பக்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களருகில் சில யக்ஷிணிகள் கவனமில்லாமலிருந்ததைக் கண்டு கோபங்கொண்டு அவர்களைப் பாண்டிய தேசத்தில் ஒரு ஜனமற்ற காட்டில் பெரிய ஆலமரத்தடியில் கற்களாகும்படி சபித்து, அவர்கள் அடிக்கடி வணங்கி ப்ரார்த்திக்கவும், அவர்களிடத்தில் ப்ரஸன்னமானார் ஈசன். ஆயிரமாண்டுகள் கழிந்ததும் ஒரு குருரூபம் கொண்டு அவர்களுக்கு அணிமாதி ஸித்திகளை அருளி மேலுலகு அழைத்துச் சென்றார்.

※ 34-வது லீலை - சோழனுக்கு இரவில் தர்சனமளித்து அவன் சென்றபின் கதவுக்கு வ்ருஷப முத்ரையிட்டது ※

குலபூஷணபாண்டியன் மீனாக்ஷி - ஸௌந்தரேசா னுக்ரஹத்தால் ராஜேந்த்ரனைப் பெற்றான். ராஜேந்த்ரனுக்கு ராஜஸிம்மன் என்று ஒரு - துராசையால் மதிகெட்ட - தம்பியுமிருந்தான். தந்தைக்குப் பிறகு ராஜேந்த்ரன், ராஜஸிம்மனையுட் தன் பிள்ளையைப் போல் பாதுகாத்து வந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ராஜேந்த்ர பாண்டியனுக்குக் குல சத்ருவான ஒரு சோழ அரசன் மதுரை மீனாக்ஷி - ஸுந்தரேச்வரரை தர்சிக்க ஆவல்கொண்டு அதற்காக தவங்கள் செய்து கொண்டு தர்சனம் கிடைக்கவில்லையே என்று மனஸில் வருத்தம் கொண்டிருந்தான்.

ஸ்வப்னே கத^{3}ாசி^{1}த^{3}த^{2} சே^{1}ாளந்ரு^{1}பம் / ப்ரதிபோ^{3}ாத்^{4}ய
கூ^{3}ட^{4}முபயாத மிமம் । விக^{4} டய்ய கே^{3}ாபுர - கவாடயுக^{3}ம் /
நிஜமானினாய நிசி த^{4}ாம சிவ: ॥

பிறகு ஒரு ஸமயம், சிவபெருமான், சோழஅரசனிடம் ஸ்வப்னத்தில் தெரிவித்து, அதன்படி ரஹஸ்யமாய் வந்த அவனை இரவில் கோபுரக் கதவுகளைத் திறந்து தன் மூலஸ்தானத்துக்கு அழைத்து வந்தார்.

அவன் பொற்றாமரையில் ஸ்னானம் செய்து மீனாக்ஷி - ஸுந்தரேச்வரர்களை வணங்கி வெளிச் சென்றபின் கதவைப் பூட்டி வ்ருஷப முத்ரை வைத்துவிட்டார். பாண்டியன் மறுநாள் காலையில் அதுகண்டு ஸந்தேஹங்கொண்டு மந்திரிகளுடன் ஆலோசித்தும் ஒன்றும் தெளிவு பெறாமல் ஈசனை சரணடைந்தான். அசரீரிவாக்கால் ஈசனது லீலை என அறிந்து, ஸுந்தரேசானுக்ரஹம் பெற்ற ஸுந்தரேச - பக்தனான அச்சோழனின் நட்பைப் பெற விரும்பினான்.

☙ 35-வது லீலை - தண்ணீர்ப் பந்தல் வைத்தது. ☙

ராஜேந்த்ர பாண்டியனின் தம்பி ராஜஸிம்மன், காரணமின்றித் தமையனிடம் கலஹம் கொண்டு, சோழனின் பெண்ணை மணந்து அவனுடன் நட்புக் கொண்டு அவனும் தானுமாகப் பெரும்படையுடன் மதுரையை முற்றுகையிட்டான். அப்போது ஸரியான கோடைகாலம். கருணையின்றி ஸூர்யன் உலகை வாட்டும்போது காலத்தின் மேல் எல்லா அபகீர்த்தியும் சுமத்தப்பட்டது. 'சீ, சீ, என்ன கடுமையான வெய்யிற்காலம்'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று ஜனங்கள் காலத்தை நிந்தித்தனர். மூர்க்கனான மந்திரி குடிமக்களைத் துன்புறுத்துகிறான், அரசனை ஆபத்தில் ஆழ்த்துகிறான். பாண்டியனும் ஸுந்தரேசனை வணங்கி அவரது ப்ரஸாதபலம் தான் பலம் (=ஸேனை) என்றெண்ணி இருந்த ஸைன்யத்துடன் வெளிவந்தான். கடும் யுத்தம் நடந்தது. நடுப்பகலில் நீர் தாஹம் தாங்காமல் இருஸேனையும் ஓய்ந்தன.

பரி பூரிதாம் சிசிரகும்ப4சதைர்-/ விபுலாம் ப்ரபாங் க்வச1ன
பாண்ட்3ய ப3லே। அதி4ருஹ்ய மௌளி-ஸரி த3ம்பு ப4ரைஸ் /
த்ரு1ஷிதானதர்ப்பயத பூ4தபதி :॥

சிவபெருமான் பாண்டிய ஸேனை நடுவில் ஒரு இடத்தில் நூற்றுக்கணக்கான குளிர்ந்த பானைகள் கொண்ட பெருந் தண்ணீர்ப்பந்தல் மேடை அமைத்து அதில் அமர்ந்து தலையிலுள்ள கங்கை ஜலத்தால் நீர்வேட்கையால் களைத்தவர்களை மகிழ்வித்தார்.

ஈசனது கருணாரஸத்தாலும் கங்காஜலத்தாலும் புஷ்டியடைந்த பாண்டியவீரர்கள் ஸிம்மகர்ஜனையுடன் பாய்ந்து ராஜஸிம்மனுடன்கூட சோழனையும் கையில் பிடித்துவந்தனர். ஜயத்துடன் திரும்பி வரும்போது சுற்றிலும் எங்குமே தண்ணீர்ப் பந்தல் இல்லாததால் இது ஈசன் திருவருள் என உணர்ந்தான் பாண்டியன். சோழன் ஸுந்தரேசரிடம் பக்தியுள்ளவன் என்பதால் அவனுடன் நட்பு பூண்டு அவனை ஸம்மானித்து அனுப்பினான், மதங்கொண்ட ராஜஸிம்மனையும் தம்பி என்று கருணையுடன் சேர்த்துக்கொண்டு போஷித்தான்.

அம்பே4ாபி4: கேவலெர ப்யவனி-பதி-ச1மூம் தர்ப்பயன் ஜாது
தப்தாம் / க்2யாதிந் த4த்தே யதீ3ச: கியதி3வ ந யசோ நித்ய
மன்னப்ரத3ாயா:। தே3வ்யா மீனேக்ஷணாயா இதி நக3ரஜுஷா
மத்3பு4தான் ப4க்திவாத3ான் / ச்ரு1ண்வன் ராஜேந்த்3ர
பாண்ட்3ய: ஸகலமபி மஹீச1க்ரமேகச்5 ச5சாஸ ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''ஏதோ ஒருஸமயம் தாஹத்தால் தவித்த ராஜஸேனையை வெறும் ஜலத்தால் மட்டும் திருப்தி செய்து வைத்து புகழ் அடைகிறார் ஸுந்தரேசன் என்றால் தினந்தோறும் அன்ன மளிக்கும் மீனாக்ஷிதேவியின் புகழ் எவ்வளவு இருக்கும்'' என்று நகரத்தோரின் பக்தி பெருகும் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டு ராஜேந்திர பாண்டியன் பூமியை ஆண்டுவந்தான்.

அவன் பிள்ளை ராஜேசன். அவன் பிள்ளை ராஜகம்பீரன். அவன் பிள்ளை புருஹூதஜித் = இந்த்ரஜித் (புருஹூதன் = இந்த்ரன்). அவன் பிள்ளை குலத்வஜன். அவனுக்கு ஸுந்தரேச ப்ரஸாதத்தால் சிவபாத சேகரன் பிறந்தான்.

சிவபாத சேகரன், 1000 குதிரைகள், 10000 வீரர்கள், 100 யானைகள், 10 மஹாரதர்கள் என்று இவ்வளவு மட்டும் ஸைன்யம் வைத்துக்கொண்டு உசிதமான செலவு செய்து கொண்டு மற்றது எல்லாவற்றையும் சிவனுக்கு அர்ப்பணித்து விட்டான்.

ஃ 36-வது லீலை - ரஸ வாதம் செய்தது. ஃ

மதுரையருகிலுள்ள புஷ்பவனம் என்ற சிவஸ்தலத்தில் சிவபக்தர்களை ஆராதிப்பவளும் சிவவ்ரதமுடையவளுமான ஒரு தேவதாஸீ, ஈசனுக்கு எல்லா உத்ஸவங்களும் நடத்துவதற்கேற்றதான ஒரு உத்ஸவவிக்ரஹம் செய்வதற்காகத் தேன் மெழுகால் ப்ரதிமை செய்துகொண்டு சுத்தமான செப்பு ஸங்க்ரஹிப்பதில் முனைந்திருந்தாள். அதே ஆசையை மனஸில் கொண்டு, கிடைக்காமல் காலங்கழிக்கையில் பாக்யவசத்தால் ஒரு நாள் ஸித்தர் உருவில் ஸுந்தரேசனே அவள் க்ருஹத்துக்கு அதிதியாகச் சென்று அவளால் வணங்கப்பட்டு, உபசரிக்கப்பட்டு, ரஸஸித்தியைக் காட்டித் தனது பஸ்மாவால் அவள் வீட்டிலிருந்த அனைத்து இரும்பையும் தங்கமாக்கி அருளினார். ஸித்தர் மறைந்ததும் வியப்புற்ற அவள் ஈசனுக்குத் தங்கத்தால் விக்ரஹம் வார்த்து மிக அழகாயிருந்த அதைக்கண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கன்னத்தைக் கைவிரல்களால் பிடித்துக்கொண்டு முத்தமிட்டாள். இப்போதும் ஈசனுடைய சுத்தமான கன்னப்ரதேசத்தில் அவளது கை நகம் பதிந்திருப்பதைக் காணலாம். நிறைய தக்ஷிணையுடன் செய்யப்படும் மஹாயாகங்களாலும் தினமும் வேதாந்த விசாரங்களாலும் (வேதபாராயணங்களாலும்) அடைய முடியாத சிவபதத்தை ஈசன் க்ருபையால் அவள் அடைந்தாள்.

ॐ 37-வது லீலை - சோழனை மடுவில் வீழ்த்தியது. ॐ

பெரும் ஸேனையுடன் சோழன் போருக்கு வந்தான். சிவபாதசேகரன் வேறுஸாதனமின்றி சிவனை ஆராதித்தான். ‘பெரும் ஸேனை என்று அஞ்சாதே. உனது சிறிய ஸேனையுடன் போருக்குக் கிளம்பு. ஜயம் உனக்கே’ என்று அசரீரி வாக்கு உதித்தது. சிவனை சிந்தித்துக்கொண்டு பாண்டியன் கிளம்பினான். கோரமான யுத்தம். இருதரப்பிலும் பெரும் சேதம்.

யுத்தத்தில் இறந்த சிப்பாய்களையும் குதிரை - யானைகளையும் கொண்டுசெல்ல வேண்டிய யமதூதர்கள், சுற்றிலும் விழுங் கூரிய அம்புகளுக்குப் பயந்து வெகு தூரத்திலேயே இருந்து கொண்டு நல்ல வார்த்தை சொல்லி, இறந்தவர்களைத் தம் அருகில் கூப்பிட்டனர்.

பிசாசுகள் வெகு தூரத்திலேயே சுற்றின. காற்றுமயமான தேஹத்தைக் கொண்டு மாம்ஸமுண்ண முடியாது. மண்மயமான தேஹம் கொண்டாலோ நூற்றுக்கணக்கான அம்புகளால் துளைக்கப்பட்டுவிடும். என்ன செய்வது என்று அவைகள் வருந்தின.

(புறங்காட்டாமல்) போரிட்டு இறந்தவர்கள், சிலர் வீரஸ்வர்கம் செல்வதற்காக உயரக் கிளம்பினர். பாதி வழியில் பாணங்களால் வீழ்த்தப்பட்டு மறுபடியும் கிளம்பினர். அவர்களுக்கு தேவர்கள் இருமடங்கு அம்ருதமளித்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீரஸ்வர்கமடைந்தவர் பேசுவது தேவஸ்தீர்களுக்குப் புரியவில்லை. அவர்கள் பேச்சு இவர்களுக்குப் புரியவில்லை. மௌனமாக கைசேஷ்டையாலேயே தெரிவித்து பசுக்களைப் போல் எல்லா ஸுகமும் அவர்கள் அனுபவித்தார்கள்.

குதிரைகளுடன் குதிரைவீரர்களுங் கொல்லப்பட்டனர். அந்தந்தக் குதிரைகளில் ஏறிக்கொண்டே அந்தந்த வீரர்கள் ஸ்வர்கம் சென்றனர். பயந்து ஓடாமல் தீரஸாஹஸம் புரிந்து ஸ்வர்கத்துக்குப் போகும் போதும் தூக்கிச் செல்லப்படுபவன் - தூக்குகிற வாஹனம் என்ற பாகுபாடு தீரவில்லை.

தேவலோகத்துக் கணக்கர்கள், ஸூர்யனின் பின்புறத்தில் அசையாமலிருந்துகொண்டு, யுத்தத்தில் வீரமரணமடைந்து ஸூர்யமண்டலத்தைப் பிளந்துகொண்டு, ஸ்வர்கம் வருகிற வீரர்கள் - குதிரைகள் - யானைகளைக் கணக்கெடுத்தனர்.

ஸேனை சிறிதுதான் மிச்சமிருப்பதை அறிந்து பாண்டியன் முன்னுக்கு வரும்போது அவன்முன்னால் குதிரைவீரன் உருவில் தோன்றி ஈசன் கையில் கூரிய பாணத்தைச் சுழற்றிக்கொண்டு சோழஸைன்யத்தில் புகுந்து அதை சிதற அடித்தார். சோழன் தலைவிரிகோலமாய் வழிதவறி ஓடி குதிரை-ஸேனையுடன் ஒரு குளத்தில் மூழ்கினான். அவனுடைய ஸேனாமுகாமிலிருந்து பாண்டியன் தங்கமயமான - ரத்னமயமான ஆடை ஆபரணங்களை எடுத்துவந்து, ஸுந்தரேசர் பாதங்களில் ஸமர்ப்பித்தான்.

ஜ 38-வது லீலை - அக்ஷய தான்யமளித்தது. ஜ

பக்த ஸௌம்யன் என்றொரு சிவபக்தன், தினமும் அன்னதானம் செய்வதால் சிவனைப் பூஜிப்பதென்று நியமங் கொண்டு தனம் பற்றாமல் கடன் வாங்கி, வாங்கிய கடனை அடைக்க வேறு கடன் வாங்கி நியமத்தைக் காப்பாற்றிவந்தான். எப்படியும் தனம் கிடைக்காத போது நியமபங்கம் வரக்கூடாது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று தனது உயிரையே விடத்துணிந்து ஈசன் முன் விழுந்தான். எடுக்க எடுக்கக் குறையாத அரிசி மூட்டையை அருளி ஈசன் அவனை ரக்ஷித்தார்.

ஃ 39-வது லீலை - மாமனாக வழக்குரைத்தது. ஃ

மதுரையில் வஸித்துவந்த (அர்த்தபதி) தனபதி என்றொரு செட்டிப்ரபு பிள்ளையில்லாததால் தனது தனத்தையெல்லாம் மருமானிடமளித்துவிட்டு கடைசிவயஸில் தபம் செய்ய காட்டு ஆச்ரமம் சென்றான். பங்காளிகள் செட்டிப்ரபுவின் ஸொத்து அனைத்தையும் அபஹரிக்க எண்ணி செட்டிமருமானை மிகவும் துன்புறுத்தினர். அப்போது ஈசன், அந்த மாமனின் உருக்கொண்டு வந்து ராஜஸபையில் வாக்காடி பங்காளிகளை வென்று உடனே மறைந்தார். ஸபையில் எல்லா ஜனங்களும் வியப்படைந்தனர்.

ஃ40-வது லீலை - ப்ரம்மஹத்யா தோஷம் விலக்கியது ஃ

சிவபாதசேகரபாண்டியன், தவமிருந்து, சிவபக்தனான வரகுண பாண்டியனைப் பெற்று அவனிடம் ராஜ்யபாரத்தை அளித்து மீனாக்ஷி திருவடியில் மறைந்தான். வரகுணபாண்டியன் ஒரு நாள் வேட்டையாடும்போது ஒரு மரத்தடியில் படுத்திருந்த ப்ராம்மணன் மேல் குதிரைக் குளம்பு பாய்ந்து அவன் இறந்தான். வரகுணன் ப்ரம்மஹத்தியால் பீடிக்கப்பட்டு வருந்தி ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஜப தான ஹோமங்களால் ஈசனை ஆராதித்தும் சாந்தியடையவில்லை. கருணாநிதியான ஈசன் அசரீரி வாக்கால் அவனுக்கு ''மதுரையில் செய்யப்பட்டது பாபமோ, புண்யமோ அது. இவ்வளவு பெரியதென்று வாக்கால் சொல்ல முடியாது. காவேரிக் கரையில் மருதமரத்தடியில் எனது பெரிய லிங்கமிருக்கிறது. அதை உபாஸித்தால் உனது பாபம் முழுவதும் ஒரே க்ஷணத்தில் அழியும்'' என்று அறிவித்தார். பாண்டியனும் சோழனை அடக்குவதை ஒரு சாக்காகச் சொல்லித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவிடைமருதூர் வந்து மத்யார்ஜுனேச மஹாலிங்கத்தைப் பூஜித்துப் பாபம் நீங்கப்பெற்றான். திரும்பவும் மதுரையடைந்து இனிதே ஆண்டுவந்தான்.

௸ 41-வது லீலை - விறகு பாரம் சுமந்தது. ௸

அரசனுக்குப் பிடித்தமானவன் - கான வித்யையில் புகழ்பெற்றவன் - பத்ரன் என்றொரு பாடகன் மதுரையில் எப்போதும் ஈசனை வீணையுடன் பாடி ஸ்துதி செய்தவாறு இருந்தான். ஒருபோது அவனை ஜயிப்பதற்காக இன்னொரு பாடகன் தனது பிருதங்களைப் பறைசாற்றிக் கொண்டு அரசனைப் பார்த்தான். ஈசனோ தனது பக்தனைக் காப்பாற்ற எண்ணி மனித உருக்கொண்டு சந்த்ரகலையிருந்த தனது தலையில் பெரும் விறகு பாரத்தை ஏற்றிக் கொண்டு விறகு விற்பவனாக மதுரையில் பகல் முடியும் வரை திரிந்தார். 'மிகவும் காய்ந்த விறகு, தனம் போல் கொண்டுவந்திருக்கிறேன். பொக்கை போறையற்றது, முள்ளில்லாதது, கனமுள்ளது. இதற்கேற்ற விலை கொடுத்துப் பெறுவீர்' என்று இரைந்து கூவிக்கொண்டு சென்றார். இவர் பாடிக் கொண்டே சென்றதில் பாட்டின் மாதுர்ய மஹிமையால் விறகுகள் துளிர்த்துத் தலையிலுள்ள கங்காஜலத்தாலும் ஈரமாக்கப்பட்டதால் யாரும் வாங்கவில்லை. அவர் கால்பட்டுப் பரிசுத்தமான புழுதிகளை ப்ரம்மா முதலிய தேவர்கள் மஹர்ஷிகள் வணங்கி க்ரஹித்துக் கொண்டனர்.

கரயுக்^{3}ம-ஸம்யமித-ப^{4}ாரமந்த^{2}ரம் / க^{4}டிதச்ரமாம்பு^{3}கணமஸ்ய
வீதி^{2}ஷு । க்ரய-வாத^{3}-நாத^{3}-ஜிதகோகிலாரவம் /
க^{3}தமாக^{3}தஞ்ச ந க^{3}தம் மமாசயாத் ॥

இருகையாலும் பிடித்துக் கொண்டுள்ள பாரம் அழுத்துவதால் மெதுவாகவும், வியர்வைத் துளிகள் பொருந்தியும் குயிலைத் தோற்கடிக்கும் இனிய குரலால் விலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூவிக் கொண்டும் மதுரை வீதிகளில் அவர் போவதும் வருவதுமாயிருந்தது எனது மனதைவிட்டு அகலவில்லை. (கவி கூறுகிறார்.). புதுப்பாடகன் தங்கியிருந்த வீட்டுக்கு வெளிப்புறம் பாரத்தை இறக்கிக் களைப்பாறிவிட்டு மிக இனிமையாகப் பாட ஆரம்பித்தார். ஷாடவ - ஔடவ வகையுடைய எல்லா ராகங்களையும் ஒன்றோடொன்று கலப்பில்லாமல், பாடகர் அனைவரும் வெட்கப்படும் படியாகவும் பயப்படும்படியாகவும் அவர் மிக இனிமையாய்ப் பாடியதைக் கேட்டு வியப்படைந்து புதுப்பாடகன் வெளிவந்து இவருடைய குலஸம்ப்ரதாயத்தைப் பற்றிக் கேட்டான். ஈசன், பத்ரன் வீட்டுக்கு அடிக்கடி போய் வர நேர்ந்தபோது அவன் பாடுவதைக் கேட்டு இந்தப் பாட்டு முறையைக் கற்றுக் கொண்டதாகச் சொன்னார். அதைக் கேட்டுப் புதுப்பாடகன் பயந்து ஓடிவிட்டான். அரசன் பத்ரனிடம் வந்து பூஷணங்களாலும் தனங்களாலும் அவனை பஹுமதித்தான். அரசன் அளித்தவற்றை எல்லாம் ஈசனுக்கு ஸமர்பித்துத் தான் சேர்த்து வைத்திருந்ததையும் சிவபக்தர்களுக்கு அளித்தான். அதனால் நிறைய ஸம்பாதித்தபோதிலும் பத்ரன் தனமற்ற வனானான்.

❀ 42-வது லீலை - பத்ரனை ஸம்மானிக்கச் சொல்லி சேரனுக்கு ஓலை அனுப்பியது. ❀

சேரன், கவிகள்-பாடகர்களுக்கு விருப்பமானவற்றைக் கல்பதருபோல் வாரி வழங்கி வந்தான். ஸுந்தரேசன் பத்ரனிடம் சேரனுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து அனுப்பினார். சேரனது ஸ்வப்னத்திலும் முன்கூட்டியே பத்ரன் வருகையை அறிவித்தார். சேரன் எதிர்கொண்டு வந்து அழைத்துச்சென்று பூஷணங்கள் - தனம் - வஸ்த்ரங்கள் நிறைய வழங்கிப் பூஜித்து அனுப்பினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

❀43-வது லீலை - ரத்னப் பலகை அளித்தது. ❀

இவ்வாறு பத்ரனிடத்தில் ஈசனுக்கு தயை அதிகமாகவும் பத்ரனுக்கும் பக்தி அதிகமாயிற்று. அதுதான் அவனது கடைசிப்பிறப்பு, பிறகு அவனுக்குப் பிறப்பில்லை. விடியற் காலை, காலை, ஸங்கவ காலம், நடுப்பகல், ப்ரதோஷகாலம், அர்த்த ராத்திரி ஆறு காலங்களிலும் தவறாது ஈசனைப்பாடி ஸேவித்தான். நந்தீச்வரருக்கு வெளியில் திறந்தவெளியில் நின்று கொண்டு ஆறுவேளையும் தவறாது பாடும் பத்ரனது மன உறுதியைப் பரீக்ஷிக்க எண்ணி, ஈசன் மேகங்களை மழைபொழியும்படி ஏவினார். திக்குகள் செவிடுபட இடித்துக், கண் கூச மின்னி, இடிவீழ்ச்சிகளுடன் மழைகொட்ட, எங்கும் இருள் சூழ, உலகே பயங்கொண்டு வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தது. பத்ரனோ பொற்றாமரையில் மூழ்கி, மெதுவாக ஈசன் ஸன்னிதியை அடைந்து வழக்கம் போல் பாடினான். மேகரஞ்ஜி, மஹிரஞ்ஜி முதலிய அவனது இனியதான ராக மஹிமையால் பூமிக்கும் வானத்துக்குமுள்ள இடைவெளியே உருகி த்ரவமாய் விட்டது என்று தோன்றும்படி, விடியற்காலையில் மேகங்கள் எல்லையின்றி மழை பொழிந்தன: ஆலங்கட்டிகளால் வீணை பிளவுண்டது. விரல்கள் சொன்னபடி கேட்கவில்லை. உடம்பு ஆட்டங்கொண்டது. ஆட்டங்கொள்ளாத த்ருடமான பக்தி ஒன்றின் பலங்கொண்டு பத்ரன் மறுபடியும் பாடிக்கொண் டிருந்தான். கனமான சேற்றில் புதைந்து இருபாதமும் அசைக்க முடியாமலானபோது, ஒரு அகலமான - உயரமான - ரத்னவேலைப்பாடுகளுடைய ஆஸனம் தானே பத்ரானெதிரில் தோன்றியது. அதிலமர்ந்து சிவனிடம் ஈடுபட்ட கண்களுடன் சீக்ரப்படுத்தாமல் வழக்கம் போல் அவன் தனது நியமத்தை நிறைவேற்றியதும் மேகங்கள் மறைந்தன, ஆகாசம் நிர்மலமானது, எங்கும் நிலவொளி திகழ்ந்தது. இந்த அத்புதப் பலகையைப் பார்த்து அரசன் பத்ரனை வணங்கிப் பன்முறை புகழ்ந்தான். அதுமுதல் சிவலிங்கத்தில் வைப்பதைவிட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவயோகிகளிடத்தில் சிவப[4]ாவனையை (='சிவன்' என்ற எண்ணத்தை) அதிகமாக வைத்தான். சிவபக்தர்கள் ஸாக்ஷாத் சிவனேதான் என்று நினைத்து அவர்களை மிகவும் பூஜித்தான்.

வர குணபாண்டியன் வ்ரதங்களால் ஸுந்தரேசனை ப்ரஸன்னமாக்கி ராஜராஜன் என்ற புத்ரனைப் பெற்று உரிய வயஸில் ராஜ்யபாரத்தை அவனிடமிறக்கிவிட்டு சிவனருகை அடைந்தான். ராஜராஜனும் மீனாக்ஷி-ஸுந்தரேசனை தாய் தந்தையராகவும், குருவாகவும், நண்பனாகவும், தனது ப்ரபுவாகவும், குலதைவதமாகவும் எண்ணினான். குலசேகரனின் வம்சத்தில் பிறந்தவர்களுக்கு இயற்கையாகவே இருக்கும் சிவசரணபக்தியுடன் ராஜ்யபரிபாலனம் புரிந்துவந்தான். குபேரனுக்கு 'ராஜ ராஜன்' என்றும் 'சிவன்தோழன்' என்றும் பெயர். ராஜராஜபாண்டியன், சிவன் தோழனாக மட்டுமிருந்த அந்த ராஜராஜனை (= குபேரனை) விட மேம்படுவதற்காகச் சிவனை, முன் சொன்ன தாய் தந்தை முதலிய எல்லாமாக உபாஸித்தான்.

ஃ 44-வது லீலை - இசை வாதில் பத்ரனின் மனைவிக்கு வெற்றியளித்தது. ஃ

பத்ரன் சிவலோகமடைந்தபின் அவனைவிட நிபுணையான அவனது மனைவியும் ஆறு காலத்திலும் பாடி சிவனை ஆராதித்து வந்தாள். ஒரு நாள் அரசனின் அந்தப்புரத்துக்குச் சென்றபோது அரசனது மனைவி ஒருவளுடன் இவளுக்குப் பாட்டில் கலஹம் ஏற்பட்டது. அது முதல் அரசன் இவளை அவமதிக்க எண்ணங்கொண்டான். ஒரு ஸமயம் சிங்களத்தீவிலிருந்து ஸங்கீத நிபுணை ஒருத்தியை வரவழைத்துப் பாட்டுப்போட்டி வைத்தான். ஸபையிலுள்ளோர் புதியவளே சிறந்தவளென்றனர். மனஸால் மதுரேசனை நினைந்து, அரசனைப் பார்த்து பத்ரனின் மனைவி வருத்தத்துடன் 'பஹுகாலமாகவே பொறாமைகொண்டவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏதாவது சொல்வதால் குறைவு வராது. ஈசன் ஸந்நிதியில் பாடுவதைக் கேட்டு உயர்வு-தாழ்வு சொல்லட்டும். ஜயிப்பவள் ஸ்வாமினீ (=தலைவி =உடையவள்), தோற்பவள் ஜயித்தவளின் வேலைக்காரி ஆகவேண்டும்' என்று கூறினாள். இஷ்டமில்லாத போதிலும் அரசன் அவள் சொன்னதைக் கொண்டாட வேண்டியதாயிற்று. அரசனுடனும் ஸபையில் உள்ளோருடனும் ஈசன் ஸமீபத்தை அடைந்து இருவரும் ஏழுகம்பி வீணை - குழல் வீணையுடன் இனியகுரலால் பாடினர். உண்மையில் புதியவளே மேலானவள். இருந்தும், அன்பர் பக்கத்தில் சேரும் ஈசன் மாயையால் சூழப்பட்டு, அவள் பத்ரனின் மனைவியைப் பலவாறு புகழ்ந்தாள். ஈசன் சித்தப்படி அரசனும், 'புதியவள் ஜயிக்கப்பட்டாள், பத்ரன் மனையாள் ஜயித்தாள்' என்று அடிக்கடித் தன்வசமின்றியே மொழிந்தான். ஸபையில் சிங்களத்தவள் வேலைக்காரியாகி பத்ரன் மனைவிக்குப் பணிபுரிந்தாள். அரசன் ஆச்சர்யத்துடன் பத்ரன் மனைவியை பலவித பூஷணவஸ்த்ரங்கள் கொடுத்து கௌரவித்தான்.

ராஜராஜனுக்கு ஸுகுணன் பிறந்தான். ஸகல சாஸ்த்ரங்களையுமறிந்து வினய வணக்கமுடையவனாயிருக்கிற ஸுகுணனுக்கு குடிமக்கள் ப்ரார்த்தனைப்படி இளமையிலேயே யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்தான் ராஜராஜன்.

ஃ 45-வது லீலை - பன்றிக்குட்டிகளுக்கு ஸ்தன்யம் கொடுத்தது. ஃ

ராஜராஜன் ஒருநாள் காட்டில் பல மிருகங்களை வேட்டையாடிய போது மலைபோன்ற ஒரு பன்றி இவனுடைய தேர் - ஸாரதி - குதிரைக்கெல்லாம் நாசமுண்டாக்கிக் கடைசியில் பெண்பன்றியுடன் இவன் கத்தியால் வெட்டுண்டு ஒரு மலைத்தாழ்வரையில் வீழ்ந்தது. அந்த மலைக்கு அதுமுதல் வராஹமலை எனப்பெயர் ஏற்பட்டது. அரசன் ஆச்சர்யத்துடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஊர் திரும்பினான். பிறகு தாயிழந்த பன்னிரண்டு பன்றிக் குட்டிகளும் தாய்ப்பாலுக்காகக் கத்தின.

தபஸ்வினாமவனக்ரு1தே தபஸ்யதோ / கி3ரேஸ்தடே க்ரு1த
ருசி1ரத்ர சங்கர: । க்ருபாலய: கிடிப்ரு1து2கானபாலயத் /
ஸ தத்ப்ரஸூதனு ரமிதைஸ் ஸ்தனாம்ரு1தை: ॥

தவம் புரியும் தபஸ்விகளைக் காப்பதற்காக அந்த மலையடிவாரத்தில் ஈடுபாடு கொண்ட சங்கரன்-க்ருபாநிதி, (தாயிழந்த) பன்றிக்குட்டிகளைத் தாயுருக்கொண்டு அளவற்ற ஸ்தன்யாம்ருதத்தால் காப்பாற்றினார்.

முன் யுகத்தில் நான்காம் வர்ணத்துக் குமாரர்களா யிருந்தவர்கள் முனிவர் சாபத்தால் பன்றிகளாய்ப் பிறந்திருந்தனர். ஈசன் அளித்த முலைப்பால் குடித்ததால் சாபம் நீங்கி பன்றிமுகமுடைய மனுஷ்யர்களாக மாறினர். எல்லாக் கலைகளிலும், சிறப்பாக ராஜநீதியிலும் அவர்கள் தேர்ந்தவ ராயினர். சிவசரணத்தில் ஈடுபட்டவர் (உருவில் பன்றியா யிருந்தாலும்) பன்றியில்லை. சிவனிடம் பராங்முகமா யிருப்பவன் தான் பன்றி.

' 46-வது லீலை - பன்றி-முகத்தோரை மந்திரிகளாக்கியது '

மலைக்குஹைகளில் சிவனை ஆராதித்துக் கொண்டு வஸித்துவந்த அந்தப் பன்னிருவரையும் அழைத்துச் சென்று மந்திரிகளாக்கும்படி ராஜராஜனுக்கு ஸுந்தரேசன் உத்தர விட்டார். அவனும் அப்படியே செய்தான். அவர்களும் தீர்காயுஸ்ஸாக பஹுகாலம் மந்திரிபதவி வஹித்து சிவபூஜையால் பரிசுத்தர்களாகி இறுதியில் சிவனடி சேர்ந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தந்தை சிவனடி சேர்ந்தபின் ஸுகுண பாண்டியன் அசையாத சிவபக்தியுடன் பூமியை ஆண்டுவந்தான்.

❀ 47-வது லீலை - கரிக்குருவிக்கு மந்த்ரோபதேசம் செய்தது. ❀

ஒரு கஞ்ஜன பக்ஷி (வலியன் பக்ஷி = கரிக்குருவி) இரைதேடுவதற்காக வெளியில் கிளம்பினபோதெல்லாம் பலம் கொண்ட காக்கைக் கூட்டம் அதை அடித்தது. அது காக்கை-பயத்தால் சிவனை சரணமடைந்து கோவிலுக்குள் ஒரு புறாப்பொந்தில் ஒளிந்துகொண்டு ஒரு முறை பொற்றாமரையில் மூழ்கி உபவாஸத்துடன் சில நாள் கழித்தது. அந்தக்கரும் பறவை ஹோமம் செய்ததா? யாகம் செய்ததா? தானம் செய்ததா? ஜபம் செய்ததா? இருந்தாலும் அது செய்த கார்யமே பெரிய தபஸாக ஆயிற்று. ஈசனை சரணடைவதைவிடப் பெரிய தபஸ் வேறு ஏது? ஈசன் அதற்கு ம்ருத்யுஞ்ஜய மந்த்ரோபதேசம் செய்து பலமுள்ளவைக்குள்ளும் பலமுள்ளதாக்கினார். ஈசன் அருளால் அது பக்ஷிக்கூட்டத்துக்கே அதிபதி ஆயிற்று. அதுமுதற்கொண்டு இப்போதும் மற்றவற்றைக் காட்டிலும் வலியன் பக்ஷிக்கு அதிகபலம் காணப்படுகிறது.

❀ 48-வது லீலை - நாரைக்கு முக்தியளித்தது. ❀

ஒரு நாரை, மீனைத் தின்பது பாவமென்றெண்ணி தன் ஜாதி வழக்கத்தை விட்டுவிட்டு மதுரை வந்து தினமும் பொற்றாமரையில் மூழ்கி, மீன்களைக் கண்ணாலும் பாராமல், தாமரைத் தண்டுகளால் வயிறு வளர்த்துக்கொண்டு எப்போதும் ஈசனை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தது. இப்படி த்ருடமான வ்ரதத்துடன் அது காலங்கழிக்கும்போது ஈசன் பொற்றாமரைக் குளத்தைத் தாமரையற்றதாகச் செய்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருகிலேயே புதுவெண்ணெய் போல் ம்ருதுவான துள்ளுகிற மீன்குட்டிகளைப் பார்த்து - பசியால் மனங்கலங்கி அந்த நாரை மாம்ஸம் சாப்பிடும் எண்ணத்துக்குச் சிறிது இடங்கொடுத்தது. தானே வாயில் துள்ளி விழுந்த மீன் குஞ்சை க்ரஹித்தபோது வ்ரதம் கெட்டுப்போகிறதென்பதை உணர்ந்தது. பகுத்தறிவுள்ள வர்களிடம் தீயஎண்ணம் நீடித்து நிற்குமா? உடனே மீன்குஞ்சை விட்டுவிட்டு, ஒரு க்ஷணம் வழி தவறியதற்காக வருந்தி விடற்கரிய உயிரையே விட எண்ணியது அந்நாரை. ஈசன் அதை ரக்ஷிப்பதற்காகப் பொற்றாமரையை முன்போல் தாமரை மலிந்ததாய்ச் செய்தார்; ஜலஜந்துகளற்றதாகவும் செய்தார்.

அந்த வலியன் பறவையும் அந்த நாரையும் சிவனருளால் பரமபதமடைந்தன.

ஸுகுணபாண்டியன் சிவனடி சேர்ந்தபின் முதலில் சிவன் தோற்றுவித்த அந்த வம்சத்தில் மேலும் மேலும் குணவான் களான நூற்றுக்கணக்கான அரசர்கள் நடுவில் பிளவு இன்றி ஒவ்வொரு யுகத்திலும் தொடர்ந்து தோன்றி ஈசனிடம் அன்பு செலுத்தி அரசாண்டு வந்தனர். பல யுகங்கள் முடிந்து ப்ரம்மாவின் பகல் முடிந்து ப்ரளயம் ஏற்பட்டது. நூறுவருஷ - மழையின்மை. எல்லாம் ஸூர்யர்களும் சேர்ந்து கொளுத்தினர். பனிச்சிகரங்கள் உருகிக் காய்ந்து மண் - கல் மாத்திரம் மிச்சப்பட்டு இமயம் ஒரு பிரம்புபோல் காணப்பட்டது. உள்ளே வடவாக்னி, வெளியில் ஸூர்யர்களின் கிரணங்கள். கொதிக்கும் ஜலத்தில் வெந்துபோன திமிங்கலங்களால் ஸமுத்திரங்கள் கஷாயமாயின. மரம் - புல்பூண்டு - புதர் பேச்சே கிடையாது. மேகத்தின் நினைவே கிடையாது. ஆதிசேஷன் முகங்களிலிருந்து விஷநெருப்பு கக்கிக் கொண்டு பயங்கரமான மூச்சுக்காற்றுகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு கிளம்பின. விஷத் தீ பட்டு உள்ளீரம் காய்ந்து வெடித்துச் சிதறிப் பொடிப் பொடியாகின மலைகள். அந்தப் பொடிகளையும் எல்லா திக்குகளிலும் அடித்துச் சென்றன காற்றுகள். காற்றால் அலைக்கப்படும் பெரும் தீபங்கள் போல் ப்ரளயக் காற்றுகளால் அடிக்கப்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸூர்யர்கள் விட்டுவிட்டுக் கொளுத்தினர். அம்ருதமின்றித் தேவர்கள் ப்ராணனை விட்டனர். பூமியிலிருந்து பாதாளத்திலும் யுகாந்த ஸூர்யர்களின் தாபம் வ்யாபித்துப் பெருங்காற்றுமடித்து நாகங்கள் ப்ராணனை விட்டன. பாதாளத்துக்கும் அடியில் லோகங்களைத் தாங்கும் கூர்மம் - வராஹம் - நாகங்களுக்கும் அடியில் எல்லாவற்றுக்கும் ஆதாரமாயிருக்கும். ஈசன் 'என்ன இது?' என்று மூன்றாவது கண்ணைச் சிறிது திறந்து மேல் நோக்கினார். அதிலிருந்து கிளம்பிய தீயால் பூலோகம் புவர்லோகம் ஸ்வர்லோகம் மூன்றும் எரிந்தன. ஸமுத்ரத்துள் காய்ந்திருந்த உப்புமலைகள் வெடித்து யந்த்ரத்திலிருந்து கிளம்பும் பெருங்கற்கள் போல ப்ரம்மாவின் ஸபையில் போய் வீழ்ந்தன. (மற்றதை எல்லாம் அழித்த) வாயுக்களும் ஸூர்யர்களும் சிவன் நெற்றிக்கண் நெருப்பால் சாம்பலாயினர். பலசாலிகளுக்கும் அதைவிட பலசாலியால் நாசமேற்படுகிறது; ஆனால் சற்று நேரங்கழித்து ஏற்படுகிறது. சிவநேத்ர நெருப்புஜ்வாலை மலை சிகரம் போல் பொறிகளுடன் தஹித்ததால் மஹர்லோகம் முதலியவற்றில் தாபமேற்படவே சிரஞ்ஜீவிகளான ஸநகாதிகள் ப்ரம்மலோகத்தை அடைந்தனர். அந்த ஸமயத்திலும் ஈசனின் ப்ரபாவத்தால் ஒரு மாறுதலுமின்றியிருந்த கதம்பவனத்தில் - மதுரையில், விசாலமான பொற்றாமரைக் குளக்கரையில் சிவனுடைய ப்ரமதகணங்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

பிறகு ஈசனின் ஜடா முடியிலிருந்து பெரும்மேகங்கள் கிளம்பி மழைகொட்டி மூவுலகத் தீயையும் அடக்கின. யானைக் குட்டிகளைப் போல படபடவென்று விழுகிற ஜலத்துளிகளை 'ஸிம்ஸிம்' என்று ப்ரளயத்தீ தனது ஜ்வாலைநாக்கால் பருகிற்று. தீ அணைந்ததால் ஏற்பட்ட புகைமண்டலம், மேகமாகியதுடன் சேர்ந்து நெருக்கமான மேகங்கள் மறுபடியும் வர்ஷித்தன. மிகமிக உயரம் கிளம்பின ஜ்வாலைகள் மழைவீழ்ச்சியால் உயரம் குறைவதை மதுரையில் தங்கின கணங்கள் பார்த்தனர். ப்ரளயாக்னி, ப்ரளய மேகம் இரண்டுமே கட்டுப்பாடற்றவை. இரண்டுமே சிவன் உடலிலிருந்து கிளம்பியவை. இருந்தும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேகம் அக்னியை ஜயித்தது. உலகை வாட்டுபவனுக்கு ஜயம் கிடைக்காது. இரவு வேளையை அனுபவிக்கிறவரான போதிலும் ப்ரம்மாவிற்கு பயங்கரமான இடி சப்தங்களால் மனம்கலங்கி விழித்திருக்க நேர்ந்தது. சந்த்ரன், ஸூர்யன், நக்ஷத்ரம், அக்னி, வாயு, காலம், திக்கு, சுபம், அசுபம் எதுவுமின்றி இருண்ட ஜகத்து, ஜலத்தில் மூழ்கிற்று. ப்ரளய ஜலத்தில் ஆலிலையில் படுத்துக் குழந்தையாய் விளையாடிக் கொண்டிருந்தார் விஷ்ணு.

ஸமந்ததோ ஜக³தி ஸமாவ்ரு¹தே (அ)ம்ப⁴ஸா - / ப்யமஜ்ஜதி
ப்ரியகவனே நிஜாஜ்ஞயா । ஸ பு³த்³பு³தே³ாத³ர இவ
ஸார்த⁴மம்ப³யா / ஸமங் க³ணைரபி விஜஹார சங்கர: ॥

சுற்றிலுமுள்ள ஜகத் முழுவதும் ஜலத்தால் சூழப்பட்டிருந்த அக்காலத்திலும் தனது கட்டளையால் மூழ்காமலிருந்த கதம்பவனத்தில் நீர்க்குமிழியின் உள்பாகத்தில் போல் சிவன் தேவியுடனும் கணங்களுடனும் விளையாடிக்கொண்டிருந்தார். ப்ரம்மா தூங்கும்போது உலகவார்த்தையேயில்லாத போது காலகலப்பனையில்லாதபோது ரிஷிகள் சிலர் வேதமூலமாக ஈசன் மதுரையிலிருப்பதை அறிந்து ஸ்தோத்ரம் செய்தனர். ஸுந்தரேசர் கோவிலானது வெளிப்புறத்தில் ஜலவெள்ளத்தாலும் உட்புறம் சிவனது ஜடாசந்த்ரனின் நிலவாலும் ஜடமாக்கப்பட்ட போது = மிக குளிர்ந்ததாக்கப்பட்டபோது ப்ரமத கணங்கள் ஸந்தோஷமாய்ச் சிரித்தனர். ஸுகமாய் நர்த்தனம் செய்தனர். வெகுகாலம் சென்றபிறகு ப்ரளய ராத்திரி காலம் முடிந்தபிறகு ஜலசாயி விஷ்ணுவின் உத்தரவுப்படி ப்ரம்மா இம்மூவுலகையும் முன்பிருந்தபடியே ப்ரயத்னப்பட்டு உண்டு பண்ணினார். முதலில் ஸூர்ய சந்த்ரர்களை ஸ்ருஷ்டித்து உலகு முழுவதையும் விழுங்கியிருந்த இருட்டை அகற்றி ஜல வெள்ளத்தை வற்றச்செய்து தேவலோகத்தை மறுபடியும் நிர்மாணித்தார். பூமியில் எப்படியோ ஸுந்தரேசர் ஆலயம் மட்டும் அழியாதிருப்பதை அறிந்த ப்ரம்மா, நதி, மலை, ஸமவெளி, ஸமுத்ரம் முதலியவற்றை எல்லாம் முன்போல் அமைத்தார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறகு தேவர்-மனுஷ்யர்-நாகர்களை ஸ்ருஷ்டித்து அவரவர் ஸ்தானத்தில் ஸ்திரமாயமர்த்தி அவரவருக்கு நன்கு பழகிய செயல்களில் அவரவரை ஈடுபடச்செய்து தூங்கியிருந்த உலகம் எழுந்தது போல் செய்தார்.

ॐ 49-வது லீலை - மதுரை எல்லை காட்டியது. ॐ

பிறகு பஹு காலங் கழிந்தபின், மஹேசனிடம் மனஸை அர்ப்பணித்தவனான 'வம்ச சேகரன்' என்ற அரசப் பெருந்தகை - தமிழினத்தவன், பாண்ட்ய தேசாதிபதியானான். ஜகத் ப்ரஸித்தமான மதுராபுரீ ஸ்தலம், ஸ்ரீ ஸுந்தரேசர் கோவில் மட்டும் மிச்சமுள்ளதாக அப்போது இருந்தது. வம்ச சேகரன் அந்த ஸ்தலத்தில் குடிமக்களுக்கு மனைகள் அமைத்துக்கொடுத்து அமர்த்தி, தானும் ஒரு இடத்தில் மனை அமைத்துக்கொண்டு, ப்ரதி தினம் ஸுந்தரேசர் பூஜை செய்து கொண்டு வாழ்ந்து வந்தான். ஈசன் அருளால் ராஜ்யலக்ஷ்மி பெருகினாள். முன்பு இருந்தது போல் மாடமாளிகை-உயர்ந்த ராஜ க்ருஹம் - மதில்சுவர் - கோபுரங்களுடன் மதுரையைச் சீரமைக்க நினைத்தான். முன்பிருந்த மதுரையின் விஸ்தாரத்தை அறியவிரும்பினான். அதற்காக ஸுந்தரேசரைப் ப்ரார்த்தித்தான்.

க்ருபாநிதி^{4}ஸ் தத^{3}னு சசாங்கசேக^{2}ர: / க்ரு^{1}தாத^{3}ர: க்ஷிதிப்^{4}ரு^{1}தி
வம்சசேக^{2}ரே । ப்ரத^{3}ர்சய ஸ்த^{2}லபரிமாணமித்யசாத்^{3} /
விபூ^{4}ஷணம் பு^{4}ஜக^{3}வரம் விநிக்ஷிபன் ॥

க்ருபாநிதியான பிறை சூடிப் பெருமான் வம்சசேகர அரசனிடம் ஆதரவுள்ளவராக, தன் ஆபரணமான ஆதிசேஷனைக் கீழே விட்டு 'மதுரை ஸ்தலத்தின் அளவைக்காட்டு' என உத்தரவிட்டார்.

சேஷனும் புஷ்பவனத்தில் வாலை நிலையாக நிறுத்தி ப்ரதக்ஷிணமாகச் சென்று பிறகு வால் நிறுத்தப்பட்ட இடத்துக்கு வந்து தலையால் வாலைத்தொட்டு அந்த வளயத்துக்குட்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ரதேசம் தான் மதுரை - தனது உடல் தான் மதுரையின் எல்லைக்கோடு எனக்காண்பித்தார். புஷ்பவனம், குஹாசலம், ஸர்ப்பாசலம், வ்ருஷாசலம் என்று நான்கு திக்கிலும் முறையே எல்லை காண்பித்துக் கோவிலைச் சுற்றி நாற்புரமும் இரு யோஜனை தூரம் மதுரையின் அளவு என்று காட்டி மறைந்தார். வம்ச சேகரனும் ஆதிசேஷன் உடல் காட்டியபடி ஆவரணம் அமைத்து அதற்குள் விஸ்தீர்ணமான கடைவீதிகள், மாடமாளிகைகளுடன் முன்பிருந்தபடியே மதுரையை உருவாக்கினான். ஹாலம் = விஷம். ஆஸ்யம் = வாய். ஹாலத்தை ஆஸ்யத்தில் கொண்ட சேஷன் காட்டியபடி எல்லை அமையப்பெற்றதால் ஹாலாஸ்யம் (ஆலவாய்) என்றே மதுரைக்குப் பெயர் வழங்கலாயிற்று.

உலகிலுள்ள விஷயங்களால் ஏற்படும் நிலையற்ற ஸுகத்தை அனுபவிப்பது போகம் எனப்படும்.

கைவல்யஸுகத்தை அளிப்பதால் கைவல்யபூமி என்று ப்ரஸித்திபெற்றிருந்தும், மதுரை, போக பூமி என்று நேர்மாறுதலான பெயருங் கொண்டிருந்தது. போகம் எனப்படும் பாம்பு-தேஹத்தால் சூழப்பட்டு எல்லைகாட்டப்பட்ட காரணத்தால் இப்பெயரும் ஏற்பட்டது.

ஐ 50-வது லீலை - சிவநாமம் பொறித்த பாணங்கள் இரைத்தது. ஐ

வம்சசேகரபாண்ட்யன், எதிரி படையெடுப்பானென்ற கவலையின்றியிருப்பதை அறிந்துகொண்டு ஒரு சமயம் விக்ரமன் என்கிற சோழ அரசன், அச்வபதி என்பவனைத் துணைக்கொண்டு ஸைன்யங்கள் சூழ பாண்டியனை எதிர்க்க வந்தான், எதிர்பாராது எதிரிஸைன்யம் சூழ்ந்து கொண்ட போதிலும் ஸ்ரீஸுந்தரேசரின் அனுமதிபெற்று, சிறிதும் பயமின்றி'ஜயம் நம்கையிலே தான்' என்ற நிச்சயத்துடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டியன் புறப்பட்டான். வில் வீரர்களுள் ஒருவனாக இருந்து கொண்டு ஸ்ரீஸுந்தரேசர், சிவநாமம் பொறிக்கப்பட்ட கூரிய பாணங்களை, எங்கிருந்து வருகின்றன என்று கண்டு பிடிக்க முடியாதவாறு விக்ரம சோழனின் ஸைன்யத்தில் வாரி இரைத்தார். இது வம்சசேகரபாண்டியனிடத்தில் ஈசன் செய்கிற அனுக்ரஹம் என்பதை எண்ணிப் பார்த்து, தொடர்ந்து யுத்தம் செய்யாமல் யானை, குதிரை எல்லாவற்றையும் விட்டுவிட்டு விக்ரம சோழன் ஓடிப்போய்விட்டான்.

ஒப்பற்ற பராக்ரமத்தால் அரசர்களையும் அம்ருதஸாரம் பொழியும் வாக்கினால் கவிகளையும் ஜயித்துக்கொண்டு, வம்சசேகரபாண்டியன் ஏழ்கடல் சூழ்பூமியை ஸுந்தரேசரிடம் அர்ப்பணம் செய்து இனிது ஆண்டுவந்தான்.

❀ 51-வது லீலை - ஸங்க[4]ப் பலகையளித்தது. ❀

தாம்ரபர்ணி நதிக்கரையில் கபிலர், கீரர் முதலிய 48 கவிகள் வஸித்து வந்தனர். ப்ரம்மாவின் சாபத்தால் வாக்தேவி ஸரஸ்வதியே இவர்கள் உருவில் அவதரித்திருந்தாள்.

ஒரு சமயம் தேவகுரு ப்ருஹஸ்பதியையும் வெல்லக்கூடிய கவியரசர்களான இவர்கள் ஸுந்தரேசரை வணங்குவதற்காக மதுரையை அடைந்தனர். கவிஉருவில் வந்து ஸுந்தரேசரே இவர்களை எதிர்கொண்டழைத்து ஸம்மானித்தார். கவிகள் பொற்றாமரையில் ஸ்னானம் செய்து மீனாக்ஷீஸுந்தரேசரை தர்சித்து சிறந்த பாமாலைகளால் துதித்தனர். காவ்யரஸம் சிறிது மறியாத போலிகளால் தங்களுக்கு ஏற்படும் துயரத்தைத் துடைக்கும்படி ஈசனிடம் வேண்டினர். ஸுந்தரேசர், மற்றவர் ஏறமுடியாத - கவிகள் மட்டும் அமரக்கூடிய ஒரு பலகையைக் கொடுத்து அனுக்ரஹித்தார். துர்புத்தியினர் தூரத்திலிருந்தும் காணமுடியாத அந்த அருட்பலகையில் அமர்ந்து கவிகள் 48 பேரும் ஈசனிடம் மிகுந்த பக்தி செலுத்தி வந்தனர். (காவ்யத்தை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விசேஷமாக வ்யஞ்ஜனாவ்ருத்தியை, மூடர்கள் தூஷிப்பது விசேஷமாய் வர்ணிக்கப்பட்டுள்ளது - எழுதப்படவில்லை)

❀ 52-வது லீலை - அர்ச்சகன் பொற்கிழி பெறச் செய்தது. ❀

வம்ச சேகர பாண்ட்யன், தனது மைந்தன் வம்சசூடாமணியிடம் உரியகலத்தில் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு சிவனடிசேர்ந்தான்.

ஸது கத[3]ாச[1]ன ச[1]ம்பககோரகை: / பரிச[1]ரன் ப்ரமத[2]ாதி[4]பதிம் மதெ[4]ள। அஜனி ச[1]ம்பக பாண்ட்[3]ய இதி ப்ரத[2]ா - / மபி[4]வஹன் கவிலோகசிக[2]ாமணி: ॥

சம்பக மொட்டுகளால் ஸுந்தரேசரை ஆராதித்துக் கொண்டிருந்ததால், அந்த வம்சசூடாமணி பாண்டியன் 'சம்பகபாண்டியன்' எனப் பெயர் பெற்ருன். கவிஜனசிகாமணியாய்த் திகழ்ந்தான். வஸந்தகாலத்தில் அவன் புதிதாக மணக்கப்பட்ட பட்டமஹிஷியுடன் பரிஹாஸப்பேச்சுடன் போகங்களை அனுபவித்தான். ச்ருங்காரரஸம் இங்கு விசேஷமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. 'வேத[3]ாப்[4]யாஸ ஜட[3]:' என்று காளிதாஸகவி ப்ரம்மாவை வர்ணித்தார். 'எவ்வளவோ லீலைகளை ஸ்ருஷ்டித்துவிட்டு ஒன்றுக்கும் நேரம் கிடைக்காதபடி இரவை மூன்றுயாமங்கள் மட்டுமுள்ளதாகச் செய்துவிட்டாரே! 'வேதாக்ஷரஜீர்ணகோச'ரான ப்ரம்மா துளியாவது ச்ருங்கார ரஸத்தை அறிவாரா ? அறியாமையால் தான் இப்படிச்செய்திருக்கிருர்' என்று இவர் வர்ணிக்கிருர். (ஸூர்யாஸ்தமனத்துக்குப்பின் அரையாமம், ஸூர்யோதயத்துக்கு முன் அரையாமம் பகலைச் சேர்ந்துவிடும். பகலுக்கு 5 யாமம், இரவுக்கு 3 யாமம் என்று, ஒரு தினம் (= 8 யாமங் கொண்டது) பிரிக்கப்படுவதால் இரவுக்கு த்ரியாமா (= 3 யாமங் கொண்டது) எனப்பெயர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு சமயம் சம்பக பாண்டியன், புஷ்பங்களில் காணப்படாத ஒப்பற்ற நறுமணம் தென்றல் காற்றில் கலந்து வருவதை நுகர்ந்து, 'இது தன்னுடைய பட்டமஹிஷியின் கேசங்களுடைய இயற்கையான நறுமணமாகத்தான் இருக்க வேண்டும். பத்மங்களின் நறுமணமொத்த நறுமணம் 'பத்மினீ' எனப்படும் உத்தமஜாதிஸ்த்ரீகளின் கேசங்களுக்கே இருக்க வேண்டும்' என்ற முடிவுக்கு வந்து, அது ஸரியான முடிவுதானு என்று பரீக்ஷிப்பதற்காக, அரண்மனை ஸபாத்வாரத்தில் 1000 பொற்காசுகள் கொண்ட ஒரு கிழியைக்கட்டித் தொங்கவிட்டு, 'என் மனஸில் உள்ளதைத் தெரிவிக்கும் கவிஞர் இப்பரிசைப் பெறுவார்.' என்று ப்ரகடனம் செய்தான். பெருங்கவிகள் பற்பலர் பற்பல விதமாக வர்ணித்தனர். அரசன் எண்ணத்தை அறிய எவராலும் இயலவில்லை. அப்போது ஒரு ஆதிசைவப்ரம்மசாரி - ஸ்ரீஸுந்தரேசார்ச்சகன் ஸபையில் வந்து மனோஹரமான ஒரு செய்யுளைப்படித்தான். அவன் ஸ்ரீஸுந்தரேசரை மிகவும் ஆராதித்து தனமற்றவனுன தனக்கு விவாஹம் செய்து கொள்வதற்கு வேண்டிய தனம் அருள வேண்டும் என்று ப்ரார்த்தித்திருந்தான். அரசரின் மனஸில் உள்ளதை அழகாக வெளிப்படுத்தும் இந்தச்செய்யுளைக் கொடுத்து 'இதன் மூலம் பொற்கிழியைப்பெற்றுக்கொள்' என்று ஸ்ரீஸுந்தரேசர் அவனுக்கு அருளியிருந்தார். ஒரு வண்டைப் பார்த்துக் கூறுவதாகச் செய்யுள் அமைந்திருந்தது

ஜானாஸி புஷ்பக^{3}ந்த^{4}ான் / ப்^{4}ரமர த்வம் ப்ரூஹிதத்த்வதோமே
த்^{3}ய। தே^{3}வ்யா: கேசகலாபே / துல்யோ க^{3}ந்தே^{4}ன கிங்க^{3}ந்த^{4} :॥

'ஏ வண்டே! பற்பல புஷ்பங்களின் நறுமணத்தை நீ அறிவாய். உண்மையைச்சொல், தேவியின் கேசங்களில் உள்ள நறுமணத்துக்கு ஒப்பான நறுமணம் எந்தப்புஷ்பத்திலுள்ளது?' என்று இருந்தது. ஸ்ரீஸுந்தரேசரே அருளிய இச் செய்யுளைக் கேட்டு அரசன் மிகவும் ஆச்சர்யமடைந்தான். அரசனின் அனுமதியின் பேரில் ப்ரம்மசாரி பொற்கிழியை எடுத்துக் கொள்ளும் போது கீரகவி அதைப் பொறுக்காமல் ஆக்ஷேபிக்கத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தொடங்கினுர். 'ரத்தத்தின் கழிவுப்பொருள்தான் கேசமாக மாறியுள்ளது. நறுமணமுள்ள புஷ்பங்களை வைத்து அலங்கரிக்காவிட்டால், கேசங்களில் நறுமணம் ஏது? அரசன் நினைத்ததோ, புத்திசாலியான நீ அதைக் கண்டுபிடித்துச் சொன்னதோ மிக அழகு' என்று பரிஹாஸம் செய்தார். அவரது துராக்ஷேபத்துக்குப் பதில் கூற இயலாமல் ப்ரம்மசாரி ஸ்தம்பித்து நின்ருன். அப்போது ஈசனே கவி உருவில் அங்கு தோன்றினுர். ''இந்த ஸபையில் என் சிஷ்யன் சொன்னதை எந்த புத்திகெட்டவன் ஆக்ஷேபிக்கிருன்? தேஹத்திலிருந்து பத்ம கந்தம் வருவது பத்மினீஸ்த்ரீகளின் இயற்கை. பூலோகப்புஷ்பம் அணியாத இந்த்ராணியின் கேசத்தில் நறுமணமிருக்கிறதே. 'மண்ணில்தான் கந்தமிருக்கும்; மண்தான் புஷ்பமாகிறது; புஷ்பமணியாவிட்டால் மணங்கிடையாது' என்ருல் இந்த்ராணி கேசம் எப்படி மணமுள்ளதாகும்? கௌரிதேவியின் கேசத்தின் நறுமணம் புஷ்பத்தாலா வந்தது ? கார்மணமலமான பார்த்திவ(= மண்ணின் பரிணுமமான) புஷ்பங்களில் கந்தம் இருக்கும்போது ரத்தமலமான பத்மினீகேசங்களில் கந்தம் ஏன் இருக்கக்கூடாது? புஷ்பங்களும் கேசங்களும் கழிவுப்பொருள்கள்தான். ரத்தத்தின் கழிவுப் பொருள் மட்டும் என்ன தவறு செய்தது ?'' என்று கர்ஜித்து கீரரை ஜயித்தார். ப்ரம்மசாரி பொற்கிழியைப் பெற்றுச் சென்றான். அரசனும் அரண்மனையடைந்தான்.

❀ 53-வது லீலை - கீரகவியைக் கரையேற்றியது. ❀

ஸ்ரீஸுந்தரேசர் ஸங்க கவிகளுக்குள் ஒருவராகத் தானும் ஸங்கப் பலகையிலமர்ந்து கொண்டு, தானும் அத்புதமான கவிதைகள் இயற்றிகொண்டு, ஸங்கப்புலவர்களால் தலைவனுக ஏற்றுகொள்ளப்பட்டார். ஒருமுறை அவர் கீரகவியுடன் கலஹம் புரிய நேர்ந்தது. வீண் பிடிவாதத்தால் கீரகவி தொடந்து துராக்ஷேபம் செய்து கொண்டேயிருந்தபொது ஈசன், ஐந்து முகம் ஒவ்வொன்றிலும் மூன்றுகண் கொண்ட தனதுஉண்மை உருவைக் காட்டினுர். அந்த அத்புதத்தைப் பார்த்தபிறகும், சிவனிடம் பக்தியுடையவராயிருந்தபோதிலும். அந்த ஸமயத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அஞ்ஞானம் மேலிட்டதால் கீரகவி துராக்ஷேபத்தை நிறுத்த வில்லை. ஏதுமறியாத பாமரர்களிடம் இருக்கும் மூடத்தனத்தை விட, சிதாபாஸர்களிடம் (= அறிஞர்போல் தோன்றுபவரிடம்) இருக்கும் மூடத்தனத்துக்கு வலிமை அதிகம். கீரன், 'நீர் மிகக் கெட்டிக்காரராயிருந்தும் ஐந்து முகமுள்ளவரானதால் நாலுதிக்கிலும் ஒரேஸமயத்தில் பார்க்கும் திறன் பெற்றிருந்தும், உமது கவிதையில் பல முறை நான் எடுத்துக்கூறிய குற்றத்தை உம்மால் எப்படி காண இயலாமற்போயிற்று? ச்ருதி, ச்ருதி (=வேதம், வேதம்) என்று ப்ரஸித்தி அடைவிக்கப்பட்ட உமது க்ரு^{1}திகள் எளிதில் பொருந்துபவைகளாக இல்லை. எம்போன்றவர்கள் அவற்றை அத்^{4}யாஹாரம் (= இல்லாத பதத்தைச்சேர்த்தல்), மாற்றல், ப்ரகரணோத்கர்ஷம் (=வேறு ப்ரகரணத்துக்கு இழுத்துசெல்லல்), அனுஷங்கம் (= ஓரிடத்தில் சொன்ன பதத்தை வேறு இடத்திலும் சேர்த்துக்கொள்வது) முதலியவற்ருலும், வேறுகருத்து வர்ணிப்பது மூலமாகவும் பொருந்தச் செய்ய வேண்டியுள்ளது. அதை நன்கு அறிந்து கொள்ளும். எங்களுடைய கவிதைகளில் குற்றங்காண முற்படாதீர். நீர் ஈசன்தான். ஸர்வவித்யைகளுக்கும் ஈசானன் தான் (=அதிபதிதான்). ஆனுலும் கீரன் ஆக்ஷேபித் தாலோ, கீரம் (= கிளி) போல அதை அப்படியே சொல்வது தான் நலம். ('இது தப்பு' என்று கீரன் சொன்னுல், 'இது தப்பு' என்று அப்படியே சொல்ல வேண்டியதுதான். தப்பல்ல, ஸரி தான் என்று உறுதிப்படுத்தமுடியாது)'' என்று சொன்னார்.

ஜ்ஞானாஜ்ஞான - வ்யதிகர - பரீணாம மீசோ(அ)ஸ்ய பச்யன் /
ப^{4}க்தாஜ்ஞானப்ரசமமக்ரு^{1}தஞ் சி^{1}ந்தயித்வா ஸ்வமாக^{3}: ।
காலேனாஸ்ய ஸ்ம்ரு^{1}திகலுஷதாமுத்^{3}தி^{3}தீ^{4}ர்ஷுஸ் திரோபூ^{4}-/
தே^{3}தாவந்தோ யதி^{3}ஹி ந கு^{3}ணா: கச்^{5} ச^{1} நச்^{5} ச^{1}ந்த்^{3}ரகு^{1} ட^{3} :॥

ஈசன் ஆலோசித்தார். 'ஞானமும் அஞ்ஞானமும் கலந்திருப்பதால் வந்தவிளைவு இது. பக்தனுடைய அஞ்ஞானத்தை அகற்ருமல் வைத்திருந்தது நமது குற்றந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காலப் போக்கில் இவனது புத்தியிலுள்ள அழுக்கைக் களைவோம் ' என்று உடனே மறைந்துவிட்டார். இவ்வளவு தயாளு குணங்கள் இல்லையென்றால் நாம் ஈசனை உபாஸிப்போமா. நாம் யாரோ, அவர் யாரோ என்றுதானிருப்போம்.

சிவனை எதிர்த்து வாதாடிய பாபத்தால் தாங்கமுடியாத தாபமடைந்து கீரன் பொற்றாமரைக்குளத்து ஜலத்தில் வீழ்ந்தார் - வேறுவழியில் தீர்க்க இயலாததைத் தீர்த்து வைப்பது அது தான் என்பதை அறிந்தவர் அவர். ஒரு முறை வணங்கியவர்க்கும் நித்தியம் கடளுளியாயிருக்கிற கதம்பவனஸுந்தரேசரின் கருணையால், கீர கவி, செய்த குற்றத்துக்கு வருந்தி அவரை ஸ்துதித்தார். ஈசன், வேதங்கள் - ஆகமங்கள் எல்லாமியற்றிய வராயிருந்தும் கீரனுடைய சிற்றறிவுக்கேற்ற ஸ்துதியையும் மகிழ்ந்து ஏற்றார். பொற்றாமரை ஜலத்திலிருந்து கீரனைக் கைகொடுத்துத் தூக்கினார். பிறவிக்கடலிலிருந்தே அவர் கரையேற்றப்பட்டார் என்று முனிவர்கள் எண்ணினார்கள்.

❀ 54-வது லீலை - தமிழ் ஸூத்ரம் போதித்தது. ❀

கவிதை விஷயத்தில் கீரனுக்கிருந்த அஞ்ஞானத்தை ஸுந்தரேசர் அகஸ்த்யர் மூலம் போக்கினார். த்ரவிட ஸூத்ரரஹஸ்ய ஸாரத்தை இவருக்கு அகஸ்த்யரைக் கொண்டு போதித்து இவர் மூலம் மற்ற கவிகள் அறியச்செய்து இவரது புகழைப்பரப்பினார். பக் (6-7) காண்க.

❀ 55-வது லீலை - உரைகளில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கச் செய்தது. ❀

த்ராவிடாகமத்தைக் கீரகவி வாயிலாகத் தெரிந்து கொண்டு மற்ற ஸங்கப்புலவர்கள் அதற்குத் தனித்தனியாக உரை எழுதிப் போட்டியிட்டனர். யாருடைய உரை உயர்ந்தது. யாருடையது நடுத்தரமானது என்று ஸந்தேஹங்கொண்டு ஸர்வக்ஞரான ஸுந்தரேசரைப் ப்ரார்த்தித்தே முடிவு காண்போம் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எல்லாரும் ஈசனை வணங்கி அவனருளை எதிர்பார்த்து நின்றனர். லிங்கத்திலிருந்து வெளித்தோன்றி ஈசன் 'ஸ்கந்தாம்சமாய்ப் பிறந்தவன் - ருத்ரன் என்னும் வைச்யன் எனது சாபத்தால் ஊமையாயிருக்கிறான். எந்த உரையைக் கேட்கும்போது அவனுக்கு ஆனந்த பாஷ்பமும் மயிர்க்கூச்சலு மெழுகிறதோ அந்த உரை ஏற்கத்தக்கது' என்று கூறினார்.

தத^{3}னு தமுபக^{3}ம்ய ச்ராவயந்த: ஸ்வஸூக்தீ: / ப்ரு^{1}த^{2}கு^{3}பசி^{1}த ப^3ாஷ்பா: கண்டகோத்^{3}பே^{4}த^{3}ரம்யா: । கபிலப^{4}ரணகீரை: கல்ப்பிதா ஏவ வ்ரு^{1}த்தீ: / பரிஜக்^{3}ரு^{1}ஹூரத^2ான்யாஸ் தத்யஜூர் தூ^{3}ரதஸ் தே ॥

கருத்து - பரீக்ஷையில் கபில-பரண-கீர-உரைகள் ஏற்கப்பட்டு, மற்றவை தூர ஒதுக்கப்பட்டன.

❀ 56-வது லீலை - ஸங்கப் புலவருக்குப் பரிந்தது. ❀

சம்பகபாண்டியனுக்குப் பிறகு அவன் வம்சத்தில் கவிகளுக்கும் அரசர்களுக்கும் அரசனான 'குலேசன்' என்பவன் மதுரையை ஆண்டுவந்தான். ஒரு ஸமயம் அவன் ஸங்கப்புலவர்களுள் ஒருவரின் கவிதையை அவமதித்தான். பக்தர்களிடம் தயைபொழியும் ஸுந்தரேசருக்கு மிக்க கோபம் வந்தது. கதம்ப மரத்தடியை விட்டுவிட்டுக் கவிகளுடன் கூட வைகையின் அக்கரையில் உத்தரஹாலாஸ்யம் என்ற ஸ்தலத்துக்குச் சென்று விட்டார்.

க்ஷிதிபதிரதே^{2}சானஞ் ஜானன் ருஷா பரிநிர்க^{3}தம் / கவிகுலமசேஷந் தத் ஸந்தர்ப்பயன் ப^{3}ஹுபி^{4}ர் த^{4}னை: । அபி^{4} நவஸூத^4ாத^4ாராஸாராஸ்பதை^{3}ர் வச^{1}னைஸ் ஸ்துவன் / நக^{3}ரமநயத்^{3} பூ^{4}ய: ச்ரேயஸ்கரம் ஜக^{3}தாம் ஹரம் ॥

ஈசன், கோபத்தால் வெளிச் சென்றுவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டு குலேசபாண்டியன் நிறைய தனமளித்து புலவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குழாத்தை மகிழ்வித்து லோக நன்மை பயக்கும் ஈசனை அம்ருதம் பொழியும் வாக்குகளால் ஸ்துதித்து மறுபடியும் மதுரைக்கு அழைத்து வந்தான்.

※ 57-வது லீலை - மீன் பிடித்து நந்தி சாபம் நீக்கி, மீனவப் பெண்ணாயிருந்த பார்வதியை மணந்தது. ※

பிறிதொரு ஸமயம் ஏதோ ஒரு காரணத்தால் மீனவர் குலத்திலுதித்த தேவியை மணப்பதற்காக ஈசன் தெற்கு ஸமுத்ரக்கரையை அடைந்தார். தேவியைப் பெற்ற செம்படவனிடம் தானும் ஒரு செம்படவனாகச் சென்று, தனது மீன்பிடிக்கும் திறமையை விரித்துக்கூறித், தனக்குப் பெண்ணைத் தரும்படி கேட்டார்.

அத்3ரு1ஷ்டச1ரமத்3பு4தம் வபுரமுஷ்ய பச்யன்னபி /
ப்ரப4ாவமவத4ாரயன்னபி தத: ஸ்பு2டந்தீ4வர: ।
பரீக்ஷிதுமமும் புனர் ஜலதி4க3ர்ப4ஸஞ்ச1ாரிணம் /
மயா ஸமுபத3ர்சிதம் மகரமாஹரேத்யாதி3சத் ॥

பார்த்தறியாத அத்புதமான இவரது தேஹத்தைப் பார்த்த பிறகும், மஹிமையை நிச்சயத்துக் கொண்டபிறகும் அந்த மீனவன் பரீக்ஷைக்காக, 'ஸமுத்ர நடுவில் ஸஞ்சரிக்கிறதான - நான் காட்டுகிற இந்த மீனைப் பிடித்துக்கொடு' என்று. சொன்னான்.

தன்னுடைய சாபத்தால் மீன்ரூபமாகி ஸமுத்ரத்தில் விளையாடிக் கொண்டிருக்கிற நந்திகேச்வரரை ஈசன் களிப்புடன் நோக்கினார்.

மஹாமாயாஜாலம் மஹத3பி நிஜம் ஸ்வப்ரபத3னதோ /
விஜித்ய ஸ்வச்1ச2ந்த3ம் பயஸி விஹரந்தம் ஜலநிதே4: ।
க்3ரஹீதும் சைலாதி3ம் கில கருணயா வாகு3ரிகயா /
விசாலஞ் சி1க்ஷேப த்ரிபுரமத2னோ ஜாலமுத3தெ4ள ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தன்னை சரணடைந்ததால் தனது பெரிய மஹாமாயை வலையையே ஜயித்து, இஷ்டப்படி ஸமுத்ரஜலத்தில் விளையாடிக்கொண்டிருக்கிற நந்தியைக் கருணைவலையால் பிடிப்பதற்காக அகலமான வலையை ஈசன் ஸமுத்ரத்தில் வீசினார். நந்தியினுடைய பக்திவலையில் கட்டுண்ட ஈசன், கருணைவலையை வீசி அவரை ஸமுத்ரத்திலிருந்து இழுத்தார்.

பெண்ணாசையால் ஈசன், மீன்பிடிக்கும் செயலில்கூட ஈடுபட்டார் என்பதைப் பார்த்து அப்போதிருந்துதான் மன்மதன், தன்னுடைய விஜயத்வஜமாக மீனை வைத்துக்கொண்டான். (உத்ப்ரேக்ஷை = தற்குறிப்பேற்றம்). பக் (10) காண்க.

நந்திகேசர், வேதங்களைத் தேடிக்கண்டுபிடித்துப் பழகிய மீனின் உருவை எடுத்து, வேதங்களால் தேடப்படும் பரம் பொருளைக் கண்டார். சாபம் நீங்கி இயற்கையான ரூபமடைந்த நந்தியால் பாதஸேவை செய்யப்பட்ட ஈசன் செம்படவப் பெண்ணை மணந்தார்.

ஸமுத்ஸ்ரு[1]ஜன் ஸ மத்ஸ்யதாம் நநந்த[3] நந்தி[3]கேச்வர: /
ஸ தீ[4]வரச்[5]ச[1] பூ[4]தலே ஸுதீ[4]வரத்வமாக[3]த: ।
விமான - மாக[3]மய்ய தாம் ஸமாக[3]தே புரம் சிவே /
தத[3]ா தத[3]ாசயே முத[3]ந் த[3]த[3]ாச த[3]ாசகன்யகா ॥

அந்த நந்தியும் மீன்ரூபத்தை விட்டு மகிழ்ந்தார். அந்த செம்படவனும் உலகில் அறிவாளிகளில் சிறந்தவனான். அவளை விமானத்திலேற்றி சிவன் தன் புரத்தை அடைந்தபோது மீனவப்பெண் அவர் மனஸில் ஆனந்தத்தை அளித்தாள்.

❀ 58-வது லீலை - வாதபுரீசருக்கு தீக்ஷையளித்தது. ❀

தன் குலதைவமான ஸுந்தரேசரை ஆராதித்துவந்த குலேசனுக்கு 'அரிமர்தனன்' என்ற புத்ரன் உண்டானான். தந்தைக்குப் பிறகு அவன் தன் பெயருக்கேற்ப சத்ருக்களை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழித்து, பூமியை நன்கு ஆண்டுவந்தான். (அரி = சத்ரு. மர்தன: = நசுக்குபவன், அரைப்பவன்.)

ஸர்வ சாஸ்த்ரங்களுமறிந்தவர் - மேதாவீ - வாதபுரீசர் எனப் பெயர் கொண்ட ஒரு அந்தணர், இந்த்ரனது ஸபையில் ப்ருஹஸ்பதி விளங்குவது போல், அந்த அரிமர்தன பாண்டியனின் ஆஸ்தானத்தை அழகுபடுத்தும் மணியாக - அவனுடைய மந்த்ரியாக இருந்தார். உயர்ந்த குதிரைகள் வாங்கி வருவதற்காக நிறைய தனத்துடன் அவரை அரசன் சோழதேச ஸமுத்ரக் கரைக்கு அனுப்பினான். அரசனிடம் விடைபெற்றுக் கிளம்பி அவர் - இரண்டு மூன்று தினங்களில் சோழ தேசத்தைக் கண்டார்.

சோழதேச வர்ணனை

வேறு தேசத்தைக் கொண்டாட ஆரம்பிப்போரும், அந்த தேசம் சோழ தேசத்தைப்போல் பெருமைமிக்கது என்று உபமானமாகச் சோழ தேசத்தைத் தான் சொல்லி அத் தேசத்தைப் புகழ்வர்.

மக்களுக்கு மழைக் காலத்தில் ஜலத்தைக் கண்டால் அவமதிப்பு, சரத்காலத்தில் அநாதரவு. ஹேமந்தசிசிரருதுக்களில் த்வேஷம். வஸந்தருதுவிலும் க்ரீஷ்மருதுவிலும்தான் ஜலத்தில் விருப்பம். சோழ தேசத்தில் அப்போதுதான் நதிகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

மேற்கு திக்கில் ஒரே மழை நெருக்கடி. வடதிசையில் உடைப்பெடுக்குந் தொல்லை. சோழ தேசத்தில்தான் கெடுதல் எதுவுமின்றி இஷ்டப்படி உபயோகிக்க உதவுகிறதான உயர்ந்த காவேரிநதி ஓடுகிறது. சோழ தேசத்தின் ஸௌபாக்யத்துக்கு வேறு என்ன வேண்டும்.

(உரியவேளை ஒவ்வொன்றிலும் தவறாது அங்கு யாகங்கள் செய்யப்படுவதால்) ஹவிர்பாகம் பெற்றுக்கொள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வந்துகொண்டேயிருக்கும் தேவர்களுக்கு, வரும் வழியிலுள்ளவர்களான கந்தர்வர், வித்யாதரர், கின்னரர் முதலியவர்கள் ஓயாது அதிதிஸத்காரம் (விருந்தோம்பல்) செய்ய வேண்டியிருக்கிறது. 'வழியில் வஸிப்பதால் தானே, இப்படிக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது' என்று வழிவாஸத்தை அவர்கள் நிந்திக்கிறார்கள்.

அங்கு தமிழர்கள், பிறப்பாலேயே சாஸ்த்ரங்களைக் கற்பதிலும், கற்பிப்பதிலும், த்ரவ்யம் சேர்ப்பதிலும், சேர்த்ததை அனுபவிப்பதிலும், ஸ்வர்க - மோக்ஷங்களை வசப்படுத்தவும் தேர்ந்தவர்களென்று ப்ரஸித்தமானவர்கள்.

அங்கு காவேரியே மிக இனிமையானவள். அங்கு மலிந்துள்ள இளநீர் இன்னும் இனிமையானது. அங்குள்ள கவிகளின் தெளிவான - ஆழ்ந்த கருத்துள்ள பதங்கள் கோர்க்கப் பட்ட கவிதாவிலாஸங்கள் இன்னும் இனிமையானவை.

அங்கு வாழை - பலா - மா - தென்னைகளின் நிழல் சூழ்ந்திருப்பதால் ஸூர்யனைப் பார்க்க இயலாது. மலர்ந்த தாமரைகளின் நறுமணக்காற்று வீசுவதன் மூலம் ஸூர்யன் உதித்திருக்க வேண்டும் என்று ஊஹிக்க முடியும்.

பாக்கு - மா - தென்னை - நெல் - கரும்பு - வாழை - வெற்றிலைகளில் எத்தனை ஜாதிகள் உள்ளன என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, வழிப்போக்கர்கள் அங்கு தங்கித் தங்கித்தான் செல்வார்கள்.

மற்ற தேசத்தினர், ஆயுதந்தாங்கி, கடல் கடந்து, தபஸ்ஸையெல்லாம் விற்றுப் பிழைக்கும்படி நேர்ந்துள்ள கலிகாலத்திலும் அங்குள்ளவர் இடைவிடாது யாகம் செய்கிறார்கள். அத்யயனமும் (=வேதசாஸ்த்ரங்கற்றலும்) செய்கிறார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்கு சிறு வாய்க்கால் மற்ற இடத்தில் நதி. இங்கு உபயோகமற்றவர்கள் மற்ற இடத்தில் தன்யர்கள் (= மிக்க பாக்யசாலிகள்). இங்கு சிறிது படித்தவர் போலுள்ளவர் மற்ற இடத்தில் வித்யாசார்யர்கள்.

இப்பேர்பட்ட சோழதேசத்தில் ஸஞ்சரித்துக் கொண்டு சிலநாட்களில் வாதபுரீச்வரர், ஸமுத்ரத்துக்கு மேற்கே ஒருயோஜனை தூரத்தில் மாங்காடு - வாழைத் தோப்பு அடர்ந்த ஒரு சிவக்ஷேத்ரத்தைக் கண்டார். அங்கு வல்மிக நாதர் - ஸ்வயம்புலிங்கம். பல மஹர்ஷிகள் அங்கு ஈசனை வழிபடுகிறார்கள். பாக்யவசத்தால் வாதபுரீச்வரருக்கு அங்கு மாயைக்கு அப்பாற்பட்டதான ஒரு ஆத்மசுத்தி ஏற்பட்டது. அவர் அங்கு கருணையே உருவான ஆசார்யரூபந்தாங்கி மதுரமான வாக்கால் நூற்றுக்கணக்கான மஹர்ஷிகளுக்கு உபதேசித்துக்கொண்டிருக்கிற ஈசனை நேரில் பார்த்தார், தூரத்திலிருந்து ஸாஷ்டாங்கமாய் வணங்கினார். ஈசன், தயையால் குளிர்ந்த பார்வையால் அவரை அனுக்ரஹித்து அருகில் அழைத்தார். தானே நைஷ்டிக தீக்ஷை கொடுத்து அனுக்ரஹித்தார். உடனே வாதபுரீசர் பாசங்கள் அறுபட்டு, மாஹேச்வர - ஆச்ரமம் மேற்கொண்டார். குதிரைக்காகக் கொண்டுவந்த த்ரவ்யங்களால் மஹேசனை ஆராதித்தார். மண்ணாலான லிங்கத்தைக் காப்பாற்றினார்.

❀ 59-வது லீலை - நரியைப் பரியாக்கியது. ❀

கோழ்ச் சொல்லிகளால் கோபமூட்டப்பட்ட பாண்டியன் அவரைத், தூதனை அனுப்பி அழைத்தான். சிவனுடைய உத்தரவுப்படி அவர், குதிரைகளுடனேயே திரும்பி வருவதாய்ச் சொல்லி தூதனை அனுப்பிவிட்டார்.

'எண்ணற்ற குதிரைகளை நான் கொண்டுவருகிறேன். கவலையின்றி நீ அரசனிடம் செல்'. என்று ஈசன் அழுத்தமாகச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொன்னார். அதைநம்பி வாதவூரரும் மறுபடியும் மதுரையை அடைந்தார். 'விலைமதிப்பற்ற குதிரைகள் அருகில் வந்துவிட்டன' என்று அரிமர்தனனிடம் சொல்லிவிட்டு எல்லா விஷயத்தையும் ஸுந்தரேசனிடமும் தெரிவித்தார்.

மறுநாள் பகல் முடியும்வரை குதிரைகள் வரும் வழியையே பார்த்துக் கொண்டிருந்து, வராததால் பாண்டியன் கோபமடைந்தான். இதுதான் ஸமயம் என்று மந்திரிக்கு வேண்டாத ராஜஸேவகர்கள் - கொடியமனத்தவர் - அரசனின் அனுமதி பெற்று அவரைப் பலவாறு பீடித்தனர். தீரராயிருந்த போதிலும் தைர்யத்தைவிட்டு அவர் ஈசனை நோக்கி தீனமாகப் புலம்பினார்.

''இப்போது நான் இப்படிக் கஷ்டப்படும்போது, நீர் ப்ரம்மா - விஷ்ணு முதலியவருடன் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறீரா? அல்லது உமாதேவியின் லீலாவிலாஸங்களை ரஸித்துக்கொண்டு காலங்கழிக்கிறீரா? என்னைப் போல கதியற்றவர் எத்தனைபேர் கதறுகிறார்கள்? யாருடைய வருத்தக் குரல் உமது காதில் நுழையட்டும்? விலக்க முடியாதவையான மல - கர்ம - மாயா பந்தங்கள் மூன்றாலும் கட்டுண்டு வருந்துபவனான என்னுடைய பந்தங்களைப் போக்குவீர் என்று நம்பியிருந்த எனக்கு நாலாவது பந்தத்தையும் கொடுத்துவிட்டீர்களே. 'எல்லாவற்றிற்கும் கர்மாதான் காரணம்; காலம் தான் காரணம்' என்று கூறுவோரெல்லாம் கிடக்கட்டும். அவர்களால் நமக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை என்று மூவுலகையும் புல்லைப்போல் நினைத்து உம்மையே சரணமடைந்தவனுக்கும் இப்பேர்ப்பட்ட தசை வருகிறதென்றால், இதிலிருந்து உமக்கு புகழ் வருகிறதா இகழ் வருகிறதா என்று அறிகிறீரா? அரசனிடமிருந்தோ அரசனுடைய ஆட்களிடமிருந்தோ நான் பயப்படவில்லை. எனக்கு மரணம் நேரும்படி செய்வதற்கு மேல் அவர்கள் என்ன செய்யமுடியும்? இப்போது இருப்பதுபோல் நான் யமன்வசப்பட்டுத் தவிக்கும்போதும் நீர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உபேக்ஷயாக (= அதைப் பொருட்படுத்தாமல் = என்னைக் காப்பதில் கருத்தில்லாமல்) இருந்து விடப்போகிறீரோ என்னவோ, அப்போது என்ன செய்வது என்றுதான் என் மனம் வருந்துகிறது. பிறைசூடிப் பெருமானே! ஒன்றையே பிடிப்பாகக் கொள்ளவேண்டும். என்கிற நீதியைப் பொருட்படுத்தாமல் உமது இரு சரணங்களையும் அண்டிவிட்டேன். ஆகையால்தான் 'அந்தச் சரணம் காப்பாற்றட்டும்' என்று இந்தச் சரணம் நினைக்க, 'இதுதான் காக்கட்டுமே' என்று அது நினைக்க - இப்படி இரு சரணங்களும் ஒன்று, மற்றொன்றின் மேல் காக்கும் பொறுப்பைச் சுமத்துவதின் மூலம், இரண்டுமே காக்காமல் வாளாவிருக்கின்றனவோ என்னவோ? தாஸனாயிருப்பவன் தன் தலைவனை மகிழச் செய்ய வேண்டும். உமது தாஸன் நான், உம்மை, ஞானம் - யோகம் இவைகளின் திறனால், அல்லது தபஸ்கள்-கர்மாக்களால் மனங்களிக்கச் செய்யட்டுமா? அல்லது (இவையெல்லாம் செய்தற்கரியவையாயிருப்பதால்) எளிதாக, விழுந்து - புரண்டு கதறி - இப்படி ஒரு தீனனைக் காண்பிப்பது மூலம் உமக்கு வினோதங் காட்டி உமது மனஸை மகிழச் செய்து தாஸனின் கடமையைச் செய்தவனாகட்டுமா? 'யாராலுங் கடக்க முடியாத ப்ராரப்த கர்மா (=ஊழ்வினை) அதன் பலனை அளித்துக் கொண்டிருக்கும்போது ஈச்வர சரணபக்தி என்ன செய்யமுடியும்?' என்று புத்திகெட்டவர் தீர்மானிக்கின்றனர். உம்மைப் பற்றி யாராவது நிந்தித்தால் அது எப்படிக் கர்ணகடோராமாக - காது கொடுத்துக்கேட்க முடியாததாக இருக்குமோ அப்படித்தான் இந்த புத்திகெட்டோரின் தீர்மானமும் இருக்கிறது. என்னைக் காப்பதற்காக அவதாரம் செய்ய வேண்டுமென்றால் 'அது நான் கற்றுக்கொள்ளாத விஷயம்' என்று சொல்லலாம். அல்லது பிறருடன் கைக்குக்கைச் சண்டை போட்டுதான் என்னைக் காக்கவேண்டுமா? 'இவனைக் காப்பாற்ற வேண்டும்' என்று எண்ணினாலே போதும். அது கூட நீர் செய்யவில்லை என்றால், காப்பாற்றும் எண்ணமே உமக்கு வராதபடி என்னுடைய எல்லையற்ற பாபங்கள் தடுக்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவைகளுக்குத் தான் ஜயம், என்றாகிறது. எனக்கு பக்தி த்ருடமாக (= வலுவுள்ளதாக) இருந்தால் இப்படி நேருமா? உண்மையை யாரறிவர்? அது உள்ளே இருக்கிறது. ஆனாலும் உலகத்தோர் என்னை 'பக்தன்' என்றெண்ணுகிறார்கள். 'பக்தனுக்குக் கட்டுப்பட்டவர்' என்று உம்மை அவர்கள் புரிந்து கொள்ளும்படி தயைபுரிவீராக. குற்றம் புரிந்தவனிடம் யார்தான் தன் பராக்ரமத்தைக் காட்டமாட்டார்கள்? கையில் தடி கொண்டு அடிக்கச் சென்றால் மாடுகூடத்தான் கொம்பால் முட்டுகிறது. (ஆகையால் அரசன் தண்டிப்பதில் தவறில்லை.) ஆனாலும் தன் பக்தனுக்கு ஆபத்து வந்தால் பொறுப்பதில்லை என்பதால்தான் நீர் ஈச்வரனாயிருக்கிறீர். அந்த ஈச்வரத்தன்மையை வலுப்படுத்தி கொண்டால் வலுப்படுத்திக் கொள்ளும். அல்லது அழித்துவிடும். இரண்டுக்கும் இதுதான் ஸமயம்.

ஹே சந்த்ரசூடப்பெருமானே! அறியாத மூடன் நான் கெட்டிக்காரன்போல உமது சரணங்களில் ஏதோ பிதற்றி விட்டேன். அதைப் பொறுத்தருள வேண்டும். சொல்வதற்கு எனக்கு உரிமை ஏது? உடையவன் உடைமையைக் கவனித்தாலும் ஸரி அசட்டை செய்தாலும் ஸரி. உடைமைப் பொருளுக்கு எதுவும் சொல்ல உரிமையில்லை'' இவ்வாறெல்லாம் மந்திரி வாதபுரீச்வரர் புலம்பினார்.

கருணாநிதியான ஈசன் கேட்டார். உடனே லக்ஷம் குதிரைகள் கிளப்பும் மண் புழுதிகள் படிய, குதிரை ஏறிவரும் குதிரைக் காஸாரியாகக் காட்சியளித்தார். பக்தனுக்கு இரங்கி, சிவன் குதிரைக் காஸாரியான போது சிவை பஹுவிதமாகக் குதிரையாக ஆனாள். சிவை = பார்வதி. இங்கு வேண்டிய பொருள். சிவை = பெண்நரி. (நரிகளே குதிரைகளாயின என்று நயம்படக் கூறப்பட்டுள்ளது).

குமுத^{3} - கஜ்ஜல குங்கும-த^{3}ாடி^{3}மீ - / குஸுமஹேம-குவேல-
ஸமத்விஷ: । பருஷ-ஹேஷித-பீ^{4}ஷித சாத்ரவா / த^{3}த்^{3}ரு^{1}சிரே
தி^{3}சி தி^{3}ச்யபி ஸைந்த^{4}வா: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குமுதப் புஷ்பம், கண்மை, குங்குமப் பூ, மாதுளம் பூ, தங்கம், தாமரை இவற்றையொத்த காந்தியுடையவைகளும் காதைத் துளைக்கும் கனைப்புகளால் சத்ருக்களைப் பயமுறுத்து பவையுமான குதிரைகள் ஒவ்வொரு திக்கிலும் காணப்பட்டன.

யதி^{3} மருத்^{3} விஜிதோ விஜிதம் மனோ / யதி^{3} மனோ விஜிதம்
விஜிதஞ் ஜக^{3}த் । ஜிதவதாம் மருதஞ்ச^{1} தத^{3}ர்வதாம் /
கிமபி^{4}தே^{4}யமதஸ் த்ரிஜக^{3}ஜ்ஜயே ॥

காற்றை (= மூச்சுக் காற்றை = ப்ராணனை) ஜயித்தாய்விட்டால் மனஸை ஜயித்தாய்விட்டது. மனஸை ஜயித்தாய்விட்டால் மூவுலகையும் ஜயித்தாய் விட்டது என்று சாஸ்த்ரங் கூறுகிறது. அந்தக் குதிரைகளோ காற்றை ஜயித்தவை (= காற்றைவிட வேகமாகச் செல்பவை.) ஆகையால் அவை மூவுலகையும் ஜயிக்குமெனக் கூறவும் வேண்டுமா?

உத^{3}ாத்தேஷ்வாரோஹன் ப்ரஸப^{4} மனுத^{3}ாத்தேஷ்வவதரன் /
சனை: க்ராமன்னேவ ஸ்வரிதபத^{3}மேகச்ருதிமபி ।
ஸமுத்^{3}யன்மீமாம்ஸாத்^{3}வயநய க^{2}லீனைகவித்^{4}ரு^{1} த: /
புர: ப்ராது^{3}ர்பூ^{4}த: புரமதி^{2}துராம்நாய-துரக^{3}: ॥

த்ரிபுரஸம்ஹாரகனான ஈசனுக்கு வேதம்தான் குதிரை. (த்ரிபுரஹரனின் வர்ணனை, முப்புலவர்களின் வெண்பாஸ்துதி யுடன் பக். 128-/129 குலபூஷண பாண்டியனின் சிவஸேவை வர்ணனை பக் 141-142 நினைவு கூர்க.) வேதத்திலும் ஏறுதல், இறங்குதல், ஸமமாய்ச் செல்லல் மூன்றும் ஸ்வரத்துக்கேற்ப உண்டு. உதாத்தஸ்வரம் வரும்போது ஏறும். அனுதாத்தஸ்வரம் வரும்போது இறங்கும். ஸ்வரிதஸ்வரமும், ஏகச்ருதிஸ்வரமும் வரும்போது ஏற்ற இறக்கமின்றி ஸமமாகச் செல்லும். கடிவாளம் குதிரையைக் கட்டுப்படுத்துவது போல் 'இதற்கு இப்படித்தான் பொருள் கொள்ளவேண்டும். மேலெழுந்தவாரியாகப் பொருள் கொள்ளக் கூடாது' என்று விசாரம் பண்ணி நிர்ணயம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பண்ணுகிறவையான பூர்வமீமாம்ஸா - உத்தரமீமாம்ஸா சாஸ்த்ரங்கள்தான் வேதக் குதிரைக்குக் கடிவாளங்கள். இம்மாதிரியாக உலகத்துக் குதிரைக்குள்ள லக்ஷணங்களுடன் சிவனுடைய வேதமாகிற குதிரையும் முன்னால் தோன்றியது. (கவியின் சமத்காரம் - த்ரிபுரஹர மூர்த்தித்யானம்) ஈசனும், குதிரைக்காஸாரியாக ஓர் உயர்ந்த குதிரையில் ஏறிவந்தார் என்பதே இங்கு விஷயம். அதிவிசித்ரமான தேஜஸுடன் வணக்கம் செலுத்திக் கொண்டு குதிரையில் வருகிற குதிரைக் காஸாரியை அரிமர்தன பாண்டியன், பஹுமானம், ஆச்சர்யம் இவற்றால் மலர்ந்த கண்களால் கண்டான்.

வீணாக மந்திரி வாதபுரீசரை துன்புறுத்திவிட்டோமே என்று அனுதாபத்தாலும் வெட்கத்தாலும் பீடிக்கப்பட்ட பாண்டியன், முதலில் அவரை இன்மொழிகளால் தெளிவடை வித்து அவருடன் கூடக் களிப்புடன் குதிரை வீரனை எதிர் கொண்டழைத்தான்.

அரசன் குதிரைவீரனை வணங்கினான். குதிரைவீரனும் அரசனை வணங்கினான். அரசன் குதிரைவீரனைப் புகழ்ந்தான். குதிரைவீரனும் அரசனைப் புகழ்ந்தான். சிறிது நேரம் பேசிவிட்டு முடிவில் குதிரைகளை விலைக்குக் கொடுக்கும் போது, குதிரைவீரன், அரசனிடம் 'குதிரைகள் வாங்குவதற்காக இந்த மந்திரியிடம் நீர் கொடுத்திருந்த தனம் முழுவதையும் பெற்றுக் கொண்டு, உம்முடைய க்ஷேமத்திற்காகவே என்னால் சிவா: (= மங்களகரமானவையான) குதிரைகள் கொண்டு வரப் பட்டுள்ளன; பாருங்கள்' என்று கூறினான். 'மங்களகர மானவையான' என்று கேட்பவர்களுக்குத் தோன்றும் பொருள். சொன்னவரான குதிரைவீர வேஷதாரி ஈசன், மறைமுகமாக உள்ளடக்கிய பொருள் வேறு. சிவா: (= நரிகளான). 'நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டு வந்துள்ளேன்' என்று கூறுகிறார். கேட்பவர் அப்படி புரிந்துகொள்ள முடியாது. குதிரைவீரன் மேலுந் தொடர்ந்து 'இந்தக் குதிரைகள் வேகமாக ஓடக்கூடி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யவை; குஞ்ஜங்களிலும் (= மேற்புறம் கொடிகளால் மூடப்பட்டு வீடுபோலிருக்கும் லதாக்ருஹங்களிலும்) புதர்களிலும் காட்டின் நடுவிலும் வயல்களிலும் உபவனங்களிலும் இஷ்டப்படி ஸஞ்சரிக்கக் கூடியவை; தாண்டமுடியாத ஜலத்தையும் நீந்தித் தாண்டுபவை. (குதிரைகளை வர்ணிப்பது நரிகளுக்குத்தான் நன்கு பொருத்தமாயிருப்பதை உணர்க.) (ச்வ: = நாளை) 'அச்வ:' = 'நாளைக்கு இருக்காதது' என்று அச்வசப்தத்துக்குப் பொருளுரைக்கின்றனர். உமக்கும் இது தெரியும். நன்கு பரீக்ஷித்துப் பார்த்துக் குதிரைகளைப் பெற்றுக்கொள்ளும். இந்த தனம் எனக்கு; இந்தக் குதிரைகள் உமக்கு'' என்று கூறினான். (அச்வ சப்தத்துக்கு வேறுபொருள் இருந்தபோதிலும் பொதுவாக 'நிலையற்றவை' என்ற பொருள் மேல் நோக்கில் தோன்றும் படியும் ஆழநோக்கில் 'நாளை இவை குதிரைகளாய் இருக்கமாட்டா. நரியாய்விடப் போகின்றன.' என்ற பொருள், கேட்பவர்க்குப் புரியாமல் மறைந்திருக்கும்படியும் கூறினார். 'அப்படியே' என்று குதிரைவீரனின் சொல்லைக் கொண்டாடி பூஷணங்கள் - தங்கம் - வஸ்த்ரங்கள் அளித்து அவனை ஸம்மானித்து அனுப்பிவிட்டு அரசன் குதிரைகளைப் பார்த்துப் பார்த்து த்ருப்தி அடையவேயில்லை. பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றியது. அரசனுடைய ஆணைப்படி வேலை யாட்கள் புதுக் குதிரைகளைக் கொட்டகையில் பழைய பழக்கப்பட்ட குதிரைகளுடன் சேர்த்துக் கட்டினர்.

❀ 60-வது லீலை - வைகை வெள்ளம் பெருக்கெடுக்கச் செய்து வாதபுரீசரை சிறை மீட்டது. ❀

மறுநாட் கலையில் குதிரைக் கொட்டகை வேலையாட்கள், எங்கு பார்த்தாலும் பழங் குதிரைகளைக் கடித்துக்கொண்டு ஊளையிடுகிற நூற்றுக் கணக்கான நரிகளைக் கண்டனர். இவ்விஷயம் கேட்டு 'இம்மாதிரியாக மந்திரி இந்த்ரஜாலம் செய்துவிட்டார்' என்று அரசன் மறுபடியும் வெகுண்டான். இயல்பாக துஷ்டர்களான அரசனின் வேலையாட்கள் அரசனின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்தரவும் கிடைத்துவிட்டதால் மிகவும் க்ரூரமாக வாதபுரீசரை வருத்தினர். அவரோ ஆத்மானுஸந்தானம் செய்து கொண்டு க்லேசத்தைத் துளிக்கூடப் பொருட்படுத்தவேயில்லை.

இதற்குள் கருணாநிதியான ஸுந்தரேசன், பக்தனை அனுக்ரஹிக்க நினைத்து திடீரென்று வைகை நதியை அடங்காத அலைகளுடன் பயங்கரமாகப் பெருக்கெடுக்கச் செய்தார். அது பெருகி அலைவரிசைகளால் ஊர் முழுவதையும் கபளீகாரம் பண்ணியது. மந்திரியைக் கட்டிப்போட்டுத் துன்புறுத்தியவர் களெல்லாம் விழுந்தடித்துக் கொண்டு தூர ஓடினர். பகவானுடைய கருணை வெள்ளம் போன்ற அந்த வைகை வெள்ளத்தால் வாதபுரீசர் விடுவிக்கப்பட்டார். ஸுந்தரேசர் அருகில் சென்றுவிட்டார்.

61-வது லீலை - பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டது

நூற்றுக்கணக்காக ஆட்கள் அணைபோட்டும் வைகை நதி கரைக்குள் அடங்காததைக் கண்டு அரசன், சிறுவர்-கிழவர்-ஸ்த்ரீகள் உட்பட ஊரார் அனைவரும் கரையை உயர்த்தி வெள்ளத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென உத்தரவிட்டான். அவரவர்களும், ஒவ்வொருவரும் அடைக்க வேண்டிய பாகம் இவ்வளவு என்று பங்குபோட்டுக் கொண்டு தங்கள் தங்கள் பாகத்தை அடைக்கத் தொடங்கினர். மிகவும் ஜீர்ணித்துப்போய் சக்தியற்றவளான ஒரு பிட்டுவிற்கும் கிழவியையும் 'நீயும் அடைத்தாக வேண்டும்' என்று அரசனின் ஆட்கள் நிர்பந்தப் படுத்தினர். அவளுங் கூலியாள் கிடைப்பானா என்று தேடினாள். அவள் எப்போதும் பிட்டு சமைப்பாள். மனஸாலே அதை ஈசனுக்கு நிவேதனம் செய்வாள். அதைவிற்று ஜீவிப்பாள். ஈசனுடைய கருணைக்குப் பாத்திரமாயிருந்தாள். அவள் கூலியாளைத் தேடும்போது எல்லா வேதங்களாலும் தேடப்படு கிறவரான ஈசனே தோளில் மண்வெட்டியைத் தாங்கிக்கொண்டு ஒரு இளைஞனான வேலையாளாக எதிர்பட்டார். ஈசன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிழ்வியை நெருங்கி, 'அம்மா! உனக்கு என்ன வேலை செய்ய வேண்டும்? சொல்லுங்கள். ஒருபிடிப்புமில்லாமல் ஜனங்களுக்கு வேலையாளாக வெகு நாளாக இங்கு இருக்கிறேன். யார் கூலி வேலை கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறேன். பிட்டு விற்பவளிடம் பணமா கேட்க முடியும்? முழுவதாய் இருக்கும் பிட்டுகளை விற்றுக் கொள்ளுங்கள். மெலிந்தவை - உதிர்ந்தவைகளை எனக்குக் கொடுங்கள். வைகையை அடைப்பது எம்மாத்திரம்? அரசனின் ஆட்கள் சொன்னபடி செய்வது எம்மாத்ரம்? (ஒரு பெரிய கார்யமே யில்லை) அம்மா! கவலைப் படாதீர்கள். பாரத்தை என் தலையில் கட்டுங்கள். நீங்கள் பாட்டுக்கு பிட்டுச் சமைத்துக் கொண்டிருங்கள்' என்று இவ்வாறு கூறி 'அம்மா!' 'தேவி!', 'பாட்டி!' என்று கூப்பிடுகிற அழகிலேயே அவளை மோஹிக்கச் செய்து பிட்டில் கண்காணிப்பு இல்லாததால் சூடான பிட்டுகள் அனைத்தும் உதிர்ந்துபோகச் செய்து எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டார்.

ஈசன் வைகைக் கரையையடைந்து, பாடினார், சிரித்தார், விசித்ரமாக நர்த்தனம் செய்தார், குதித்தார், கவர்ச்சிகரமான வார்த்தைகளைப் பேசினார். வேலையாட்கள் அனைவரும் தன்னையே வேடிக்கை பார்த்துக்கொண்டு வேலை செய்யாமல் பொழுது போக்கும்படி செய்தார். வேலையைக் கண்காணிக்கும் கணக்கர்களிடம் 'மண்வெட்டி இதோ இருக்கிறது. இது கூடை, இந்த மண்முட்டு நான் சேர்த்தது, பாருங்கள்' என்று கூறி அவர்களை ஏமாற்றினார். அவர்கள் திரும்பிச் சென்றபின் அவர்களைப் பரிஹாஸம் பண்ணினார்.

எவ்வளவுதான் கரையை உயர்த்தினாலும் கரைக்குள் அடங்காமல் கட்டுப்பாடின்றி அலைகளால் வெளிப்பாய்கிற வைகையைக் கண்டு அஞ்சி, வேலையாட்கள் அரசனிடம் தெரிவித்தனர். அரசனும் பார்க்க வந்தான். அரசன் வருவது தெரிந்தும் மற்ற வேலையாட்கள் சிறிதும் கவனக்குறைவின்றி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேலையில் முனைந்தனர். ஈசனும் பூமியை வெட்டுவது போன்றும் மண்ணை நதியில் கொட்டுவது போன்றும் செய்துகொண்டிருந்தார். மற்ற எல்லா இடத்திலும் கரை உயர்த்தப்பட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே வந்த பாண்டியன், ஒரு இடத்தில் மட்டும் உயர்த்தப்படாமல் பள்ளமாக இருப்பதைப் பார்த்து 'யார் இப்படிச் செய்தது?' என்று கோபத்துடன் கேட்டான். கணக்கர்கள், கிழவியின் வேலையாளான இளைஞனைக் கையில் பிடித்துவந்து முன்னால் நிறுத்தி அவனுடைய சேஷ்டைகளை விவரித்தனர் - ''பிட்டு விற்பவள் ஒருவள், தொண்டு கிழவி. அவள் த்ருடமாயிருக்கிற இவனை உடைப்பு அடைக்கும் வேலையில் அமர்த்தினாள். நன்றாகக் கூலியை வாங்கிக்கொண்டு அசையமாட்டே னென்கிறான் இவன். கணக்கர் எதிரில் மிகவும் வினயமாய்ப் பேசுகிறான். அவர் அப்பால் சென்றதும் சிறிதும் பயமின்றி அவரைப் போலவே பேசி, அவர் செய்தது போலவே செய்துகாட்டி பக்கத்திலுள்ளவர்களைச் சிரிக்கவைக்கின்றான். 'அந்தக் கொடிய கிழவி என்ன கொடுத்துவிட்டாள்? ஏதோ சில உதிர்த்த பிட்டுகளைக் கொடுத்தாள். என்னுடைய துர்பாக்யமாக வல்லவா இவள் வந்துசேர்ந்தாள். கடவுளே!' என்று சோகத்துடன் அடிக்கடி படுத்துவிடுகிறான். 'எனக்கு அப்பா இருக்கிறாரா? அம்மா இருக்கிறாளா? இருக்க இடமிருக்கிறதா? ஏதாவது பணமிருக்கிறதா? ஒன்றுமில்லாத ஏழைகளிடம் அரசனுடைய ஆட்கள் என்ன செய்வார்கள்? போங்கள்' என்று சிலபோது எங்களை அவமதிக்கிறான். 'அரசன் அந்யாயம் செய்தால் ஏன் ஊரை வெள்ளம் மூழ்க அடிக்காது? வேலையாட்களை அடித்துப் பயனென்ன?' என்று சிலபோது மெதுவாகத் தத்வோபதேசம் போல் செய்கிறான்'' என்று கணக்கர்கள் அரசனிடம் முறையிட்டனர். கேட்டான் அரசன்; அவர்கள் இப்படி முறையிடும் போதும் கிழவியின் ஆள் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருப்பதையும் கண்டான். வந்தது கோபம், உதடு துடித்தது, பிரம்பைச் சுழற்றி ஓங்கி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடித்தான் கிழவியின் ஆளை. அவ்வளவுதான். மூவுலக ரூபமான ஈசனின் தேஹம் பிரம்படிப்பட்டபோது, சொன்னவன், அடித்தவன், பார்த்திருப்பவன் ஆக லோகம் முழுவதுமே பிரம்படிபட்டது. அடிபட்ட மூர்ச்சை தெளிந்து பாண்டியன் பார்ப்பதற்குள் ஈசன் மறைந்தார்; நதிப்பெருக்கும் உடனேயே ஓய்ந்தது.

அத்புதமான இந்த லீலையைப் பார்த்து ஆனந்தப் பாஷ்பத்தால் நாக்குத் தழுதழுக்க, பாண்டியனுடன் கூட, நகரத்தார் அனைவரும் தம்தம் புத்திக்கு ஏற்றபடி மீனாக்ஷிஸுந்தரேசரை ஸ்துதித்தனர்.

சூ^{1}டா^{3}-ப^{3}த்^{3}த^{4} -பு^{4}ஜங்க^{3}-புங்க^{3}வ-சிரோ-விந்யஸ்த -
ப்ரு^{1}த்^{2}வீ-ப^{4}ர- / ப்ராந்த - ப்ரஸ்க^{2}லிதை: கணை: கதிபயை -
ரீஷத்கரே பூரணே। மித்^{2}யாரோபித-யத்ன-கெ^{3}ளரவ-கத^{2}ா -
விஜ்ஞாபனா - ச^{1}ாதுரீ - / ஸம்முஹ்யஜ் - ஜரதீ - க்^{3}ரு^{1}ஹீத
சிதி^{2}லாபூபாய துப்^{4}யம் நம:

ஹே ஈசனே தங்கள் தலைமுடியில் கட்டப்பட்டுள்ள சிறந்த ஸர்ப்பச்ரேஷ்டனான ஆதிசேஷனின் சிரஸில் பூமிபாரம் முழுவதும் வைக்கப்பட்டுள்ளது. அதன் ஓரத்திலிருந்து சில துணுக்குகள் சரிந்தாலே போதும்; மிக எளிதாக வைகைக்கரை நிரம்பி = உயர்ந்து உடைப்பு அடைபட்டிருக்கும். அதை விட்டுவிட்டு, 'உடைப்பை அடைப்பதற்கு இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்யவேண்டும், மிகவும் ப்ரயத்னம் செய்ய வேண்டும்' என்று இல்லாத பெரு முயற்சியெல்லாம் பொய்யாக ஏற்றி மிகச் சாதுர்யமாய்த் தெரிவித்து அந்தச் சாதுர்யத்தால் கிழவியை மயக்கி அவளிடமிருந்து உதிர்ந்த பிட்டைப் பெற்றுக் கொண்டீர். (அப்பேர்ப்பட்ட லீலாவினோதரான) உமக்கு நமஸ்காரம்.

யோக^{3}-க்ஷேம-ப^{4}ரஸ் ஸமஸ்த-ஜக^{3}தாம் ந்யஸ்தஸ்
தவாங்க்^{4}ரி-த்^{3}வயே / குக்ஷௌ த்ரீணி ஜக^{3}ந்தி மூர்த்^{4}னி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சசப்4ரு1த்3-க3ங்க3ா-கபால-ஸ்ரஜ :। வோட4வ்யஸ்
தது3பர்யயம் யதி3 ம்ரு1த3ாம் ப4ாரோ(அ)பி கௌ2ரீபதே /
கஸ் தே மத்3ப4ரணே ச்ரம: க இவ மே
த்ராஸஸ் தத3ப்4யர்த்த2னே ॥

ஹே கௌரீபதே! (கௌரியின் கணவரே!) உம்முடைய இரு பாதங்களிலும் ஸமஸ்தலோகங்களின் யோகக்ஷேமபாரம் வைக்கப்பட்டுள்ளது. (=வணங்குகிற ஸமஸ்தலோகங்களுடைய யோகக்ஷேமத்தை வஹிப்பது உமதுபாதங்களின் பொறுப்பு.) (யோகம் = இருப்பதைக் காப்பாற்றுவது, க்ஷேமம் = புதிதாக சேமிப்பது.) உம்முடைய உதரத்தில் மூன்று உலகங்களும் உள்ளன. உம்முடைய தலையில் சந்த்ரன் - கங்கை - ப்ரம்ம கபால மாலைகள் உள்ளன. (இப்படியாக அடிப்பாகம், நடுப்பாகம், உச்சிபாகம் எங்கும் நிறைய பாரம் இருப்பது போதாமல்) அதற்கும் மேலாக இந்த மண்பாரமும் சுமக்க வேண்டுமேயானால் என்னைச் சுமப்பதில் (= காப்பாற்றுவதில்) உமக்கு ஏது ச்ரமம்? 'என்னையுந் தாங்குங்கள்' என்று ப்ரார்த்திப்பதில் எனக்கு நடுக்கம் வருவானேன். கூசாமல் ப்ரார்த்திக்கலாம். (எவ்வளவோ பெரும்பெரும் பாரம் சுமப்பவர்க்கு இந்த மிகமிகச் சிறிய - கணக்கிலேயே சேராத பாரம் எம்மாத்திரம்? ஆகவே என்னைக் காப்பாற்றும் பாரத்தையும் ஏற்றுக்கொள்வீராக.)

ஹே ஸந்த: ச்ரு1ணுதாது4னைவ மிளிதைரஸ்மாபி4
ரேதச்1சி2வே / வாச்1யம் வேத்ர-ஹதிம் விப4ஜ்ய
ந வயம் போ4க்தும் ஸமர்த்த2ா இதி। நோ சே1த் பாத3ஹதி:
சிலாப்ரஹரணங் கோத3ண்ட3 த3ண்ட3ாஹதிர் / க3ண்டு3
ஷோத3க-ஸேக இத்யபி ப4வேத் ஸர்வம் விப4ாஜ்யம் ஹி ந: ॥

''ஹே ஸாதுக்களே! கேளுங்கள், நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து இப்போதே சிவனிடம் சென்று 'பிரம்படியைப் பங்கு போட்டுக் கொண்டு அனுபவிக்க நாங்கள் திறமைசாலிகள் அல்ல அந்தத் திறமை எங்களிடமில்லை' என்று சொல்லிவிட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், கால் - உதை, கல்லடி, வில்-தண்டு-அடி, வாயில் கொண்டுவந்த ஜலத்தை உமிழ்தல் இவை எல்லாவற்றையுமே நாமும் பங்கு போட்டுக் கொள்ளும்படி நேர்ந்துவிடும்.''

கண்ணப்பநாயனார், தனது இரண்டாவது கண்ணையும் பிடுங்கி, காளஹஸ்தீசருடைய கண் ஸ்தானத்தில் வைத்து அவரது கண்ணில் ரத்தம் வருவதை நிறுத்த நினைத்து, இரண்டாவது கண்ணையும் பிடுங்கிவிட்ட பிறகு ஈசனது கண் இருக்கிற இடம் தெரியாமற் போய்விடும் என்பதற்காக, தன் பாதத்தை அடையாளங்காட்ட உபயோகித்தது கால்-உதை எனப்படுகிறது. வாய்ஜலமும் கண்ணப்பன் அபிஷேகம் செய்ததுதான். வில்லடி அர்ஜுனன் கொடுத்தது. கல்லடி = சாக்கிய நாயனார் செய்த பூஜை. இது விஷயம் கடைசி ச்லோகத்திலும் வருகிறது.

த்4யாயந் - த்4யாயமுபாய - கோடிபி4ரஹந் த்வத்ப்ராப்த்
யுபாயஞ் சி1ரம் / நிர்விண்ணோ நிரசை1ஷமேகமது4னா
ஹாலாஸ்ய-சூ1ட3ாமணே। தி3ஷ்ட்யா வேக3வதீதடே யதி3
பதேதே3தத்3 - வபுர் மாமகம் / ஸம்ரோஹேத3பி ஜாது தத்
தடம்ரு1த3ா ஸாகந் த்வதீ3யம் சிர: ॥

ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தின் சிரோமணியே! ஹே ஸுந்தரேசரே! உம்மை அடைவதற்குக் கோடிக்கணக்கான உபாயங்களைச் சிந்தித்துப் பார்த்துப் பார்த்து (எதுவும் எளிதானதல்ல என்று) சலிப்படைந்தேன். இப்போது ஒரு உபாயத்தை நிச்சயித்துவிட்டேன். அத்ருஷ்டவசமாக இந்த எனது உடல் வைகைக் கரையில் விழுந்துவிட்டால் (= வைகைக் கரையில் மரணம் ஏற்பட்டு உடல் மண்ணோடு மண்ணாக ஆகிவிட்டால்) போதும். எப்போதாவது ஒரு ஸமயம் வைகைக்கரை மண்ணோடு சேர்ந்து, நீர் மண்சுமக்கும்போது என் உடலும் உம் தலையில் ஏறிவிடும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தூ4ளீ - தூ4ஸரிதம் சசாங்கபடலம் ஜம்ப3ா லிதா ஜாஹ்னவீ /
ப4க்3னம் ப்3ரஹ்ம - கபால - த3ாம ப2ணினோ பூ4ஷோசி1தா:
க்லேசிதா:। ம்ரு1த்3 - ப4ாரோத்3வஹனங்
குதோ(அ)ப்4யுபக3தம் கோ வா கு3ண: பிஷ்டகே / ஸா
து3ஷ்டா ஜரதீ கிமௌஷத4மத3ாத் தத்ரேதி ந ஜ்ஞாயதே ॥

(தாங்கள் மண் பாரத்தைத் தலையில் ஏற்றியதால் பற்பல கஷ்டங்கள் நேர்ந்தன.) (தலையிலுள்ள) வெளுப்பான சந்தர படலம் புழுதியால் அழுக்காகி நிறம் மாறி தூஸர வர்ணமாக (= சாம்பல் வர்ணமாக) மாறிவிட்டது. (தலையிலுள்ள) கங்கை, மண்ணுடன் கலந்து சேறுள்ளதாய்விட்டது. ப்ரம்ம கபாலங்களைக் கோர்த்துக் கட்டப்பட்டுள்ள மாலை அறுந்து விட்டது. அலங்காரமாயிருந்த பாம்புகளுக்கெல்லாம் பாரந் தாக்கி க்லேசம் ஏற்பட்டது. இவ்வளவு கஷ்டங்களைத் தரக்கூடியதான மண்பாரம் சுமக்கும் வேலையை எதற்காக ஒப்புக் கொண்டீர்? பிட்டில் அப்படி என்னதான் குணமிருக்கிறது? அந்த துஷ்டைக் கிழவி அதில் என்ன மருந்தை வைத்தாளோ? தெரியவில்லையே.

பத்3ப்4யாம் கிம் நிஹத: ஸுதோ தி3னமணேர் ப4க்3னாச்5
ச1பேடாஹதைர் / த3ந்தா: கிம் தரணே: கிமித்யபஹ்ரு1தம்
த4ாது: சிர: பஞ்சமம் । காமந் த்வம் ஜக3தீ3ச்வரோ ப4வ தத:
கர்மாபி கிம் ஜீர்யதி / ப்ரத்யக்ஷங் க2லு பாண்ட்3ய-வேத்ர-
லதிகாக4ாதோ (அ)யமாஸாதி3த:॥

ஈசனே! யமனை ஏன் காலால் உதைத்து வீழ்த்தினீர்? கன்னத்தில் அரைந்து ஏன் ஸூர்யனின் பற்களை உடைத்தீர்? ப்ரம்மாவின் ஐந்தாவது தலையை ஏன் கிள்ளியெறிந்தீர்? நீர் எல்லா ஜகத்துக்கும் ஈச்வரனாக இருந்தால் இருமே, அதனால் என்ன? ஈச்வரனாக இருப்பதால் பண்ணின கர்மா பலன் கொடுக்காமல் போய்விடுமா என்ன? இப்போது ப்ரத்யக்ஷமாகப் பாண்டியன் கையால் பிரம்படி பட நேர்ந்துவிட்டது பாரும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தே3வா தூ3ரதரம் ப்ரயாத முனயோ க்3ரு1ஹ்ணீத மௌனம் க்ஷணம் / மாது: சம்ஸத மா சி1ரங் க3ணவரா தே3வஸ்ய த்3ரு1ஷ்டாந் த3சாம் । புஷ்பைர் நந்த3ன- ஸம்ப4வைரபி ஸூரைர் யன் மந்த3மப்4 யர்ச்1யதே / தத்3 தி3வ்யம் வபுரைச்வரம் விலுலிதம் பாண்ட்3யஸ்ய வேத்ராஹதை: ॥

தேவர்களே! தூரச் செல்லுங்கள்; முனிவர்களே! க்ஷணநேரம் மௌனங் கடைபிடியுங்கள்; ப்ரமதகண ச்ரேஷ்டர்களே! காலந் தாழ்த்தாமல் சீக்ரமாக அன்னையிடம் இப்போது தேவனுக்கு நேர்ந்துள்ள - நேரில் கண்ணால் பார்க்கப்பட்ட தசையைத் தெரிவியுங்கள். தேவர்களாலே, நந்தனவனப் புஷ்பங்களாலே எந்த திவ்யமான ஈச்வரதேஹம் (வேகமாக அர்ச்சித்தால் வலிக்கும் என்று) மெதுவாக அர்ச்சிக்கப்படுகிறதோ அது, இப்போது பாண்ட்யனுடைய பிரம்படிகளால் துன்புறுத்தப்பட்டது. (கலக்கப்பட்டது) ஆட்டப்பட்டது.

அம்ப3 ஸ்வித்3யதி வக்த்ரமம்ப3 கிமபி ச்ராந்த்யா க3திர் மந்த2ரா / மாத: ஸீத3தி சங்கரே ப்ரஹ்ரு1தவான் வேத்ரேண பாண்ட்3யோ விபு4: । இத்யாவேத3யதாம் முக2ாத3னுபத3ம் ச்ருத்வா க3ணானாம் சிவா / ப்ரேமோதீ3ர்ண- பதி-வ்ரத- ப்ரசமித-க்ரோத4ா கத2ம் வர்த்ததே ॥

'அம்மா! முகம் வியர்க்கிறது; அம்மா! களைப்பினால் நடை தளர்ந்து தடுமாறுகிறது. பாண்டியமன்னன், சங்கரன் மேலே பிரம்பால் அடித்துவிட்டான்.'' என்று சிவகணங்கள் வாயிலாகக் கேட்டு உடனே கோபங்கிளம்ப, பதிவ்ரத பலத்தால் (= ஈசனே, வேண்டுமென்றே வேடிக்கையாகப் பிரம்படி வாங்கிக் கொண்டு சாந்தமாயிருக்கும்போது நாம் மட்டும் கோபித்துக் கொள்ளலாமா, பதியை அனுஸரித்துத்தானே பத்னி இருக்க வேண்டும். அதுதானே பதிவ்ரதாலக்ஷணம் என்று) கிளம்பிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கோபத்தை அடக்கிக் கொண்டு சிவை இப்போது எம்மாதிரி இருக்கிறாள்?

த்ராணே யோ(அ)தி4க்ரு1த: ஸமஸ்த-ஜக3தாந்
தஸ்யாம்பு3ராசௌ ஸுகம்2ம் / நித்3ராணஸ்ய தத2ாவிதே4(அ)பி
ஸமயே ப்ரஷ்டைவ நா லக்ஷ்யதே। விஷ்டிங் குர்வதி தாம்யதி
ச்ரம - ப4ராத்3 வேத்ராஹதிஸ் த்வய்யபூ4த் / கஸ்யாக்3ரே
கத2யிஷ்யஸீமமநயம் ஸ்வாமிந் நநாதே2ா ஹ்யஸி॥

ஸமஸ்த ஜகத்தையும் ரக்ஷிக்க வேண்டிய பொறுப்புடைய வரான நாராயணன், (ஊரே வெள்ளத்தில் மூழ்கி நாசமாகக் கூடிய உடைப்பு நேர்ந்த) அப்பேர்ப்பட்ட ஸமயத்தில் கூட ஸுகமாக ஸமுத்ரத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறார். அவரை (ஏன் இப்படிப் பொறுப்பைக் கவனிக்காமல் இருக்கிறீர்? என்று) கேட்பார், யாரையுமே காணோம். நீரோ அடிமைவேலை - கூலி வேலை செய்கிறீர். ச்ரமந் தாங்காமல் வாடுகிறீர். உம்பேரில் தான் பிரம்படி விழுகிறது. யாரெதிரில் சென்று இந்த முறைகேட்டைப் பற்றிக் கூறுவீர். உமக்கு யாரும் நாதன் கிடையாதே. நீர் அநாதராயிற்றே. உமக்கு யாராவது நாதன் இருந்தால் அவரிடம் முறையிடலாம்.

லீலா-த4ாரித - ஸிந்து4 - தீர - ஸிகதா - ப4ாராந்தராளஸ்தி2தோ /
பூ4யாஸம் மசகோ(அ) ப்யஹம் பசுபதே தாவச்1ச1 நார்ஹாமி
கிம்। யத் கீத்3ரு1க்3வித4மைச்வரம் சிர இதி ப்ரஷ்டும்
ப்ரவ்ரு1த்தே வித4ா-/ வீத்3ரு1க் தாத்3ரு1கி3த3ந் ததி3த்யுபதி3சன்
தஸ்யாபி ச1 ஸ்யாங் கு3ரு:॥

ஏ பசுபதியே! லீலையாக உம்மால் சுமக்கப்பட்ட வேகவதி நதிக் கரை மணல் பாரத்துக்குள்ளேயிருக்கிற ஒரு கொசுவாக வாவது நான் ஆவேனாக. அவ்வளவுக்குக் கூட நான் அர்ஹனில்லையா? (அப்படிப்பட்ட கொசுவாக ஆனால் என்ன பயன் என்று கேட்டால்,) அப்போது உமது தலை எனக்கு நன்றாகத் தெரியும், அன்ன பக்ஷி உருவந்தாங்கி, உமது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலையைக் காண்பதற்காக உயர உயரப்பறந்து எப்படியும் காண முடியாமல் திரும்பிய ப்ரம்ம தேவர், 'ஈசனுடைய தலை எப்படியிருக்கும்?' என்று என்னைக் கேட்பார். 'இப்படிப் பட்டது, அப்படிப்பட்டது, இதுதான் அது' என்று உபதேசித்து அவருக்கே குருவாகி விடுவேன்.

பாண்ட்3யோ த3ண்டயிதாஸ்து பாண்ட்3யதனயா த்3ரஷ்ட்ரீ
கத2ம் வர்த்ததே / காமம் ஸா ஜனனீ மமைவ கிமதோ யுக்தம்
து வாச்1யம் மயா। ஸவ்யே ஸ்த2ாபய மூர்த்4னி
ம்ரு1த்3ப4ரமமும் ஸவ்யம் வபுர் த3ர்சய / ப்ராப்தே வேத்ர -
லதாஹதே ச1 தத3னு த்3ரக்ஷ்யாமி தே3வ்யா: ஸ்தி2திம் ॥

பாண்டியன்தான் அடித்தான் என்றால் பாண்டியபுத்ரி எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்? அவள் எனது அன்னைதான். அதனால் என்ன? நான் ந்யாயத்தைச் சொல்லத் தானே வேண்டும். (அன்னை என்பதற்காகப் பேசாமலிருக்கக் கூடாது.) ஈசனே! மண்பாரத்தை (தேவியின் பாகமான) தலையின் இடது பக்கத்தில் வைத்துக் கொள்ளும். பிரம்படிபடும் ஸமயத்திலும் உடலின் இடது பாகத்தை காட்டும். அப்போது பார்க்கிறேன் தேவியின் நிலையை.

வோடு4ம் ப்ரவ்ரு1த்தே த்வயி வேக3வத்யா: / சீர்ஷேண
சம்பே4ா ஸிகதா-விதானம்। ப4ாரந் த்3வயோ: பர்யவஸன்ன
மூஹே / சி1த்தே யதீனாம் சிரஸி ச்ருதீனாம் ॥

ஹே சம்போ! நீர் வேகவதி மணல் பாரத்தைத் தலையால் சுமக்க ஆரம்பித்தபோது அந்த பாரமானது யதிகளின் சித்தத்திலும் வேதங்களுடைய சிரஸ்ஸிலும் என்று இவ்விரண்டி லும் போய் முடிந்தது என்று ஊஹிக்கிறேன். (ஈசன் யதிகளால் த்யானிக்கப் படுவதால் யதிகளின் சித்தத்தில் இருக்கிறார். வேதங்களின் சிரஸ்ஸான வேதாந்தத்தில் அறியக் கிடைப்பதால் வேதங்களின் சிரிஸ்ஸிலுமிருக்கிறார். ஈசன் தூக்குகிற பாரம் அவரைத் தாங்குகிற இவ்விரண்டிலும் போய் முடிகிறது.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அர்த4ம் பௌருஷமர்த4மேவ ப4வதி ஸ்த்ரைணஞ் ச1
யத் தாவகம் / ஸாம்ராஜ்யங் க்3ரு1ஹகர்ம வா கிமபி தந்
நாயாதி நிர்வ்யூட4தாம் । த்வம் ராஜ்ஞ மது4ராபுரஸ்ய
த3யிதஸ் தத்ரைவ தே தாட்3யதே / த்வம் மாதஸ்
ஸ்வயமன்னத3ாஸி ஜக3தாம் காந்தஸ் து தே பி4க்ஷுதே ॥

அன்னையே! (அர்தநாரீச உருவிலிருப்பதால்) உனக்கு ஆண்மையும் பாதி தானிருக்கிறது; பெண்மையும் பாதி தானிருக்கிறது. ஆகையால் ஆண் செய்யக்கூடிய ராஜ்ய பரிபாலனமும் ஒழுங்காய் நிர்வஹிக்கப்படுவதில்லை. பெண் செய்யக் கூடிய (பர்த்தாவை அன்னமிட்டுப் போஷித்தல் முதலிய) வீட்டு வேலையும் ஒழுங்காய் நிர்வஹிக்கப்படுவதில்லை. நீ மதுராபுரிக்கு ராணி. உன் கணவன் அங்கேயே அடிக்கப்படுகிறான். ராஜ்யபரிபாலனம் ஒழுங்காக இல்லாததால் தான், நீ ஆளும் ஊரிலேயே கணவன் அடிபடுகிறான். நீ எல்லா ஜகத்துக்கும் அன்னமளிக்கிறாய். உன் கணவனோ, பிச்சை யேற்கிறான். வீட்டு வேலையை ஒழுங்காய் நிர்வஹிக்க முடியாததால் தான் இப்படி நேர்கிறது.

ஆகே2டத4ர்மமனுபாலயதானுபூ4த: / பார்த்த2ப்ர ஹார இதி
யத் தத3வைமி யுக்தம் । ஆயாஸ - வ்ரு1த்த்யனுகுணாம்
ப்4ரு1திமப்யவிந்த3ன் -/ னங்கீ3 கரோஷி கிமபார்த்த2 மமும்
ப்ரஹாரம் ॥

ஈசனே! வேட்டையாடுந் தர்மத்தைப்பின்பற்றிய போது நீர் பார்த்தப்ரஹாரத்தை (பார்த்தன் = அர்ஜுனன் வில்லாலடித்ததை) அனுபவித்தது யுக்தந்தான். (வேட்டைப் போட்டியில் அடிபடுவது இயல்புதான்) மண் பாரம் சுமக்கும் ச்ரமமான கூலிவேலை செய்தபோது ச்ரமத்துக்கேற்ற கூலியையும் பெற்றுக் கொள்ளாமல், அபார்த்தமான (= பயனற்றதான) இந்த அடியை ஏன் ஏற்றுக் கொள்கிறீர்? (பார்த்த ப்ரஹாரம் பெற்றது ஸரி அபார்த்தமான = பார்த்தனுடையதல்லாத = பார்த்தன் அடிக்காத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

- பாண்டியன் அடித்த இந்த அடியை ஏன் ஏற்றுக் கொண்டீர்? என்றும் இன்னொரு பொருள்.)

வேத்ராஹதிம் விப^{4}க்தும் / விச்வாத்மகதா ப்ரத^{3}ர்சிதா ப^{4}வதா ।
கர-க^{3}த-கப^{3}ல-க்^{3}ராஸே / புநரபி^{4}நீதம் சிவாத்^{3}வைதம் ॥

சிவனே! நீர் பிரம்படியை எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்காக 'நான் ஸர்வஜகத்ரூபமானவன்' என்று காட்டினீர். உமது முதுகில் பட்ட பிரம்படி எல்லாருடைய முதுகிலும் படும்படி செய்தீர். கையிலுள்ள பிட்டுக்கவளத்தை விழுங்கும்போது ஸர்வ ஜகத்ரூபனாக இருந்து எல்லாருடைய வாயிலும் பிட்டு விழும்படியாகச் செய்யவில்லை. அப்போது மட்டும் அத்வைதத்தை (=சிவனைத் தவிர வேறு இரண்டாம் வஸ்துவே கிடையாது என்பதை) அபிநயித்தீர்.

வேத்ராஹதிமதிகே^{4}ாராம் / விப^{4}ஜ்ய யே பு^{4}ஞ்ஜதே னா
நியதம் । ப^{4}வதாபதாபிதேஷ் வபி / தேஷூபேக்ஷைவ ்த கத^{2}ம்
லீலா ॥

சிவனே! உம் மேல் விழுந்த மிகவுங் கோரமான பிரம்படியைப் பங்கு போட்டுக்கொண்டு கட்டாயமாய் எந்த ஜனங்கள் அனுபவித்தார்களோ, அவர்கள் ஸம்ஸாரதாபத்தால் தாபமடைந்து கஷ்டப்படும் போதும், நீர் பார்த்துக் கொண்டு அவர்கள் தாபத்தைப் போக்காமல் அசட்டையாக இருக்கலாமா? இதுவும் உமது லீலையா?

ஆநம்யாநம்ய மௌளிந் த்வயி கிரதி ம்ரு^{1}த^{3}ம் ஸ்ரம்ஸதே
மூர்த்^{4}னி க^{3}ங்க^3ா / ப^{3}த்^{3}த்^{4}வா ப^{3}த்^{3}த்^{4}வா கபர்த^{3}ம் ஸ்ப்ரு^{1}சதி
ப^{2}ணத^{4}ரா த^3ாருணந் நி:ச்வஸந்தி । ஔத்ஸுக்யாத்
தாட்^{3}யமானே த்வயி ஜக^{3}த^{3}கி^{2}லந் தாட்^{3}யதே
வேத்ரயஷ்ட்யா / ப^{4}க்தஸ்யைகஸ்ய ரக்ஷா ப^{4}வதி பசுபதே
ஸர்வலோகஸ்ய சிக்ஷா ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏ பசுபதியே! நீர் தலையைத் தாழ்த்தித் தாழ்த்தி மண்ணைக் கொட்டும் போது தலையிலுள்ள கங்கை, நழுவுகிறது. அவிழ்ந்து போன ஜடாமுடியைக் கட்டிக்கட்டித் தொட்டுப் பார்க்கும்போது ஜடையிலுள்ள பாம்புகள் வலி தாங்காமல் பயங்கரமாகப் பெருமூச்சு விடுகின்றன. ஆவலாக நீர் பிரம்படியைப் பெற்றுக் கொள்ளும்போது உலகம்முழுவதும் பிரம்படி படுகிறது. நீர் ஒரு பக்தனை ரக்ஷிக்கப் போக அது ஸர்வலோகத்தையும் சிக்ஷிக்கிறதாக ஆகிறது.

அஸ்மத்தோ ப3ஹுஷ4ா க்3ரு1ஹீத மது4னாப்யஸ்மத்3-ப4வ-
ஸ்ரோதஸாம் / ஸம்ரோதே4 ந கிமப்யயம் ப்ரயததே தே3வ:
ப்ரமாணந் தத: । இத்யக்3ரே விநிபத்ய பாண்ட்3ய-ந்ரு1பதேர்
ப்3ரூமோ வயஞ் சேத் தத3ா / கோபாத் கோபமுபேயுஷ:
க்ஷிதிபதே: கிம் ப4ாவி ஸம்ப4ாவ்யதாம் ॥

சிவனே! ''எங்களிடமிருந்தும் பலவிதமாக (நாங்கள் நிவேதனம் செய்ததை) இவர் பெற்றுக்கொண்டிருக்கிறார். எங்களுடைய ஸம்ஸார ப்ரவாஹத்தைத் தடுக்கும் விஷயத்தில் (=எங்களுக்கு ஸம்ஸாரத்திலிருந்து முக்தியளிக்கும் விஷயத்தில்) இப்போது வரையிலும் எந்த விதத்திலும் இவர் முயற்சிக்கவில்லை. இதற்கு மேல் தேவர் ப்ரமாணம் (இவரை என்ன செய்யவேண்டுமோ அதை தேவரீர் பார்த்துச் செய்யவேண்டும்) என்று பாண்டிராஜன் எதிரில் விழுந்து வணங்கி நாங்கள் முறையிட்டால் கோபத்துக்கு மேல் கோபமடைந்த அரசனிடமிருந்து என்ன நேரும்? எந்த விதமான தண்டனை கிடைக்கும்? என்று ஆலோசித்துப் பாரும். (ஒரு கிழவியிடம் பெற்றதற்கு உழைக்காததற்கே பிரம்படி. எங்கள் எல்லாரிடமும் பெற்றதற்கு உழைக்காவிட்டால் என்ன நடக்கும்? சிந்தித்துப் பாரும்.)

வோட4்வ்யானி வஹானி தே ஸுர-நதீ-வேத4: கபா
லாதி3கா-/ ன்யாத்மானஞ் ச1 நிவேத3யாம்யத2 ப4வத்3-

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப4க்த்யாம்ரு1தேனாப்லுதம் । இத்யப்4யர்த்த2யமான மீக்ஷ
த3பி மாமப்ரேக்ஷமாணோ ப4வான் / பிஷ்டாபூபக்ரு1தே
ம்ரு1த3ம் வஹதி சேத்1 3 தே3வ: ப்ரமாணந் தத: ॥

சிவனே! "நீர் சுமக்கவேண்டியவையான கங்கை, ப்ரம்ம கபாலங்கள் முதலிய எல்லாச்சுமைகளையும் நான் சுமக்கிறேன். 'உம்மிடம் பக்தி' என்கிற அம்ருதத்தில் முழுக்காட்டி என்னையே உமக்கு அர்ப்பணிக்கிறேன்' என்று நான் ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட என்னைச் சிறிதும் பாராமல் பிட்டு அப்பத்திற்கு ஆசைப்பட்டு நீர் மண் சுமப்பீரேயானால் அதற்கு மேல் பாண்டியதேவன் ப்ரமாணம். (பாண்டியன் செய்ய வேண்டியதைச் செய்வார்.)

ப்ரஹ்ரு1தம் ப்ரஹ்ரு1தமிதி த்வம் / பாண்ட்3ய விஷீத3ஸி
கிமம்பி3கா-ரமணே । ப்ரஹ்ரு1தம் யதி3
ஸாது4 க்ரு1தம் / பாசுபதங் க3ணய ஸித்3த4 மஸ்த்ரந் தத் ॥

ஏ பாண்டியனே ! அம்பிகாரமணன் (=சிவன்) மேலே அடித்துவிட்டேனே, அடித்து விட்டேனே,' என்று எண்ணி ஏன் வருந்துகிறாய்? அடித்தது நன்றாக அடித்திருந்தால் பாசுபதா ஸ்த்ரம் ஸித்தமாயிற்று என்று நினைத்துக்கொள். (நாண் கயிறு அறுந்துபோய்விட்ட கோபத்தால் அர்ஜுனன், வேடவுருக் கொண்ட சிவன் தலையில் வில்லால் ஓங்கியடித்தான். அவனுக்கு பாசுபதாஸ்த்ரம் கிடைத்தது.)

பாண்ட்3யேன ப்ரஹ்ரு1தோ(அ)ஸி வேத்ரலதயா பார்த்தே2ன
கா3ண்டீ3வத: / பாதே3னாபி கிராதகேன வடுனா கேனாபி ச1
ப்ரஸ்தரை: । தத் தத் ப்ரத்யுத தேஷு தேஷு தப இத்யக்3ராஹி
மத்பூஜனே / த்வாக3ாம் ஸ்யேவ பதே3 பதே3 க3ணயஸே
தை3வம் மமைதாத்3ரு1சம் ॥

சிவனே! பாண்டியன் உம்மைப் பிரம்பாலடித்தான். பார்த்தன் வில்லாலடித்தான். வேடச்சிறுவன் காலாலுதைத்தான். யாரோ ஒருவன் (சாக்கியநாயனார்) கல்லாலடித்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதெல்லாம் தப்பு என நினைக்காமல் நேர்மாறாக அதெல்லாம் அவரவர் செய்த தபஸ் என்று நினைத்தீர். நானோ உம்மைப் பூஜிக்கத்தான் செய்கிறேன். (அவர்களைப் போல் எதுவும் செய்யவில்லை) இருந்தும் நான் செய்கிற பூஜையில் நேரும் அபராதங்களைத்தான் அடிக்கடி கணக்கிடுகிறீர். என்ன செய்வது? என் தலைவிதி இப்படியிருக்கிறது.

இவ்வாறு ஜனங்கள் ஆச்சர்யத்தில் மூழ்கி ஸ்தோத்ரம் செய்துகொண்டிருக்கும் போதே சிவகணங்கள் அந்தப் பிட்டுக் கிழவியை அத்புதமானரூபம்-வேஷமுடையவளாக திவ்யமான விமானத்திலேற்றி சிவலோகமழைத்துச் சென்றன.

'சிவபக்தனுக்கு அபசாரம் செய்துவிட்டோமே' என்று வருந்தி, அரிமர்தன பாண்டியன், மந்திரி வாதபுரீசரை அடிக்கடி காலில் விழுந்து வணங்கி இன்மொழிகள் கூறிப் ப்ரஸன்னமாகச் செய்தான். வாதபுரீசரை அவரிஷ்டப்படி விட்டுவிடும்படி ஆகாச வாணி எழுந்ததைக் கேட்டு பயந்த பாண்டியன் அவருக்கு விடைகொடுத்தனுப்பினான். அவரும் பரம வைராக்ய மடைந்து சிதம்பரம் சென்றடைந்தார்.

❀ 62 - வதுலீலை - கூன் பாண்டியன் ஜ்வரம் தீர்த்தது ❀

பின்னொருகால் அரிமர்தன பாண்டியனின் வம்சத்தில் எங்கும் பரவிய புகழால் உயர்ந்தவன் - ஆனால் உடல் கூனியிருந்ததால் கூன் பாண்டியன் எனப்படுபவன் தோன்றினான். பாண்டிய வம்சத்தவனாயிருந்த போதிலும் அவன் சமணர்களின் நெடுங்கால சேர்க்கை தோஷத்தால் சமண தீக்ஷை பெற்றுவிட்டான். துர்ஜன சேர்க்கை மீள முடியாதது.

அக்காலத்தில், ப்ரம்மாவில் தொடங்கி வேதமும் வேதத்தில் கூறப்பட்ட வேதியில் செய்யப்படும் யாகங்களும் தடையின்றி தொடர்ந்து காப்பாற்றப்பட்டுவந்த - மிகப் பரிசுத்தமான ஒரு சிவதாஸவம்சத்தில் ஸம்பந்தன் எனப் பெயர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்ட குமாரர் தோன்றினார். தாயற்ற சிசுவாக இருந்த அவரை ஜகன்மாதா கௌரியே தன் ஸ்தன்யத்தால் போஷித்தாள். அது முதல் ஜனங்கள் அவரை 'ஞானபூர்ணர்' என்றுங் கூறலாயினர்.

ஸுப்ரம்மண்யரின் அம்சாவதாரமாக உதித்த அந்த ப்ராம் மணச்ரேஷ்டர் இளமையிலேயே ஸர்வ சாஸ்த்ரங்களையுமறிந்து வேதாந்தஸித்தாந்தப்படி சிவோத்கர்ஷத்தை (= சிவனே உயர்ந்தவர் என்பதை) நன்கு தெளிவுபடுத்தினார். விபூதி - ருத்ராக்ஷம் - ஷடக்ஷரம் விஷயமான தத்வ ஞானத்துக்கு ஒரே இருப்பிடமான அவரை ஆராதித்து, பூர்வபுண்யம் பழுத்தவர் சிலர் கலியை வென்றனர். ('ஷடக்ஷரம் = ப்ரணவத்துடன் சேர்ந்த பஞ்சாக்ஷரம்' என்று இருக்கலாம்).

ஜைனாசார்யர்களின் உபதேசத்தாலேற்பட்ட - மிகவும் தீங்கு விளைவிப்பதான மோஹத்தால் ராஜகுலமே சூழப்பட்டிருந்த அந்த ஸமயத்தில் அரசனுடைய மந்திரி, ராணி இருவர்மட்டும் பிறைசூடிப் பெருமானிடம் பேரன்பு பூண்டிருந்தனர். அவ்விருவரும் ஸம்பந்தநாதருடைய திருவடித் தாமரைகளில் ஒப்பற்ற பக்திவைத்து அவரே கதியென்று அவருடைய தர்சனபலத்தால் வேதத்துக்குப் புறம்பான ஜைனமதமாகிய பாழுங் கிணற்றில் மூழ்கியுள்ள அரசனைக் காப்பாற்ற முயன்றனர்.

ஒரு ஸமயம் கூன்பாண்டியன் அனல் கக்குகிற தாபஜ்வரத்தால் பீடிக்கபப்பட்டான். அந்த ஜ்வரத்தைப் போக்குவதில் அரசனின் ஆசார்யர்களான ஜைனர்கள் செய்த முயற்சிகள் முழுவதும் வீணாயின. அப்போது ராணி, அரசனுக்கு ஜ்வரம் நீங்கி ஆரோக்யம் ஏற்படுவதற்காக ஸர்வக்ஞரான ஸம்பந்தநாதரை மிகவும் ப்ரார்த்தித்துத், தானே வரவழைத்தாள். ஞானபூர்ணரும் நுழையும்போதே, கிரீடத்தின் நுனியிலுள்ள சந்த்ரனிடமிருந்து வழிகிற அம்ருதம் பட்டு ஈரமாய் (குளிர்ச்சியாய்) இருக்கிற சிவபெருமானை 'அப்பேர்ப்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவனே நான்' என்ற எண்ணத்துடன் ஸ்மரித்துக் கொண்டு, ஜ்வரத்தால் துன்புறும் அரசனைக் கண்ணால் பார்த்து அனுக்ரஹித்தார். ஆச்ரம நிலைக்கெல்லாம் மேலான நிலையிலுள்ள அம்முனிவர், அரசனுடைய பாக்யவசத்தால் அவன் நெற்றியில் விபூதியிட்டார்; மஹேசனின் பாதார விந்தத்தைப் பூஜித்துப் பூஜித்து அந்த வாஸனை ஏறியுள்ள கையினால் அவனைத் தொட்டார். சிவனைத் தொடுகிறதான - பகவத்தரமான - மூவுலகிற்கும் மருந்தான குருநாதர் கையினால் தொடப்பட்ட மாத்திரத்திலேயே உடனேயே தாபஜ்வர பீடையகன்று அரசன் ஸுகமடைந்தான். உதரத்திலுள்ள ஜாடராக்னி உடலில் பரவி ஜ்வலிப்பதால் ஏற்பட்ட தாபம் அகன்றுவிட்டதைக் கண்டு அரசன் மகிழ்ந்தான்; ராணியோ, ஸம்ஸாரஜ்வரமாகிற அக்னியின் ஜ்வாலை-ஆக்ரமிப்பே அடங்கிவிட்டதென அறிந்து மகிழ்ந்தாள்.

※ 63-வது லீலை - ஜைனர்களை வாதில் வென்றது ※

ஞானஸம்பந்தரின் கருணாத்ருஷ்டியால் அரசன் தேஹத்திலிருந்து வெளியேற்றப்பட்ட தாபஜ்வரம், இருமடங் காகக் 'கவலை' என்ற உருவில் ஜைனர்களின் மனஸில் கிளம்பிற்று. எட்டு மலைகளில் வாழ்ந்துவந்த ஜைனர்கள் எண்ணாயிரவரும் தங்களுக்கு ஜ்வரத்தை அடக்கும் விஷயத்தில் தோல்வி ஏற்பட்டதும், சிவதேசிகர் ஸம்பந்தரை வாதில் வெல்வதற்காக மதுரை வந்தனர். எல்லா சாஸ்த்ரங்களிலும் கரைகண்டவரான ஸம்பந்தரை வாதில் வெல்ல அவர்களால் இயலவில்லை. ஒரு க்ஷண நேரத்திலேயே மேலே எதுவும் சொல்லத் தெரியாமல் திகைத்தனர். சாஸ்த்ரவாதம், யுக்திவாதம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நம்பிக்கைப் பரீக்ஷை மூலம் ஸம்பந்தரை ஜயிக்க விரும்பினர். 'சாக்யமுனி உபதேசித்த அஹிம்ஸைதான் எல்லா ஸம்ஸார தாபத்தையும் போக்கவல்லது. சிவன் பூஜிக்கத் தகுந்தவரல்ல - விபூதி, மங்களமானதல்ல' என்று ஜைனர்கள் தங்கள் கொள்கையை ஏட்டில் எழுதினர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'காமிகாதி ஆகமங்களுடன் வேதங்கள் ப்ரமாணமானவை. (= நம்பத்தகுந்தவை) சங்கரனே எல்லாவற்றையும்விட உயர்ந்தவர். வீடுபெற விரும்புவர்கள் விபூதியே அணியவேண்டும்' என்று ஸம்பந்தரும் தன் கொள்கையை ஏட்டில் எழுதினார். ஜைனர்கள், 'அவரவர் ஸித்தாந்தம் எழுதப்பட்ட ஏடுகளை நெருப்பில் போடுவோம். யாருடைய ஏடு எரிந்துபோகிறதோ அவர் தோற்றவராவார். யாருடைய ஏடு எரியவில்லையோ அவரே ஜயித்தவராவார். ஸர்வஜனங்களும் யாருக்கு ஜயம், யாருக்குத் தோல்வி என்பதைப் பார்க்கட்டும்' என்று கூறினர். 'அப்படியே' என்று ஸம்பந்தநாதர் தன் ஏட்டை நெருப்பிலிட்டார். அது வாடக்கூட இல்லை. ஜைனர்கள் ஏடோ, அவர்களுடைய ஆயுர்லிபியுடன் கூட (= 'இவர்கள் இவ்வளவு காலம் ஜீவிக்க வேண்டியது' என்ற தலையெழுத்துடன் கூட) சீக்ரமாக எரிந்துபோயிற்று. 'தோற்றுப்போனவர் தானாகவே கழுமரத்தில் ஏறவேண்டும்' என்ற பந்தயத்தைத் தாங்களாகவே தெரிவித்து ஜைனர்கள் தாங்கள் எழுதிய இன்னொரு ஏட்டை 'ஜல ஓட்டத்தை எதிர்த்துப் போ' என்று சொல்லி வேகவதீ (வைகை) நதியில் விட்டனர். அது ஸமுத்ரம்வரை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது. ஸம்பந்த குருவின் ஏடோ எதிர்த்து மேற்புறம் சென்றது. உடனே குருசக்ரவர்த்தியின் ஞானஸமுத்ர அலை ஒலிபோல சங்கரகிங்கரர்களின் விஜயாட்டஹாஸம் எங்கும் வ்யாபித்தது. ஜைனர்கள் - நாஸ்திகர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் தாமாகவே கழுவிலேறக் கிளம்பினர். சைவதர்மத்தை அவர்களுக்கு ஸம்பந்தர், போதித்துப் பார்த்தார். கழுவில் ஏறத்தான் அவர்கள் விரும்பினர். 'ப்ராணனைவிடுகிற ப்ராயச்சித்தம் தான் இவர்கள் விஷயத்தில் பொருத்தமானது' என்று ஸம்பந்தரும் அவர்களைக் கழுவேற அனுமதித்துவிட்டார். பாண்டியனும் பரீக்ஷை பார்த்து நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதால் ஸம்பந்தநாதரைச் சரணமடைந்து எல்லாப் பாபத்தையும் அழிக்கவல்லதான - சிவஞானத்தை அளிக்கவல்லதான சிவதீக்ஷையைச் செய்துவைக்கும்படி வேண்டினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசார்யச்ரேஷ்டரும் முதலில் அவனுக்கு அதி⁴வாஸம் செய்துவைத்தார். சுபமான கனவு ஏற்பட்டதால் அவனது சோகம் நீங்கியது. அக்னியில் ஈசனை ஆராதித்து அவருடைய அனுக்ஞைப் பெற்று ஞானபூர்ணர் அரசனை ஈசன் ஸன்னிதிக்கு அழைத்துவந்தார். குருராஜர் அரசனுடைய ஆறு அத்⁴வாக்களையும் (= மார்கங்களையும்) ஐந்து கலைகளையும் பரிசுத்தப்படுத்தி துர்மத தீக்ஷையால் கெட்டுப்போயிருந்த அவனது சரீரகோசத்தையும் க்ஷணமாத்ரத்தில் தூய்மை யாக்கினார். நாடிஸந்திமார்கம் வழியாக அவனுடலில் ப்ரவேசித்து பரிசுத்தமாக்குபவராகக் கருணைக்கடல் குருநாதர், ஜாதியை உத்தரணம் செய்து அவனை சிவஞானநிதியாகச் செய்தார். (புரியாதவையான தீக்ஷா விஷயங்கள் அறிஞர்களிடம் அறியத்தக்கன.) பொருள், உடல், ஹ்ருதயம் எல்லாவற்றையும் குருவின் பாதத்தாமரையில் ஸமர்ப்பித்து, சிவனைப் ப்ரார்த்தித்துக் கொண்டு, சைவமார்க வழிப்போக்கனாக பாண்டியன் பூமியை ஆண்டுவந்தான். அரசன் சைவ நெறிக்கு வந்ததும் குடிமக்கள் அனைவரும் சிவவ்ரதம் கடைபிடிப்பவர் களாகவும் சிவமந்த்ர ஜபத்தில் ஈடுபட்டவர்களாகவும் சிவாகம ஞானமாகிய அம்ருத ரஸத்தின் ருசியறிந்தவர்களாகவும் ஆனார்கள். / குருநாதர் வித்வான்களை அத்யாத்ம வித்யையாலும் (= ஆத்மஸ்வருப போதனையாலும்) மந்தர்களை பலவித உபாஸனைகள் செய்வித்தும் (அதுவும் முடியாத) மற்றவர்களை வெளிப்புற ஸாதனங்களைக் (= புஷ்ப கந்தாதிகளைக்) கொண்டு காயிகமான சிவபூஜை செய்வித்தும் அவரவர் தகுதிக்கேற்ப எல்லாரையும் அனுக்ரஹித்தார். ‘வேதத்தை அத்யயனம் பண்ணு, அதன் பொருளை உணர்ந்து கொள். சிவனை நினை, உடலில் விபூதி அணிந்துகொள், தவங்கள் செய், தேவர்களைக் குறித்து யாகம் செய்' என்று இப்படியாக எல்லா ஜனங்களும் சிவனை ஆராதித்தார்கள். (எல்லா நற் செயல்களுமே சிவானு க்ரஹத்துக்காகச் செய்யப் பட்டன என்பது கருத்து.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஃ 64-வது லீலை - வன்னி-கிணறு-லிங்கம் வரவழைத்து ஸாக்ஷி காட்டியது ஃ

பின்பொரு காலத்தில் மதுரை வாஸியான ஒரு வைச்யதனிகன், தன்னுடைய மாமன்மகளை மணம்புரிந்து கொள்வதற்காகச் சோழதேசத்தை நோக்கிப் புறப்பட்டான். அப்போது மாமனும் மாமியும் காலகதியடைந்திருந்ததால், விவாஹம் செய்யாமல் கன்யையாகவே மாமன்பெண்ணை மதுரைக்கு அழைத்துவந்து தன் பந்துக்களின் அனுமதி பெற்று அவளை மணந்துகொள்ளலாம் என்று எண்ணி அவளுடன் மதுரை நோக்கித் திரும்பினான். நடுவழியில் ஒரு சிவன் கோவிலில் சிவக்ஷேத்ரதீர்த்தாடனம் செய்துவரும் ஸம்பந்த நாதருடன், பாக்யவசத்தால் இவனுக்கு ஸந்திப்பு ஏற்பட்டது. பாம்பு கடித்து இறந்தவன் குருநாதரால் உயிர்ப்பிக்கப் பெற்றான். அங்கேயே மாமன்பெண்ணை மணக்கும்படி குருநாதர் உத்தரவிட்டார். ஸாக்ஷியாக பந்துக்களை வைத்துக்கொண்டு மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தால் வைச்யன் சிறிது தயங்கினான். அவ்வாலயத்திலிருந்த லிங்கம், வன்னிமரம், கிணறு இம்மூன்றையும் ஸாக்ஷிஸ்தானத்தில் வைத்து குருநாதர் வைச்யனுக்கு மாமன்மகள் பாணிக்ரஹ ணத்தை முடித்துவைத்தார். புதுமணப் பெண்ணான அவளை அழைத்துக்கொண்டு மதுரையையடைந்து அந்த வைச்யன், தீனபந்துவான ஹாலாஸ்யநாதரை ஆராதித்துக் கொண்டு ஸுகமாக வாழ்ந்துவந்தான். ஈசன் அருளால் அவளுக்குக் குழந்தைகள் பிறந்தன. / அந்த வைச்யனுக்கு மாமன் மகளைத் தவிர முன்னதாக மணக்கப்பட்ட வேறொரு மனைவி இருந்தாள். அவள் இவளுடைய குழந்தைகளைக் காரணமின்றி வெறுத்தாள். இருவருக்கும் ஒருநாள் கலஹம் ஏற்பட்டது. மூத்தவள் 'நீயாரோ ஒரு வேசைதான். என் வீட்டுக்கு வந்துவிட்டாய். ஏ தாஸியே! உன்னுடைய திருமணத்துக்கு யார் ஸாக்ஷி?' என்று எல்லைமீறி இளையவளை ஏசினாள். உத்தமியான இளையவள் சக்களத்தியின் கொடுஞ்சொல்லைப் பொறுக்கவில்லை. மிக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருத்தப்பட்டு, உஷ்ணமாகக் கண்ணீர் ததும்ப வீட்டைவிட்டு வெளிவந்து ஆபத்பாந்தவன் - ஹாலாஸ்யேசன் பாதத்தை சரணடைந்து 'ஹே சம்போ! என் விவாஹத்துக்கு, வன்னி மரத்துக்கும் கிணற்றுக்கும் அருகில் லிங்கரூபமாக நீர்தான் ஸாக்ஷியாக இருந்தீர். இப்போது என் ஸபத்னீக்கு (=சக்களத்திக்கு) நீர் ஸாக்ஷி சொல்லும். இல்லையேல் உடனேயே இங்கேயே உடம்பை விட்டுவிடுவேன்.' என்று கதறினாள். மஹேசன், ஆகாசவாக்காக ''ஹாலாஸ்யநாதரருகில் வந்து என் பாணிக்ரஹண ஸாக்ஷிகளைப் பார்' என்று பலாத்கார மாக ஸபத்னியை இழுத்துக்கொண்டு வா'' என்று தெரிவித்தார். உடனே அவ்வுத்தமி, அன்புக் கணவனுடனும் பந்துக்களுனுடங் கூட பலாத்காரமாக சக்களத்தியை ஆலயத்துக்கு அழைத்து வந்தாள். அதற்குள் விவாஹ ஸாக்ஷியான லிங்கம், வன்னி, கிணறு மூன்றும் - இதற்கு முன் இல்லாதவை - ஆலயத்துள் ஈசான மூலையில் தோன்றியிருந்தன. வந்தவர்கள் அனைவரும் பார்த்து பயமடைந்தனர். சம்புவின் இந்த அத்புத லீலையைக் கண்டு போகாங்க பூஜை (= அர்தஜாம பூஜை) ஸமயம் அங்கு கூடியிருந்த தேவர்கள் அனைவரும் பக்தியுடன் வணங்கிப் பிறைசூடிப் பிரானை ஸ்தோத்ரம் செய்தனர்.

'வாக்கு - மனஸுக்கு அப்பாற்பட்ட உமது தயை எங்கே? உம்மை அடைவதற்கு சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட - மிகக் கஷ்டப்பட்டு அனுஷ்டிக்கக் கூடிய உபாயமெங்கே? அஹோ! மனிதர்களுக்கே ஜயம். அஹோ! அவர்களிலுங்கூட மிகவும் தீனராக இருப்பவர்க்கே ஜயம். கடினமான நியமானுஷ் டானங்களாலும் எளிதிற் காணக்கிடைக்காத நீர் தீனபந்துவாக இவளது அழுகைக்கு இரங்கிக் காட்சியளிக்கின்றீர்'. 'ரஹஸ்யம்' - 'ரஹஸ்யம்' என்று கோடிக்கணக்கான ஆகமங்களெல்லாம் உம்மை மறைத்து வைத்தது வீண். புராதனமான குருமார்கள் உம்மை மறைத்து வைத்ததும் வீண். அஹோ எல்லா மறைப்பையும் மீறி, இங்கு இம்மூலையில் தீனர்களுக்கு இரங்குதலாகிய பொக்கிஷ சாலையின் த்வாரத்தைத் திறந்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விட்டிருக்கிறீர். (=தீனர்களின் ப்ரார்த்தனைக்கிரங்கி தானாகவே வெளிப்படுகிறீர்)'.

'நீர் பாண்ட்யப்ரியர் என்பதை அறிந்து உமாதேவியே பாண்ட்யனின் பெண்ணாகத் தோன்றினாள். எங்களைப் பற்றிக் கேட்பானேன். பாண்ட்யதேசத்தில் வலியன் பக்ஷியாகவோ (=கரிக்குருவியாகவோ) நாரையாகவோ பன்றிக் குட்டிகளாக வோ பிறப்போமாக. (இவற்றிற்கெல்லாம் உமது அனுக்ரஹம் கிடைத்துள்ளது)' / 'நீரே முதலில் மிகவும் ம்ருதுவானவர். (இரக்கஸ்வபாவமுள்ளவர்) உமது க்ருஹிணீ மீனாக்ஷியோ இன்னும் ம்ருதுவானவள். இப்படியே போய்க்கொண்டிருந்தால் இப்பொழுதேயோ அல்லது முடிவிலோ உங்கள் இருவருக்கும் உடல்தான் (இருவருக்கும் ஒரு உடல்தான்) மிஞ்சப்போகிறது'.

'மோக்ஷமளிப்பதாக பாண்டியதேசபதி-ஸுந்தரேசர் நீரும் காசிபதி விச்வநாதரும் இருவரும் ப்ரதிக்ஞை செய்துள்ளீர். உம்மிருவருக்குள், மரணகாலத்தில் உபதேசம் செய்து சிஷ்யர்களுக்கு மட்டும் மோக்ஷமளிப்பவர் காசிபதி விச்வநாதர். சிஷ்யனோ, சிஷ்யனில்லையோ எல்லாருக்குமே மோக்ஷமளிப்பது நீர்தான்.'

'வேதாந்தச்ரவணம், மனனம், நிதித்யாஸனம் என்றிவ்வாறுள்ள மோக்ஷத்துக்கான வழிமுறை மிக நீண்டகாலம் பழக வேண்டியிருக்கிறதென்று - இவ்வளவும் செய்வது நம்மால் இயலாது - என்று மோக்ஷத்தை, எட்டாத வஸ்துவாக நினைத்து நெடுநாளாக மோக்ஷமடையவதற்கான முயற்சியையே கைவிட்டுவிட்டோம். ஈசனே! இப்போது தான் மிகக்கடினமான மோக்ஷவழி முறையைக் கூறுகிறவாக்யத்தின் எஞ்சியபாகமான 'மதுராம் வினா' (= மதுரையைத் தவிற) என்ற 'பஞ்சாக்ஷரீ' அறியப்பெற்றது. (எழுத்துகளை எண்ணும்போது உயிரெழுத்துக்கள்தான் கணக்கில் சேரும்). (மதுரை ஸேவிகளுக்கு ஸுந்தரேசன் தயாமூர்த்தியாகத் தானே எளிவந்து அனுக்ரஹிப்பதால் அவர்கள் ச்ரமப்படாமலே மோக்ஷமடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முடியும். மிகக் கடினமானவழி மற்ற இடத்தவருக்குத்தான். ஆகவே மோக்ஷத்துக்கு எளியவழியாக மதுரை ஸுந்தரேச ஸேவை இருக்கிறதென்பது இப்போதுதான் புரிந்தது.)'

'எந்தெந்த ஜனங்கள் எதை எதைப் ப்ரார்த்தித்தாலும் அதை அதை 'ஓம்' என்று (= அப்படியே என்று) அனுமதித்து வஞ்சனையின்றி எதிலுந் தனக்கென்ற ஆசையின்றி எல்லா வற்றையும் அளித்துவருவதால்தான் உமக்கு 'ஓம்' என்றே பெயர் ஏற்பட்டு விட்டதோ?'

''ஈசனே! உமது தத்வம் அனாஹதத்தில் (= அடித்துக் கிளப்பப்படாத ஒலியில்) தேடவேண்டியது என்ன இருக்கிறது? (பேசும் வார்த்தையும் தாள-மத்தளாதி ஒலிகளைப் போல் அடித்துக்கிளப்பியதுதான். ஒருவன் பேச நினைக்கும்போது அவன் மனம் ஜாடராக்னியை உந்துகிறது. அந்த அக்னி, ப்ராணவாயுவைக் கிளப்புகிறது. அது மார்பில் ஸஞ்சரித்து த்வனியை உண்டுபண்ணுகிறது என்று பேச்சுத்வனி ஏற்படும் விதம். பேசும் வார்த்தையையும் மத்தளம் சங்கம் தாளம் வீணை - குழல் - உளி, செம்மட்டி முதலியதால் ஏற்படும் த்வனியையும் போல் ஆஹதமாக (=அடித்துக் கிளப்பியதாக) இல்லாமல் 'அனாஹதமான (= எந்தத் தூண்டுதலுமின்றி, தானே ஒலிக்கும்) ஒலி ஒன்று உள்ளது. சிவதத்வம் அதில் இருக்கிறது. சிவதத்வத்தை அனாஹத ஒலியில் தான் தேட வேண்டும்' என்று உபதேசித்து, இப்படிக் கடினமான வழியைக் கூறுவதன் மூலம் ஆகமங்கள் எங்களை வஞ்சித்துவிட்டன. அ[illegible]ற்றை நம்பி 'இது நம்மாலியலாது' என்று நம்பிக்கையிழந்து கெட்டோம். அனாஹதத்தில் தேடத்தக்கதாக ஆகமங்களால் கூறப்பட்ட அதே தத்வம் இங்கு மதுரையில் பாண்டியன் பிரம்பால் ஏற்பட்ட ஆஹதத்திலேயே (=அடியிலேயே) ஸ்பஷ்டமாகக் காணப் பட்டது.'

'ஸுந்தரேசரே! (வேதங்களில் உமது ஸ்வரூபம் அறிவுமயம் ஆனந்தமயம் என்று கூறப்பட்டிருந்த போதிலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதங்களும் அறியாத) சுத்தமான தயாரூபம் தான் இங்குள்ள உமது ஸ்வரூபம் என்று நாங்கள் உம்முடைய ஸ்வரூபலக்ஷணங் காண்கிறோம். (உலகங்களின் உத்பத்தி - ஸ்திதி - லயங்களுக்குக் காரணமாயிருத்தல் பரமாத்மா - உமக்கு தடஸ்த லக்ஷணமாக வேதங்களில் கூறப்பட்டுள்ளது.) ஏ கருணைக் கடலே! நாங்களோ கதம்பமரத்தடியே தடஸ்தலக்ஷண மென்று அறிகிறோம்.' (இதுவிவரம் ச்லோகத்துடன் பக்(29)ல் காண்க.)

'உம்முடைய ப்ரியக்ஷேத்ரமான மதுரையை அடைந்த வுடனேயே இந்த்ரனுக்கு வ்ருத்ரஹத்யா தோஷம் விலகி ஓடிற்று' என்று இவ்வாறு தொடங்கி ஈசன் செய்த 64 லீலைகளையுங் குறிப்பிட்டு, 'எவ்வளவோ கணக்கற்ற லீலைகள் இருந்த போதிலும் உமது இந்த அறுபத்து நான்கு லீலைகள் புராணத்தில் கூறப்பட்டுள்ளன. அப்பேர்ப்பட்ட (=மிக எளியவராய் வந்து எல்லாருக்கும் அனுக்ரஹம் செய்கிற - மூவுலகும் கடைத்தேற ஒரே பிடிப்பாக உள்ள - கபடமற்ற கருணாம்ருத நிதியான உம்மைவிட்டுவிட்டு மற்ற அற்பர்களால் ஆகவேண்டியது எமக்கு என்ன இருக்கிறது? ஹே சம்போ!' என்று தேவர்கள் ஸ்துதித்ததைக் கேட்டு ஈசன் மகிழ்ந்தார். / அந்த வைச்யகுல உத்தமியை அவள் பூமியில் நீண்ட காலம் ஸுகமனுபவித்தபிறகு அவளுடைய கணவனுடன் கூட கருணைமனங் கொண்ட ஈசன் சிவலோகமழைத்துச் சென்றார்.

இவ்வாறாக மீனாக்ஷிதேவியின் துணைகொண்டு கதம்ப மரத்தடியில் மூவுலகத்தாரிடமும் இரக்கங்கொண்டு குடிமக்களு டைய எல்லாத் துயரங்களையும் போக்கிக் கொண்டு ஸுந்தரேசர் விளங்கிவருகிறார்.

காவ்யமுடிவில் கவி, வேதாந்தத்தில் ''ஆத்மா காணத் தக்கவர். ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிக் கேட்க வேண்டும், மனனம் பண்ணவேண்டும், நிதித்யாஸனம் பண்ணவேண்டும்' என்று சொல்லப்பட்டது போல் சொல்கிறார் -

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ச்ரோதவ்யந் நிதி4ரஸ்தி கோ(அ)பி நிஹிதோ ஹாலாஸ்ய இத்யக்3ரதோ / மந்தவ்யம் ஸ நிதி4ர் ஜக3ந்நிதி4ரிதி ந்யாயைரதே2ாச்1ச1ாவசெ1: । த்4யாதவ்யம் ஹ்ரு1தி3 மூலலிங்க3மத2 ச1 ஸ்ரீ ஸுந்த3ரேசாபி4த4ம் / த்3ரஷ்டவ்யம் சப2ரேக்ஷணாஸஹச1ரம் தத்த்வம் பரம் சாங்கரம் ॥

முதலில் 'ஹாலாஸ்ய க்ஷேத்ரத்தில் ஒரு நிதி (= புதைபல்) உள்ளது' என்று கேட்டறிய வேண்டும். பிறகு அந்த நிதி ஜகத்துக்கெல்லாம் இருப்பிடமானது என்று பலவித நியாயங்களால் (= யுக்திகளால்) மனனம் (= விசாரம்) பன்னி அறியவேண்டும். ஸ்ரீ ஸுந்தரேசர் எனப் பெயர்கொண்ட மூலலிங்கத்தை மனஸில் த்யானம் பண்ணவேண்டும். மீனாக்ஷி யுடன் கூடியதான-மேலானதான சங்கரனின் தத்வத்தை = உண்மை நிலையைப் பார்க்கவேண்டும்.

மீனாக்ஷியைப் பிரார்த்திக்கிறார். 'ஹே மீனாக்ஷி! ஹாலாஸ்யநாதன் - இளம்பிறை சூடி - ஸுந்தரேசரின் இந்த அறுபத்து நான்கு லீலைகள் காவ்யவடிவில் கூறப்பட்டவைகளை (= சிவலீலார்ணவ காவ்யத்தை) ஈசனுடைய காது - மூலத்தில் விழச்செய்து நீலகண்டனாகிய என்னிடத்தில் நீண்டகாலம் தயைபுரிவாய்.

அவையடக்கம். - 'என்னால் ரஸமற்றதான க்ருதி ஸமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது' என்பது யாருடைய தோஷம்? அது பவானியினுடைய - உமாதேவியினுடைய தோஷந்தான். அழகான (ரஸந்ததும்புங்) க்ரு1தியைத்தான் நான் ஸமர்ப்பிக்க வேண்டுமென்று அவள் விரும்பினால், அம்மாதிரியாக அனுக்ரஹம் செய்யட்டுமே. அவள் அப்படி அனுக்ரஹிப்பதை யார் தடுக்கிறார்கள்?

மா பூ4வன் நவ ச1 ரஸா: கவிப்ரதீதா: / காவ்யே(அ) ஸ்மின் பத3கமலார்ப்பிதே புராரே: । ஆஸ்தே து த்4ருவமகி2லாபி4நந் த3னீயா / காருண்யாம்ரு1தரஸ-கந்த3ளீ ஜனன்யா: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவனுடைய பாதகமலங்களில் ஸமர்ப்பிக்கப்பட்ட இந்தக் காவ்யத்தில் கவிப்ரஸித்தமான ஒன்பது ரஸங்களும் இல்லாவிட்டால் வேண்டாம். நிச்சயமாக அனைவராலும் கொண்டாடி வரவேற்கத்தக்கதான ஜகன்மாதாவின் கருணாரஸக்கொழுந்து இதில் இருக்கிறது. இதில் மாதாவின் கருணாரஸம் கொழுந்து விட்டுச் செழித்திருக்கிறது. (அது ஒன்றே போதும்.)

ஸ்ரீ ஜயதேவர் கீதகோவிந்த - அஷ்டபதியில் கூறியதுபோல் கூறுகிறார். - 'நண்பனே! ஹாலாஸ்யநாதர் - ஸுந்தரேசரின் லீலைகளை நீ கேட்க விரும்பினால், அல்லது எல்லா சாஸ்த்ரங்களிலும் மறைத்து வைக்கப்பட்டதான ஈசனுடைய தத்வத்தை (= உண்மைநிலையை) நீ அறிய விரும்பினால், அல்லது காவ்ய ஸம்ப்ரதாயப்ரவாஹங்களுடைய மறு கரையைக் காண நீ விரும்பினால் அப்போது நீல கண்டதீக்ஷிதருடைய சிவனையே சார்ந்ததான வாக்கை காதில் வைப்பாயாக. (=காது கொடுத்து கவனமாய்க் கேட்பாயாக.) இதைக் கேட்பது ஒன்றினாலேயே இந்த விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்.

ஹாலாஸ்யேசிதுரீசிதுர் யதி[3] ஸகே[2] லீலாஸு சுச்ரூஷஸே /
தத் ஸர்வாக[3]மகு[2]ப்தமஸ்ய யதி[3] வா தத்த்வம் விஜிஜ்ஞாஸஸே।
பாரம் வாத[2] தி[3]த்[3]ரு[1]க்ஷஸே யதி[3]பரம் காவ்யாக[3] ம -
ஸ்ரோதஸாம் / தத் கர்ணே குரு நீலகண்ட[2]மகி[2]னோ வாச[1]ம் சிவைகாச்ரயாம் ॥

ஸமர்ப்பணம்

மயத்[4]வஜ-பாண்ட்ய-கன்யகா - / ச[1]ரணத்[3]வந்த்[3]வநிவேசி - தத்மனா। சிவயோ: கவினேத[3] மர்ப்பிதம் / சிவலீலார்ணவ-கவ்யமத்[3]பு[4]தம் ॥ பொருள் பக் (1)ல்

சுபம் : ஸ்ரீராமராமராம.

❀ ❀ ❀

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுலோகங்களின் அகரவரிசை

அத2பு4வி	58
அத்3ரு1ஷ்டச1ரம்	172
அநாயதப்ராணம்	1
அம்ப3 ஸ்வித்3யதி	190
அம்ப3ாம்பே3த்யம்ரு1த	54
அம்போ4பி4:கேவலைெ:	148
அர்த4ம் பௌருஷம்	193
அர்தே4 தனோ:	3
அசக்யமங்கா3ந்தரவத்	2
அஸ்துவன் க்வச1ன	64
அஸ்மத்தோ ப3ஹுூதா4	195
ஆகே2டத4ர்மம்	193
ஆதி3மம் ரஸம்	86
ஆநம்யாநம்ய	194
ஆமந்த்ர்ய த்3விரதே2ந்த்3ர	32
ஆமுக்தகஞ்சு1கம்	75
ஆமுக்த மஞ்ஜீரம்	96
ஆமோத3தே ப3த	72
இதி கலசப4வேன	60

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உதா3த்தேஷ்வாரோஹன்	180
கடாக்ஷ மாத்ரேண	60
கரயுக்3மஸம்யமித	153
கஸ்தூரீஹிமவாலுகா	120
க்ரு1பாநிதி4ஸ் தத3னு	163
க்ரு1ஷ்ணார்ஜுனா ப்4யாம்	16
கேந்த்3ரே ச1ந்த்3ரே	110
கைலாஸாத்3ரிம்	105
க்ரந்த3த்3 க3ந்த4	113
க்வாஹங் க்வ காவ்யம்	4
க்ஷிதிபதிரதே2சானம்	172
காம்பீ4ர்யேண	141
க4டிதமகி2லம்	88
சி1த்3ரூபமாநந்தமயஞ்ச	15
சூ1டா3ப3த்3த4பு4ஜங்க3	186
ச2த்ரமேகதரம்	64
ஜானாஸி புஷ்பக3ந்தா4ன்	167
ஜ்ஞானாஜ்ஞான	169
தத3னு தமுப க்3ம்ய	171
தபஸ்வினாமவன	158

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தஸ்தம்பி4ரே ச1	87
த்ரு1ணீக்ரு1தே யத்ர	13
த்ராணே யோ (அ) தி4 க்ரு1த:	191
த3த்3ரு1சே கில	
தே3வம் வந்தே3	142
தே3வா து3ரதரம்	190
த்3விஜராஜசிரோமணே:	37
தூ4ளீதூ4ஸரிதம்	189
த்4யாயந்த்4ாயம்	188
ந யத்3திச1ரிதம்	62
நாச1க்ஷதே ந	76
நிகி2லஜனிமதாம்	58
பத்3ப்4யாம் கிம்	180
பரிபூரிதாம் சிசிர	148
பாண்ட்3யராஜ து3ஹிது:	86
பாண்ட்3யாத்4யக்ஷ:	106
பாண்ட்3யேன	196
பாண்ட்யோ த3ண்ட3யிதாஸ்து	192
புஷ்கரைரபி4ஷி ச்1யேசௌ	36
ப்ரசு1க்ருசுர் த்3விஜா:	37

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ரதிகரிபரிசங்கி	80
ப்ரவஸஸி யதி^{3}	61
ப்ரசிதி^{2}லகலுஷம்	56
ப்ரஹஸத்^{3}வத^{3}னம்	28
ப்ரஹ்ரு^{1}தம் ப்ரஹ்ரு^{1}தமிதி	196
ப்ராக^{3}ம்ப^{3}யாத^{2}	12
ப்ராகே^{3}வ பாண்ட்யதனயா	73
ப்ரேயஸ்யா ஸவித^{4}ம்	55
ப^{3}த்^{3}த^{4}ந் தத^{2}ா	132
பே^{4}ரீபா^{4}ங்கார ஸாந்த்^{3}ரம்	97
மலயத்^{4}வஜ பாண்ட்^{3}ய கன்யகா	1
மஹாமாயாஜாலம்	172
மா பூ^{4}வன் நவ ச^{1}	208
ம்ரு^{1}கா^{3}ங்க சூ^{1}டா^{3}மணி	45
மௌர்வீமூர்த்^{4}னி	29
யதி^{3} மருத்^{3}விஜிதோ விஜிதம்	180
யாம் ஸர்வரத்னைக க^{2}னிம்	10
யே ஹ்யுச்^{1}சா^{1}வச^{1}ம்	52
ரத்னானி தத்ரவணிஜ:	75
லீலாத^{4}ாரித	197

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வபுச்5சி1தா3நந்த3மயம்	92
விது4: கலங்கீ	136
விசுத்3த4 முக்தா ப2ல	91
விஹ்ரு1திஷு பிதரௌ	57
வேத்ராஹதிமதி கோ4ராம்	194
வேத்ராஹதிம் விப4க்தும்	194
வோட4வ்யானி வஹானி தே	195
வோடு4ம் ப்ரவ்ரு1த்தே	192
சாகா2ஸு சாகா2ஸு	12
சிவம் யஜ்ஞாக்3னௌ	44
சிவார்ப்பிதாசேஷப4ரா:	46
ச்ருதிஷு நிஹித	58
ச்ரோதவ்யம்	207
ஸது கதா3ச1ன	166
ஸப்தமோ மலய த்4வஜஸ்ய	130
ஸமந்தோ ஜக3தி	162
ஸ ஹஸன் னச1லேன	127
ஸுப்ராதமஸ்து	72
ஸுரவாஹினீலஹரி	144
ஸ்தனந்த4யந் தே3வம்	132

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்வபனே கதா3சி1த்	147
ஸ்வேத3ரஜ்யத3ளிகாந்த	69
ஹஸ்தே க்3ரு1ஹீதாம்	56
ஹாலாஸ்யேசி து:	208
ஹே ஸந்த: ச்ரு1ணுத	187

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீராமராமராம

அனுபந்தம் - 1 கவிகளின் கருத்தொற்றுமை

ஸ்ரீச1க்ரகவியின் அர்த4நாரீச த்4யானம் :-

வந்தே3 வபுஸ் தத் க4டிதம் விசித்ர - / மர்தே4ன ச்ரு1ங்க3ார-தரங்கிதேன। அர்தே4ன ச1 க்ஷவேள கராள-காள- / பு4ஜங்க3 - ஸங்கா4த-ப4யங்கரேண ॥

ஐக்யஸ்ய தேஜஸ்தமஸோஸ் ஸமான-/ மாச1க்ஷதே யத்3 பு4வனே ஸுதீ4ந்த்3ரா:। ஸ்த்ரீத்வஸ்ய பும்ஸ்த்வஸ்ய ச1 ஸந்ததந் த- / த3பூர்வமைகாதி4கரண்யமீடே3 ॥

ச்ருங்காரரஸம் அலைமோதும் ஒரு பாதியும் விஷத்தினால் பயங்கரமான க்ருஷ்ண ஸர்ப்பக் கூட்டங்களால் பயமுறுத்துகிற மறுபாதியும் இணைந்துள்ள விசித்திரமான தேஹத்தை வணங்குகிறேன்.

உலகில் அறிவாளிகள் ஒளியும் இருட்டும் இணைந்து ஒன்றாவதற் கொப்பானதாகக் கூறுகிறதான அபூர்வமான பெண்மை - ஆண்மை இரண்டினுடைய ஓரிடத்திருக்குந் தன்மையை எப்போதும் ஸ்துதிக்கிறேன். அர்தநாரீசரை ஸ்துதிக்கிறேன் என்றுதான் கருத்து.

ஸ்ரீஅனந்தகவி - பாரதசம்பூ - வேடவுரு - சிவனுக்கும் அர்ஜுனனுக்கும் சண்டையில் அர்தநாரீசரை நினைவுறுத்துதல் - பருஷே முனி-முஷ்டி-தாட3னே / பதிதே லுப்3த4க-வாம-வக்ஷஸி। சிதி2லா ஜக3ளு: கிராதிகாயா: / ஸித-கு3ஞ்ஜா மணி-ஹார-யஷ்டய: ॥

கரடுமுரடான அர்ஜுன முனியின் முஷ்டிக்குத்து வேடனுடைய இடதுமார்பில் விழுந்த போது, வேட்டுவச்சியின் வெள்ளைக்குன்றுமணி மாலைவடங்கள் சிதறி விழுந்தன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிரம்படிப்பட்ட ஸ்துதியில் 'பாண்டியன்தான் அடித்தானென்றால் பாண்டியனின் புத்ரி எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்?... பக் (192) என்ற இடங்காண்க.

சிவலீலார்ணவ மங்கள ச்லோகத்தில் 'மற்ற அங்கங்களைப் போல், அணுவளவான அர்தநாரீசர் மனஸை இருபாகமாய்ப் பிரிக்க இயலாது' என்று கூறியதுபோல், பிரிக்கக் கூடியதிலும், துளிக்கூட ஏற்றத்தாழ்வின்றி ஸரிபாதியாகப் பிரிப்பதில் விவாதம் வந்தது என்று சங்கர நாராயண - த்யான பரமான ஒரு ச்லோகம் -

ஸ்ப^{2}டிக-மரகதஸ்ரீ-ஹாரிணோ: ப்ரீதியோக^{3}ாத் / தத^{3}வது
வபுரேகங் காம-கம்ஸ- த்^{3}விஷோர் வ: । ப^{4}வதி கி^{3}ரிஸுதாயா:
ஸார்த^{4}மம் பே^{4}ாதி^{4}-புத்ர்யா / ஸத்^{3}ரு^{1}ச-மஹஸி கண்டே^{2}
யத்ர ஸீமா-விவாத^{3}: ॥

ஸ்படிக நிறங்கொண்டவர் மன்மத சத்ரு-சிவன், மரகத நிறங்கொண்டவர் கம்ஸசத்ரு-விஷ்ணு. இருவரும் பரஸ்பர ப்ரீதியால் ஒருருக் கொண்டவராயிருக்கின்றனர். வலப்புறம் ஸ்படிக நிறம் - இடப்புறம் மரகத நிறங்கொண்ட ஒரே தேஹம். அதில் ஸ்படிக நிறபாகம் தன்னுடையது என்று மலைமகள் = பார்வதி பிரித்துக் கொள்கிறாள். மரகத நிறபாகத்தை ஸமுத்ர புத்ரி = லக்ஷ்மி தன்னுடையதென்று எடுத்துக்கொள்கிறாள். முகம், மார்பு, வயிறு போன்ற பாகங்களில் விவாதமே இல்லை - நிறமே ஸரிபாதியாய்ப் பிரித்துக் கொடுக்கிறது. கழுத்தை மட்டும் ஸரி பாதியாய்ப் பிரிக்கும்போது (சிவனுடையதும் விஷத்தால் நிறம் மாறி முழுவதுமே விஷ்ணுவோடத்த ஒரே நிறமாயிருப்பதால்) அளவிடுவதில் எல்லை விவாதம் ஏற்படுகிறது. அப்பேர்ப்பட்ட ஸ்ரீசங்கரநாராயணர்களின் தேஹம் நம்மைக் காப்பாற்றட்டும். கொடிய விஷமருந்தி வெளியுலகையும் அது கழுத்துக்குக் கீழ் இறங்காமல் செய்து குக்ஷியிலுள்ளதையுங் காத்த நீலகண்டரின் ஸ்மரணம் இதில் வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போஜப்ரபந்தத்தில் ஒரு ரஸமான ச்லோகம், போஜனைப் பார்த்து ஓர் ஏழைக்கவியின் வசனமாக அமைந்துள்ளது -

அர்த^{4}ந் தா^{3}னவ-வைரிணா கி^{3}ரிஜயாப்யர்த^{4}ம் சிவஸ்யா
ஹ்ரு^{1}தம் / தே^{3}வேத்த^{2}ஞ் ஜக^{3}தீதலே புரஹராபா^{4}வே
ஸமுன்மீலதி। க^{3}ங்கா^{3} ஸாக^{3}ரமம்ப^{3}ரம் சசிகலா நாகா^{3}தி^{4}ப:
க்ஷ்மாதலம் / ஸர்வஜ்ஞத்வமதீ^{4}ச்வரத்வமக^{3}மத் த்வாம் மாஞ்ச^{1}
பிக்ஷாடனம் ॥

ஏ போஜதேவனே! சிவனுடைய பாதி பாகம் அஸுர சத்ருவான விஷ்ணுவால் அபஹரிக்கப்பட்டது. மலைமகளாலும் சிவனுடைய பாதிபாகம் அபஹரிக்கப்பட்டது. இவ்வாறு உலகில் சிவன் இல்லாமல் போய்விடவும் அவரிடமிருந்த பொருள்-குணம்-செயல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடஞ்சென்றன. கங்கை ஸாகரத்தை அடைந்தாள். சந்த்ரகலை ஆகாசத்தை அடைந்தது. நாகராஜன் பூதலத்தை அடைந்தான். எல்லாமறியுந் தன்மையும் எல்லாவற்றையும் அடக்கியாளுந் தன்மையும் உன்னை அடைந்தன. 'பிச்சைக்கு அலைதல்' என்னை அடைந்தது. (போஜராஜனை 'நீ எல்லாமறிந்தவன், எல்லா சக்தியும் பெற்றவன்' என்று ஸ்துதிப்பது போல் உள்ளது இது. ஆனால் 'ஸர்வக்ஞனானபடியால் வேறு பிழைப்பின்றி நான் பிச்சை வாங்கித் துன்புறுவது உனக்கு நன்றாய்த் தெரியும். ஸர்வ சக்தனானபடியால் எனது துன்பத்தைத் துடைத்து என்னை மகிழ்விக்கவும் உன்னால் முடியும். அப்படிச் செய்யாமல் வாளாவிருப்பது முறையல்ல' என்ற ஏசுதலும் இதில் புலப்படுகிறது)

ஸ்ரீமல்லிநாதர் மங்கள ச்லோகம் :-

மாதாபித்ரு^{1}ப்^{4}யாஞ் ஜக^{3}தோ நமோ வாமார்த^{4} ஜானயே।
ஸத்^{3}யோ த^{3}க்ஷிண-த்^{3}ரு^{1}க்-பாத-ஸங்குச^{1}த்^{3}-
வாமத்^{3}ரு^{1}ஷ்டயே ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வலது கண்பார்வை விழுந்தவுடன் (வெட்கத்தால்) ஸங்கோசமடைகிற இடது கண்ணை உடையவரான - ஜகத்துக்கு தாய்தந்தையராக இருக்கிற (ஆனால் இரண்டுபேராக இல்லாமல் ஒருருவாயிருக்கிற) - இடது பாதியை மனைவியாகக் கொண்டவருக்கு (-அர்தநாரீசருக்கு) நமஸ்காரம்.

ஸ்ரீரமணர்சிஷ்யர் - ஸ்ரீகணபதி சாஸ்த்ரிகளின் உமாஸஹஸ்ரத்தில் ஒரு ச்லோகம் -

இத: பீத்வா குச[1]ம் ஸ்கந்தே[3] ப்ரஸாரிதகரே தத: । ஜயதி
ஸ்மிதமுத்[3]பூ[4]தம் சிவயோரேக தேஹயோ: ॥

ஸ்கந்தன் இந்த பாகத்தில் பால் குடித்துவிட்டு அந்த பாகத்தில் கையை நீட்டும்போது ஒருருவாய் (-அர்தநாரீச ரூபமாய்) இருக்கிற சிவை-சிவன் இருவருக்கும் ஏற்பட்ட புன்சிரிப்பு ஜயிக்கிறது - எல்லாவற்றிலுமுயர்ந்ததாயிருக்கிறது (பக்தர்களுக்கு ஜயமளிக்கிறது).

பிரம்படிபடுதல் முதலியது பற்றியவை - தமிழில் :

ஸ்ரீராமச்சந்திரக் கவிராயர் பாடல் :-

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும், வாசல் தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணுஞ், செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணுந், தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேனப்பா, கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன், கொடுங்காலால் உதைத்த புண்ணுங் கோபமாகப், பஞ்சவரி லொருவன் வில்லாலடித்த புண்ணும், பார் என்றே காட்டி நின்றான் பரமன் தானே.

சொக்கநாதப் புலவர் பாடல் :-

[1]செல்லாரும் பொழில் புடை சூழ் புலியூர் அம்பலவாண தேவா!
உம்மைக், கல்லாலும் வில்லாலுஞ் செருப்பாலும்
பிரம்பினாலுங் கடிந்து சாடும், எல்லாரும் நல்லவ
ரென்றெண்ணி அருள் ஈந்ததென்ன? இகழ்ச்சியொன்றுஞ்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொல்லாமல் மலரைவிட்டு எறிந்தவனைக் காய்ந்த தென்ன? சொல்லுவீரே.

1 = மேகந்தவழும் தோப்புகள் சூழ்ந்துள்ள - வ்யாக்ரபுரம் எனப்படும் சிதம்பரத்திலுள்ள ஸபாபதியே!

படிக்காசுத் தம்பிரான் பாடல் :-

கல்லடிக்குமுளியிரண்டு காதடிக்குள் ளடிப்பதெனக்
கவிதைகேட்டுப், பல்லடிக்குக் கிடுகிடெனப் பறையடிக்கும்
நெஞ்சர்தமைப் பாடுவேனோ? வில்லடிக்கும் பிரம்படிக்கும்
கல்லடிக்கும் விரும்பி நின்ற மெய்யன் ஈன்ற, செல்லடிக்குந்
தடவரையில் சேறடிக்க அலையடிக்குஞ் செந்திலானே!

(பெற்ற) தந்தைதாயிருந்தால் உலகத்தில் உமக்கிந்தத் தாழ்வெல்லாம் வருமோ ஐயா! கல்லால் ஒருவன் அடிக்க வில்லால் ஒருவன் அடிக்க ... என்று ஒரு கீதம். பிரம்படி ஸ்துதியில் ('இந்த அந்யாயத்தை யாரிடம் முறையிடுவீர், நாதனற்றவராயிருக்கிறீர்' என்ற இடங்காண்க. பக் (199)

''பிட்டுக்கு மண் சுமந்த ... ஈசரே - கையால்
பிரம்படி பட்ட பரமேசரே''. என்றும் ஒன்று.

அனுபந்தம் - 2 வ்ரு1த்த விளக்கம்

மங்களம்

வாரணானன மிஷ்ட-ஸித்3தி4த3மிந்து3-மௌளி-வராத்மஜம் /
பார்வதீ-கர-லாலிதம் ப4வ-ப3ந்த4-ஹ்ரு1த்-பத3-வந்த3னம் ॥
விக்4ன-ஹஸ்தி-விஹஸ்தனே ம்ரு1க3-நாயகாயிதமீச்வரம் /
ப4க்த-சி1த்த-விசோத4கம் கு3ஹ-தோஷகம் ஹ்ரு1தி3
ப4ாவயே ॥

இஷ்ட ஸித்தியளிப்பவரும் சந்த்ரமௌளீசரின் உயர்புதல்வரும் பார்வதியின் கைகளால் லாலனை செய்யப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பட்டவரும், ஸம்ஸார பந்தத்தைப் போக்கும் பாதவந்தனமுடைய வரும் (=தன் பாதங்களில் வந்தனம் செய்பவர்களுடைய ஸம்ஸார பந்தத்தைப் போக்கி யருள்பவரும்) விக்னங்களாகிய யானைகளைச் செயலிழக்கச் செய்வதில் ம்ருகபதி (=ஸிம்மம்) போலிருப்பவரும் எல்லாம் வல்லவரும் பக்தர்களின் சித்தத்தைத் தூய்மையாக்குபவரும் குஹனை மகிழ்விப்பவருமான கஜானனரை ஹ்ருதயத்தில் த்யானிக்கிறேன். 5-5-5-3 என்று படிக்கவேண்டியது. ஹரிணப்லுதவ்ரு^{1}த்தம். விளக்கம், (அனு. பக்31) 18 எழுத்துள்ள பாதங் கொண்டவையின் வரிசையில் வரும்.

விக்^{4}னராஜ-வரானுஜங் கு^{3}ஹமக்^{3}னிஜம் சிவயோஸ் ஸுதம் /
தே^{3}வஸிந்து^{4} - சரோத்^{3}ப^{4}வம் சுப^{4}-க்ரு^{1}த்திகா - பரிவர்தி^{4}தம் ।
ஶூரக^{3}ர்வ-நிப^{3}ர்ஹணம் சிகி^{2}வாஹனம் ஸுக^{2}சி^{1}த்^{3}க^{4}னம் /
தூ^{3}ர-தூ^{4}த-நதாக^{4}மாச்ரய பே^{3}ாத^{4}த^{3}ம் ஹரிஜாபதிம் ॥

(மனமே!) விக்னராஜருடைய மேலான தம்பியும் அக்னியிலிருந்து தோன்றியவரும் சிவை, சிவன் இருவரின் புதல்வரும், தேவநதி கங்கையில் நாணலில் உண்டானவரும் சுபமான க்ருத்திகைகளால் வளர்க்கப்பட்டவரும் ஶூரபத்மனின் கர்வத்தைப் போக்கியவரும் மயில் வாஹனரும் ஸுகமும் அறிவுமே உருவெடுத்துள்ளவரும் வணங்குவோரின் பாபங்களைத் தூர உதறித் தள்ளுபவரும் ஆத்மஜ்ஞான மளிப்பவரும் இரு ஹரிகளின் புத்ரிகளுக்கு (=விஷ்ணு அம்சமான ரிஷி; இந்த்ரன் இவர்களின் புத்ரிகளுக்கு = வள்ளி தேவஸேனைகளுக்கு) கணவனுமான குஹனை (=ஹ்ருத யகுஹா வாஸியான பரம்பொருளை) ஆச்ரயிப்பாயாக = சரணடைவாயாக.

கந்த புராணம், வள்ளியைச் 'செங்கண் மாலுதவும் பாவை' என்கிறது. ஹரி=விஷ்ணு. இங்கு 'ஹரி=விஷ்ணுவின் அம்சமான ரிஷி' என்று கொள்ளவேண்டும். இந்த ரிஷி தபஸ் கலைந்து ஒரு க்ஷண நேரம் லக்ஷ்மியின் அம்சமான ஒரு மானை ஆவலுடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்த்தபோது அது உடனே கர்பந் தரித்து உடனேயே வள்ளிக்காட்டில் ஒரு பெண் குழந்தையை ஈன்றுவிட்டுச் சென்றது. ரிஷி பழையபடி தபஸ்ஸில் ஆழ்ந்துவிட்டார். நம்பிராஜன் என்கிற வேடஅரசன் வள்ளிக் காட்டில் கிடந்த குழந்தையை எடுத்து வள்ளி என்று பெயர் வைத்து வளர்த்தான். ஹரி=இந்த்ரன். (1-வது லீலையில் இந்த்ரன் மீனாக்ஷியைத் துதிக்குமிடங் காண்க பக் (31). இந்த்ரனின் பெண்-தேவஸேனை.

காமாக்ஷி-ஏகாம்ரநாதர்

அந்திகாக^{3}த-ஸௌரஸௌந்த^{4}வ-பூரபீ^{4}த-ஹிமாத்^{3}ரிஜா- / ப்ரேம-ஸம்ப்^{4}ரம - தூர்ண-கல்ப்பித- ப^{3}ாஹூ-ப^{3}ந்த^{4}ன-முத்^{3}ரிதம் । பாணிபீட^{3}ன - லஜ்ஜயாதி^{4}க-ஸுந்த^{3}ராననயானயா / நம்ர-சர்மத^{3} மாம்ரமூலக^{3} மாம்ரநாத^{2} முபாஸ்மஹே ॥

மிக அருகில் வந்துவிட்ட தேவநதி கங்கையின் வெள்ளப் பெருக்கைக் கண்டு பயந்தவளான ஹிமகிரி புத்ரியால் அன்புடனும் பரபரப்புடனும் விரைவாகச் செய்யப்பட்ட இரு கைத் தழுவுதலால் தழும்பேற்றப்பட்டவரும் பாணிக்ரஹணத்தா லேற்பட்ட வெட்கத்தால் மிக அழகிய முகமுடையவளான இப்பராசக்தியைக் கொண்டு வணங்குவோர்க்கு ஸுகமளிப் பவரும் மாமரத்தடியிலிருப்பவருமான ஏகாம்ரநாதரை உபாஸிக்கிறோம் (=இடைவிடாது சிந்திக்கிறோம்.)

மோக்ஷ-த^{3}ாயக-காஞ்ச்^{1}யலங்க்ரு^{1}தி - த^{3}க்ஷ - ஸுந்த^{3}ர-மந்தி^{3}ரே / வேத^{3}ரூப-ரஸால-பாத^{3}ப-மூலமண்ட^{3}ல மண்ட^{3}னம் । ஸத்ரபாத்^{3}ரிஸுதாமணீ-பரிணீதி-சோப^{4}ன- த^{3}ர்சனம் / ப^{4}க்தவத்ஸல மச்^{1}யுதப்ரிய மாம்ரநாத^{2}முபாஸ்மஹே ॥

முக்தியளிக்குந்தலமான காஞ்சீபுரத்தை அலங்கரிப்பதில் வல்லதான அழகிய கோயிலில் வேதஸ்வரூபமான மாமரத்தின் மூலப்ரதேசத்தை அலங்கரிப்பவரும் வெட்கத்துடன் கூடியவளான ஹிமாசலகன்யாமணியின் விவாஹத்தால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோபனமான தர்சனமுடையவரும் பக்தர்களிடம் தாயன்பு பூண்டவரும் விஷ்ணுவிற்குப் பிரியமானவருமான ஏகாம்ர நாதரை உபாஸிக்கிறோம்.

மோக்ஷ த[3]ாயி-பூ[4]மி-காஞ்சி[1]-பூ[4]த காஞ்சி[1]-மந்தி[3]ரே /
வேத[3]ரூப- சூ[1]த-வ்ரு[1]க்ஷ-மூல தே[3]சபூ[4]ஷணம் ।
நூதனோட[4]யா த்ரபாவ நம்ர - கம்ரசீர்ஷயா /
சைலகன்யயா லஸந்த மாம்ரநாத[2] மாச்ரயே ।

மோக்ஷமளிப்பதும் பூமிதேவிக்கு மேகலை போன்றதும் (=மேகலைபோல் பூமியை அலங்கரிப்பதுமான காஞ்சி புரியிலுள்ள கோயிலில் வேதரூபமான மாமரத்தின் மூல ப்ரதேசத்தை (=மாமரத்தடியை) அலங்கரிப்பவரும் புதுமணப் பெண் - வெட்கத்தால் குனிந்த அழகிய சிரஸை உடைய மலைமகளால் விளங்குபவருமான ஏகாம்ரநாதரை ஆச்ரயிக்கிறேன் - அவரே துணையென்று அடைகிறேன். தூணக வ்ரு[1]த்தம். விளக்கம் அனு. பக் (27)ல்

த்ரிபுர ஸுந்தரீசந்த்ர மௌளீசர்

அம்ப[3]யா த்ரிபுரேசயான்விதமிந்து[3]-மௌளி-மஹேச்வரம் /
ச்ரத்[3]த[4]யா கு[3]ருவர்யபூஜிதமன்வஹம் சுப[4]வ்[1]ருத்[3]த[4]யே ।
சி[1]த்த-சுத்[3]தி[4]-விவேக-வ்ரு[1]த்[3]தி[4]-வித[4]ாயினம் ப[4]வபீ4 ஹரம்
/ ப[4]க்தி மாத்ரவசம்வத[3]ம் நிக[3]மாந்தவேத்[3]யமுபாஸ் மஹே ॥

அன்னை த்ரிபுரையுடன் கூடியவரும், குருவரர்களால் சுபங்கள் வளர்வதற்காக தினந்தோறும் ச்ரத்தையுடன் பூஜிக்கப்பட்டவரும், மனத்தூய்மையையும் 'ஆத்மஸ்வரூபமே நித்யமானது, மற்றவை வெறுந்தோற்றம்' என்கிற பகுத்தறிவின் வளர்ச்சியையும் அருள்பவரும் ஸம்ஸார பயத்தைப் போக்குபவரும் பக்தி ஒன்றிற்கே கட்டுப்படுபவரும் வேதாந்தங்களால் மட்டுமே அறியத்தக்கவருமான சந்த்ரமௌளி (=சந்த்ரன் விளங்கும் சிரஸ்ஸை உடைய) மஹேச்வரரை உபாஸிக்கிறோம் (=இடைவிடாது சிந்திக்கிறோம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரதராஜர்

ப்ரஜாபதி-க்ரதுாஜ் ஜ்வலத் - க்ரு[1]பீட யோனி ஸம்ப[4]வம் /
வபா - பரீமளோல்லஸத்[3] - வராஸ்ய - பத்[3]ம - சோபி[4]தம் ।
க[3]ஜார்த்தி - சீக்[4]ரப[4]ஞ்ஜனம் க[3]ஜாத்[3]ரி - ச்ரு[1]ங்க[3]வாஸினம்
த்[3]யார்த்[3]ர - தே[3]வ்யுபாச்ரிதம் வரப்ரத[3]ம் ஸத[3]ா ப[4]ஜே ॥

ப்ரம்மாவின் அச்வமேத யாகத்தில் ஜ்வலிக்கிற அக்னியில் தோன்றினவரும் ஹோமம் செய்யப்பட்ட வபையின் நறுமணங்கமழும் சிறந்த முக கமலத்தால் சோபையடைந்தவரும் கஜேந்த்ரனின் துக்கத்தை விரைவில் அழித்தவரும் ஹஸ்தி கிரிசிகரத்தில் வஸிப்பவரும் தயையால் ஈரமான (=தயைநிறைந்த - ஈர நெஞ்சுடையவளான) 'மஹாதேவி' அன்னையால் அடையப்பட்டவருமான வரதராஜரை எப்போதும் ஸேவிக்கிறேன். லகு-குரு மாறிமாறி. 16 எழுத்து. பஞ்சசாமர வ்ருத்தம். விளக்கம் அனு பக் (29)ல்.

ப்ரஜாபதி-க்ரதூத்[3]ப[4]வம் / வபா-ஸுக[3]ந்தி[4] - வக்த்ரகம் ।
க[3]ஜாத்[3]ரிக[3]ம் ரமாயுதம் / வரப்ரத[3]ம் ஸத[3]ா ப[4]ஜே

ப்ரஜாபதியின் (=ப்ரம்மாவின்) யாகத்தில் தோன்றியவரும் ஹோமம் செய்யப்பட்ட வபையின் நறுமணங்கொண்ட வாயையுடையவரும் ஹஸ்தி கிரியிலிருப்பவரும் லக்ஷ்மியுடன் கூடியவருமான வரதராஜரை எப்போதும் ஸேவிக்கிறேன்.

நக[3]ஸ்வரூபிணீ அல்லது ப்ரமாணிகாவ்ரு[1]த்தம். லகுவுங்குருவும் (=ஒரு மாத்திரை காலமுள்ளதும் இருமாத்திரை காலமுள்ளதும்) மாறி மாறி வருவது. 8 எழுத்துப் பாதங்கொண்டது. 16 எழுத்துள்ள பஞ்ச சாமரத்தில் பாதி. லகு-குரு விளக்கம் - 11-ம் பக்கத்தில்

ஸ்ரீ ராமநாதர் (ஸ்ரீ ராஜசேகர குருக்கள் சுவடி காபி. மண்டலோஜ்ஜ்வல என்பது குண்டலோஜ்ஜ்வல என மாற்றப்பட்டது.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைலஜானன-ச[1]ந்த்ரிகாபரித்ரு[1]ப்த-நேத்ர-ச[1]கோரகம் /
குண்ட[3]லீச்வர-குண்ட[3]லோஜ்ஜ்வல-க[3]ண்ட[3]-மண்ட[3]ல-
மண்டி[3]தம் । ப[3]ாண-ராவண-ச[1]ண்டி[3]கேச்வர-நந்தி[3]-
ப்[4]ரு[1]ங்கி[3]பி[4]ரீடி[3]தம் / ஸேது-மாத[4]வ-ஸேவிதம்
சிவராமலிங்க[3]முபாஸ்மஹே ॥

பார்வதியின் முகமாகிய நிலவை எவ்வளவு பருகியும் த்ருப்தியடையாத கண்களாகிய சகோரபக்ஷிகளை (=நிலாமொக்கிபக்ஷிகளை) யுடையவரும் நாகராஜ குண்டலத்தால் ப்ரகாசிக்கிற கன்னப்ரதேசத்தால் அலங்கரிக்கப் பட்டவரும் பாண-ராவண-சண்டேச-நந்தி-ப்ருங்கிரிஷிகளால் புகழப்பட்டவரும் ஸேது மாதவரால் ஸேவிக்கப்பட்டவருமான சிவராமலிங்க ஸ்வாமியை உபாஸிக்கிறோம்.

த்யாகராஜர்

திருவாரூர் ஸ்ரீ கமலாம்பாள் ப்ராகார மதிலில் எழுதப்பட்டிருந்தவற்றுள் ஒன்று.

ஹார-குண்ட[3]ல-மௌளி-கங்கண-கிங்கிணீக்ரு[1]த-பன்னக[3] /
வீரக[2]ட்[3]க[3]-குபே[3]ரமித்ர - களத்ர - புத்ர - ஸமாவ்ரு[1]த ।
நாரத[3]ாதி[3] - முனீந்த்[3]ர-ஸன்னுத நாக[3]-ச[1]ர்ம-க்ரு[1]தாம்ப[3]ர /
த்யாக[3]ராஜ த[3]யாநிதே[4] கமலாபுரீச்வர பாஹி மாம் ॥

நாகங்களையே ஹாரம் - குண்டலம் - கிரீடம் - கங்கணம் சலங்கைகளாகச் செய்து கொண்டவரே! வீரவாள் கொண்டவரே! குபேரனின் நண்பரே! மனைவி - மைந்தர் சூழ்ந்தவரே! (=ஸோமாஸ்கந்தரே!) நாரதர் முதலான ரிஷீச்வரர்களால் ஸ்துதிக்கப்பட்டவரே! யானைத் தோலை வஸ்த்ரமாகக் கொண்டவரே! தயாநிதியே! கமலாபுரிக்கு ஈசரே (=ஆரூரரே) த்யாக ராஜரே! என்னைக் காப்பாற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ்ரு^{1}த்தங்கள் பற்றிய விளக்கம்

ஸம்யுக்தாந்தந் தீ^{3}ர்க^{4}ம் / ஸானுஸ்வாரம் விஸர்க^{3} - ஸம்யுக்தம் । விஜ்ஞேயமக்ஷரங் கு^{3}ரு/பாத^{3}ாந்தஸ்த^{2}ம் விகல்ப்பேன ॥ (இது ஆர்யாவ்ரு^{1}த்தம். லக்ஷணம் அனு. பக் (13)ல். நெடில் எழுத்து 'கு^{3}ரு' வாகும். கூட்டெழுத்தாலோ, அனுஸ்வாரத்தாலோ, விஸர்கத்தாலோ தொடரப்படுங் குறிலும் 'கு^{3}ரு' வாகும். ('ஸம்யோக^{3}: என்பதில் கடைசியிலுள்ளது விஸர்கமாகும். இதில் 'ஸம்' என்பதிலுள்ள - உதட்டை நன்கு மூடாமல் உச்சரிக்க வேண்டியதான 'ம்' அனுஸ்வாரமாகும்). இப்படியல்லாத குறில் 'லகு^{4}வாகும்'. பாதமுடிவிலுள்ள எழுத்து தேவைக்கேற்ப கு^{3}ருவாகவோ லகு^{4}வாகவோ கொள்ளப்படும்.

குரு-லகு உதாஹரணம் : ஸமுத்ஸ்ரு^{1}ஜன்.......... சிவலீ. பக் (173)

இதில் ஒற்றைப்படை எல்லாம் லகு^{4}. இரட்டைப்படை எல்லாம் கு^{3}ரு. மெய்யெழுத்து கணக்கில் சேராது. லகு^{4}விற்கு ஒரு மாத்திரை, கு^{3}ருவிற்கு 2 மாத்திரை. 'ஸ'விலுள்ள 'அ', 'ஸ்ரு^{1}'விலுள்ள 'ரு^{1}', 'ஸ'வின் 'அ', 'ய'வின் 'அ', முதல் 'ந'வின் 'அ' முதலியவை 'லகு^{4}' வாகும். 'மு', 'ஜ', 'ம', 'தா', இரண்டாவது 'ந'-வின் 'அ', நந்தியிலுள்ள அ, 'கே', 'ர', இவற்றிலுள்ள உயிரெழுத்து கு^{3}ருவாகும். ஒவ்வொரு பாதத்திலும் 16 எழுத்துக் கொண்ட இந்த வ்ரு^{1}த்தம் 'பஞ்ச^{1} ச^{1}ாமரம்' எனப்படும். லகு^{4}ர் கு^{3}ருர் நிரந்தரம் ப^{4}வேத்^{3}தி^{4} பஞ்ச^{1}ச^{1}ாமரம், என்று லக்ஷணம். லக்ஷணங் கூறுவதும் அதே வ்ரு^{1}த்தத்தில் திறமையாய்க் கூறுவர். கணேச பஞ்சரத்னம் இவ்வ்ரு^{1}த்தத்தாலானது. பஞ்ச சாமரத்தை பாதியாக்கினால் அது 'நக^{3}ஸ்வரூபிணீ' (அ) ப்ரமாணிகா எனப்படும். 2-4-6-8வது எழுத்து குருவாயிருக்கும். 1-3-5-7வது லகுவாயிருக்கும். பாதத்துக்கு 8 எழுத்து தான். பாத எழுத்துக்கள் 8-ஐயும் குருவாக அமைத்தால் வித்^{3}யுன்மாலா. மோ மோ கே^{3}ா கே^{3}ா வித்^{3}யுன்மாலா. அனு பக் (47) காண்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வொன்றும் 8 எழுத்துக்கொண்ட 4 பாதங்கள் சேர்ந்தது ச்லோகம். இதில் ஒவ்வொரு பாதத்திலும் 5வது எழுத்து லகு^{4}வாகவும் 6வது கு^{3}ருவாகவும் இருக்கும். இரண்டாம்பாதம்-நாலாம்பாதங்களில் ஏழாவது எழுத்தும் லகுவாயிருக்கும். முதல் பாதம் - மூன்றாம் பாதங்களில் ஏழாவது எழுத்தும் குருவாயிருக்கும், விஷ்ணு ஸஹஸ்ரநாமங் காண்க, பெரும்பாலும் பொருந்தும். யஸ்யத்^{3}விரத^{3}... ச்லோகத்தில் மூன்றாம் பாதத்தில் 6-து குருவாக இல்லை. இம்மாதிரி மாறுதலும் சில இடத்திலிருக்கும்.

யமாதாராஜப^{4}ாநஸலக^{3}ம் என்று வாய்ப்பாடு. யகணத்தின் உதாஹரணம் யமாதா. மகணத்தின் உதாஹரணம் மாதாரா. தகணத்தில் உதாஹரணம் தாராஜ இதுபோல் அறிக.

யமாதா - இதுபோல் முதலெழுத்து லகுவாயுள்ளது யகணம்
மாதாரா - இதுபோல் மூன்றுங் குருவாயுள்ளது மகணம்
தாராஜ - இதுபோல் கடைசியெழுத்து லகுவாயுள்ளது தகணம்
ராஜப^{4}ா - இதுபோல் நடுஎழுத்து லகுவாயுள்ளது ரகணம்
ஜப^{4}ாந - இதுபோல் நடுஎழுத்து குருவாயுள்ளது ஜகணம்
ப^{4}ாநஸ - இதுபோல் முதலெழுத்து குருவாயுள்ளது ப^{4}கணம்
நஸல - இதுபோல் மூன்றும் லகுவாயுள்ளது நகணம்
ஸலக^{3}ம் - இதுபோல் கடைசியெழுத்து குருவாயுள்ளது ஸகணம்
ல - இதுபோன்றது லகு
க^{3}ம் - இதுபோன்றது குரு

மொத்தம் 8 கணங்கள், லகு, குரு இவற்றைக் கொண்டு தான் லக்ஷணங் கூறப்படும்.

ய-ர-தகணங்கள் முறையே ஆதி-நடு- முடிவில் 'லகு' கொண்டவை. ப^{4}-ஜ-ஸ கணங்கள் முறையே ஆதி- நடு -முடிவில் 'குரு' கொண்டவை. முழுவதும் குரு கொண்டது மகணம், முழுவதும் லகு கொண்டது நகணம். என்று ச்ருதபோ^{3}த^{4}ம் ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆர்யா, கீதி முதலியவை 'மாத்ராவ்ரு[1]த்தம்' எனப்படும். நாலுமாத்ரை கொண்ட கணங்கள் இதில் இடம்பெறும். 3 குரு கொண்ட மகணத்தில் ஒரு எழுத்தை எடுத்து 4 மாத்ரை கணமாக்குவர். 3லகு கொண்ட - நகணத்தில் ஒரு லகுவைச் சேர்த்து 4 மாத்ரை கணமாக்குவர். இவ்விரண்டு கணங்களும், இயற்கையாகவே 4 மாத்ரை கொண்ட ஜ-ப[4]-ஸ- கணங்களும் ஆர்யா முதலியதில் வரும். ய-ர-த- கணங்கள் = 5 மாத்ரை கொண்டவை வரமாட்டா.

'ஆர்யா' வ்ரு[1]த்தத்தில் முதல் பாதம் - மூன்றாம் பாதம் இரண்டிலும் 12, 12 மாத்ரைகள். இரண்டாம் பாதத்தில் 18 மாத்ரைகள். நாலாவதில் 15 மாத்ரைகள். இரண்டாவது பாதம், நாலாவது பாதம் இரண்டிலுமே 18, 18 மாத்ரைகள் அமைந்திருந்தால் அது 'கீதி'யாகும். இரண்டிலும் 15, 15 மாத்ரைகள் அமைந்திருந்தால் *'உபகீதி'யாகும். 4-வதில் 18 மாத்ரையும் 2-வதில் 15 மாத்ரையும் அமைந்திருந்தால் *'உத்கீதி'யாகும். 'கீதி'யின் முன்பாதியிலும் பின்பாதியிலும் ஒரு குருவைச் சேர்த்தால் அது 'ஆர்யாகீதி'யாகும். * பக் (49) காண்க.

ஆர்யாகீதி- உதாஹரணம்

ஹ்ரு[1]த[3]ய ஸத[3]ா யாத[3]வத: பாபாடவ்யா து[3]ராஸத[3]ாயா த[3]வத:।
அரிஸமுத[3]ாயாத[3]வத: த்ரிஜக[3]ன் மா க[3]ா: ஸ்மரேண த[3]ாயாத[3]வத:॥

ஏ மனமே! நெருங்கிச் சிதைக்க முடியாத பாபமாகிய காட்டிற்குக் காட்டுத் தீயாயிருப்பவரும் (=பாபங்களையெல்லாம் அழிப்பவரும்) மூவுலகையும் சத்துருக் கூட்டத்திலிருந்து காப்பாற்றுபவரும் மன்மதனால் புத்ரனுடையவரும் (=மன்மதனை (= ப்ரத்யும்னனை)ப் புத்ரனாகக் கொண்டவரும்) ஆன யாதவனிடமிருந்து (=க்ருஷ்ணனிடமிருந்து) எப்பொழுதுமே வெளிச் செல்லாதே. எப்போதுமே க்ருஷ்ணனை நினைத்துக் கொண்டிரு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

12-18	12-18	12-15	12-15	12-20
12-15	12-18	12-15	12-18	12-20
ஆர்யா	கீதி:	உபகீதி:	உத்கீதி:	ஆர்யா கீதி:

ஆர்யாசதகம் கீதிவகையைச் சேர்ந்தது. முன்பாதி 30 மாத்ரை பின்பாதி 30 மாத்ரை.

காரண பரசி[1] த்[3]ருபா / காஞ்சீ[1] புரஸீ ம்னிகாம பீட[2]க[3] தா ।
4 4 4 4 4 4 4 2

காச[1]ன விஹரதி கருணா/ காச்மீ ரஸ்தப[3] ககோம லாங்க[3]ல தா ॥
4 4 4 4 4 4 4 2

ஆர்யாவ்ரு[1]த்தத்தில் 1-3-5-7வது கணமாக ஜகணம் வராது. 6-வது கணமாக ஜகணமிருக்கும், அல்லது 4 லகுவுள்ள கணமிருக்கும். வேறு எதுவும் இருக்காது. 15 மாத்ரை உள்ள பாதங் கொண்ட பாதியில் மட்டும் ஒரே ஒரு லகு எழுத்து 6-வது கணமாகக் கணக்கிடப்படும். மற்ற இடத்தைப்போல் 4 மாத்ரையுள்ளதாக இந்த 6வது கணமிருக்காது. உதாஹரணம் பிரம்படி பாகப்பிரிப்பு முதல் ச்லோகம். பக் (194)

வேத்ரா ஹதிம்வி ப[4]க்தும்/ விச்வா த்மகதா ப்ரதர்சி தாப[4]வ தா ।
4 4 4 4 4 4 4 2

கர[3]கத கப[3]ள க்[3]ராஸே / புனரபி[4] நீதம் சி வாத்[3]வை தம் ॥
4 4 4 4 4 1 4 2

கரக[3]தகப[3]ள... என்ற பின்பாதியில் ‘சி’ என்ற ஒரே லகு, ஆறாவது கணமாகக் கணக்கிடப்படுகிறதைக் காண்க.

வ்ரு[1]த்த - விளக்க - ஆரம்பத்தில் லகு, குரு லக்ஷணம் சொல்லும் ‘ஸம்யுக்தாந்தம’ அனு. பக் (11) என்பதில் பொருத்திப் பார்க்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதன் பின்பாதியில் 'வி கல்ப்பேன' என்பதிலுள்ள 'வி' ஆறாவது கணமாகக் கணக்கிடப்படும். உபகீதியில் இருபாதிகளிலுமே ஒற்றைலகு ஆறாங்கணமாகும்.

பிரம்படி பாகப்பிரிவினை இரண்டாம் ச்லோகம் ஆர்யாசதகம்போல் கீதிச்லோகம் - முன்பாதி போலவே பின்பாதியுள்ளது

வேத்ரா ஹதிமதி கே^{4}ராம்/ விப^{4} ஜ்ய யேபு^{4} ஞ்ஜதேஜ ஊாநிய தம்।
4 4 4 4 4 4 4 2

ப^{4}வதா பதாபி தேஷ்வபி/ தேஷு பேக்ஷை வதேக த^{2}ம்லீ லா
4 4 4 4 4 4 4 2

ப்ரஹ்ரு^{1}தம் ப்ரஹ்ரு^{1}த மிதி த்வம் (பக் 196) கீதி ச்லோகம்.

சம்பக பாண்டியனின் கருத்தை வெளிப்படுத்துவதாக ஸுந்தரேசன் எழுதித் தந்தது ஆர்யாவ்ரு^{1}த்தம். பக் (167).

பின்பாதியில் 'ன' என்ற ஒற்றை லகு ஆறாவது கணமாகக் கணக்கிடப்படுகிறது.

இதில் முதல் பாதி முடிவில் 'த்^{3}ய' என்பதை குருவாகக் கணக்கிட வேண்டும். பாத முடிவிலிருப்பதால், குரு தேவைப்படுவதால் குருவாகக் கணக்கிடலாம். விளக்கத்தின் தொடக்கத்தில் பார்க்க: அனு. பக் (11)

மூன்றெழுத்துள்ள கணங்களாகக் கணக்கிடப்படாமல் மாத்ராகணங்களாகக் கணக்கிடப்படும் வ்ரு^{1}த்த வகையில் 'ப^{4}ஜகோ^{3}விந்த^{3}ம் அடங்கும். கீழ்க்கண்ட ஸ்துதியும் அவ்வகையே

தே^{3}வி ஸுரேச்வரி ப^{4}க^{3}வதி க^{3}ங்கே^{3} / த்ரிபு^{4}வனதாரிணி தரளதரங்கே^{3} । சங்கர-மௌளி விஹாரிணி விமலே / மம மதிராஸ்தாம் தவ பத^{3}கமலே ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருள் : தேவியே ! தேவேச்வரியே ! பகவதியே ! கங்கையே! மூவுலகையுங் கரையேற்றுபவளே! சங்கரனின் சிரஸில் விளையாடுபவளே ! நிர்மலமானவளே ! எனது புத்தி உன் பாதத் தாமரையிலேயே இருக்கட்டும் = பாதத்தாமரையையே எப்போதும் நினைக்கட்டும்.

ஒரு பாதத்தில் ஒரு எழுத்துள்ளதில் தொடங்கி ஒரு பாதத்தில் இருபத்தாறு எழுத்துவரை உள்ள ச²ந்த³ஸ்ஸுகள் உள்ளன. எழுத்துகளின் குரு-லகு மாறுபாட்டால் ஒரு ச²ந்த³ஸிலேயே பல வ்ரு¹த்தங்கள் அமைகின்றன. ஒரு பாதத்தில் எழுத்து எண்ணிக்கை இருபத்தாறுக்கு மேலானால் அது தண்டகம் எனப்படும். அதிலும் பலவகை உண்டு. ச்யமளாதண்டகம் ப்ரஸித்தம். முதலில் இரண்டு நகணங்கள், பிறகு ஏழு ரகணங்கள்- ஒவ்வொரு பாதத்திலும். மொத்தம் ஒரு பாதத்தில் 3x9=27 எழுத்துகள். இது 'சண்ட வ்ருஷ்டிப்ரயாதம்' என்கிற தண்டகம்.

ஒரு பாதத்தில் 11 எழுத்துள்ளவை - மூன்று கணங்களுடன் (லகுவோ, குருவோ இரண்டும் கலந்தோ) இரு உதிரிகளும் கொண்டவை சில காட்டப்படுகின்றன.

இந்த்ர வஜ்ரா வ்ரு1த்தம்:- த, த, ஜ, இருகுரு. குகுல, குகுல, லகுல, கு,கு.

உதாஹரணம் க்வாஹங்க்வ காவ்யம் - (பக் (4)
க்ரு¹ஷ்ணார்ஜுனாப்⁴யாம் பரிபூஜ்ய (பக் 16)

உபேந்த்ரவஜ்ரா வ்ரு¹த்தம் :- ஜ, த, ஜ, இரு குரு. லகுல, குகுல, லகுல, கு, கு. ஒரே பத்யத்தில் ஒரு பாதம் இந்த்ரவஜ்ரா, இன்னொரு பாதம் உபேந்த்ர வஜ்ரா என்று கலந்து வந்தால் 'உபஜாதி' வ்ரு¹த்தமாகும். மங்களச்லோகம் அர்தநாரீசஸ்துதி உபஜாதி வ்ருத்தத்தில், முன்பாதி உபேந்த்ர வஜ்ரா, பின்பாதி இந்த்ர வஜ்ரா. ஏதோ ஒரு பாதம் ஒருவிதம், மற்ற மூன்று பாதங்கள் வேறுவிதம் என்றுங் கலப்பு இருக்கும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உதாஹரணம் :- அர்தே^{4} தனோரத்^{3}ரிஸுதா- பக் (3) அநாயதப்ராணம் - பக் (1) ச்^{1}த்ருபமானந்த மயம் - பக் - (15) யாம் ஸர்வரத்னைககனி^{2}ம் - பக் - (10) ஹஸ்தே க்^{3}ரு^{1}ஹீதாம் - பக் (56)

சாஸ்த்ரத்தில் குருவைப் பிறைக்குறியாலும் லகுவை குத்துக்கோட்டாலும் காட்டுவது பழக்கம். அச்சிடுவதில் எளிமையைக் கருதி குருவைக் 'கு' என்று லகுவை 'ல' என்றும் காட்டியுள்ளேன். இயல்பில் லகுவான = ஒரு மாத்ரையுள்ளதான குறில் - எழுத்து, பாதமுடிவிலிருந்தால் தேவைப்படும்போது குருவாக = இருமாத்ரையுள்ளதாகக் கருதப்படும். குரு லகு லக்ஷணம் நினைவு கூர்க. அர்தநாரீச ஸ்துதியில் முதல்பாதக் கடைசியிலுள்ள 'து'வின் 'உ' , குருவாகக் கொள்ளப்படும்.

மேலே சொல்லப்படும் வ்ரு^{1}த்தங்களை ஸ்வயமாகப் பொருத்திப் பார்த்துக் கொள்க. எழுதப்பட்ட ச்லோகங்களுக்கு அடியெடுத்துக்கொடுத்து அவற்றின் பக்கம் குறிக்கப்படும்.

சில வ்ரு^{1}த்தங்களில் ஒரு பாதத்தின் நடுவிலும் ஒரு இடத்திலோ இரு இடங்களிலோ நிறுத்தி வாசிக்கவேண்டும். இத்தனை எழுத்துகளால் 'யதி' என்று கூறுவர். பாதமுடிவில் யதி எல்லாவற்றிற்குமே உண்டு.

சாலினீ வ்ரு^{1}த்தம் - ஒரு பாதத்தில் 11 எழுத்து. 4, 7 = முதலில் 4 எழுத்துகள் முடிந்ததும் நிறுத்திவிட்டு மீதி எழுத்துகளை வாசித்து பாதபூர்த்திக்காக நிறுத்தவேண்டும். இதுபோல் மேலே வருமிடங்களிலும் கொள்ளவும்.

'சாலின்யுக்தா ம்தௌ தகௌ^{3}ள கோ^{3}ப்^{3}தி^{4}லோகை:' என்று வ்ரு^{1}த்தரத்னாகரம். 'சாலினீ'. ம-த-த-கணங்கள் - இரு குரு (4-7) ஆல்யதி என்று பொருள். அப்^{3}தி^{4}கள் = ஸமுத்ரங்கள் 4, லோகங்கள் 7. நான்கு எழுத்துகள் முடிந்ததும் நிறுத்திவிட்டு 7 எழுத்துகள் வாசித்துப் பாத முடிவுக்காக நிறுத்தவேண்டும்.

சாலினீ 4, 7 ம-த-த- இரு குரு - குகுகு, குகுல, குகுல, இருகுரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ்ரு1த்தரத்னாகரத்தில் ஒவ்வொரு வ்ருத்தலக்ஷணமும் அதே வ்ருத்தத்தால் கூறப்பட்டிருக்கும்.

சாலினீ. வ்ரு1த்த உதாஹரணம் :- மேக4ச்யாமம் ..... மேக4ச்யாமம் என்று 4 எழுத்துகள் முடிந்ததும் நிறுத்திவிட்டு மீதி ஏழு எழுத்துகளையும் வாசித்து நிறுத்த வேண்டும்.

சிவலீலார்ணவத்தில் உதா:- கைலாஸாத்3ரிம் (பக் 105)
பாண்ட்3யாத்4யக்ஷ:- பக் (106), கேந்த்3ரே ச1ந்த்3ரே- பக் (110)

ரதோ2த்3த4தா - ர,ந,ர, லகுவுங்குருவும். குலகு, லலல, குலகு, ல,கு.

உம் : பாண்ட்3யராஜது3ஹிது: - பக் (86), ஆதிமம் ரஸமிவ பக் (86)

ஸ்வாக3தா-ர.ந.ப4 - இருகுரு - குலகு, லலல, குலல, கு,கு.

உம் : ச2த்ரமேகதரம்..... பக் (64), அஸ்துவன் க்வசன.... பக் (64), ஸாத4யிஷ்யஸிகர.... பக் (66), ஸ்வேத3ரஜ்யத3ளிகாந்த - பக் (69)

தே3ாத4கம் - ப4, ப4, ப4 இருகுரு. குலல, குலல, குலல, கு,கு

உ-ம்:- உமாஸஹஸ்ரத்தில்

பங்கஜ-ஸம்ப4வ-பூஜித-பாத3ா/பங்கவிநாசன-பாவன-நாமா।
கிங்கர-கல்ப்பலதா பரமேயம்/சங்கர-நேத்ர-ஸுத4ா சரணந் ந:॥

பொருள் : ப்ரம்மனால் பாதபூஜை செய்யப்பட்டவள். பாபத்தை அழிக்கும் பாவனமான (= தூய்மை தரும்) பெயரையுடையவள். தொண்டர்களுக்கு, மேலான கல்ப்பலதை யானவள் = வேண்டியதெல்லாமளிப்பவள். சங்கரனின் நேத்ரங்களுக்கு அம்ருதமானவள். இப்படிப்பட்ட தேவி நமக்கு அடைக்கலம் புகுமிடம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதத்தில் 12 எழுத்துள்ளவை

வம்சஸ்தம் - ஜ, த, ஜ, ர. லகுல, குகுல, லகுல, குலகு

உதாஹரணம் :- சிவம் யஜாக்3னௌ ... பக் (44) ம்ரு1க3ாங்கசூ1ட3ாமணி - பக் (45) சிவார்ப்பிதாசேஷ ப4ரா: -- பக் (46), ஸ்தனந்த4யம் ... பக் (132) விது4: களங்கீ... பக் (136).

த்3ருதவிலம்பி3தம் : ந,ப4,ப4,ர. லலல, குலல, குலல, குலகு உ-ம். ஸ து கத3ாச1ன .... பக் (166), குமுத3 கஜ்ஜல... பக் (179) யதி3 மருத்3 விஜித: ... பக் (180).

ப்ரமிதாக்ஷரா - ஸ,ஜ,ஸ,ஜ, லலகு, லகுல, லலகு, லகுல

உ-ம்- ஸுரவாஹினீலஹரி - பக் (144) ஸ்வபனே கத3ாசி1த3த2 .... ப.க் (147), பரிபூரிதாம் சிசிர ..... பக் (148).

இந்த்ரவம்சா த,த,ஜ,ர

உ-ம் - ஸ்ரீ கணபதி சாஸ்த்ரிகளின் வ்ரு1த்தமணி மாலையில்

தத்தஜ்ஜராவ்யாதி4சதம் பலாயிதம் / ஜன்மாப்யக3ாந் நச்5 ச1ரிதார்த்த2தாம் யத: । சைலேந்த்3ரவம்சாப4ரணாயிதம் மஹ: / சி1த்தே வித4த்தே விஹ்ரு1திஞ் சி1ராய ந: ॥

இதில் த,த,ஜ,ர என்கிற கணங்களும் முதல் நான்கு எழுத்துகளால் குறிக்கப்பட்டுள்ளன. 'இந்த்ரவம்சா' என்று வ்ரு1த்தத்தின் பெயருங் குறிக்கப்பட்டுள்ளது. புஸ்தகம் முழுவதும் இப்படியிருக்கும். இரண்டு மூன்று உதாஹரணங்கள் காட்டுமிடத்தில் முதல் உதாஹரணத்தில் வ்ரு1த்தப்பெயர், கணங்களின் குறிப்பு இருக்கும்.

பொருள் : கிரிராஜனுடைய வம்சத்துக்குப் பூஷணமா யிருக்கிற தேஜஸ் (பார்வதி) எமது சித்தத்தில் நீண்டகாலமாக லீலை புரிகிறபடியால் நூற்றுக்கணக்கான அந்தந்த ஜரை -

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ்யாதிகள், எல்லாம் ஓடிவிட்டன. எமது ஜன்மமும் சரிதார்த்தமாய் விட்டது. (பலனுள்ளதாய்விட்டது).

புஜங்கப்ரயாதம் - புஜங்கஸ்தோத்ரங்கள் நான்கு யகணங் கொண்டவை.

ஸ்ரக்³விணீ வ்ரு¹த்தம் நான்கு ரகணங்கள். உ-ம்.

க்ரு¹ஷ்ணகர்ணாம்ரு¹தம் ராஸக்ரீடை -

அங்க³னாமங்க³னாமந்தரே மாத⁴வோ / மாத⁴வம் மாத⁴வம் ச¹ாந்த ரேணாங்க³னா । இத்த²மாகல்ப்பிதே மண்ட³லே மத்⁴யக³: / ஸஞ்ஜகெ³ள வேணுனா தே³வகீ நந்த³ன: ॥

அங்கனைக்கும் அங்கனைக்கும் (= மங்கைக்கும் மங்கைக்கும்) இடையில் ஒரு மாதவன், மாதவனுக்கும் மாதவனுக்கும் இடையில் ஒரு மங்கை என்றிவ்வாறு அமைக்கப்பட்ட வளையத்தில் நடுவில் இருந்துகொண்டு தேவகி நந்தனன் புல்லாங் குழலால் பாடினான்.

தோடக வ்ரு¹த்தம் நான்கு ஸகணங்கள். உ.ம் :- தோடகாஷ்டகம் - விதி³தாகி²லசாஸ்த்ரஸுத⁴ாஜலதே⁴..... ப⁴வ சங்கரதே³சிக மே சரணம் ॥

அந்தந்த வ்ரு¹த்தத்திலேயே வ்ருத்த ரத்னாகர லக்ஷணங்கள்-

பு⁴ஜங்கப்ரயாதம் ப⁴வேத்³ யெச்⁵ச¹துர்பி⁴: ।
ரெச்⁵ச¹துர்பி⁴ர் யுதா ஸ்ரக்³விணீ ஸம்மதா ।
இஹ தோடகமம்பு³தி⁴ஸெ: கதி²தம் ।
அம்பு³தி⁴: = ஸமுத்ரம். இது 4 என்ற எண்ணை குறிக்கிறது.
4 ஸகணங்கள் தோடகம்.

வ்ரு¹த்தமணிமாலையில் சில

ப்ரமுதி³த-வத³னா-ந, ந, ர, ர,- லலல, லலல, குலகு, குலகு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நனு ருருசிசுவல் லலல்லோச^{1}னா / ப்ரமுதி^{3}தவத^{3}னா
ப்ரணம்ரேஷ்டத^{3}ா। ஜனனி ஜட^{3}மிமஞ் ஜனம் நிர்க^{3}திம்/
ப^{4}க^{3}வதி ப^{4}வதீ கத^{3}ா வீக்ஷிதா॥

மான்கன்று போல் சஞ்சலக் கண்ணுள்ளவள் -ஆநந்தமான முகங்கொண்டவள் - வணங்குவோர்க்கு இஷ்டங்களை அளிப்ப வளான பகவதியே! அன்னையே! நீ ஜடமான-கதியற்ற இந்த ஜனத்தை (=என்னை) எப்போது பார்க்கப்போகிறாய்?

குஸுமவிசித்ரா-ந, ய, ந, ய. லலல, லகுகு, லலல, லகுகு.

நயனயுகே^{3}ாத்^{3}யந் நவநவஹேலா-/ பரவச சூலாயுத^{4} ஹ்ருத^{3}
யாயா:। குலகி^{3}ரிஜாயா: குஸுமவிசி^{1}த்ரா/ குசலப^{4}ரம் ந:
கலயது சூ^{1}ளீ॥

இரு கண்களில் உதிக்கும் புதுப்புது லீலைகளால் சூலாயுதனின் (பரமேச்வரனின்) ஹ்ருதயத்தைப் பரவசமாக்கு பவளான குலபர்வதபுத்ரியின்-புஷ்பங்களால் விசித்ரமான-பின்னல், நமக்கு நிறைய க்ஷேமம் அளிக்கட்டும்.

நயனயுகே^{3} யா நவநவப^{4}ாஸா / குவலயஹாஸா
குலகி^{3}ரிஜா ஸா/பரமபவித்ரா குஸுமவிசி^{1}த்ரா/ நிஜபத^{3}
ப்^{4}ரு^{1}த்யம் ரமயது நித்யம்॥

இரு கண்களிலும் புதுப்புது ஒளியுள்ளவள்-ஆம்பல் போல் அழகிய (வெளுத்த) சிரிப்புள்ளவள். மிகவும் பவித்ரமானவள் - பக்தர்களை மிகவும் சுத்தர்களாக்குபவள் புஷ்பங்களால் விசித்ரமானவள் இப்படிப்பட்ட அந்த அம்பிகை, தன்பாததாஸனை எப்போதும் களிக்கச் செய்யட்டும்.

ஜலோத்^{3}த^{4}தக^{3}தி:- ஜ, ஸ, ஜ, ஸ - லகுல, லலகு, லகுல, லலகு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

த^{4}ராதி^{4} பஸூதாம் வராப^4 யகராம்/ மராள-க^{3}மனாம்
ஸ்மராரி-கமனாம் । சிரோருஹப^{4}வத்-ஸரோருஹக^4 டா-/
விரோதி^{4}ப்ரு^{1}து^{2}காம் கரோமி ஹ்ரு^{1}த^{3}யே ॥

மலையரசன் மகள்-அபயவரத ஹஸ்தங் கொண்டவள் - அன்ன நடையாள்-சிவனுடைய ப்ரியை-பத்மக்கூட்டங்களின் விரோதியான சந்திரன் விளங்கும் கேசங்கள் கொண்டவள். இப்படிப்பட்ட தேவியை மனத்துள் வைக்கிறேன் (= த்யானிக்கிறேன்.)

லலனா-ப^4, த, ந, ஸ. குலல, குகுல, லலல, லலகு

ப^4ாதி ந ஸா தீ^{4}: பசுபதிலலனே / ப^4ாவயதே யா ந து தவ
ச^{1}ரணம் । லோச^{1}னமந்த^{4}ம் சசிலவமகுடே / பச்யதி யத் தே
ஸக்ரு^{1}த^{3}பி ந தனும் ॥

பசுபதியின் வனிதையே! உன்னை த்யானிக்காத புத்தி, ப்ரகாசிக்காது. சந்த்ரகலாமகுடையே! உன்னை ஒரு முறைகூட பார்க்காத கண், பொட்டையாகும்.

மௌக்திகத^3ாம - நான்கு ஜகணங்கள் லகுல, லகுல, லகுல, லகுல.

ஜஜாஜ ஜிக^4ாய புரத்ரயமாசு/யத^{3}ச்யுத - ப^3ாணகரோ (அ) பி
சிவோ ஹி । ஸுமௌக்திகத^3ாமதனோ தவ தே^{3}வி/
பதித்வப^{2}லந் ததி^{3}தி ப்ரதிப^4ாதி ॥

நன்முத்துமாலையணிந்த தேஹமுள்ள தேவியே ! சிவன், அச்யுதபாணத்தைக் கையிற்கொண்டவராயிருந்தும் = கையை விட்டே அகலாத பாணத்தை உடையவராயிருந்தும்) யுத்தம் புரிந்தார். மூன்று புரங்களையும் வென்றார் என்பது உனக்குப் பதியாக இருப்பதின் பலன்தான் என்று தோன்றுகிறது. அச்யுதனை-விஷ்ணுவை பாணமாக வைத்துக் கொண்டார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்பது உண்மைப்பொருள். இதுபோல் சிவலீலார்ணவத்திலும் பக் (127) ஈசன் வேட உருக்கொண்டு அபிசார யானையை நரஸிம்மாஸ்த்ரத்தால் கொன்றதை வர்ணிக்கும்போது அசையாத வில்லால்-அச்யுதமான அம்பால் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு பாதத்தில் 13 எழுத்துள்ளவை:-

ப்ரஹர்ஷிணீ - ம ந, ஜ, ர, குரு - குகுகு, லலல, லகுல, குலகு, கு.

உம்:- யே ஹ்யுச்^{1} சா^{1}வச^{1}ம் பக் (52); அம்ப^{3}ாம்பே^{3} த்யம்ரு^{1}தரஸம் - பக் (54), ப்ரேயஸ்யா ஸவித^{4}ம் - பக் (55)

ருசிரா - ஜ, ப^{4}, ஸ, ஜ, குரு - லகுல, குலல, லலகு, லகுல, கு.

உம்:- தபஸ்வினாம் பக் (158) ஸமந்ததோ ஜக^{3}தி - பக் (162), க்ரு^{1}பா நிதி^{4}ஸ் தத^{3}னு - பக் (163)

மத்தமயூரம்-ம, த, ய, ஸ, குரு (யதி 4,5,4) குகுகு, குகுல, லகுகு, லலகு, கு. எல்லாவற்றிற்குமுள்ள பாதமுடிவு நிறுத்துதலைத் தவிர 4 எழுத்தில் பிறகு 5 எழுத்தில் என்று இரு நிறுத்துதல் (யதி) இதற்கு உண்டு.

உம்:- வ்ரு^{1}த்தமணிமாலையில்:

மாதா யாஸௌ- க^{3}ாட^{4}மராளீ-மத^{3}யானா/ மேக^{4}ாடோபைர்-
மேச^{1}கரோசி^{1}:-கச^{1} ப^{4}ாரை: । த^{4}த்தே மோத^{3}ாந்-ந்ரு^{1} த்தபரம்-
மத்தமயூரம்/சி^{1}த்தே மத்கே -ஸா சி^{1}ரமம்ப^{3}ா - விஹ்ரு^{1}ஷீஷ்ட ॥

முதல் 5 எழுத்துக்களில் வ்ரு^{1}த்தத்தில் வரும் ம-த-ய-ஸ கணங்கள், குரு கூறப்பட்டன. மத்தமயூரம் என்று பெயரும் கூறப்பட்டது.

அன்னை அன்னப்பேடுபோல் உல்லாஸ நடை கொண்டவள். மேகம் போன்ற கருநிறக்காந்தியுள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கேசபாரத்தால், மதங்கொண்ட மயில்களைக் களிப்பால் கூத்தாடச் செய்கிறாள் (அன்னையின் கேசபாகத்தை மேகமென்று நினைத்து மயில்கள் மகிழ்ச்சியில் நடம்புரிகின்றன.) அப்படிப்பட்ட அன்னை என் உள்ளத்தில் நீண்டகாலம் விளையாடுவாளாக.

'தம் ஸம்ஸார- த்[4]வாந்தவிநாசம், ஹரிமீடே[3], என முடியும் ஹரிஸ்துதியும்.

'தம் ப்ரத்யஞ்ச[1]ந் - த[3]க்ஷிணவக்த்ரம் - கலயாமி' என முடியும் தக்ஷிணாமூர்த்தி ஸ்துதியும் இந்த வ்ரு[1]த்தத்தில் அமைந்தவை.

பாதத்தில் 14 எழுத்துள்ளவை:-

வஸந்த திலகா- த, ப[4], ஜ, ஜ இருகுரு - குலல, குலல, லகுல, லகுல, கு, கு.

உம்:- ஆமோத[3]தே ப[3]த ..... பக் (72) ஸுப்ராதமஸ்து ...... பக் (72) ப்ராகே[3]வ பாண்ட்[3]யதனயா..... பக் (73) ரத்னானி தத்ர வணிஜ: .... பக் (75) ஆமுக்தகஞ்சு[1]கம் ... பக் (75) நாச[1]க்ஷதே ந.... பக் (76)

இந்து[3]வத[3]னா:- ப[4], ஜ,ஸ,ந + இருகுரு - குலல, லகுல, லலகு, லலல, கு கு. நாலு நாலு எழுத்தாகப் பிரித்துப் படிக்கக்கூடியது. கடைசியில் இரண்டு. வ்ரு[1]த்தமணி மாலையில்:-

ப[4]ஞ்ஜஸி நக[3]ாங்க[3]ஜ[2]ர - ப[4]ாஸுர - ஸுஹாஸே/
யத்[3]யதி[4]கமத்[3]ய மம ஹ்ரு[1]த்[3]யமயி தாபம் । மாதரயமேது குஹ
கா தவ ஸமானா/ பாஹி ஜனமேஹி சரதி[3]ந்து[3] - வத[3]னே
(அ)ம்ப[3] ॥

அன்னையே! சரத்கால சந்த்ரன் போன்ற முகங்கொண்டவளே! கங்கை நீர்வீழ்ச்சி போல் (வெண்மையாய்ப்) பிரகாசிக்கும் மந்தஹாஸங் கொண்டவளே!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்போது அதிகமான எனது மனத்தின் தாபத்தை நீ தொலைக்காவிட்டால் இப்படிப்பட்ட நான் எங்கே செல்வது? உலகில் உனக்கு ஸமானமாக யாருளர்? அன்னையே ! வா. இந்த ஜனத்தை (= என்னை)க் காப்பாற்று.

வ்ரு1த்தமணிமாலையில்:- இந்து வதனா இன்னொரு உதாஹரணம்-

ச1ஞ்ச1ல - த்3ரு1க3ஞ்ச1ல - ஸுவஞ்சி1த - கி3ரீசம் / நாமபர-
காமகரமாநமத3தூ3ரம் । வஸ்து விபு3த4 - ஸ்துதமுத3 ஸ்த -
து3ரிதந் தத்/சி1த்தபு4வி த4த்த இஹ ந்ரு1த்தமனிசம் மே ॥

சஞ்சலமான கடைக்கண்ணால் கிரீசனை (சிவனை) வஞ்சித்ததும் தன்பெயரைச் சொல்பவரின் இஷ்டங்களைப் பூர்த்தி செய்வதும் வணங்குவோர்க்கு அருகிலுள்ளதும் தேவர்களால் துதிக்கப்பட்டதும் பாபங்களைப் போக்குவதுமான அந்த வஸ்து = (அம்பாள்) என் மனத்தில் எப்போதும் நடம் புரிகிறது.

வ்ரு1த்தமணிமாலையில்

ப்ரஹரணதிலகம்:- ந, ந, ப4, ந, லகுவும், குருவும், லலல, லலல, குலல, லலல, ல, கு.

கச1ப4ரகுடிலம் குச1 - பு4வி கடி2னம் / தடிதி3வ வஸனங்
கடிக3த ரசனம் । நமத3க4ஹரணம் நடது3ருகருணம் /
குலகி3ரிஸுக்ரு1தம் குசலத3 மனிசம் ॥

கேசபாரத்தில் நெளிந்திருப்பது = (நெளிந்த கேசமுடையது) கொங்கை ப்ரதேசத்தில் கடினமானது. மின்னல் போல் மின்னும் ஆடையுள்ளது. இடையில் ஒட்டியாணம் பூண்டது. வணங்குவோர் பாபத்தை அபஹரிப்பது. பெருங்கருணை நடம்புரியுமிடம், குலபர்வதத்தின் (=

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஹிமவானின்) புண்ணியப்பயன் எப்போதும் க்ஷேமமளிக்கும். அன்னையை ஹிமவானின் தவப்பயன் என்று சொன்னதால் அடைமொழிகள் அதற்கேற்ப 'அது, அது' என்று கூறப்பட்டது.

வ்ரு[1]த்தமணிமாலையில்

மத[3]னார்த்தா–த, ய, ஸ, ப[4], இருகுரு. குகுல, லகுகு, லலகு, குலல, கு,கு.

நாலு நாலாகப் பிரித்துப் படிக்கத்தக்கது. கடைசியில் இரண்டு.

தாம் யஸ்ஸுப[4]க[3]ாங்கீ[3]மிஹ மாராந்தக-ராமாம் / த[4]த்தே
மத[3]னார்த்தா நிஜநாத[2]ம் மஹிளேவ । மஸ்தே விது[4]சஸ்தம் நிஜ
ஹஸ்தே ஸபினாகம் / மீலந்நயனாலம்பி[3]த – ப[2]ாலஞ்ச[1] ஸ யாதி॥

காதலால் வாடும் பெண் தன் கணவனையே மனத்துள் கொள்வது போல் எவனொருவன் காமனை அழித்த ஈசனின் இல்லாளான பாக்யமுள்ள அங்கங்கொண்ட தேவியை மனத்துள் த்யானிக்கிறானோ, அவன் சிரஸில் சந்திரகலையால் விளங்குவதும் கையில் பினாகம் என்ற வில் கொண்டதும் மூடுங்கண்ணுள்ள நெற்றியுடையதுமான சிவனின் ரூபத்தை அடைவான். சிவனேயாய் விடுவான். இப்படிப்பட்ட சிவனை அடைவான் என்று தான் கிடைக்கிறது. சிவனின் 'ரூபத்தை' என்று சேர்ப்பது அதிகப்பொருத்தமாகத் தோன்றியது.

பாதத்தில் 15 எழுத்துள்ளவை:

மாலினீ – (8,7) ந, ந, ம, ய, ய – லலல, லலல, குகுகு, லகுகு, லகுகு

வ்ரு1–ர, நநமயயயுதேயம் மாலினீ பே4ாகி3லோகை: । பே4ாகி3 = ஸர்ப்பம் –8 லோகம் – 7. 8 – ஆலும் 7 – ஆலும் யதி.

உம்:– தத[3]னு தம்பக[3]ம்ய .... பக் (171)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ்ருத்தமணிமாலையில்:

மணிகணநிகர :- 14லகு, ஒரு குரு.

நங நங ஸரஸி கிமவட இவ பயோ / த்ருதமிஹ ஜட இவ குக்ருதிகரணத: । குரு ஹ்ருத நிசமபி மணிகணநிகரை: / விலஸதி வபுஷி ஹி ஹிமகிரிது ஹிது: ॥

ஜடனைப்போல கெட்ட செயல்கள் புரிவதற்காக பள்ளத்தில் ஜலம் ஓடுவதுபோல் என் வேகமாக ஓடுகிறாய்? மணிகணங்களால் அலங்கரிக்கப்பட்டு விளக்குகிறதான ஹிமவத்புத்ரியின் மேனியில் மனத்தைச் செலுத்து.

தூணகம்-குரு, லகு, குரு, லகு .... குரு. மாறிமாறி குருவும் லகுவும், முடிவில் 15-வது குரு.

உமாஸஹஸ்ரத்தில்

உக்ஷராஜவாஹனஸ்ய ஜீவிதாத் கரியஸீ / பக்ஷிராஜவாஹனாதி- வர்ண்யமானவைப வா । கேகிலோக-சக்ரவர்த்தி-வாஹனேன புத்ரிணீ / வாரணாரிஸார்வபெளம - வாஹனா கதிர் மம ॥

வ்ருஷபராஜ வாஹனருக்கு உயிரினும் மேலானவள்-கருடவாஹனர் முதலியோரால் ஸ்துதிக்கப்படும் ஐச்வர்யத்தை யுள்ளவள். மயில் சக்ரவர்த்தியை வாஹனமாய்க் கொண்ட ஸ்கந்தனால் புத்ரனள்ளவள் - ஸ்கந்தனைப்புத்ரனாகக் கொண்டவள். ஸிம்ஹசக்ரவர்த்தியை வாஹனமாய்க் கொண்டவள், எனக்குப் புகலிடம்.

காலபைரவாஷ்டகம் - தேவராஜஸேவ்யமானபாவனாங்க்ரி பங்கஜம்.................................. காலபைரவம் பஜே ॥

ஸேதுமாஹாத்ம்யவ்யாக்யான மங்களச்லோகம், வல்லபகணபதி ஸ்துதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாணி-பங்கஜேஷு பீ3ஜபூரகங் க3த3ாந் த3ச-/ ஸ்விக்ஷுச1ாப சூல-ச1க்ர-பத்3ம-பாசமுத்பலம்। வ்ரீஹி-மஞ்ஜரீம் ஸ்வகீய-ச்ரு1ங்க3மப்யநாரதம் / சுண்ட3யா ஸுரத்ன-கும்ப4முத்3-வஹந்தமிஷ்டத3ம் ॥

பத்3ம ஹஸ்தயா விராஜமானபூ4ஷயா முத3ா / வல்லப4ாம்ப3யோபகூ3ட4-தி3வ்ய-விக்3ரஹம் விபு4ம் । விச்வஸ்ரு1ஷ்டி பாலனாந்தகாரிணம் நிரஞ்ஜனம்/ வாரணானனம் ப4ஜே ப4வாப்3தி4தாரகம் பரம் ॥

'ச1க்ராப்3ஜ = சக்ர-பத்ம' என்றபடி இது. 'ச1க்ராப்3ஜ = சக்ர-சங்க2' என்றபடியும் அமைப்பு உளது.

தாமரை போன்ற 10 கைகளில் மாதுளம்பழம், கதை, கரும்பு-வில், சூலம், சக்ரம், பத்மம், பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தன் கொம்பு (தந்தம்) இவைகளையும் துதிக்கையால் ரத்னகலசத்தையும் எப்போதும் வஹிப்பவரும் விருப்பமான வற்றையெல்லாம் அளிப்பவரும், பத்மத்தைக்கையில் ஏந்தியவளும் ப்ரகாசிக்கிற பூஷணங்கள் உடையவளுமான வல்லபை அன்னையால் ஸந்தோஷத்துடன் தழுவிக் கொள்ளப்பட்ட திவ்ய தேஹத்தையுடையவரும் ஸர்வவ்யாபியும் உலகத்தை உண்டாக்குதல் - காப்பாற்றுதல் அழித்தல் இவற்றைச் செய்பவரும் பற்றற்றவரும் ஸம்ஸார - ஸாகரத்தைத் தாண்டுவிப்பவரும் மேலானவருமான கஜானனரை ஸேவிக்கிறேன்.

நீலகண்ட2 வாஹனந் த்3விஷட்3பு4ஜம் கிரீடினம் / லோலரத்ன-குண்ட3லப்ரப4ா பி4ராம ஷண்முகம் ।
சூலசக்தி த3ண்ட3 குக்குடாக்ஷமாலிகா த4ரம் / ப3ாலமீச்வரங் குமார - சைலவாஸினம் ப4ஜே. ॥

நீலமான கழுத்துள்ள மயிலை வாஹனமாய்க் கொண்டவர் - ஈராறு தோளுடையவர் - கிரீடமுள்ளவர் - அசைகிற ரத்னகுண்டலங்களின் காந்தியால் அழகிய ஆறுமுகங்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டவர் - சூலம் - வேல் - தண்டம் - சேவல் - அக்ஷமாலிகைகளை தரிப்பவர் - எல்லாம் வல்லவர் - குமார மலைவாஸி- பாலஸ்கந்தனை ஸேவிக்கிறேன்.

பாதத்தில் 16 எழுத்துள்ளவை:

பஞ்ச சாமரம் - லகுவுங்குருவும் மாறி மாறிவருவது

உம்: ஸமுத்ஸ்ரு^{1}ஜன் .... பக் (173), கணேச பஞ்சரத்னம்.

குருவும் லகுவுமாக மாறி மாறி வந்தால் - தூணகம்+லகு என்று வந்தால் பெயர் தெரியவில்லை.

உம்: ஸ்ரீ பஞ்சாக்ஷர நக்ஷத்ரமாலிகா ஸ்துதி- ஸ்ரீசங்கரக்ரந்தாவளி வாணி விலாஸ-ஸமதா

ஸ்ரீமத^{3}ாத்மனே கு^{3}ணைகஸிந்த^{4}வே நமச்^{5}சி^{5}வாய / ....

இதில் பாதி இருந்தால் - குருலகு மொத்தம் 8 எழுத்து ஸமானிகா.

அச்வக^{3}தி:- 5 ப^{4}கணம் +குரு - குலல, குலல, குலல, குலல, குலல, கு.

உம்: வ்ரு^{1}த்தமணிமாலையில்

ப^{4}ாபி^{4}பு^{4}பூ^{4}பு^{4}கு^{3} பாஸ்திவிதெ^{4}ள பஹுது^{3}:க^{2}நிதெ^{4}ள /
அச்வக^{3}திஞ் ஜஹத^{3}ாசு மனோ மமதாபி^{4}ஹதம் ।
அம்ப^{3} பத^{3}ாம்பு^{3}ஜமம்ப^{3}ரபாத^{3}பட^{3}ம்ப^{3}ரஹ்ரு^{1}த் /
காமித-த^{3}ானவிதெ^{4}ள கலயேத கத^{3}ா தவ தத்

பாதத்தில் 17 எழுத்துள்ளவை:

சிக^{2}ரிணீ (6, 11) யமநஸப^{4}, லகு, குரு - லகுகு, குகுகு, லலல, லலகு, குலல, ல,கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உம் : ஸௌந்தர்ய லஹரீ முழுவதும். மஹாமாயாஜாலம் ..... பக் (172) உதா3த்தேஷ்வா ரோஹன் .... பக் (180)

மந்த3ாக்ராந்தா (4,6,7) ம,ப4, ந,த,த, இருகுரு - குகுகு, குலல, லலல, குகுல, குகுல, கு, கு.

உம் : சாந்தாகாரம்........ மேகஸந்தேசகாவ்யம் முழுவதும், க்ரந்த3த்3 க3ந்த4த்3விபம் .... பக் (113) ஜ்ஞானாஜ்ஞான .... பக் (169) தே3வம் வந்தே3 .... பக் (142)

ஹரிணீ (6-4-7) ந, ஸ, ம, ர, ஸ, லகு, குரு - லலல, லலகு, குகுகு, குலகு, லலகு, ல, கு.

உம் : க்ஷிதிபதிரதே2சானம் .... பக் (171) க4டிதமகி2லம் .... பக் (88)

ப்ரு1த்2வீ (8-9) ஜ, ஸ. ஜ, ஸ, ய, லகு, குரு - லகுல, லலகு, லகுல, லலகு, ல,கு.

உம் : அத்ரு1ஷ்டச1ரம்............. பக் (172)

ஸ்ரீமடத்தில் பூஜை முடிவில் சொல்லப்படும் குருத்யான ச்லோகம்.

மஹாத்ரிபுரஸுந்த3ரீ-ரமண-ச1ந்த்3ரமௌளீச்வர- / ப்ரஸாத3 பரிலப்3த4 வாங்மய விபூ4ஷிதாசாந்தரம் ।
நிரந்தரமுபாஸ்மஹே நிருபமாத்மவித்3யாநதீ3 - / நதீ3சமபரிப்4ரமம் மனஸி சங்கரார்யங் கு3ரும் ॥

மஹாத்ரிபுரஸுந்தரீவல்லபரான சந்த்ரமௌளீச்வாரின் ப்ரஸாதத்தாலடையப்பட்ட வாக்விலாஸத்தால் திக்குகளின் மத்யபாகத்தை (=லோகம் முழுவதையும்) அலங்கரித்தவரும் ஒப்பற்றதான ஆத்மவித்யையாகிய நதிக்கு ஸமுத்ரமாயி ருப்பவரும் (ஆத்மவித்யையால் அடையப்படுகிற ப்ரம்ம ஸ்வருபமாயிருக்கிறவரும் ப்ரமம் (=விபரீத ஜ்ஞானம்) இல்லாத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வருமான சங்கரார்ய குருவை மனஸில் இடைவிடாது உபாஸிக்கிறோம். கங்கை முதலிய நதிகளின் பதி - ஸமுத்திரத்தில் ப்ரமம் (= சுழல்) உண்டு ஆத்மவிதியையாகிய நதிக்குப்பதியான குருவிடத்தில் ப்ரமம் (= விபரீதஜ்ஞானம் கிடையாது.

பாதத்தில் 18 எழுத்துள்ளவை:-

ஹரிணப்லுதம் : ர, ஸ, ஜ, ஜ, ப^{4}, ர - குலகு, லலகு, லகுல, லகுல, குலல, குலகு,

உம்: சந்த்^{3}ரசேக^{2}ராஷ்டகம். ராக^{4} வங்கருணாகரம்... ஸப்தமோ மலயத்^{4}வஜஸ்ய .... பக் (130)

கல்ப்ப-ப^{4}ானு-ஸமான-ப^{4}ாஸ்வர-த^{4}ாம லோச^{1}ன-கே^{3}ாசரங் /
கிங் கிமித்யதி விஸ்மிதே மயி பச்யதீஹ ஸமாக^{3} தாம் ।
கால - குந்தல - ப^{4}ார நிர்ஜித - நீல - மேக^{4} - குலாம் புரச்^{5} /
ச^{1}க்ர-ராஜ-நிவாஸினீந் த்ரிபுரேச்வரீ மவலோகயே ॥

'கல்ப்ப கால ஸூர்யனுக் கொப்பானதாய், கண்ணுக்குத் தெரிவதாய் மிக்க காந்தியுள்ள தேஜஸ்ஸாக (இருக்கிறதே!) என்ன இது? என்று மிகவும் ஆச்சர்யப்பட்டவனான நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வந்தவளும் கருப்பான கேசபாரத்தால் கருமேகக் கூட்டத்தை வென்றவளும் ஸ்ரீ சக்ரராஜவாஸினியுமான த்ரிபுரேச்வரியை எதிரில் பார்க்கிறேன்.

ஐந்தைந்து எழுத்தாகப் படிக்க வேண்டும். பாதக் கடைசியில் மூன்று எழுத்து.

நிசா :- ந, ந, ர, ர, ர, ர - லலல, லலல, குலகு, குலகு, குலகு, குலகு.

உம் :- ப்ரதிகரிபரிசங்கி பக் (80)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரிணீ :- ஸ, ந, ஜ, ந, ப4, ஸ-லலகு, லலல, லகுல, லலல, குலல, லலகு.

உம்:- வ்ரு[1]த்தமணிமாலையில்

ஸ நிஜாநபி ஸகலானதிசயிதா பு[4]வி ப[4]விதா /
ஸத[3]னே நிஜவத[3]னே(அ)பி ச[1] கமலா விதி[4]மஹிளா ।
தருணாருணகிரணாமதி கருணாம்பு[3]தி[4]மிஹ ய: /
கரிணீஸமக[3]மனாம் சிவதருணீம் ஹ்ருதி[3] ப[4]ஜதே //

பொருள் : இளம்ஸூர்யனொத்த ஒளியுள்ளவளும் கருணைக்கடலும் பெண்யானையொத்த நடையுடையவளுமான சிவயுவதியை (பார்வதியை) மனத்தில் ஸேவிக்கிறவன், தன்னித்தோரனைவரினும் மேம்பட்டு இருப்பான். அவன் வீட்டில் லஷ்மியும் வாக்கில் ஸரஸ்வதியுமிருப்பார்கள்.

பாதத்தில் 17 எழுத்துள்ளவை:-

ஸுத[4]ாகலச: 15லகு இரு குரு. க்ரு[1]ஷ்ணகர்ணாம்ரு[1]தத்தில்

கரகமல-த[3]ளத[3]ளித-லலிததரவம்சீ - / கலநிநத[3]-க[3]ளத[3]ம்ரு[1]த - க[4]னஸரஸி-தே[3]வே । ஸஹஜரஸ-ப[4]ர-ப[4]ரித-த[3]ரஹஸிதவீதீ[2] - / ஸததவஹத[3]த[4]ரமணி-மது[4]ரிமணி லீயே ॥

தாமரைக்கையால் சிறிது விரித்து வாசிக்கப்பட்ட மிகலலிதமான குழலிலிருந்து வழிகிற அம்ருதம் நிறைந்த ஓடையாயிருக்கிறவனும், இயற்கையாகவே ரஸபாரம் நிரம்பிய மந்தஹாஸ வீதியில் எப்போதும் ப்ரவஹிக்கிற மணிபோன்ற உதட்டின் இனிமையையுடையவனுமான தேவனிடத்தில் லயமடைகிறேன். ப்ரவஹிக்கிற இனிமை எனக்கொள்க.

பாதத்தில் 19 எழுத்துள்ளவை

சார்தூ[3]ல-விக்ரீடி[3]தம்:-(12,7) ம,ஸ,ஜ,ஸ,த,த, குரு-குகுகு, லலகு, லகுல, குகுல, குகுல, கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உம் : சூ^{1}ட^{3}ா ப^{3}த்^{3}த^{4} .... முதல் பாண்ட^{3}யோ த^{3}ண்ட^{3}யிதாஸ்து .... முடிய- பக் (186-192), அர்த^{4}ம் பௌருஷம்.... பக் (193), ஆநம்யாநம்ய .... பக் (194), அஸ்மத்தோ ப^{3}ஹூத^{4}ா .... பக் (195), வோட^{4}வ்யானி .... பக் (195), பாண்ட^{3}யேன .... பக் (196), ஆமந்த்ர்ய .... பக் (32) கஸ்தூரீஹிமவாலுகா .... பக் (120), க^{3}ாம்பீ^{4}ர்யேண நிஷங்க^{3}தாம் .... பக் (141) மௌர்வீ மூர்த்^{4}னி ரத^{2}: .... பக் (129), ச்ரோதவ்யம் நிதி^{4}ரஸ்தி .... பக் (207) ஹாலாஸ்யேசிது: .... பக் (208).

மேக^{4}விஸ்பூ^{2}ர்ஜிதம்:- ய,ம,ந,ஸ,ர,ர, குரு, 6 லகுகு, குகுகு, லலல, லலகு, குலகு, குலகு, கு.

உம் :- வ்ரு^{1}த்தமணிமாலையில்:-

யமேன: ஸ்வம் ரௌத்^{3}ரம் க^{3}ளயிதுமலம் பே^{4}ஷஜம்
பா^{4}க்^{3}யவந்தோ / லிஹந்தச்^{5} சே^{1}தோபீ^{4} ருசி^{1}ர-ருசி^{1}ரம் மேக^{4}
விஸ்பூ^{2}ர்ஜிதாப^{4}ம் । ப^{4}ஜந்தே நிர்வாணம் நிரவதி^{4} ஸுக^{2}ம்
தாத்^{3}ரு^{1}ச: கோ(அ)பி சம்போ^{4}: / சரீரீ ஸந்தோஷ: சமயது
மனோ-ஜாட்^{3}யமஸ்மாக மாசு ॥

பொருள்:- பாக்யவான்கள் தமது கொடிய தீவினைகளைப் போக்குவதற்காக, மிகவும் விரும்பத்தக்க-மின்னல்போன்ற காந்தியுள்ள எந்த மருந்தை (=தேவியை) மணத்தினால் சுவைத்து எல்லையற்ற ஸுகமாகிய மோக்ஷத்தை அடைகிறார்களோ, சிவபெருமானின் ஸந்தோஷமே உருவெடுத்தது போன்ற அந்த தேவி சீக்ரமாக நமது மன இருளை நீக்கட்டும்.

பாதத்தில் 21 எழுத்துள்ளது.

ஸ்ரக்^{3}த^{4}ரா - (7, 7, 7) ம, ர, ப, ந, ய, ய, ய - குகுகு, குலகு, குலல, லலல, லகுகு, லகுகு, லகுகு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விஷ்ணுஸஹஸ்ர நாம த்யானம்-க்ஷீரோத[3]ன்வத்ப்ரதே[3]சே.....
பஞ்சாக்ஷீத்யானம்-மூலே கல்பத்[3]ருமஸ்ய... பே[4]ரீப[4]ாங்கார-

ஸாந்த்[3]ரம்.... பக் (97) அம்பே[4]ாபி[4]: கேவலைரபி .... பக் (148)

கஞ்ஜ - மனோஹர - பாத[3]ச[1]லன்- மணி - நூபுர -ஹம்ஸ -
விராஜிதே / கஞ்ஜப[4]வாதி[3] - ஸுரௌக[4]-பரிஷ்டுத - லோக -
விஸ்ரு[1]த்வர - வைப[4]வே। மஞ்ஜுள - வாங்மய - நிர்ஜிதகீர
குலே (அ) சலராஜ - ஸுகன்யகே / பாலய - ஹே - லலிதா -
பரமேச்வரி - மாமபராதி[4]ன மம்பி[3]கே॥

தாமரை போல அழகான பாதங்களில் அசைகிற கொலுஸாகிய ஹம்ஸத்தால் விளங்குபவளே ! தாமரையிலுதித்த ப்ரம்மர் முதலான தேவர்கள் கூட்டத்தால் புகழப்பட்ட தான் உலகம் முழுதும் பரவிய மஹிமையை உடையவளே ! இனிமையான வாக்கால் கிளிக்குலங்களை வென்றவளே ! மலையரசன் நன்மகளே ! ஹே லலிதாபரமேச்வரி। அபராதியான என்னைக் காப்பாற்று. அபராதங்களைப் பொறுத்துக் கொண்டு என்னை ரக்ஷி.

பாதத்தில் 22 எழுத்துள்ளது:

மத்தேப[4]ம்-த, ப[4], ய, ஜ, ஸ, ர, ந, குரு - குகுல, குலல, லகுகு, லகுல, லலகு, குலகு, லலல, கு.

உம்:- வ்ரு[1]த்தமணிமாலையில்:- (ஏழு, ஏழு, எட்டாகப் பிரித்துப் படிக்க வேண்டும்.)

தாம் பே[4]ா யஜே ஸுரநக[3]ாடோபநாசக்ரு[1]த-
மாநம்ரகாமகரணே / மத்தேப[4] துல்யக[3] தி[3]முத்தேஜிதேந்த்[3] ர
மணி-ஸத்தேஜஸம் ப[4]க[3]வதீம்। ப[3]ாலாம்ரு[1] தாம்சுஜயி
ப[2]ாலாபி யா ஸதத-நாளீக-சோபி[4] வத[3]னா/சி[1]த்ரீயதே
சிக[2]ரி-புத்ரீ - கி[3]ராமுபரி ஸா த்ரீக்ஷணோத்ஸவஜ[2]ரீ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருள்:- வணங்குவோரின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் கல்பகவ்ருக்ஷத்தின் கர்வத்தை அடக்குபவள் - மதயானைக்கு ஸமானமான நடையுடையவள் - சாணை பிடித்த இந்த்ர நீலமணியின் ஒளிபோன்ற நல்லொளியுடையவள். இளம் சந்த்ரனை ஜயிக்கும் நெற்றியுடையவள். எப்போதும் தாமரைபோல் விளங்கும் முகமுடையவள்-மலைமகள்-முக்கண்ணனின் உத்ஸவ = கொண்டாட்ட அருவிப்பெருக்கு வாக்குக்கு எட்டாமல் விசித்ரமாயிருக்கிறாள். அப்பேர்ப்பட்ட பகவதியைப் பூஜிக்கிறேன்.

வ்ரு[1]த்தமணி மாலையில் 'அத்[3]ரீக்ஷணோத்ஸவஜ[2]ரீ' என்று பாடம் இருந்தது. சிக[2]ரிபுத்ரீ என்று வந்துவிட்டதால் 'உத்ஸவலஹரீமுபாஸ்மஹே சம்போ:[1] என்பதற்கிணங்க த்ரீக்ஷணோத்ஸவஜ[2]ரீ என்று எழுதப்பட்டது.

ஸ்மேர-ச[1]ாருமுக[2]- மண்டலாம் விமல-க[3]ண்ட[3]லம்பி[3] - மணிகுண்ட[3]லாம் / ஹார த[3]ாம பரிசோப[4]மான - குச[1]-ப[4]ார பீ[4]ரு - தனு-மத்[4]யமாம் । வீர க[3]ர்வஹர-நூபுராம் விவித[4] - காரணேச-வர-பீடி[2]காம் / மார-வைரி-ஸஹச[1]ாரிணீம் மனஸி ப[4]ாவயாமி பரதே[3]வதாம் ॥

புன் சிரிப்புள்ள அழகிய முகமண்டலங்கொண்டவளும், ஸ்வச்சமான கன்னத்தில் தொங்குகிற மணிமய குண்டலமுள்ளவளும் ஹாரவடத்தால் மிகவும் சோபிக்கிற கொங்கைகளின் பாரத்திலிருந்து அஞ்சுகிற நுண்ணிய இடையையுடையவளும் வீரர்களின் கர்வத்தைப் போக்குகிற கொலுஸை உடையவளும் பலவிதமான காரணேச்வரர்களை உயரிய பீடமாகக் கொண்டவளும் மன்மத சத்ருவான சிவனின் ஸஹசாரிணியும் (சிவனுடன் கூடவே இருப்பவளும்) ஆன பரதேவதையை மனஸில் த்யானிக்கிறேன்.

காளிதாஸரின் அம்பா[3]ஷ்டகம் இந்த வ்ரு[1]த்தத்தில் அமைந்துள்ளது. சேடப[4] வந்நிகி[2]ல ....

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதத்தில் 23 எழுத்துள்ளது.

ஹம்ஸக^{3}தி-நகணம் + 6 ஜகணங்கள் + லகு + குரு

உம்:- அயிகி^{3}ரி நந்தி^{3}னி நந்தி^{3}த-மேதி^{3}னி விச்வவினோதி^{3}னி நந்த^{3}நுதே / கி^{3}ரிவரவிந்த்^{4}ய சிரோதி^{4} - நிவாஸினி விஷ்ணுவிலாஸினி ஜிஷ்ணுநுதே । ப^{4}க^{3}வதி ஹே சிகண்ட^{2}-குடும்பி^{3}னி பூ^{4}ரிகுடும்பி^{3}னி பூ^{4}ரிக்ரு^{1}தே / ஜய ஜய ஹே மஹிஷாஸுரமர்தி^{3}னி ரம்யகபர்தி^{3}னி சைலஸுதே ॥

மலைமகளே ! உலகை மகிழ்விப்பவளே ! உலகின் இயக்கத்தை விளையாட்டாய்ச் செய்பவளே ! நந்தகோபனால் வணங்கப்பட்டவளே ! மலைகளிற் சிறந்த விந்த்யமலையின் கொடுமுடியில் வஸிப்பவளே (= விந்த்யவாஸினிதுர்கையே !) விஷ்ணுவிடம் (சக்தியாக) விளங்குபவளே !

அர்ஜுனனால் வணங்கப்பட்டவளே ! பகவதியே ! (= முழுமையான செல்வாக்கு, ஆற்றல், புகழ், செல்வம், அறிவு, வைராக்யம் இவையுடையவளே !) நீலகண்டனின் இல்லாளே ! உலகமாகிய நிறைந்த பெருங்குடும்பங்கள் உடையவளே ! பலவகைப்பட்ட செயல்கள் உள்ளவளே ! மஹிஷாஸுரனை வதைத்தவளே ! அழகான பின்னப் பெற்ற கூந்தல் உள்ளவளே ! ஜய ஜய வெல்க வெல்க (ஜயமளிப்பாயாக)

பாதத்தில் 26 எழுத்துள்ளது. சம்பு4 நடனம் (14, 12)

ஜ, ஸ, ந, ப^{4}, ஜ, ஸ, ந, ப^{4}, லகு, குரு - லகுல, லலகு, லலல, குலல,லகுல, லலகு, லலல, குலல, ல,கு.

உம் :- பதஞ்ஜலியின் காலுங்கொம்புமற்ற ஸ்துதி-ஸ்ரீமடத்தில் அஸ்தமிக்கும்போது மத்தளத்வனியுடன் சொல்லப்படுவது.

அனந்த-நவரத்ன-விலஸத்-கடக-கிங்கிணி -
ஜ^{2}லஞ்ஜ^{2}ல-ஜ^{2}லஞ்ஜ^{2}ல-ரவம்/ முகுந்த^{3} - விதி^{4} -

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஹஸ்தக3த-மத்3 த3 ள-லயத்4வனி -
தி4மித்3தி4மித-நர்த்தன-பத3ம் ॥
சகுந்தரத2-ப3ர்ஹிரத2-நந்தி3முக2த3ந்திமுக2ப்4ரு1ங்கி3-ரிடி-
ஸங்க4நிகடம் / ஸநந்த3-ஸநகப்ரமுக2வந்தி3தபத3ம்
பரசித3ம்ப3ர நடம் ஹ்ரு1தி ப4ஜ ॥

பொருள் : எல்லையற்ற நவரத்னங்களால் ஒளிர்கிற கடகம்-சலங்கைகளின் 'ஜலஞ்ஜல-ஜலஞ்ஜல' என்ற ஒலியை உடையவரும், விஷ்ணு, ப்ரம்மா இவர்களின் கையிலுள்ள மத்தளத்தின் லயத்வனியால் 'திமித்திமி' என்று சப்தம் நிறைந்த நர்த்தனஸ்தானத்தை உடையவரும் பக்ஷிரதர் = கருடபக்ஷியை ரதமாக-வாஹனமாகக் கொண்டவர் = (விஷ்ணு) மயிலை ரதமாக (வாஹனமாக) உடையவர் - மயில்வாஹனர் = குஹன் மாட்டுமுகங்கொண்ட நந்தி, கஜானனர், ப்ருங்கி-ரிடி ரிஷிகள் இவர்கள் அருகிலிருப்பவரும், ஸநந்தர், ஸநகர் முதலியவரால் வணங்கப்பட்ட பாதங்கொண்டவருமான மேலான சிதம்பரத்தில் நடனமாடும் நடராஜனை மனஸில் ஸேவிப்பாயாக.

வ்ரு1த்தமணிமாலையில்-சம்பு நடனம்:

கராம்பு3 ஜ-விலாஸித-வராமலஸரா-நதஜராம்ரு1தி
நிராக்ரு1திபரா / த4ராத4ர-வராமல-புராக்ரு1தி- நராக்ரு1தித4ரா
ஹ்ரு1தி3 பராத் பரதரா। விராஜதி ஸுராஸுரவராவளி -
கராஞ்ஜலி - து3ராஸத3தராந்திகதடா / க2ராத்யக4பரா
ப4வஹராகி2ல-ச1ராச1ரவரா மம புராந்தக-வதூ4: ॥

பொருள் :- தாமரைபோன்ற கைகளில் விளங்கும் வரமுத்ரை - ஜபமாலையுடையவள்-வணங்குபவர்களின் மூப்பு மரணத்தைப் போக்குவதில் ஈடுபட்டவள் - பர்வதத்தின் (ஹிமயத்தின்) பூர்வபுண்யமனைத்தும் சேர்ந்து எடுத்த மனித உருவைத் தாங்குபவள். மேலானதற்கெல்லாம் மேலானவன். தேவர்கள், அஸுரர்கள் இவர்களின் அஞ்ஜலிக்கு அருகில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நெருங்கமுடியாதவள். (தூர இருந்தே கைகூப்பி வணங்கப் படுபவள், கடினமான பெரும்பாபத்துக்கு அப்பாற்பட்டவள் - ஸம்ஸாரத்தைப் போக்குபவள். அசையும் பொருள் அசையாப் பொருளான அனைத்துலகிலும் சிறந்தவள். இப்பேர்ப்பட்ட புராந்தகனின் த்ரிபுரஸம்ஹாரனின்) வனிதை என் ஹ்ருதயத்தில் ப்ரகாசிக்கிறாள்.

அர்த[4]ஸம வ்ரு[1]த்தங்கள் 1-வது பாதமும் 3-வது பாதமும் ஸமமாயிருக்கும். 2-வதும் 4-வதும் ஸமமாயிருக்கும்.

புஷ்பிதாக்[3]ரா - 1-வது, 3-வது பாதத்தில் ந, ந, ர, ய - லலல, லலல, குலகு, லகுகு. 2-வது, 4-வது பாதத்தில் ந, ஜ, ஜ, ர, குரு-லலல, லகுல, லகுல, குலகு, கு்.

உம்: ப்ரசிதி[2]லகலுஷம் .... பக் (56) விஹ்[3]ரு[1]திஷு பிதரௌ....... ..... பக் (57) ச்ருதிஷு நிஹிதத்[3]ரு[1]ஷ்டய: .... பக் (58) நிகி[2]லஜனிமதாம் பக் (56) அத[2] புவி...........பக் (58) இதி கலசப[4]வேன .... பக் (60) ப்ரவஸஸி யதி[3] தாத .... பக் (61) ந யத[3] திச[1] ரிதம் .... பக் (62......)

வியோகி[3]னீ : 1-வது 3-வது பாதத்தில் ஸ, ஸ, ஜ, குரு - லலகு, லலகு, லகுல, கு. 2-வது, 4-வது பாதத்தில் ஸ, ப, லகு, குரு-லலகு, குலல, குலகு, ல,கு.

உம் : ஸஹஸன் னசலேன த[4]ன்வனா .... பக் (127) மலயத்[4]வஜபாண்ட்[3]யகன்யகா-/ச[1]ரணத்[5]ந்த[3]வ பக் (1)

வஸந்தமாலிகா : 1-வது பாகத்தில் ஸ, ஸ, ஜ, இரு குரு-லலகு, லலகு, லகுல, கு, கு. 2-வது, 4-வது பாதத்தில் ஸ, ப, ர, ய, லலகு, குலல, குலகு, லகுகு.

உம் : ப்ரஹஸத்[3]வத[3]னம் ப்ரஸன்னநேத்ரம்......பக் (28) த்[3]ரு[1]சேகில.............. பக் (87)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வ்ரு1த்தரத்னாவளீ ஸரஸ்வதீஸ்துதியில் கணங்காட்ட ஒரு ச்லோகம். யதி காட்ட இன்னொரு ச்லோகம். இயற்றியவர் அவத4ானஸரஸ்வதியின் மைந்தர் வேங்கடேசன். (காளிதாஸன் என்று க்ரந்த லிபி புஸ்தகத்திலுள்ளது. அது பட்டப் பெயராயிருக்கும்.

மாதா துங்க3ங் கீ3தமாலாபயந்தீ / மான்யா வீணாசாலினீ மந்த்ர ரூபா । ஸந்தாபக்4னீ சாரதா3ம்போ4த சுப்4ரா / ஸாந்நித்4யம் மே ஸந்ததம் த்வம் விதே4யா: ॥

'மாதாதுங்கங்கீ' என்று ம, த, த கணங்கள் + இரு குரு கூறப்பட்டன.

வீணா சாலினீ என்று வ்ரு1த்தப் பெயர் கூறப்பட்டது.

பொருள் :- ஜகஜ் ஜனனீ - வீணையுடையவள்-உயர்ந்த கீதத்தை ஆலாபனம் செய்கிறவள். பூஜிக்கத் தக்கவள்-மந்த்ரஸ்வரூபமானவள்-ஸந்தாபத்தைப் போக்குபவள் - சரத்கால மேகம்போல் வெளுப்பானவள். இப்படிப்பட்ட நீ எனக்கு எப்போதும் ஸான்னித்யம் செய்ய வேண்டும் (எதிரில் காக்ஷியளிக்க வேண்டும்).

யதி=நிறுத்துமிடம் தெரிவிக்கும் ச்லோகம்:-

வேதை3ர் நித்யம் ஸஸ்வரை: ஸ்தூயமானே / காந்தி - ஸ்ரோதச்5 ச5ாலினீ பாத3பத்3மே / தே3வி த்வத்கே சே1தஸா யே ப4ஜந்தே / தே ஹி ப்ராஜ்ஞாஸ் ஸர்வவித்3யாநவத்3யா: ॥

வேதங்கள் 4; ஸங்கீதஸ்வரங்கள் 7 நாலிலும் ஏழிலும் யதி என்ற ஸூசிக்கப்பட்டது.

பொருள் : ஹேதேவி! உதாத்தாதி ஸ்வரங்களுடன் கூடிய நான்கு வேதங்களாலும் போற்றப்படுபவை - ஒளிப் ப்ரவாஹங்கொண்டவையான உன்னுடைய பாதகமலங்களை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எவர்கள் மனத்தால் ஸேவிக்கிறார்களோ அவர்கள் மிகவும் அறிவாளிகளாகவும் எல்லாவித்யைகளிலும் குறைகூற முடியாதபடி தேர்ந்தவர்களுமாவார்கள்.

பாதத்தில் 10 எழுத்துள்ளவை:

மத்தா-மத்தா ஜ்ஞேயா மப^{4}ஸக^3 யுக்தா-வ்ரு^{1}த்தரத்னாகர லக்ஷணம். ம, ப^4, ஸ, குரு - குகுகு, குலல, லலகு, கு.

வ்ரு^{1}த்தரத்னாவளீ-மாபூ^{4}த் ஸங்கே^{3}ா ஜனனி ஜனெஸ் தைர் / மத்தா யேஷாம் மதிரிஹ வித்தை: । ப^4ாக்^{3}யோத^3ாரைர் ப^{4}வது விஹாரோ / ப^{4}க்தைஸ் ஸார்த^{4}ம் தவ க்ரு^{1}பயா மே ॥

பொருள் :- அன்னையே! பணமதம்பிடித்த புத்தியினருடன் எனக்கு சேர்க்கை ஏற்பட வேண்டாம். உனது க்ருபையால் பாக்யம் நிறைந்த பக்தர்களுடன் விளையாடுவது ஏற்படட்டும்.

வ்ரு^{1}த்தமணிமாலையில்:

மாபூ^{4}த் ஸாகா^{3} இதி மதி ரஸ்மின் / தீ^{3}னே தூ^{3}னே த^{3}வது^{2} ப^{4}ரேண । கோ மே த்ராதா கத^{2}ய யதி^{3}த்வம் / மத்தா மத்கா மதிரிதி ஜஹ்யா: ॥

பொருள் : அன்னையே ! துன்பங்களின் சுமையால் நொந்துகிடக்கும் இவ்வெளியவனான என்னிடம் 'இவன் அபராதம் செய்தவன்' என்ற புத்தி உனக்கு ஏற்படவேண்டாம். என் புத்தி மதங்கொண்டது. செய்ய வேண்டியது- வேண்டாத தறியாதது) என்று நீ விட்டு விடுவாயேயானால் யாரே என்னைக் காப்பாற்றுவார்? கூறு.

இனி உமாஸஹஸ்ரத்தில் உதாஹரணங்கள் :

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ச1ம்பகமாலா அல்லது ருக்மவதீ ப4, ம, ஸ, குரு-குலல, குகுகு, லலகு, கு-ஐந்து ஐந்தாகப்பிரித்து வாசிக்கக்கூடியது.

பாபவிதூ4தௌ நிர்மலக3ங்க3ா / தாபநிராஸே ச1ந்த்3ரமரீசி1: ॥
ப4ர்க3 புரந்த்4ரீ ஹாஸகலா மே / ப4த்3ரமமிச்ரம் காபி கரோது ॥

பொருள் : பாபத்தை உதறித் தூரத் தள்ளுவதில் நிர்மலமான கங்கையாகவும், தாபத்தைப் போக்குவதில் சந்த்ர கிரணமாகவுமிருக்கிறவள்- இத்தன்மையள் உன்று கூற இயலாதவள் - சிவவனிதை, எனக்கு (தீமை) கலப்பில்லாத நன்மையைச் செய்யட்டும்.

பாதத்தில் 9 எழுத்துள்ளது:

மணிப3ந்த4: சம்பகமாலாவில் கடைசி எழுத்தை எடுத்துவிட்டால் மணிபந்தம்.

ஸஜ்ஜன-சி1த்தாநந்த3 கரீ/ஸம்ச்ரித-பாபவ்ராத-ஹரீ ।
லோகஸவித்ரீ நாகச1ரீ / ஸ்தான் மம பூ4யோ ப4த்ரகரீ ॥

ஸாதுஜனங்களுக்கு ஆனந்த முண்டுபண்ணுபவள்- அண்டினோரின் பாபராசியைப் போக்குபவள். தேவலோகத்தில் ஸஞ்சரிப்பவள் ஜகன்மாதா எனக்கு மீண்டும் மீண்டும் மங்களத்தைச் செய்பவளாகட்டும்.

பாதத்தில் 8 எழுத்துள்ளது:-

ப்ரமாணிகா அல்லது நக3 ஸ்வரூபிணீ லகு, குரு மாறி மாறி - ல, கு, ல, கு, ல, கு, ல, கு,

க்ரு1தேன ஸா நிஸர்க3தோ / த்4ரு1தேன நித்யமானனே ।
ஸிதேன சீதசைலஜா/ஸ்மிதேன சந் தனோது மே ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இயற்கையாயமைந்ததும் எப்போதுமே முகத்தில் தரிக்கப்படுவதும் வெண்மையானதுமான புன்சிரிப்பால் குளிர்மலைமகள் (ஹிமகிரிஜா) எனக்கு ஸுகமளிக்கட்டும்.

பாதத்தில் 7 எழுத்துள்ளது:-

குமாரலலிதா :- ஜ, ஸ, குரு - லகுல, லலகு, கு.

மஹோ-விஹதமோஹம் / மஹேசமஹிளாயா: ।
ஸ்மிதம் விதனுதான் மே / க்^{3}ரு^{1}ஹேஷு மஹமக்^{3}ர்யம் ॥

தனது காந்தியால் மோஹத்தை = விபரீதஞ்ஜானத்தைப் போக்குகிறதான மஹேசவனிதையின் புன்சிரிப்பு, நான் வஸிக்கும் க்ருஹங்களிலெல்லாம் ச்லாக்யமான உத்ஸவங்களை உண்டு பண்ணட்டும்.

மத^{3}லேக^{2}ா - ம, ஸ, குரு - குகுகு, லலகு, கு.

ஆயுஷ்யா பு^{4}வனானாம் / சக்ஷுஷ்யாஸ் த்ரிபுராரே : ।
குர்வந்து ப்ரமத^{3}ந் ந: / பார்வத்யா: ஸ்மிதலேசா: ॥

ஸகல புவனங்களும் ஜீவிப்பதற்காக உண்டானவைகளும் சிவனுடைய கண்களுக்கு ஹிதமானவைகளும்சிவன் கண்களை ஸந்தோஷப்படுத்துபவையுமான பார்வதியின் புன்சிரிப்புத் திவிலைகள் நமக்கு ஆனந்தத்தை அளிக்கட்டும்.

இதுவும் மத^{3}லேக^{2}ா :

ஹார்த்தார: சசிகீர்த்தே:/ கர்த்தாரோ நவப^{4}ாஸாம் ।
ப^{4}ர்த்தாரோ மம ஸந்து ஸ்கந்த^{3}ாம்பா^{3} - த^{3}ரஹாஸா: ॥

பொருள் : சந்த்ரனின் கீர்த்தியை அபஹரிப்பவைகளும், புதுப்புது ஒளிகளைச் செய்பவைகளுமான ஸ்கந்தமாதாவின் புன்சிரிப்புகள் என்னைப் போஷிக்கட்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதத்தில் 6 எழுத்துள்ளவை :

நரமனோரமா - ந, ர, - லலல, குலகு.

கிரதி^{3}வாம்ரு^{1}தம் / கிரணமாலயா ।
ஜயதி தத் ஸிதம் / சிவவ தூ^{4}ஸ்மிதம் ॥

கிரண வரிசைகளால் அம்ருதத்தை வர்ஷிப்பது போலுள்ள வெளுப்பான சிவவனிதையின் புன்சிரிப்பு, ஜயிக்கிறது = எல்லாவற்றிலும் உயர்ந்ததாக விளங்குகிறது.

தவ பத^{3}ம் பரே/மம கு^{3}ஹாந்தரே ।
ஸ்பு^{2}ரது ஸர்வத^{3}ா / விகஸிதம் முத^{3}ா ॥

உத்தமமானவளே! மகிழ்ச்சியால் மலர்ந்துள்ள உனது பாதம், எனது ஹ்ருதய குஹைக்குள்ளே எப்போதும் ஒளிரட்டும்.

தனுமத்^{4}யா-த, ய-குகுல, லகுகு.

சுப்^{4}ரஸ்மித-லேசோ/மாதுர் மருதாந்ந: ।
அந்தஸ்திமிராணா- / மந்தம் வித^{3}த^{4}ாது ॥

மருத்துகளின் பிதா இந்த்ரன்-பரமேச்வரன், மருந்துகளின் மாதா இந்திராணீ எனப்படும் ஈச்வரி. அந்த ஈச்வரியின் வெண்மையான புன்சிரிப்பின் சிறுபகுதி நமது உள்ளிருட்டுகளின் நாசத்தைச் செய்யட்டும்.

பாதத்தில் 5 எழுத்துள்ளது- ஸுப்ரதிஷ்டை ச^{2}ந்தஸ்ஸில், வ்ரு^{1}த்தப்பெயர் குறிக்கப்படவில்லை. ஸுப்ரதிஷ்டையைச் சேர்ந்தது என்றுள்ளது - ர, இரு குரு- குலகு, கு, கு

ச^{1}ந்த்^{3}ரிகாஸிதம்/ச^{1}ண்டி^{3}காஸ்மிதம் ।
பூ^{4}தலே ஸதாம்/பா^{4}து பூ^{4}தயே ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலவுபோல் வெளுப்பானதான சண்டிகையின் புன்சிரிப்பு பூதலத்தில் ஸாதுக்களின் மங்களத்தின் பொருட்டு ப்ரகாசிக்கட்டும்.

ஸுப்^{3}ரஹ்மண்ய த^{3}ண்ட^{3}க :

ஸும-சரஸம, தே^{3}வராஜாத்ம பூ^{4}-தே^{3}வஸேனா-கரக்^{3}ராஹ-
ஸம்ப்ராப்த-ஸம்மோத^{3}, வல்லீமனோஹாரி-லீலா
விசேஷேந்த்^{3}ர - கோத^{3}ண்ட^{3}-ப^{4}ாஸ்வத் - கலாபோச்^{1}ச^{1} -
ப^{3}ர்ஹீந்த்^{3}ர-வாஹாதி^{4}ரூட^{4}ாதி தீ^{3}னம் க்ரு^{1}பா த்^{3}ரு^{1}ஷ்டி -
பாதேன மாம் ரக்ஷ, துப்^{4}யந் நமோ தே^{3}வ துப்^{4}யந் நம: ॥

புஷ்ப்பாணனுக்கு-மன்மதனுக்கு ஒப்பானவனே ! தேவராஜனின் பெண் தேவஸேனையின் பாணிக்ரஹணத்தால் ஸந்தோஷமடைந்தவனே ! வள்ளியின் மனத்தை அபஹரிக்கும் லீலைகள் புரிபவனே ! இந்திரவில் போன்ற காந்தியுடைய தோகையை உடையதான உயரமான மயில் வாஹனத்தில் ஏறிக் கொண்டவனே ! மிகவும் தீனனான என்னை உனது கருணைப்பார்வை வீச்சால் காப்பாற்று. தேவனே உனக்கு நமஸ்காரம். உனக்கு நமஸ்காரம்.

வ்ரு^{1}த்தமணிமாலா செய்த ஸ்ரீகணபதி சாஸ்த்ரிகளின் ஸஹோதரர் ஸ்ரீ பஞ்சாபகேச கவி இயற்றிய 'ஸ்ரீஜக^{3}த் கு^{3}ரு நௌகாவைப் பார்த்து செய்யப்பட்ட

ஸ்ரீ வேங்கடேச நௌகா-வேங்கடேசர் ஓடம்.

(விலம்பகதி)

தானானா-தானதனா-தன்னதனா-தானதனா-தன்னதனா-
தனதானா-தனதன்னா-தனதானா

ஸ்ரீவாஸோ-லோகஹிதம்-கர்த்துமனா:- சேஷகி^{3}ரௌ ।
புண்யதம்ா-ப^{3} ஹுலீலா-வ்யதனோத்தம்-ப்ரணதாஸ்ஸ்ம: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உலகங்களுக்கு ஹிதம் செய்யும் எண்ணத்துடன் ஸ்ரீநிவாஸன் சேஷகிரியில் மிகமிகப் புண்யமானவையான பஹுவிதலீலைகள் புரிந்தார். அவரை வணங்குகிறோம். (வேறுவிதகதி) - தன்னன்ன - தானன்ன - தனனான - தானா___ தனதான தனதன்ன தன்னான தன்னா- இதுபோல் பார்த்துக் கொள்ளவும்.

ஸந்த்யக்த-வைகுண்ட2-கலசாப்3தி4-வாஸ:/கலிதூ3ன-நிஜப4க்த-
ரக்ஷைகதீ3க்ஷ: । ஸ்ரீஸ்வாமி-புஷ்கரிண்யாகாச-க3ங்க3ா- /
பாபப்ரணாசாதி3-ப3ஹுபுண்ய-தீர்த்த2ம் । சாந்த்யாதி3-
கு3ணஸஸ்ய-பீயூஷஸேகம்/கபிலாதி3-முனிவர்யஸித்3 த4
ஜன-ஸேவ்யம் । சேஷாத்3ரி-கருட3ா த்3ரி - நாராயணாத்3ரி/
ஸ்ரீசைல-வ்ரு1ஷசைலஸிம்ஹசைலாக்2யம் ।

வேங்கடம்-சைலவரமஞ்ஜனாபீ4ஷ்டம் / வாராஹமாச்ரித்ய
மோத3பரிபூர்ண: । கபிலேச-கோலேந்த்3ர - கே3ாவிந்த3-வீத: /
பத்3மாவதீப்ரீதிமாவஹன் நித்யம் । ப4க்த்யா
ப்ரணாமக்ரு1ந்நிகி2லார்த்திஹாரீ/நாமாபி4லாபி-
ஜனநித்யஸுக2த3ாயீ । கோவிந்த3கே4ாஷிஜன-நித்யாத4
மர்ண:/சிசுகே3ாப-விபு3த4வர-ஜேகீய்யமான: ।
விக்2யாத-வாத்ஸல்ய-பத்3மாப்ரணுன்ன: / பாது ஸகலம் ஜக3த்
ஸ்ரீஸ்ரீநிவாஸ: ॥

பொருள் : கலிதோஷத்தால் வருந்தும் தன் பக்தர்களைக் காப்பதொன்றையே தீக்ஷையாக = வ்ரதமாகக் கொண்டு, வைகுண்டத்திலும் பாற்கடலிலும் வஸிப்பதை விட்டுவிட்டு, ஸ்ரீஸ்வாமி புஷ்கரணி, ஆகாச கங்கை, பாபநாசம் முதலிய மிகுதியான புண்யதீர்த்தங்கள் நிறைந்ததும், சாந்தி முதலிய உயரிய குணங்களுக்கு அம்ருதஸேகமானதும் (அம்ருதம் பாய்ச்சி வளர்ப்பது போல் சாந்தி முதலிய உயர் குணங்களை வ்ருத்தி செய்வதும்) கபிலர் முதலிய ரிஷி ச்ரேஷ்டர்களாலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸித்தஜனங்களாலும் ஸேவிக்கப்பட்டதும், சேஷகிரி, கருடகிரி, நாராயணகிரி, ஸ்ரீசைலம், வ்ருஷசைலம், ஸிம்மசைலம் என்றெல்லாம் பெயர் கொண்டதும் அஞ்ஜனா தேவிக்கு தவம்புரிய இஷ்டமான ஸ்தலமாயிருந்ததும், வராஹமூர்த்தியைச் சேர்ந்ததுமான வேங்கடமாகிய உயரிய மலையை அடைந்து ஸந்தோஷ பூர்ணராய் இருக்கிறார். கபிலேச்வரர், வராஹமூர்த்தி, கோவிந்தராஜர் இவர்களால் சூழப்பட்டவராய், தினந்தோறும் பத்மாவதிக்குப் ப்ரீதியை விளைவித்துக் கொண்டு, பக்தியுடன் வணங்குபவரின் எல்லா துன்பங்களையும் போக்குபவராகவும் பெயரைச் சொல்லும் ஜனங்களுக்கு நிலையான ஸுகமளிப்பவ ராகவும் ''கோவிந்த'' என்று கோஷமிடும் ஜனங்களுக்கு நித்யக்கடனாளியாகவும், குழந்தை, இடையர், வித்வத் ச்ரேஷ்டர்கள் எல்லாராலும் புகழ்ந்து பாடப்படுபவராகவும் இருந்து கொண்டு தாயன்புக்குப் பேர்போன ஸ்ரீஅலர்மேல் மங்கையாலும் தூண்டப்பட்டவராக அந்த ஸ்ரீநிவாஸன் ஸகல ஜகத்தையும் காப்பாற்றட்டும்.

சார்தூ^{3}ல விக்ரீடி^{3}தம்

ப^{4}க்தார்த்திப்ரசமோத்^{3}யதோ வ்ருஷகி^{3}ரௌ வாஸம்
முதே^{3}ாபேயிவான் / ஆகே^{3}ா பார்ப^{4}க மீடி^{3}தோரு-மஹிமா
கே^{3}ாவிந்த கே^{4}ாஷப்ரிய: । கல்யுத்த^{2}ாக^{4}நிப^{3}ர்ஹணைக- நிபுண:
பத்^{3}மாவதீ-வல்லப^{4}:/ ஸர்வேஷாம் ஸுக^{2}த^{3}ஸ் ஸதா^{3} ஸ்து
க்ரு^{1}பயா ஸ்ரீஸ்ரீநிவாஸோ விபு^{4}: ॥

பக்தர்களின் துன்பந்துடைப்பதில் ஈடுபட்டவர்- வ்ருஷகிரியில் மகிழ்வுடன் வாஸத்தை அடைந்தவர் - இடைச்சிறுவன் முதற்கொண்டு அனைவராலும் போற்றப்படும் மஹிமையுள்ளவர்- 'கோவிந்தா' என்ற கோஷத்தில் ப்ரீதியுடையவர்-கலியில் தோன்றின பாபங்களைக் களைவதில் வல்லவர். பத்மாவதி ப்ரியர். எங்குந்நிறைந்தவர். இப்படிப்பட்ட ஸ்ரீஸ்ரீநிவாஸன், க்ருபையினால் அனைவருக்கும் எப்போதும் ஸுகமளிப்பவராக இருக்கட்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'வித்^{3}யுன்மாலா' - ஸ்ரீவேங்கடாத்4வரியின் ராக^{4}வ-யாத^{3}வீயம் - மங்கள ச்லோகம். நேராகப் படித்தால் ராமகதையும் கடைசி எழுத்தில் தொடங்கி தலைகீழாகப் படித்தால் க்ரு^{1}ஷ்ண கதையும் இக்காவ்யத்தில் விளங்கும்.

வம்தே^{3}ஹம் தே^{3}வம் தம் ஸ்ரீதம் ரம்தாரம் காலம் ப^{4}ாஸா ய:
।ராமோ ராமாதீ^{4}ராப்யாகோ^{3} லீலாமாராயோத்^{4}யே வாஸே।

குறிப்பு- இந்த ச்லோகத்தில் 'ம்'-என்றிருப்பது எதுவும் மகாரமல்ல. உயிரெழுத்துகள் 'ஔ' வரை படித்தபின் 'அம்' என்று படிக்கப்படும் அனுஸ்வாரமே யாகும். பதநடுவில் அனுஸ்வாரமும் விதிப்படி எழுதக் கூடாது. 'வந்தே', 'ரந்தாரம்' என்றுதான் எழுத வேண்டும். தலைகீழாகப்படிக்கும்போதும் பொருத்தமாயிருப்பதற்காக இம்மாதிரி கடினகாவ்யத்துக்குரிய தனிச்சலுகைப்படி அனுஸ்வாரம் உபயோகிக்கப்பட்டது. 'வம்தே' என்று எழுதினால் தலைகீழாகப்படிக்கும் போது 'தேவம்' என்று கிடைக்கும். இதுபோல் மற்ற இடத்திலும் உணர்க.

பதம் பிரித்தல் -

வந்தே^{3} அஹம் தே^{3}வம் தம் ஸ்ரீதம் ரந்தாரம் காலம் ப்^{4}ாஸா ய:।
ராம: ராமாதீ^{4}: ஆப் யாக^{3}: லீலாம் ஆர ஆயோத்யே வாஸே॥

பொருள் - (ஸீதையாகிய) ஸ்த்ரீயிடத்தில் மனமுடைய வராகி ஸஹ்யம், மலயம் முதலிய மலைகளை அடைந்தவரான எந்த ராமர் (ராவணனை ஸம்ஹரித்துவிட்டுத் திரும்பிவந்து) அயோத்யையிலுள்ள தனது க்ருஹத்தில் (ஸீதையுடன்) விளையாடினாரோ, காந்தியால் கருப்பானவரும். ஸ்ரீயினால் (= சோபையால் (அ) ஸம்பத்தால் (அ) ஸீதையாகிய லக்ஷ்மி தேவியால்) அடையப்பட்டவரும், விளையாடுபவருமான அந்த தேவனை வந்திக்கிறேன் = வணங்குகிறேன

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தலைகீழாகப் படிக்கும் போது விஸர்கம் = ':'; சேர்க்கப்பட்டுள்ளது.

ஸேவாத்4யேயோ ராமாலாலீ கோ3ப்யாராதீ4 மாராமோரா: ।
ய: ஸாப4ாலம்காரம் தாரம் தம் ஸ்ரீதம் வம்தேஅஹம் தேவம் ॥

மற்ற இடத்தில் பதம் பிரித்தே எழுதியுள்ளது. வந்தே அஹம் என்று பிரிக்கவும். விஸர்கம் தனி எழுத்தல்ல - உயிரெழுத்தைத் தொடர்ந்துதான் வரக்கூடியது. ஆகையால் ஆரம்பத்திலில்லாத விஸர்கம் வரி முடிவில் தேவையானால் எழுதப்படும். முடிவிலுள்ளது தலைகீழாகப் படிக்கும்போது விடப்படும், இம்மாதிரி காவ்யத்தில்.

பொருள் - 'மா' என்கிற லக்ஷ்மீ தேவிக்கு ஆராமமாக = விளையாடி மகிழும் உத்யானமாக இருக்கிற உரஸ்ஸை = மார்பை உடையவரும் ஸேவை முதலியவைகளால் = தபஸ்யக்ளும் முதலியவைகளால் த்யானிக்கத்தக்கவரும், ருக்மிணி முதலிய ஸ்த்ரீகளை 8 பட்ட மஹிஷிகளை லாலனை செய்பவருமான எவர் (= எந்த க்ருஷ்ணர்), ராதை முதலிய கோபிகளை ஆராதிப்பவராக = ஸம்மானிப்பவராக இருந்தாரோ, ஒளியுடன் கூடியவையான கௌஸ்துபம் முதலிய அலங்காரங்களை உடையவரும் ஸ்ரீயினால் அடையப்பட்டவருமான அந்த தேவனை தாரஸ்வரத்துடன் வந்திக்கிறேன் = ஸ்துதிக்கிறேன்.

ச்வேதாரண்ய ஸ்ரீ நாராயண யஜ்வா இயற்றிய ராமஸ்துதி-வ்ரு1த்தாலங்கார ரத்னாவளி வித்3யுன்மாலா வ்ருத்தம் - ப்ரதீபாலங்காரம் இரண்டுக்கும் உ-ம்:-

அங்க3ம் ச்யாமம் பீதம் வஸ்த்ரம் பி3ப்4ரத்3 ப4ாஸ்வன் மே ராமேதி ।
க3ர்வேணாலம் வித்3யுன்மாலா வீதோ மேகே4ா ப4ாதீத்3ரு1க்ஷ: ॥

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருள் - ஸ்ரீராமா! பீதாம்பரம் (=மஞ்சள்வஸ்த்ரம்) தரித்த - ச்யாமளமான எனது தேஹமே அழகாயிருக்கிறதென்ற கர்வம் வேண்டாம்; மின்னல் வரிசை சூழ்ந்த மேகமும் இதே போல் விளங்குகிறது.

உபமானத்தை உபமேயமாகவும் உபமேயத்தை உபமானமாகவும் மாற்றிச் சொன்னால் அது ப்ரதீபாலங்காரம். ஸ்ரீராமதேஹம், மேகம் போல் ச்யாமளமாக, அழகாக இருக்கிறதென்று சொல்லாமல், மேகமானது ஸ்ரீ ராமதேஹம் போல் ச்யாமளமாக, அழகாக இருக்கிறது என்று மாற்றிக் கூறியிருப்பதாலும், பீதாம்பரமானது மின்னல் வரிசைபோல் உள்ளது என்பதை மாற்றி, மின்னல் வரிசையானது பீதாம்பரம் போலுள்ளது என்று கூறியிருப்பதாலும் இந்த வித்யுன்மாலா வ்ரு^{1}த்த ச்லோகத்தில் ப்ரதீபாலங்காரம்.

*உபகீதி உதாஹரணம்

மாதர் ஹிமாத்^{3}ரிகன்யே/மாமக^{3}திம் பாஹி விச்வேசி।
த்வாம் ப்ரதி நிர்ஜரநிவஹை-/ரூபகீதி: கல்ப்யதே ப்ராய:॥

அன்னையே ! ஹிமகிரி கன்னிகையே! ஸர்வேச்வரியே! கதியற்றவனான என்னைக் காப்பாற்று. தேவகணங்களெல்லாம் உன் புகழ் பாடுகின்றன.

*உத்கீதி உதாஹரணம்.

மாத: க்ஷிதிப்^{4}ரு^{1}த்தனயே / ஹ்லாத^{3}ய நிதராம் த்^{3}ரு^{1}சௌ
காந்த்யா।
யா லக்ஷ்ம்யா ஜயதி கலா-/மிந்தே^{3}ார் யாம் ஸ்தௌதி
ச^{1}ாகமோத்^{3}கீதி:॥

அன்னையே ! மலைமகளே ! உனது காந்தியால் கண்களைக் களிப்பிப்பாய். உனது காந்தி, சந்த்ரகலையைத் தன் சோபையால் ஜயிக்கிறது. வேதகானம் அதைப் புகழ்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ ராம ராம ராம

பெரும்பாலும் குறியீட்டைப் பற்றிய திருத்தம்

பக்கம்	வரி	திருத்தம்
IX	8	சிவ-ஒலி,
	9	ணுள்ளதிலும்
	10	இடத்திலும்
	12	வாய
	13	கவர்கத்துக்கு
	31	த்^{3}ரு^{1}ட^{4}
X	1	க^{3}ாட^{4}
	7,8	{அடுத்தது, அதற்கடுத்தது முதலிய}
	11	என்பது
	24	சி^{1} த^{3}ானந்த^{3}
XI	5	வரத^{3}ம்
XII	1	த்^{3}விஜ
XIV	2	பாத்^{3}
XV	1	ந்^{7}தி.
XVIII	33	பொருள்
XXIII	13	சமத்காரம்)37-39
	17	உபதேசம்-43
	19	தேவித்யானம்-45
	21	வெளியிட்டது-47
	22	ஆக்ஞை-48
	23	வர்ணனை-48
	27	ஆவிர்பாவம்-53-54

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

	28	அடைதல் 54
		காஞ்சனமாலைக்கு ஸ்தன்யம் சுரத்தல், தம்பதிகள் ஆனந்த பாஷ்பம் - 55
		ஆகாச வாக்கு - 56
XXIV	1	அகஸ்த்யரிடம் ஸமர்ப்பித்து வணங்குதல், அகஸ்த்யர் ஆனந்தம் - 56
	2	களித்தது, தேன் அருந்துவித்தல்,ஸ்தன்யம் கொடுத்தல் - 56
	3	பெயரிடல், தாலாட்டு, அன்னம் பரிமாறும் விளையாட்டு, பந்து விளையாட்டு - 57
	4	அக்ஷராப்யாஸம் - 58
	6	விருப்பம்- 59
XXV	10	ஸன்னிதி,நந்தி கோபம், சிவன் மகிழ்ச்சி- 83
	12	தெளிவு - 85
	13	சிவதர்சனம், அதிகமான அங்கம் மறைதல் - 86
	21	ஸரஸ்வதியும்
	23	கன்யாதானம் 95-98
	26	நிவேதனம் 98-100
XXVI	18-19	முப்புலவர்களின் பாடல், த்ரிபுரஹர ஸ்துதி 127-130
XXVII	6-7	சோழனுக்குக் .... திறந்து தர்சன.... பூட்டி ரிஷப....
	25	ஸ்ருஷ்டி 160-163
	26	மதுரை எல்லை காட்டியது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1	3	த்^{3}வந்த்^{3}வ
2	28	ஸ்யான் மயி
10	17	னைகக^{2}
13	9	ரார்யெ:
16	3	லிங்க^{3}
32	30	சாம்ப^{4}வம்
36	5	ஷிச்^{1}யே சௌ
38	11	த்^{3}விஜங்களாகும்
	26	த்^{3}விஜங்களின்
	16	ரு^{1}சிரை:
48	11	பிறந்தவுடனேயே புகட்டப்பட்ட ஸோமரசம் அருந்தியவையான தாய் தந்தை கு திரைகளுக்குப் பிறந்து, தானும் அப்படியே ஸோமரசம் அருந்திய குதிரையாக.
52	10	தே^{3}சிகா
57	1	அசரீரியாக
60	10	ஜக^{3}
64	13	ஜக^{3}
67	10	இருக்கிறாள்.
70	28,29	தேவி, 'பயப்படா
86	7	த்^{4}வஜே
86	11	கடைசி ப் பாரா
88	19	ரஸிக்க
94	26	சென்றார். நெற்பொரிகளையும்
106	12	யாத்^{4}யக்ஷ:
	14	ப்^{3}ரஹ்ம

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

113	29	த4ாவத்3தே3வ
	30	ஜ் ஜர்ஜரம்
147	6	ஸ்வபனே
148	8	ம்பு3
153	25	ச1 ந
158	4	க்ரு1ப்பா
163	19	,,
167	23	ப்3ருஹி
173	18	விமானமா
185	18	உதிர்ந்த
189	20	பஞ்ச1மம்
193	3	ராஜ்ஞீ
	19	கு3ஞ்ம்
194	13	ஜனா
194	14	கைஷவ தே
195	28	நதீ3
205	23	அவற்றை
209	15	த்3விரதே3
210	8	கைலாஸாத்3ரிம்1106
210	14	னந்த3 மயஞ்ச1
210	19	தமு பக3ம்ய
211	4	த3த்3ரு1சே கில – 87
	10	நயத3தி
	18	பாண்ட்3யோ
212	7	பாண்ட்3 ய
	11	மலயத்4வஜ – 1, 208

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

213	16	ஸமந்ததோ
பக்	அனு வரி	திருத்தம்
1	4	தத்^{3}க^{4}
	5	தரங்கி^{3}
3	7	பி^{4}க்ஷா
8	18	வ்ரு^{1}த்^{3}த^{4}யே
9	5	த^{3}யா
13	24	பஞ்ச^{1}ச^{1}ாமர
12	25	தகணங்கள்
13		உத்^{3}கீ^{3}தி, கீ^{3}தி எல்லா இடத்திலும்
14	17	ப்ரத^{3}ர்சி
16		த^{3}ண்ட^{3}க ச^{1}ண்ட^{3} இந்த்^{3}ர உபேந்த்^{3}ர
	24	ஸம்யுக்தாந்தம்
17	2	சி^{1}த்^{3}ரூபமானந்த^{3}
	3	க^{2}னிம்
	7	’கு’ என்றும்
18	6	கைலாஸாத்^{3}ரிம்^{1} 106
	9	ஆதி^{3}மம்
	12	க்வச^{1}ன
19	2	வம்சஸ் த^{2}ம்
		13–29 இந்த்^{3}ர
20	3–20	பு^{4}ஜங்க^{3}
	20	பு^{4}ஜங்க^{3}
21	7	விசி^{1}த்ரா
	17	ஸா/

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

22	18	யத்3ச்யுத
24	2	கேசபாரத்தை
23	10	ருசி1ரா
25	5	இந்து3 வத3னா
25	9	தச்1
28	9	பீ4ஜாபூர1ச்லோகத்தில் ச1க்ராப்3ஜ
28	24	ஷண்முக2ம்
29	5	பஞ்ச1ச1ாம ரம்
30	26	ஸ்வரூப
31	3	வித்யை
	11	கே2ாச1ரங்
32	4	நிஜா நபி4
	26	நாலாவது கணமான லலகு சேர்க்கவும்
33	9	குரு, லகுகு
34		4வது வரியாக சேர்க்கவும் - பெயர் தெரியாத வ்ருத்தம்
34	7	(அ) ச1ல
16-17 வரிகளுக்கிடையில்		வாஸுதே3வ தவ ... போன்ற வ்ருத்தம் - ஸ்மேரச1ாருமுக2 மண்ட3லாம்....தே3வதாம் புன்சிரிப்புள்ள...த்யானிக்கிறேன்1
	23	துல்யக3தி
35	12	சம்பே4ா:'
	14	மண்ட3லாம். 14-27 வரிகள் முன்பக்கத்தில்
		16-17 வரிகளுக்கிடையில் தலைப்புடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

	29	சே^{1} டீ
36	6	சிதிகண்ட^{2}
37	5	சி^{1}த ம்ப^{3}ர
38	2	படுபவள்)
	5	(த்ரிபுரஸம்
	15	பு^{4}வி
	19	ஸ,ப^{4},ர,லகு
	21	ணச^{1}லேன
	22	ச^{1}ரணத்^{3}வந்த்^{3}வ(பக்1,208)
	25	ப^{4},ர,
	27	த^{3}த்^{3}ரு^{1}சே
39	9	துங்க^{3}ங்கீ^{3}
	19	ஸ்ரோதச்^{5}–
	20	பத்^{3}மே1
42	13	ச^{1}க்ஷுஷ்யாஸ்
44	8	த்^{8}ருஷ்டி
	21	ஸந்து/
45	11	நாராயணாத்^{3}ரி –/
17		கே^{3}ாவிந்த^{3}
46	18	வ்ரு^{1}ஷ
	20	கே^{3}ாவிந்த ^{3}
47	18	ப^{4}ாஸா
	19	ஆப்யாக^{3}:
		ஆயோத்^{4}யே
	49	அழகாய் அழகாக என்பதற்கு பதிலாக காந்தியுள்ளதாய் என்று கொள்க

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

49	14	உபகீ³தி
	16	ருபகீ³தி꞉
	19	உத்³கீ³தி
	23	மோத்³கீ³தி꞉

அநு. 29 ம் பக்கத்திலுள்ள வ்ருத்தமணிமாலை ச்லோகத்தின் பொருள்:

அரசர்கள் தன் தேஜஸால் மற்றவரை அவமதிப்பார்கள். ராஜஸேவை அநேக துக்கங்களுக்கு இருப்பிடமானது. அப்படிப்பட்ட ராஜஸேவையில் மமதை பிடித்த என் மனம் குதிரை போல் பாய்ந்து ஈடுபடுகிறது. அன்னையே! அது அப்படி ராஜஸேவையில் ஈடுபடுவதை விரைவில் விட்டு விட்டு உன் பாத கமலத்தை எப்போது த்யானிக்கும்? உன் பாத கமலமோ விருப்பங்களை நிறைவேற்றும் விஷயத்தில் கல்ப்பவ்ருக்ஷங்களின் கர்வத்தைப் போக்குவது. கல்ப்பவ்ருக்ஷங்களையும் விஞ்சி விருப்பங்களை அளிக்கவல்லது. ராஜ ஸேவையில் ஈடுபடாமல் எப்போதும் உன் பாத கமலத்தை த்யானிக்கும்படி அருள்வாயாக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)